


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கா நினைவுகளுடன்



தோற்றம்
25.10.1934

அமரர்

மறைவு
21.10.2021

# கதிரவேலு பொன்னுச்சாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சாவகச்சேரி, சரசாலையைப் பிறப்பிடமாகவும், பல்லவராயன்கட்டு,
முழங்காவிலை வசிப்பிடமாகவும் கொண்ட
அகில இலங்கை சமாதான நீதவான் (JP)

அமரர்

# கதிரவேலு பொன்னுச்சாமி

அவர்களின் விண்ணக வாழ்வெய்திய
31ஆம் நாள் நினைவாக......

## "பொன்னாரம்"

## 20.11.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எங்கள் இதய தெய்வம்
ஊனினையும், உயிரினையும் உருக்கி
எங்கள் குடும்ப விருட்சத்தினை ஆணிவேராகத்
தாங்கி நின்று நாங்கள் நற்பெயருடனும்
நற் செல்வங்களுடனும் வாழ – தன்னை
மெழுகுவர்த்தியாக உருக்கி, எம்மை வாழவைத்து
இன்று – ஆறாத் துயரில் எங்களை ஆழ்த்திவிட்டு
வானுறையும் தெய்வமாகிய எங்கள் குடும்பத்
தலைவனின் நினைவலைகளை
நெஞ்சிற் சுமந்து, இப் பொன்னாரம் மலரைத்
திருக்குறளுடன் திருவடிகளிற்கு சமர்ப்பித்து
வணங்குகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி

இங்ஙனம்
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

மனம் மகிழ
25
10
1934

மனம் நெகிழ
21
10
2021



# அமரர்
# கதிரவேலு பொன்னுச்சாமி
அவர்களின்
## "திதி வெண்பா"

ஆண்டாகும் நல்பிலவத் தைப்பசிசேர் சார்அபர
ஈண்டு பிரதமையில் எந்நலமும் – பூண்ட மகன்
பல்லறிஞ ராகுமெம் பொன்னுச்சா மியாரடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் – விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

என்ன புண்ணியஞ் செய்தனை
நெஞ்சமே யிருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப்
பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு
வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும்
பாடியும் வழிபடும் அதனாலே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தஆ ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உவப்பிலா ஒன்றே !
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே !
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே !
சித்தத்துள் தித்திக்கும் தேனே !
அளிவளர் உள்ளத்(து) ஆனந்தக் கனியே !
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச் சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவு மாகிச்
சோதியாய் உணர் வுமாகித் தோன்றிய பொருளுமாகி
பேதியா ஏகமாகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியாய் நிற்குந் தில்லைப் பொது நடம் போற்றி போற்றி.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமானே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்



## பொன்னுலகில் பொன்னாரம் பூண்ட பொன்னுச்சாமி

இந்துமா சமுத்திரத்தின் இயற்கை வனப்பும், எழில் கொஞ்சும் தோற்றமும், கார்முகில் தவழ கவின்கொள் நீள் மரங்களும், இளங்குயில் ஓசையும், வளமலி கதலியும், வருக்கை வளமும், வண்டினம் வட்டமிடும் வகையான மலர்களும், மதிகொள் இனிமையும் கொண்ட இந் நாட்டை ஈழம் என்று இயம்பினர் முன்னோர். செந்தமிழ் வழக்கமும், சிவநெறியும் பூண்ட இத்தேசத்தை சிவபூமி என திருமூலர் மொழிந்தார்.

இத்தகு மேன்மை கொண்ட நற்பதியின் நாணாக இருப்பது வன்னிப் பெரு நிலப்பரப்பு ஆகும். ஆங்கு பூநகரி என்னும் பூர்வீக பதியில் முழங்காவில் முன்னானது ஆகும். வளமார் விவசாயப் பெரும்பதியில் விநாயகப் பெருமானின் முன்னரும், கந்தப்பெருமானின் கருணையும், அம்பிகை அருளாட்சியும், திருமால் பெருமையும் சிறந்து அருள் சுரக்கின்றது.

நானிலம் போற்றும் நலமார் முழங்காவிலில் இன்று வரை ஏற்றத்தின் உச்சியில் முடிசூடா மன்னனாக பொன்னுச்சாமி அவர்கள் வாழ்ந்து வாகை சூடிக்கொண்டவராவார்.

### மண்மகிழ மலர்ந்த காலம்

அன்பும் அறனும் கொண்ட வாழ்வை அவனியில் மேற்கொண்டு வாழ்ந்தவர்கள் கதிரவேலு செல்லமுத்து தம்பதியினர் ஆவார்கள். இல்லற வாழ்வின் இயைந்த பலனால் பொன்னுச்சாமி பிறந்தார். செல்லத்துரை, இராசம்மா, இரத்தினம், பரஞ்சோதி, பாலச்சந்திரன், போன்றோர்அன்னாரின் ஒரு தாய் மக்கள் ஆவார்கள். பெற்றோருடன் பிரியமாய் வாழ்ந்தார். தமது கல்விப் பயணத்தில் ஆரம்பகாலக் கல்வியை சாவகச்சேரி கமலாசினி பாடசாலையில் கற்றார். பின்னர் தரம் -06 தொடக்கம் தரம் - 10 வரை ஆங்கில மொழி மூலம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கற்றார்.

"கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை உடைத்துஇவ் வுலகு"

என்ற குறள் வழியே கற்கும் காலத்தில் கல்வியைக் கண்ணாகப் போற்றினார். பாடசாலை விளையாட்டுப் போட்டிகளில் வினைத்திறன் கொண்ட மாணவராகத் திகழ்ந்தார். கலைவிழாக்களில் கலைநிகழ்வுகளில் பங்குபற்றி பாடசாலைக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமை சேர்த்ததார். தூய்மையாக, மடிப்பு குலையாத படி ஆடைகளை அணிந்து செல்வார். "ஐயோ, இவர் அழகு என்ன அழகு" என பார்ப்போர் பரவசப்படும்படி நடக்கும் புனிதராகத் திகழ்ந்தார். இராமாயணத்தில் கண்ட இராமன் இவரோ எனும் படியே திகழ்ந்தார்.

## இல்லற வாழ்வின் இனியன்

நின்ற சொல் நீர்மையார் நீடு தோள் இனியரான பெருந்தகைக்கு திருமணக் காலம் நெருங்கி வந்தது. பெற்றோரும், உற்றாரும், நல்லோரும் இணைந்து நல்நங்கையைத் தேடினர்.

சாவகச்சேரி, மீசாலை, சப்பச்சிமாவடியைச் சேர்ந்த மாணிக்கம் வள்ளிப்பிள்ளை தம்பதியரின் செல்வமகள் இராசம்மா மணமகளாக நிச்சயிக்கப்பட்டார்.

**15.05.1957** அன்று இவர்களின் இதயங்கள் இணைந்தன. இனியானுக்கு ஏற்ற இனியாளாக ஏந்திழை இராசம்மா இதயக் கமலத்தில் மலர்ந்தாள். வள்ளுவன் கண்ட வாசுகி போல, வசிட்டர் கொண்ட அருந்ததி போல, ராமன் தேடிய சீதை போல, இராசம்மா சுவாமியின் பாதங்களிலும் இதயத்திலும் ஒருங்குற்றார்.

"மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"

என்ற முப்பாலின் வழியே முழுதும் உணர்ந்து செயலாற்றும் செயற்றிறன் தற்கொண்டான் பெற்ற பெரும் பயனே ஆகும். "இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றுமில்லை" என்னும் ஔவையின் அணிமொழி வாழ்வின் உறுதிக்கு உறுதுணை ஆனது காணுகின்ற காட்சி ஒன்றே என்ற கருவூலத்தை கண்ணாகக் கொண்டு இல் வாழ்வின் இனிமையைக் கண்டனர்.

இக்காலத்தில் **1950**ஆம் ஆண்டு தொடக்கம் **1955** ஆண்டுவரை மெய்கண்டான் அச்சகத்தில் பணிபுரிந்தார் பின்னர் மட்டுவில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் முகாமையாளராகப் பணியேற்றுச் சென்றார். தொடர்ந்து **1960 - 1970** வரையில் **10** கிராம பிரிவுகளின் முகாமையாளராகக் கடமை புரிந்தார்.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்"

என்ற பொய்யாமொழியின் புனிதத்தை உணர்ந்தார். மண்ணை வளமாக்கி பொன்னான நெல் மணியைப் பெறலாம் என தெளிவு கொண்டார். இதனால் வேறு எத்தொழிலும் புரிதல் நன்றல்ல என எண்ணி விவசாயச் செய்கையில் குதித்தார்.

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"

என பாரதியாரின் மகுட வாசகத்தை தலைமேற் கொண்டார்.

"வயிற்றுக்குச் சோறிட வேண்டும் - இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்
பயிற்றிப் பல கல்வி தந்து - இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்"

என பாட்டுக் கொரு புலவன் கூறிய பாடலில் பற்றுண்டு பூமித்தாயின் புனித மடியில் மஞ்சமிட்டுக் கொண்டார்.

பல்லவர் ஆட்சிக் காலத்தில் பல்லவராயன் என்ற மன்னவனால் பல்லவராயன் கட்டு என்ற குளம் அமைக்கப்பட்டது. இக் குளத்தின் மூலம் பலர் விவசாயம் மேற்கொண்டனர். இன்றும் அப் பகுதி நெல்லில் இருந்து பெறும் அரிசியில் சோறு சமைத்தால் வாசனை மூக்கை முத்தமிடுவதை உணரலாம். **1968**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணைவியுடன்













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கைத் துணைவியுடன் பொன்னுச்சாமி ஐயா அவர்கள்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடக்கம் 1996 வரை ஆங்கு தலைநிமிர்ந்து வாழ்ந்த தன்னிகரில்லாச் செல்வர் இவரே ஆவார்.

"பலகுடை நிழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர்"

என்னும் வள்ளுவத்தின் வழியே எவரையும் தமக்குள் அடக்கும் மேன்மையை உழவுத்தொழிலாளர் கண்டனர். இதன்படி அன்னாரும் பல்லவராயன் கட்டின் சொல்லேர் உழவராக இருந்தார். சொன்னால் சொன்னபடி நடக்கும் தூய்மையாளராகவும் இருந்தார். தூய்மை, நேர்மை, சான்றாண்மை, அடக்கம் போன்ற நற்குணங்களால் வாழ்ந்த காலம் வரை பொன்மனப் புனிதராகி பூவுலகில் பொன்னரசு கண்டவர் பொன்னுச்சாமி என்றால் மிகையாகாது.

காதல் மணவாளனின் கருத்தொருமித்த மணவாட்டி ஆகி அவரின் ஆசைக் கனவுகளுக்கு வளையும் வாஞ்சைக் கொடியாக நல்லவளமான வாழ்விலே இருவரும் வகைப்பட்டனர். இல் வாழ்வின் பெரும் பயன் நன்மக்கட் பெறுதல் என்ற வகையில்

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு" கண்டனர்

## நன் மக்கட் பேறு

"குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்"

என்ற வகையில்லாது நன்மக்கட் பெறுதலே இனிமையும் அவர்கள் மழலைச் சொல் கேட்பதே சிறப்பு எனவும் உணர்ந்தனர்.

"பெறு மவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற"

என தாம் பெற்ற செல்வங்களில் சிறந்த செல்வங்களான பிள்ளைகளை கல்வி அறிவில் மேம்பட வைக்க திடசங்கற்பம் பூண்டார். பிள்ளைகளின் கல்வியே முக்கியம் என உணர்ந்தார்.

"குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு"

என்று நாலடியார் கூறும் வகையில் பிள்ளைகளை கல்வியின் உச்சத்திற்கு கொண்டு சென்றார். அதிபர்களாக, ஆசிரியர்களாக, வைத்தியராக, உயர்தகுதிகளில் விளங்க வைத்தார். இவரது இல்லம் ஒரு கல்விக் கூடல் ஆனது. வளர்ந்து வகை கண்ட பிள்ளைகளின் உயர்வால் முல்லைச் சிரிப்பில் முகிழ்ந்தார்

"தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்"

எனும் உலகப் பொது மறையின் உன்னதத்தை உணர்ந்த தந்தையாகத் திகழ்ந்தார்.

"மகன் தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்லெனும் சொல்"

பிள்ளைகளும் தந்தையின் எண்ணத்தை போற்றியவர்களாக மேம்பட்டனர். இதனால் இவர்கள் தந்தை இவர்களை எப்படி வளர்த்தார் பாருங்கள் என்று பயனைக் காட்டினார்கள். தமது பிள்ளைகளின் கல்வியிலே அக்கறை காட்டியது போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய மாணவர்களின் கல்வியையும் உயர்த்தினார்.
பூநகரி கோட்டத்தில் புலமைப்பரிசிற் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு நிதி உதவியும், பரிசில்களும் வழங்கினார்.
க.பொ.த உயர்தரத்தில் சித்தி அடைந்து பல்கலைக்கழகம் புகும் மாணவர்களுக்கும் நிதி உதவி வழங்கினார்.
பிள்ளைகளின் கருவூலம் பாடசாலை என்பதை உணர்ந்து முழங்காவில் தேசிய பாடசாலையில் துவிச்சக்கரவண்டி நிறுத்தும் நிழற் கூடம் அமைத்தார்.

## சமூக சேவை

பல்லவராயன் கட்டு பாடசாலையில் கற்ற மாணவர்களின் கல்வியில் பெரும்பங்கு கொண்டார். அவர்கள் பல்கலைக்கழகம் செல்லும்வரை உதவிய பெருந்தகையும் ஆனார்.

"கைமாறும் உகவாமல் கற்று அறிந்தோர் மெய்வருத்தித்
தம்மால் இயல்உதவி தாம் செய்வார் - அம்மா
முளைக்கும் எயிறு முதிர சுவை நாவிற்கு
விளைக்கும் வலியன் தாம்மென்று"

என நன்னெறி கூறும் வகையில் எல்லோரும் பயன்பெற தம்மால் இயன்ற உதவி செய்பவர். தமது 80வது பிறந்ததினத்தின் போதும் முதியோருக்கு நிதியுதவி புரிந்தவர். கொரோனா காலத்தில் கஸ்ட நிலையில் இருந்தோருக்கு வேண்டிய உதவி புரிந்தார்.

ஒவ்வொரு நாளிலும் நடைபெறும் நிகழ்வுகளைத் தவறாது நாட்குறிப்பு எழுதி ஆவணப்படுத்தி உள்ளார். இதன் மூலம் வாழ்வியல் கடன்களை ஆற்றியவராவார்

"பகடற்ற வாழ்வு பண்பான நோக்கு"
இவரின் தாரக மந்திரமாகும்.

பல்லவராயன் கட்டு R.D.S தலைவர்
முழங்காவில் R.D.S பொருளாளர்
கிராம சேவையாளர் உதவியாளர்
முழங்காவில் விநாயகர் ஆலய பரிகாலன சபை பொருளாளர்
பூநகரி பிரதேச சி.க. கூ.ச அங்கத்தவர் போன்றவற்றில் சமூகப்பணிக்காக உழைத்தார்.

## பூணாமல் பூண்ட பெயர்

மக்கள் நலனுக்காகப் பாடுபட்டவர் இவர். மக்கள் சம்பந்தமான விண்ணப்பங்களை மேலிடங்களுக்கு அனுப்பினார். சரளமாக ஆங்கிலத்தில் அறிவு கொண்டமையால் கடிதம் எழுதும் பாங்கு உற்றார். இதனைச் சிலர் தவறாகக் கண்டு "பெட்டிசம் பொன்னுச்சாமி" எனவும் அழைக்கப்பட்டார்.

## தமிழ்க் கட்சிகளுடன் தொடர்பு

மூத்த தமிழ்க் குடியில் பூத்த மலர் தமிழின் மீது அடங்காத பற்றும் ஆர்வமும் கொண்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாடையிலே படுத்தூரைச் சுற்றும் போதும் பைந்தமிழில் அழும் ஓசை கேட்க வேண்டும்" எனவும் "ஓடையிலே என் சாம்பல் கரையும் போதும் ஒண் தமிழே சலசலத்து ஓட வேண்டும்" எனவும்
அகத்திலே ஏற்பட்ட ஆவலினால் தமிழ் வளர்க்க தமிழ்க் கட்சிகளுடனும் தொடர்பு கொண்டார்.
"செந்தமிழ் நாடெனும் போதிலே இன்பத் தேன் வந்த பாயுது காதினிலே" என்ற பாரதியாரின் பாட்டில் வசப்பட்டார்.
"தமிழுக்கும் அமுதென்று பேர்" என்ற பாரதிதாசன் பாவிலே பாங்கானவரும் ஆவார்.
ஆங்கில மொழிபெயர்ப்பு செய்து தமிழின் செழுமையை இனங்கண்ட அறிஞருமானார்.

## சமாதான நீதவான்

"சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல் கோணாமை சான்றோர்க்கு அணி" அமைந்தொரு" என்ற நீதிவழியே சமாதான நீதவானாகச் செயற்பட்டவர் "மக்கள் சேவையே மகேசன் சேவை" யெனச் செயலாற்றியவர். மக்களுக்கு ஆற்றிய சேவையின் பொருட்டு எவ்விதமான அன்பளிப்பும் பெறாதவர். கையொப்பத்திற்கு காசு கேட்கும் காலத்தில் கையை ஒப்பமாக்கிய உத்தமர் இவர் தான்.

## ஆலயத் தொண்டும் வாழ்வும்

"மண்ணின்மேல் வான்புகழ் நட்டானும் மாசில்சீர்ப்
பெண்ணினுள் கற்புடையாள் பெற்றானும் - உன்னுநீர்
கூவல்குறைவின்றித் தொட்டாலும் இம் மூவர்
சாவா உடம்பெய்தினார்"

என்னும் திரிகடுகப் பாடலுக்கு ஏற்ப வாழ்ந்து என்றும் இறவாப் புகழ் கொண்டார். ஆலயப் பணிகளில் இறை சிந்தையோடு மேற் கொண்டார்.
தெய்வீக ஒளி வீசும் அழகு முகம் கொண்ட அன்பரென்பது குறிப்பிடத்தக்கது. அன்பாளரின் பேரிழப்பு ஈடுசெய்ய முடியாதது.

"நிலையா வாழ்க்கையின் நிலையாமையை உணர்ந்து
அலையா வருந்துன்பம் அன்றேயெனத் துடைத்து
சிலையா யெழுமிடத்து சிறந்த தந்தையே என்றும்
கலையா நினைவோடு கவிபாடுவோம் உமையே"

என

"மண்ணுலகத்தார் மாழ மாதவத்தோர் ஏங்க
விண்ணுலகத்தோர் வியந்து தேவர்கள் உட்க
கண்ணகத்தே உறைந்த கற்றோர் தியங்க
எண்ணகத்தே" பொன்னாரம் ஏற்றார் பொன்னுச்சாமி

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் அன்பு மனைவி இராசுவின் .....

காதலித்து கைப்பிடித்து அறுபத்து நான்கு வருட இல்வாழ்வை இன்பதுன்பம், சவால்கள், எதிர்ப்புக்கள், ஏமாற்றுக்கள், கொலை, களவு என எத்தனையோ சமூக சமய அரசியல் பிரச்சினைகளிற்கெல்லாம் துணிவோடு தளராது எதிர்கொண்டு எம் திருமண இல்லற வாழ்வை வெற்றியோடு எதிர்கொண்ட ஒரு ஆண் சிங்கம் நீங்கள்.

கைப்பிடித்த நாள் முதலாய் ஒரு கணமேலும் எனைக் கலங்க விடாது வாழ்வாங்கு வாழ வழிசமைத்த மாமனிதர். அறுபத்து நான்கு வருடங்களும் என்னோடு சேர்ந்து பயணித்து விட்டு இன்றுமட்டும் எனை விட்டு நீங்கள் தனியாகச் சென்றது ஏன் ஐயா?!

"இராசு இராசு" என தனிப்பெயர் சூட்டி எனை அன்போடு அழைப்பீர்கள். இன்று உங்கள் இராசு தனிமையில் துடிப்பது நீங்கள் அறிவீர்களா? அன்பின் வழியில் பதினொரு மகவுகளைப் பெற்றெடுத்து பெருமை பெற்ற பெற்றோர்களாக நாம் வாழ்ந்து வர நாமிருவரும் நோய்வாய்ப்பட்டுப் போனதேனோ? இன்றுவரையிலும் இணை பிரியாச் சோடிகள் நாம் பிரியாமலே மரணிப்போம் என்று தானே எண்ணியிருந்தேன். உங்கள் விருப்பமும் அதுதானே. எங்கள் விருப்பை ஏற்காத இறைவன் உங்களை மட்டும் ஏன் எடுத்துச் சென்றானோ?

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் நல் ஆற்றின் நின்றதுணை" தன் பெற்றோர், மனைவி, மக்கள் ஆகிய மூன்று தரப்பினர்க்கும் நல்வழி நின்று துணைபுரிந்து "இல்லத் தலைவர்" என்ற பெயருடன் சென்றீர் ஐயா! பெற்றெடுத்த பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் கதறி அழும் காட்சியை நீங்கள் காணவில்லையே! நல்ல குடும்பம் பல்கலைக்கழகம் என்பதற்கு இணங்க வாழ்ந்து காட்டிய குட்டி மன்னனே! என்னைத் தவிக்க விட்டுச் சென்றதேனோ? இறுதிக்காலம் வரை என்னைக் காரில் கொண்டு சென்று உறவுகளிடம் சென்றதை மறப்பேனா? எதைச் சொல்ல? ஒன்றா இரண்டா? நாம் வாழ்ந்த கதை சொல்லத் துடிக்கின்றேன் ஐயா! முடியவில்லை. 11வது பிள்ளையிடம் இறுதிவரை இருந்து, நான் அருகில் இருந்த போதும் ஒரு கதை கூறாமல் சென்றதேனோ பூவும் பொட்டுமாக நான் செல்ல இருந்த நேரம் காலனவன் உங்களைக் கவர்ந்து சென்றதேனையா? தனிமையில் வாடுகின்றேன்; தவிக்கின்றேன்; துடிக்கின்றேன். எனக்கும் ஒரு இடம் தாருமையா.

ஐயா உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனிடம் இறைஞ்சுகின்றேன்.

சாந்தி! சாந்தி !! சாந்தி!!!

மனைவி(ராசு)

P.இராசம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகள் சுகந்தியின் நீங்காத நினைவுகள் "பூரணசற்குணர்"

அப்பா! நீங்கள் ஈன்றெடுத்த பதினொரு முத்துக்களில் முதல் முத்து நான் அப்பா. அழகான பெயர் சூட்டி அன்பு, பாசம், அரவணைப்பு, கண்டிப்பு முதலான சத்துணவைக் கொடுத்து என்னை வளர்த்தீர்களே அப்பா!. எனக்கு முதல் ஆசான் நீங்கள் தான் அப்பா. எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. நான்கு வயதாக இருக்கும் போது பிரம்போடு மேசையில் வந்து இருந்து தமிழையும், ஆங்கிலத்தையும் சொல்லித்தருவீர்கள். நான் தவறாக ஆங்கிலத்தை உச்சரித்தால் உங்கள் கையில் இருக்கும் பிரம்பினால் என் முதுகில் அடிப்பீர்கள் அப்பா .

"பிரம்பைக் கையாளாதவன் தன் பிள்ளையைப் பகைக்கிறான், பிரம்பினால் அவனை அடித்து வளர்த்தால் அவன் ஆத்துமா பாதாளத்துக்கு போகாது திருந்தி வாழ்வான்" என்ற முதுமொழிக்கிணங்க என்னை வளர்த்தீர்களே அப்பா.எல்லாக்குடும்பத்துக்கும் வருவது போல எங்கள் குடும்பத்திலும் பொல்லாத வறுமை, பஞ்சம், பட்டினி வந்த நேரத்திலும் எங்களைப் படிப்பிக்க வேண்டும் என்ற வாஞ்சையோடு அழியாச் செல்வமாகிய கல்விச் செல்வத்தை உங்கள் பிள்ளைகள் பெறவேண்டும் என்று ஒவ்வொரு வீடுகளிலும் எங்களை விட்டுப் படிக்கவைத்தீர்களே அப்பா. எங்களைக் கடிந்து கண்டித்து வளர்த்தீர்களே அப்பா. உங்கள் கோபமோ ஒரு நிமிடம். ஆனால் உங்கள் பாசமோ நித்தம் நித்தம்.

என் அப்பாவிற்கு என் அம்மா மதியச் சாப்பாட்டுக்கு ஒரு முட்டை அவித்துக் கொடுப்பா, அந்த முட்டையை சிறுசிறு துண்டுகளாகப் பிட்டு எங்கள் ஒவ்வொருவருக்கும் ஊட்டுவீர்களே அப்பா!. அதுமாத்திரம் அல்ல அப்பா சாப்பிட்டபின் அந்த தட்டில் சாப்பிடுவதற்கு நாங்கள் சண்டை பிடிப்போமே அப்பா. அம்மாவை "ராசு" என்று அன்போடு அழைப்பீர்களே அப்பா. இல்லற வாழ்க்கையில் **64** வருடத்தை இணைபிரியாமல் வாழ்ந்தீர்களே, இன்று என் அம்மா துணைஇல்லாத மாடப்புறாவைப்போல் தவிப்பதை எங்களால் தாங்கிக் கொள்ளமுடியவில்லையே அப்பா. விலைமதிப்பற்ற செல்வம் அறிவு, பலமான ஆயுதம் பொறுமை, மிகச்சிறந்த பாதுகாப்பு உண்மை, அற்புதமான மருந்து புன்னகை. இவை நான்கையும் உங்கள் வாழ்நாளில் கடைபிடித்ததோடு மட்டுமல்லாமல் உங்க பிள்ளைகளும் அவ்வழியே வாழவேண்டும் என்று கரிசனையோடு வளர்த்தீர்களே. வளைந்து குனிந்து வினாக்குறியாக நிற்காது (?)நிமிர்ந்து நின்று ஆச்சரியக் குறியாக(!)வாழ்ந்தவர்தான் என் அப்பா.

என் அப்பா ஒரு நீதிமான் என்பதற்கு கொடுக்கப்பட்ட அந்தஸ்துதான் அகில இலங்கை சமாதான நீதவான் என்கின்ற உயர்ந்த பதவி. என் அப்பாவின் மரணம் பரிபூரணமானது "உண்மையும் நேர்மையும் உள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்" என்ற முதுமொழிக்கிணங்க "பரிபூரணசற்குணராய்" வாழ்ந்து இந்த மண் உலகை விட்டு விண் உலகம் சென்று விட்டீர்கள் அப்பா. ஆனாலும் நீங்கள் ஒரு போதும் என்னால் மறக்கப்படுவதில்லை.

உங்கள் நினைவோடு வாழும்
உங்கள் அன்பு மகள்
சுகந்தி பாலேந்திரா **(From Holland)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமகன் பாலேந்திரன் (FROM HOLLAND)
## "கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்டவர் "

என் மாமா அடிக்கடி சொல்லும் வார்த்தை "ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானாய் வளரும்." இது கடவுளின் வார்த்தையாக அமைகிறது. எப்படி எனில் உன்னைப் போல் பிறரை நேசி என்று கடவுள் சொல்லி இருக்கின்றார். மாமாவினுடைய வாழ்வில் கடவுளின் வார்த்தை ஒவ்வொன்றும் நிறைவேறினதாகக் காண்கின்றோம். உதாரணம் உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய். உனக்கு பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும். உன் மனைவி வீட்டோரங்களில் கனிதரும் திராட்சை செடியைப் போல் இருப்பாள் உன் பிள்ளைகள் உன் பந்தியை சுற்றிலும் ஒலிவமரக்கன்றுகள் போல் இருப்பார்கள்." இந்த வார்த்தை ஒவ்வொன்றும் மாமாவின் வாழ்விலே நிறைவேறினதை என் கண்களால் கண்டிருக்கின்றேன் . ஆகவேதான் மாமா கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்டவர் என்று நான் உறுதியாக சொல்லுகிறேன். இந்த ஆசீர்வாதம் மாமாவோடு மட்டுமல்ல, மாமாவின் பிள்ளைகளோடு மட்டுமல்ல, மாமாவின் சந்ததியோடு ஆயிரம் ஆயிரம் தலைமுறைக்கும் நிலைத்து நிற்கும் என்று கூறிக்கொண்டு மாமாவை இழந்து தவிக்கும் ஒவ்வொருவரையும் துயரக்கடலில் இருந்து துயர் துடைக்கும் வேந்தன்தாமே சமாதானத்தைக் கொடுத்து ஆற்றித் தேற்றுவாராக.

மருமகன் பாலேந்திரன்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் அன்பு மகள் வசந்தியிடமிருந்து....

குடியில்லா ஊர் தனிலே
குடியிருந்த எங்கள் அப்பா
கூட்டுறவுப் பணி செய்து
கூட்டி வாழ்ந்த சொந்தபந்தம்

இல் வாழ்வுதனில்
"இராசு" என்ற துணையுடன்
பதினொரு மகவுதனை
பக்குவமாய்ப் பெற்று வளர்த்து
பாரினில் உயர்ந்திடவே
பாடசாலைகள் தேடிச் சென்று
உயர் கல்வி பெறவைத்து
உத்தியோகம் எடுத்துத் தந்தார்.

விண்ணப்பம் பல நிரப்பி
விரைவாய் ஒப்பமிடு என்றேவி
அவையத்து முந்தியிருக்கச் செய்த
அரிய செயல் வீரம் அப்பா!

முதுமையிலும் முழுமையாய்
எல்லாக் காரியங்களையும்
நன்றே செயற்படுத்தி
முன்மாதிரியாய்
நின்றவர் நீங்களப்பா.

மகள்
வசந்தி நாகராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகளுடன்







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனிவான மாமாவே!

அமைதியின் உருவமாகவும்
அடக்கத்தின் இருப்பிடமாகவும்
பண்பின் பெருந்தகையாகவும்
பாசத்தின் உறைவிடமாகவும்
எம் மத்தியில் அன்பு ஒளியாக
இருந்த உத்தமரே!
மண்ணோடு உங்கள் பூவுடல்
மறைந்து விட்டாலும்
உங்கள் நினைவுகள் எங்கள்
இதயங்களில் இருந்து
ஒரு போதும் இறைவதில்லை மாமா...

மருமகன்
நாகராசா

## அன்பான அம்மப்பா!

அம்மப்பா
வானில் ஒரு கோடி நட்சத்திரமென்றும்
கடலில் குமரியே கவிழ்ந்ததென்றும்
நடந்துபார் உலகம் மிக சிறியதென்றும்
கண்களை மூடி
எதையோ காற்றிலிருந்து பறித்தது போல்
சொன்னாலும்
அதைப்பற்றியெல்லாம் எங்களை
அன்றே யோசிக்க வைத்த ஆசான்
அம்மப்பா
இந்தச் சின்ன வார்த்தையிலிருந்து
முளைத்தது தான்
எங்களின் மூன்று தலைமுறையும்

முதன் முதலாய் கார் ஓடியது நீங்கள்
தந்த காரிலும் தைரியத்திலும்
எங்காவது போகவேணுமென்றால்
லது வீட்ட வந்துட்டு போ என்று தான்
சொல்லுவீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களின் கண்டிப்பான பேச்சு தான்
எங்களுக்கு பயம் கலந்த மரியாதையை தந்தது.
கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண்விட்டு மறைந்து
நீங்கள் விண்நோக்கிச் சென்றாலும்
கண்விட்டு மறையாமல்
கனகாலம் இருப்பீர்கள்
அம்மப்பா!

அவரின் கைகளால் தனது நாட்குறிப்பை எழுத முடியாததால் தினமும் அலைபேசியில் எடுத்து "துவா ஒருக்கா Diary எழுதோணும் வா" அது கட்டளையாக தான் இருக்கும். தன்னிடம் கையொப்பம் வாங்க வருபவர்களை ஒரு நாளும் தனது உடம்பு சரியில்லை, ஏலாது என்று அனுப்பியதே இல்லை. பொறுப்பு என்றால் என்ன? ஒரு வேலையை சரியாக செய்வது எப்படி என்று உங்களிடம் தான் பழகிக் கொண்டோம். அங்கே இருக்கும் போது உங்களிடம் Assistant ஆக வேலை செய்த அனுபவம் தான் இருக்கிறது. அவரின் தோலில் விழுந்த சுருக்கங்கள் தான் எங்களுக்கு வரையாது கிடைத்த ஓவியம் போல. மரணம் தான் ஒரு மனிதன் எப்படி வாழ்ந்தான் என்று சொல்லும். அதற்கு சான்று உங்களது ஊர்வலத்தில் கலந்து கொண்ட மக்கள்.

பேரப்பிள்ளைகள்
அனுதரன், துவாரகா
சிவாரகா, லது, கிரிதரன்

## பூட்டப்பிள்ளை அகரனின் ஏக்கம்

பூட்டனுக்கு
இருமல் நின்று விட்டது
மருந்து தேவையில்லை.

பூட்டனுக்கு
நிரந்தர ஓய்வு
விசிறி தூங்குகின்றது.

அகரன் என்று பாசமழை பொழியும் பூட்டனை எங்கே தேடுவது?

பூட்டன்
அகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பு மகன் ராசனிடமிருந்து.....!

அன்பான அப்பா எனக்கு
அன்புகாட்டி அறிவும் ஊட்டி
நண்பனைப் போலென்னை
நாளும் வழிநடத்தி
காக்கும் அரண்போல என்
காலமெல்லாம் காத்திருப்பீர்களென
கனவு கண்டேன் - அப்பா

காலன் உங்கள் உயிரைக்
கவர்ந்து சென்றதனால்
கண்ணெதிரே உங்களைக்
காணாது தவிக்கின்றேன்

துடுப்பிழந்த படகுபோல் உங்கள்
துணையிழந்து தவிக்கின்றோம்.
அப்பா!
வந்தெமக்கு
மன ஆறுதலைத் தந்திடுங்கள்

நிழல் தரும் மரம்போல்
எங்கள் வாழ்வில்
நிழலாய் நின்றவரே! -இன்று
நிழலிழந்து தவிக்கின்றோம்
நீங்கள் தான் எமக்கு
நிழலாக வேண்டும் அப்பா

உங்கள் நினைவோடு
வாழும் மகன்
(ராசன் ) **P.**சிறீதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமகள் கிருபாவிடமிருந்து.....!

*மாமா உங்கள் துயரச் செய்தி கேட்டு நாம்*
*ஆற்றொணாத்துயர் கொண்டோம்.*
*முதல் நாள் தொலைபேசியில் பார்த்து*
*கதைத்தோமே மாமா ஆனால் உங்களால்*
*கதைக்கமுடியவில்லை. நாளை கதைப்போமென*
*எண்ணியிருந்தோம். அதற்குள் நீங்கள் எங்களை*
*விட்டுப் பிரிந்து வீட்டிர்கள். எப்போது தொலைபேசி*
*எடுத்தாலும் இன்முகம் காட்டிசிரிப்போடு பதிலளித்து*
*பிள்ளைகளின் நலம் விசாரிப்பீர்களே மாமா!*
*இனி எப்போ உங்கள் குரல் கேட்போம்*

*உயிருடன் வாழும் மானிடர்க்கு*
*உயிர் பிரிந்தால் தான் பெரும் புகழ் - ஆனால்*
*உங்களுக்கோ வாழும் போதே பெரும்புகழ்*
*அன்பை அள்ளி வீசிய உங்களுக்கோ அழியாப் புகழ்.*
*எங்கள் அன்புத் தெய்வத்திற்கோ*
*என்றென்றும் மாறாப்புகழ்.*
*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.*

*உங்கள் அன்பு மருமகள்*
*கிருபா*

## பேரப்பிள்ளைகளிடமிருந்து.....!

Dear Appappa,

We are deeply saddened by the news of your passing, heartbroken that we weren't able to support you by your side through the toughest times this past year. Your true love and care did not go unnoticed and we will always be grateful for the times we had together. During your visit to the UK and ours to Sri Lanka, you entertained us, taught us and looked after us more than we could have ever asked for. Seeing the excitement and pride on your face when you took us for a ride in your new car is a memory that will remain engraved in our hearts forever. Appappa, thank you so much for being such an inspirational, generous and loving grandad to us all, we will continue to make you proud!

**May your soul rest in peace,**
**From Anojan, Ajiththa and all your loving grandkids**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்னுச்சாமி ஐயா அவர் குடும்பத்தாருடன்















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணையாத தீபம் எங்கள் அப்பா!

அன்புள்ள அப்பா!
எழுத இடம் போதாது அப்பா
உங்கள் அன்பான அரவணைப்பும்
கண்டிப்பும், மிடுக்கான தோற்றமும்
மறக்க முடியாதப்பா!
படிக்கும் காலத்தில் படிப்பித்த வரலாறு
தான் மறக்க முடியுமா?
மேசை மீது எல்லோரையும் ஏற்றி விட்டு
பாடம் சொல்லித் தருவீர்களே....
அடியும் போடுவீர்களே... நீங்கள்
எங்களுக்கு அடிக்கும் பிரம்பை எடுத்து
ஒளித்து வைத்தமைக்கும் அடி வாங்கியது
நினைவில் உண்டு அப்பா...
ஒரு காலத்தில் வறுமை வாட்டிய போதும்
கல்வியே கண் என மதித்து
கல்வியைக் கைவிடாமல் எமை
உற்சாகப்படுத்திக் கற்பித்தீர்களே!
நீங்கள் எமை வளர்க்க பட்ட
துன்பங்களை நாம் அறிவோம்.

"ஏழ்மை கல்விக்கு வெற்றி" என்பதை எங்கள் குடும்பத்தினூடாகக் காட்டியிருந்தீர்கள். எங்கள் குடும்பத்தை எவ்வாறு வளர்த்தீர்களோ அதே போல எமது கிராமத்தையும் வளர்த்தீர்கள். ஊழல்களைத் தட்டிக் கேட்டதால் சில வேளைகளில் அவப் பெயரும் பெற்றீர்கள். உங்கள் பிள்ளைகள் படிக்கும் போது பட்ட கஸ்ரம் இக் கிராமத்துப் பிள்ளைகளுக்கு வரக்கூடாது என எண்ணி படிக்கும் பிள்ளைகளுக்கு பல உதவிகள் செய்து வந்தீர்களே!.

அன்று போல் இன்று வரை கட்டிய மனைவியை நேசித்து அமமாவையும் காரில் ஏற்றிக்கொண்டு ஊர்வலம் வருவீர்கள். முழங்காவில், யாழ்ப்பாணம், மட்டுவில், மல்லாவி, கிளிநொச்சி என்று இரு வருடங்களிற்கு முன்பும் இருவரும் உலாவி வந்தீர்களே! மறக்க முடியுமா? இவையெல்லாம்.. உங்களுடைய மிடுக்கான செயல் உருவம், அன்பு, அரவணைப்பு இவையனைத்தும் எங்களில் ஒருவரிடமும் இல்லையென்றே எண்ணுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுடைய பெட்டகத்தினுள் நீங்கள் சிறுவனாக இருந்தது தொடக்கம் இன்று வரையான அத்தனை நிகழ்வுகளின் பதிவுகளும் டயரியில் உள்ளது. உங்கள் வாழ்நாள் நிகழ்வுகளின் சுவடுகளைத் தாங்கி அணையாத தீபமாக ஏற்றி வைத்துள்ளீர்களே என எம் மனம் வெதும்புகிறது. டயறி எழுத முடியாத போதும் எனது மகனை அழைத்து எழுதி உள்ளீர்கள் அப்பா! உங்களுடைய ஒவ்வொரு செயற்பாடும் வரிசைப்படியே கிராமமாகவே இருக்கும் . அது போன்றே தோட்டத்தில் மிளகாய்க் கன்று நடும் போது வரிசை சொத்தியாக நட்டதற்கும் உங்களிடம் அடிவாங்கினோம் .உங்கள் பிள்ளைகள் அனைவருக்கும் சகல வேலைகளையும் பழக்கியிருந்தீர்கள். வயலுக்கும் மருந்தடித்தோம்; வண்டியிலும் நீர் ஏற்றினோம்; தோட்டம் செய்தோம், வயல் விதைத்தோம்; வியாபாரம் செய்தோம் "வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்" எனக் காட்டி வளர்த்தீர்கள். உங்களுடைய இலட்சியத்தை அலட்சியம் செய்யாது உங்கள் பிள்ளைகள் நாம் ஈடேற்றி உள்ளோம் அப்பா. நீங்கள்.

" தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்பதற்கிணங்க சகல செல்வங்களையும் பெற்றீர்கள். நாம் கற்கும் காலத்தில் உயர்கல்வி இங்கிருக்கவில்லை. ஆனால் எம் பதினொருவரையும் பல மைல்கள், பல துன்பங்கள் கடந்து கற்பித்தீர்கள். இதன் பயனையும் பெற்றீர்கள் அப்பா. நீங்கள் எமது பகுதியின் உதாரண மனிதர், அப்பால் மனிதனாக வாழ்ந்தீர்கள் . ஊர் மக்கள் உங்களைப் போற்றினார்கள் இறுதி வரையும் நாம் அனைவரும் உங்கள் கண்டிப்புக்கு பயந்தே வாழ்ந்தோம் அப்பா. "தெய்வங்கள் எல்லாம் தோற்றே போகும்" தந்தை அன்பின் முன்னே.. "தாலாட்டுப் பாடும் தாயின் அன்பு தந்தை அன்பின் பின்னே" "தகப்பனின் கண்ணீரைக் கண்டார் உண்டோ..." "தந்தை சொல்மிக்க மந்திரமுண்டோ.."

"விண்ணில் உதித்தவன் என்றோ ஒருநாள் மண்ணில் வீழ்வான் என்பார்கள். ஆனால் நாங்கள் உங்கள் பிள்ளைகள் எங்களால் அதை ஏற்க முடியவில்லை அப்பா...

என்றும் உங்களை நெஞ்சில் நிறுத்தும்
அன்பு மகள்
ஜெயா - ஜெயந்தி தனபாலசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளுடன்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மிடுக்கான மாமா!

மிடுக்கான மாமா!

கொண்ட இலட்சியம் குன்றாது வாழ்ந்தீர்கள். உங்கள் இல்வாழ்க்கை மங்காது வாழ்ந்தீர்கள். பிள்ளைகள், மருமக்கள்,பேரன், பேர்த்தி, பூட்டனுடன் இனிமையாக வாழ்ந்தீர்கள். உங்கள் குடும்பத்தவரை அடுத்தவர் குறை கூற அனுமதிக்கவும் மாட்டீர்கள். உங்கள் குடும்ப உறவுகளை ஒரு கட்டுக்கோப்பில் வைத்து அனைவரையும் நல்வழிப்படுத்தி பார்போற்றும் புகழுடன் சென்றீர்கள். உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

**N.Thanapalasingam**

நா.தனபாலசிங்கம்

## புருசோத் பேரனிடமிருந்து

அம்மப்பா! உங்கள் பிள்ளைகளைக் கற்பித்தது போல் எங்கள் கல்வியிலும் அக்கறை செலுத்தினீர்கள். Diary எழுதுவதை ஒரு பழக்கமாகக் கொண்டிருந்தீர்கள். எழுதுவதற்கு கை இயலாதபோது என்னை Diary எழுதுவித்தீர்கள்.

Diary எப்போதும் ஆங்கிலத்தில் எழுதுவீர்கள் இது என்னை மிகவும் கவர்ந்த பண்பாகும். நான் A/L படிப்பதற்காக யாழ்ப்பாணம் சென்று திரும்பி வரும் வரை Diary எழுதுவதற்காகக் காத்திருப்பீர்கள். அத்துடன் நான்கு ஐந்து நாட்களுக்கு முன்பு நடந்த விடயங்களையும் ஞாபகம் வைத்து மறக்காமல் கூறுவீர்கள். ஒரு வருடம் எங்களுடன் வந்து தங்கியிருந்தீர்கள். உங்களுக்கு வேண்டிய பணிகளை ஆற்றியுள்ளேன் என்பதில் எனக்கு ஒரு திருப்தி. ஒரு குடும்பத்தில் ஒரு மூத்தவர் இருந்தால் பல விடயங்களை ஒழுங்காகவும், நேர்த்தியாகவும் செய்யவும், எங்களை வழிப்படுத்தவும், ஆலோசனை வழங்கவும் அவசியம். அந்தவகையில் ஆளுமை மிக்க எங்கள் அம்மப்பாவை இழந்துவிட்டோம் என்பதில் பெருவருத்தம் எங்களுக்கு. அம்மப்பா! உங்கள் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**T.Purusoth**

த. புருசோத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பாசாமி ஒரு குடும்ப "சிந்தாவிளக்கு"

எந்தை என்றும்
எமது சிந்தையில்
குடியிருக்கும் ஒரு
சிந்தா விளக்கு.

எந்தையின்
உயிர்நீர்த்த
யாக்கை
அக்கினிக்கு
சமர்ப்பிக்கபட்டதே
அன்றி நித்தம்
அப்பாசாமியின்
சத்தம் எமது
செவிகளில்
அலைமோதி
அமைதி
அடைகின்றது.

இன்மையிலும்
இல்லாமை
வாட்டிய போதிலும்
கல்லாமை,
அறியாமை நன்றல்ல என
உணர்ந்து
பிள்ளைகளுக்கு
கல்வி கற்பிக்க,
அறிவு புகட்ட
நீங்கள்
அம்மாவுடன்
எடுத்த
முயற்சிகளை
சொல்லாமை
கடந்து போக
முடியாது.
ஆனாலும்
அந்த சோதனையான
சாதனைகளை
சொல்ல
வார்த்தைகளே
இல்லை.

குடும்ப பொறுப்பு
ஒருபுறம்
இருக்க,
சமூக பொறுப்பையும்
தலையில் சுமந்து
அநீதிகளையும்
ஊழல்களையும்
பல அச்சுறுத்தல்
மத்தியிலும்
பொது தளத்தில்
வெளியிட்டு
உங்கள் சமூக
அக்கறையை,
மக்களிற்கான
மேம்பாட்டை
சமாதான
நீதவானாகவும்
இறுதிவரை
இருந்து
செயற்பட்டீர்கள்.
ஊழல் செய்யும்
அதிகாரிகளுக்கு
எதிராக குரல்
கொடுத்து
"பெட்டிசன் பொன்னுசாமி"
என மக்களால்
விழிப்புணர்வு
பட்டம் பெற்றவர்
நீங்கள்.

பட்டினத்தார்
கூறியது போல் "
ஆடுகிற ஆட்டமும்,
ஓடுகிற ஓட்டமும்
ஒரு நாள் ஓயும்
போது... கூடுகிற
கூட்டம் தான்
சொல்லும் நீ
யாரென்பதை"
அந்த இறுதி
மரியாதையில்
எமது உறவுகளும்
மக்களும்
அப்பாசாமி
யாரென்பதை
கொரோன சமூக
இடைவெளி
சட்டத்தையும்
மீறி நிரூபித்து
விட்டார்கள்.

"நெருநல்
உளனொருவன்
இன்றில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும்
பெருமை
உடைத்து இவ்
வுலகு"
நிலையாமை,
குறள் 336 படி
நேற்று இருந்தவர்
இன்றில்லை
என்பதை
பெருமைப்படும்
படி வைத்த நீங்கள்
ஒரு குடும்ப சிந்தா
விளக்கு, சமூக
சுடரொளி என்றும்
உங்கள் வேதம்
ஒலிக்கும் சேவை
ஒளிரும்.

அப்பா, நீங்கள்
இல்லை என
எண்ண என்
மனம் மறுக்கிறது.
கடந்த 30 ஆண்டு
காலமாக அருகில்
இருந்து உங்களை
கவனிக்கவில்லை.
தொலை தூர
தொடர்பில்
இருந்ததால்
இன்றும் நீங்கள்
இருப்பதாகவே
தோன்றுகிறது.
வருடா வருடம்
உங்களை வந்து
பார்க்கும் படி
இருந்தும் கடந்த
வருடம் காண
முடியவில்லையே
என்ற ஏக்கத்துடன்
இருக்கையில்,
"சிரித்தபடியே
போய் விட்டீர்கள்"
என்ற தங்கையின்
தொலைபேசி
செய்தியில் ஒரு
கனம் உள்ளம்
உடைந்து விட்டது.
நாளை என்னாகும்
என்று யாருக்கும்
தெரியாது. இந்த

நிலையாமை
வாழ்வியல்
நெறி முறையை
எண்ணி மனம்
சமாதானமானது.
எமது வாழ்வு
உள்ளவரை
உங்கள் நாமமும்
நீங்கள் செய்த
சமூக சேவையும்
தொடரும்.

நாட்டில்
உங்களுடன்
நாளும் அருகில்
இருந்து கவனித்த
என் சகோதரங்கள்
என்றும் நன்றிக்கு
வித்தாகும் நம்
சொந்தங்கள்.

"தன்னை கீழே
வைத்து
சுமையை உள்ளே
மறைத்து
நம்மை மேலே
தூக்கிவிடும்
உயர்ந்த உறவு
எந்தன் உந்தன்
அன்புத் தந்தை."
இது அப்பாக்களின்
எழுதாத ஒரு
தொடர் கதை.

அப்பாசாமி
போய்வாருங்கள்.
உங்கள் ஆத்மா
இறைவன்
திருவடியில்
சாந்தியடையட்டும்.

உங்கள் மகன்
அப்பன் (மனோஹர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமகள் புலம்பல்

"அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன் பழிப்பது இல்லாயின் நன்று"

எனும் குறளுக்கு ஏற்ப உங்கள் வாழ்க்கையை வடிவமைத்து சிறப்பாகக் கொண்டு சென்று இவ்வுலகை விட்டுச் சென்று விட்டீர்கள் மாமா. உங்களது நினைவுகள் என்றும் எம் நெஞ்சினில் நிலைத்து நிற்கும் மாமா. உங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!**

மருமகள்
பாலசதாமணி மனோகர்

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

Dear Appappa,

We're incredibly heartbroken about your passing and are deeply Regretful that we could not see you one last time. We appreciate and will forever be thankful for your love, generosity and kind natureOur trip to India when we were younger was a journey that we will never forget. There is no doubthat we will treasure the memories we have had with you for the rest of our lives and will keep you in our hearts forever. Thank you for all your affection, wisdom and care, we will continue to honour Your Memory

**Rest in peace Appappa.**
**Lots of love,**
**Anujah and Nithurshan**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகளுடன் பொன்னுச்சாமி ஐயா அவர்கள்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகன் முருகதாசிடமிருந்து....

புலம் பெயர் நாட்டில் இருந்து புலம்புகிறோம் "அப்பா அப்பா" என்று. பெற்றோரின் அருமை நாம் பெற்றோர் ஆன பின்பு தான் எமக்குப் புரிகிறது. அப்பா, நீங்கள் வாழும் போதும் எமது கடமைகளை சரிவர செய்யவில்லை. தூர தேசத்தில் இருந்ததால், உங்கள் வாழ்வு முடிந்த பின்பும் கடமைகளை செய்ய முடியாமல் துடியாய்த் துடித்தோம். வெளி நாட்டில் இருந்து அப்பா, கோபம் வந்தால் முருகன் என்று உறுக்குவதும் கோபம் தீர்ந்தால் முருகர் என்று உருகுவதும் அடிக்கடி ஞாபகம் வருகிறது அப்பா!. அப்பா! ஐயகோ அப்பா. படிக்கிற போது பட்ட கஸ்ரங்களை எங்கட காலத்தில் படக்கூடாது என்பதால் தவறாமல் பாடசாலை அனுப்புவீர்களே! நாம் படிக்கும் காலத்திலே சகல வேலைகளையும் பழக்கி விட்டீர்களே அப்பா. உங்கள் கண்கள் ஒன்றா இரண்டா? என்னுடைய பெயரிலே எமது குடும்பத்தின் குலவிளக்கு என முருகன் கோயிலையும் ஆதரித்து வெள்ளிதோறும் கோயிலுக்கு அனுப்புவீர்களே அப்பா. உங்கள் துணிவுடன் வெட்ட வெளியிலே தனிக் குடும்பமாக வாழ்ந்தோம் அப்பா. நீங்கள் மறைய வில்லையப்பா. உங்கள் உடல் மட்டுமே இல்லை. உங்கள் புகழ் செயல் அனைத்திலும் நீங்கள் நிலைத்து நிற்கிறீர்கள் அப்பா.

மகன்

p.முருகன்

## மருமகள் கல்ப்பனாவிடமிருந்து

மட்டுவில் மண் வாசனையால் என்னை மருமகளாக்கிய அருமை மாமா! உங்கள் மரணத்தால் மதிகலங்கி தவிக்கின்றேன் மாமா. 2010இல் நானும் பிள்ளைகளும் வந்த போது உங்கள் கதை சுறுசுறுப்பு, கொடுப்புக்குள் ஒரு சிரிப்பு இப்பவும் கண்முன்னே வந்து போகுது மாமா. உங்களை பேர்த்திகள் விதவிதமாக புகைப்படம் எடுக்கச் சொல்லி "போஸ்" கொடுத்தது இப்பவும் ஞாபகம் வருகின்றது மாமா. என் கடைசி மகள் "ஆர்தியா" ஏன் எனக்கு அய்யாவை கூட்டி கொண்டு போய் காட்டவில்லை" என கேள்வி மேல் கேள்வி கேட்கிறான் மாமா. உரிய இடத்திலிருந்த உங்களுக்கு கிடைத்துள்ள அந்தப் பெரிய கௌரவம் உலகம் உள்ளளவும் உங்கள் பெயரை உணர்த்திக்கொண்டிருக்கட்டும் உங்கள் நிறைவு ஒரு முடிவல்ல. அது விடிவுக்கான ஒரு வழிகாட்டல்.

மருமகள்

முருகன் கல்ப்பனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செல்லங் கொஞ்சும் அப்பப்பாவே!

அப்பப்பா எங்கள் அப்பப்பா
எங்களுடன் தொலைபேசியில் கொஞ்சிக் குலாவும்
எங்கள் அப்பப்பாவே...!
எங்களை மயில், குயில் என்று ஆசையாய் அழைத்து
செல்லங் கொஞ்சும் அப்பப்பாவே!
எங்களுடன் ஏன் இப்போது கதைப்பதில்லை?
அப்பாவிடம் அப்பப்பா கதைப்பதில்லை எனக் கேட்டால்
நீங்கள் கடவுளிடம் சென்று விட்டீர்கள்
என்று சொல்லுகிறார்களே!
இனி எப்போது எங்களிடம் கதைப்பீர்கள் அப்பப்பா?
கடவுளிடமிருந்து திரும்பி எப்போது வருவீர்கள்?
தொலைபேசியில் எங்களுக்கு ஆசைமுத்தம் (அவ்வா)
எப்போது தருவீர்கள்?
நாங்கள் அப்பப்பா செல்லம் எனக் கூறுவதைக் கேட்டு
பேரானந்தம் கொள்வீர்களே அப்பப்பா
நாங்கள் இனி யாருடன் செல்லக்கதை கதைப்பது?
அப்பப்பா எங்களை விட்டு ஏன் கடவுளிடம் சென்றீர்கள்?

பேரப்பிள்ளைகள்
அட்ஷயா, அஷ்விதா, ஆர்த்தியா

## மகள் சிவானந்தியிடமிருந்து...

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து முந்தியிருப்ப செயல்" என்ற வள்ளுவப் பெருந்தகையின் கூற்றை சிரமேற்கொண்டு எம்மையெல்லாம் கல்வி தந்து ஆளாக்கினீர்கள் அப்பா. கண்டிப்பும், கனிமொழியும் நிறைந்த உங்கள் வார்த்தைகளை நாம் இனிக்கேட்பதெப்போ? சமூகத்தின் தேவைகளை உங்களிடம் கேட்டு உதவி பெறுவோம். இனியாரிடம் கேட்போம்? ஆண்டவனின் அடிகளில் அமர்ந்திருந்து எமை ஆசீர்வதியுங்கள் அப்பா.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம்சாந்தி!!!**

மகள்
சிவானந்தி பரதன் (சிவா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரதனிடமிருந்து...

மாமா என்ற சொல்லின் இலக்கணமாய், இப்பிரதேசத்தின் தலைமகனாய், மக்களை மாண்பாக வாழவைத்த மகானே! பொன்னுச்சாமி எனும் பொன்னான பேர் கொண்ட பல்லவராயன்கட்டின் சொத்தே! இன்னும் சில காலம் எம்மோடு வாழ்ந்திருப்பீர் என நான் நினைக்கையில் சடுதியில் இவ்வுலகை விட்டுப் பறந்ததேனோ? இறைவனின் இணையடியில் இளைப்பாறி அமைதி கொள்க.

**ஓம்சாந்தி ஓம்சாந்தி ஓம்சாந்தி.**

மருகன்
பரதன்.

## பேரப்பிள்ளைகளின் மனத் துயர்

அன்பான அம்மப்பா! உங்கள் பிள்ளைகளைக் கற்பிப்பது போல் பேரப்பிள்ளைகளிலும் கல்வியிலே அக்கறை செலுத்தினீர்களே! பேரப் பிள்ளைகளும் சிறந்த கல்விமான்களாக வரவேண்டும் என்று ஆசை கொண்டீர்கள். உங்கள் ஆசை நிறைவேற நாம் நன்றாக படித்து உயர்வடைவோம். எங்களுடைய ஒவ்வொரு கல்விப் படியிலும் உங்களுடைய அக்கறை நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் ஆர்வம் எங்களை உற்சாகமூட்டும். திகழ் தரம் -05 புலமைப்பரிசில் சித்தி யடைந்ததை மகிழ்வு கொண்டீர்களே. இனிமேல் எங்களுக்கு கல்வியில் ஊக்கம் காட்ட ஒருவரும் இல்லை அம்மப்பா. நாம் படிக்கிறோம். உங்கள் நினைவோடு நாம் வெற்றி கொள்வோம். உங்கள் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கின்றோம்.

**ஓம்சாந்தி ஓம்சாந்தி ஓம்சாந்தி.**

கிதுசன்,
டிந்துசன், திகழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமகன் கதிரவேற்பிள்ளையின் புலம்பல்

அன்பான மாமாவே! உங்கள் 5ஆவது மகள் சாந்தியைக் கரம்பிடித்து மகிழ்வோடு வாழ்ந்து வந்தோம். திருமணமான புதிதில் மனைவியின் அரச வேலைக்காக அலைந்து திரிந்தீர்கள். வேலை கிடைத்ததும் மனமகிழ்வு கொண்டீர்கள். அவர் வைத்தியசாலையில் வேலை செய்தாலும் உங்களுக்கும், அயலுக்கும் தாதியானார். அப்பா அம்மாவுக்கு வருத்தம் என்றால் துடியாய்த் துடிப்பாரே. உங்கள் காலடியில் நிற்பாளே. விதி செய்த கோலத்தால் அவளையும் பறிகொடுத்தேன். இப்போ அவள் தனிமையில் என நீங்களும் சென்று விட்டீர்கள். மனைவியின் ஓய்வூதியம் பெற அலைந்து திரிந்தீர்களே. அவளுடன் நீங்களும் சென்று வாருங்கள் மாமா. என் மனைவியுடன் சேருங்கள். உங்கள் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றேன்.

**ஓம்சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!**

கதிரவேற்பிள்ளை
(அமரர் மகள் சாந்தியின் கணவர்)

## பேரப்பிள்ளைகளின் புலம்பல்

அன்புடன் அம்மப்பா!

சிறுவயதில் நாம் அம்மாவை இழந்தோம். வயது வர உங்களை இழந்து துடிக்கின்றோம். அம்மாவிடம் சென்று விட்டீர்களா அம்மப்பா? அம்மா இருந்திருந்தால் சில வேளை இன்னும் வாழ்வீர்கள். நீங்கள் ஆதரித்த முருகன் கோயிலை நானே செய்யவேண்டும் என எண்ணி கோயிலைப் பொறுப்புத் தந்தீர்கள். உங்கள் வருத்தம் கண்டு அடிக்கடி வருவேனே அம்மப்பா. எங்களை எல்லாம் ஏமாற்றி அம்மாவிடம் சென்று விட்டீர்களா? உங்கள் பூதவுடல் மறைந்தாலும் புகழுடல் மறையாது அம்மப்பா.

**ஓம்சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!**

பேரப்பிள்ளைகள்
விஸ்ணுகாந், ஹேமகாந்,
விமலகாந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பு மகள் ஆனந்தியின் உள்ளக்குமுறல்

அன்பின் உருவம் அப்பா
உங்களின் கனிவான பார்வையும்
புன்முறுவல் சிந்திடும் அழகு முகமும்
தெளிவான பேச்சும் என்றும் எங்களின்
நெஞ்சை விட்டகலாது.

உங்களின் மிடுக்கான நடையும்
எடுப்பான தோற்றமும், துடிப்பான செயலும்
அனைவரையும் கவர்ந்திடுமே அப்பா.

தலை எடுத்து நாம்
வளரும் போதெல்லாம்
தன் தோள் கொடுத்து
தூக்கிவிட்ட தெய்வமே
எங்களின் எதிர்காலத்தை
எண்ணி எண்ணி கணக்குப் போட்டு
சைக்கிலிலே ஏத்தி கனதூரம் சென்றதை
எப்படி அப்பா நாம் மறப்போம்?

பயிற்சி வகுப்பு முடியும் வரை
பார்த்துக் காத்திருந்து
அழைத்து வந்ததை
எண்ணி புலம்புகின்றேன் நான்.

சபையிலே முன் நிறுத்தி
சான்றோரும் போற்றும் படி வழி நடத்தி
பார்புகழ வைத்த தெய்வம் நீங்கள் அப்பா.
காத்திருந்து காத்திருந்து
காலனுடன் போராடியும்
காலமதை வெல்ல
எம்மால் முடியவில்லையே அப்பா.

என்வரவை எதிர்பார்த்து இருந்து
என் கையால் உணவருந்தி
என்னை ஆனந்தப்படுத்தி நீங்கள் சென்றது
தான் ஏனோ?
இனி எப்போது காண்போம்? இனியமுகத்தை;
ஏங்கித்தவிக்கின்றோம்.

மகள்
ஆனந்தி விஜயராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவழியா பெருமனிதர் எங்கள் மாமா

நினைவழியா பெருமனிதன் எங்கள் மாமா. ஒரு மனிதனுடைய வாழ்க்கை என்பது அவனது, பிறப்பிற்கும், இறப்பிற்கும் இடையே நடக்கும் சம்பவங்களின் தொகுப்பாகும். ஒருவர் வாழும் காலத்தில் என்ன செய்தார். எவ்வாறு வழிநடத்தினார், தான் சார்ந்த சமூகத்திற்கு என்ன செய்தார் என்பதிலிருந்தே அவரது பெயர் அவரது இறப்பின் பின்பும் மற்றவர் மனதில் சிரஞ்சீவியாக நிலைத்திருக்கின்றது. அத்தகைய சிறப்புக்குரிய பெருந்தகை எனது மாமா அவர்கள்

என் துணையின் தந்தை என்றாலும் என் தந்தை என நான் உறவு கொண்ட ஒருயிர் மருமகன் என்று கருதாது மகனாக கருதிய அன்பு நெஞ்சத்தான். பெற்ற மகளை விட பெறாத இம்மகனிடம் பெரும் பாசம் வைத்த பாசக்காரர். என்னை மருமகன் என்று அழையாது "தம்பி தம்பி" என்று அழைத்து உறவு கொண்டாடியவர். தங்களுக்கும் எனக்குமான உறவு மாமனுக்கும் மருமகனுக்குமான உறவென்பதா? அல்லது தந்தை மகன் உறவென்பதா? அல்லது சிறந்த இரு நண்பர்களுக்கிடையிலான உறவென்பதா, எல்லா உறவுகளையும் தங்கள் ஒருவரில் கண்டிருக்கின்றேன். முழு மரியாதையும் நிரம்பிய அதிகாரத்தையும் எனக்களித்து எவரும் குறைசொல்லாத அளவிற்கு உற்ற முறையில் வழிநடத்திய உன்னத உறவு நீங்கள்.

மருமகன்
விஜயராசா

## பேரப்பிள்ளைகளின் துயர் பகிர்வு

"அம்மப்பாவைப் பார்த்து வருகிறேன்"
என்றெல்லாம் அம்மா கூறினார் .
ஏன் அம்மப்பா எங்களிடம் எதுவும்
கூறாமல் நீங்கள் சென்றீர்கள்?
இங்கு வந்து நீங்கள் நிற்கும் போதெல்லாம்
எங்களுக்கு அறிவுக்கதைகள் கூறி
நல்வழிப்படுத்தினீர்கள். உங்களுடன்
நாங்கள் பழகிய அந்த நாட்கள் எல்லாம்
எங்கள் வாழ்வில் என்றும் இனிமையானவைதான்.

உங்களின் சிரிப்பும், அன்பு கொட்டும்
உன்னதமான வார்த்தைகளும்
எப்போது நாம் கேட்போம்?
உங்களின் பிரிவு எங்களை
மீளாத்துயரில் ஆழ்த்தியது.
உங்களின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பேரப்பிள்ளைகள்
அபிநயா, ஜெய்சால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகன் சிறிசங்கரிடமிருந்து...

அப்பா!..

யாருக்கும் கிடைக்காத, முழு நிறைவான, காத்திரமான, பொறுப்புள்ள "அப்பா" என்ற சொல்லுக்கு மிகப் பொருத்தமான வரைவிலக்கணம் நீங்கள். உங்களுடன் இருந்த பொற்காலங்களை மீட்டிப்பார்க்கின்றேன். சிறு வயதில் தோள்களில் தூக்கித் திரிந்த காலங்கள், பல்லவராயன்கட்டிற்கும் முழங்காவிலுக்கும் இடையில் சைக்கிள் பாரில் என்னை வைத்து கதை சொல்லிய பொழுதுகள், வயல் வரம்புகளில் தடுக்கி விழாமல் இருக்க விரல்கள் இறுக்கி நடந்த நேரங்கள், கிளிநொச்சியில் படித்த காலத்தில் எம்மைப் பார்க்க சகல சாமான்களுடனும் சைக்கிளில் வந்த காலங்கள், பல்கலைக்கழகத்தில் படித்த காலத்தில் உங்களுடன் அளவளாவிய பொழுதுகள் இன்னும் எத்தனை, எத்தனை?

உடல் தளர்ந்தாலும் உள்ளம் தளராத உதிரும் தவிப்பில் அப்பாவைக் கண்ட இறுதிப் பொழுதுகளில்தான் வாழ்வின் நிதர்சனம் எனக்குள் புகுந்து கொண்டது. பெருமரமாய் சூறைக்காற்றாய், அலை எழும் கடலாய், எதற்கும் கலங்காத உறுதியான உள்ளம் படைத்த அப்பாவின் உடல் தீயில் கருகிய தருணங்களில் தான் வாழ்வின் அர்த்தம் புரிந்தது. சாம்பலின் ஊடாக தேடித் தேடி இது விலா எலும்பு, இது கை எலும்பு என அப்பாவின் எலும்புகளைப் பொறுக்கிய அந்த வினாடிகளில் தான் வாழ்க்கையின் பரிமாணமும், தத்துவமும் பிடிபட்டது.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவான்" என்பதற்கேற்ப இந்த உலகில் மிகச் சிறப்பாக வாழ்ந்த நீங்கள் தெய்வத்துள் ஒருவராக இருந்து எங்கள் அனைவரையும் ஆசிர்வதித்து சிறப்பாக வழிநடத்துவீர்கள் என்பதோடு உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

உங்கள் மகன்

சிறிசங்கர்

## இளைய மருமகள் அனுஷாவிடமிருந்து....

கனத்த மனத்துடன்
கனிவான உங்கள் நினைவுகள் பகிர விழைகின்றேன்.
பிறப்புக்களில் மனிதனது பிறப்பு மேலாம்.
பெருமைக்கும் உயர்வுக்கும் உரியதாகி
இறப்பு தரு மாய்வினிலே வாழ்ந்து காட்டும்
இலட்சியத்து தடயங்கள் - எதிர்காலத்துத்
திறப்புக்கே வழியாகிச் சமூகந் தன்னைத்
திசை காட்டிக் குறிக்கோளின் மனிதவாழ்வு
சிறப்புக்கே நிலையாகும் மரணந் தன்னால்
சிரஞ்சீவி மனிதனவன் தெய்வமாவான்"
இப்பாடலுக்கு இசைவாக, தனது வாழ்வை அமைத்துக் கொண்டவர் எனது "மாமா".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கும் உங்களுக்குமிடையேயான பிணைப்பு
ஒன்றரை தசாப்தத்தினைக் கடந்த நிலையில்
இன்னும் ஈராறு வருடங்களில்
உங்கள் சகாப்த அகவையைக் - கொண்டாடிட
நாம் காத்திருக்கையில்
ஒளிவீசிய அகல் சுடரொன்று
ஈகைச் சுடராய் அணைந்தது.

நினைவுநாள் குறிப்புக்கள் எழுத விளைகையில்
விழியோரம் விரிகின்றன.
எண்ணிலடங்காக எண்ணங்கள்
என் அன்பு மாமா!

நான் உங்களுக்கு அருகாமையில் இருந்தமையால்,
உங்களது இளமைக்கால நினைவுகள்
திருமண வாழ்க்கை
இல்லற வாழ்க்கை
குடும்பம் சார் இனிய நினைவுகள்
உங்களது உடல்நிலை
எனப் பல நினைவுகளை என்னுடன் பகிர்ந்துள்ளீர்கள் மாமா!
அவை அனைத்தும் என்னுள்ளே என்றும் நிலைத்திருக்கும்!

உங்களுடைய இனிய இல்லற வாழ்வின் பொன் விழாவினை
எம்மோடு சிறப்பாக மனங்களித்து கொண்டாடினீர்கள் - பதுளையில்
அதுவே நீண்ட வருடங்களுக்குப் பின்
உங்களுக்கு அளவற்ற ஆனந்தத்தை
அள்ளித்தந்த நாள் என என்னிடம் கூறினீர்கள்!

பொன்விழா வாழ்த்து பத்திரிகையில் வெளிவந்தபோது
நீங்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை மாமா!
அன்று நான் பார்த்த உங்கள் சிரித்த முகம்
இன்றும் வாடாமல் என்னுள்!

தங்களுக்கு கண் சத்திரசிகிச்சை செய்தபோதும்
நேரம் தவறாமல் கண்ணுக்கு மருந்து விட்டு
கண்ணெனக் காத்தோம் மாமா - ஆனால்
காலனவன் எம் கண் மறைத்து - உங்களைக்
காவிக் கொண்டு சென்றதேனோ மாமா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளராத, சலிக்காத மனம்
விடயங்களை நேர் மறை எண்ணங்களுடன் கையாளும் தன்மை
நேர் கொண்ட பார்வை
சீரிய ஒழுக்கம்
கம்பீரத் தோற்றம்
கனிவான அன்பு
கணக்கிட்டுக் கருமமாற்றும் உங்களது பண்பு
இவையனைத்தும் பசுமரத்தாணி போல் என்
மனதில் என்றும் நிலைத்திருக்கும் மாமா!

ஒவ்வொரு தடவையும்
உங்களைப் பார்க்க வரும்போதும்
கனநேரம் காணவில்லை என்றால்
உணவு உண்ணாது
அடிக்கடி அலைபேசி எடுப்பீர்கள் மாமா!

எம்முடன் மாமி சகிதம் காரில் பயணிக்கையில்
உங்கள் கண்களில் பொங்கும் மகிழ்ச்சியை
இனி காணக்கிடைக்காதே மாமா!

இரு வாரங்களுக்கு முன் வந்தபோதும்
கனிவாய் என்னை இருத்தி
பல விடயங்களை கூறினீர்களே மாமா!
பிறந்தநாள் கொண்டாட்டத்திற்காய் காத்திருந்த எனக்கு
உங்கள் இறந்த செய்தி வந்ததும்
நம்பமுடியவில்லை என் காதுகளையே!

விடைபெறும் போதெல்லாம்
வெறுமனே கையசைக்காமல்
பண்பாய் "நன்றி" கூறி வழியனுப்புவீர்களே மாமா!
இயற்கையின் நியதியை யாரால் மாற்ற முடியும்?

நீங்கள் இப்போது நித்தியமாய் உறங்கியிருக்கலாம்
நீங்கள் விதைத்த பரந்த சிந்தனைகளும்
நீங்கள் வாழ்ந்து காட்டிய மனிதப் பண்புகளும்
என்றும் உறங்கப்போவதில்லை மாமா!

உங்கள் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

அன்புடன்
இளைய மரு(று)மகள்
அனுஷா சிறிசங்கர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரன் அருணோதனிடமிருந்து.......

2008 இல் நான் பிறந்த போது கிளிநொச்சியில் இருந்து ஓடோடி வந்து பார்த்த உங்களது கண்கள், உலகை விட்டு நீங்கும் போது என்னை காணவில்லையே!!!. நீங்கள் மண்ணுலகை நீங்குவதற்கு ஆறு மாதங்களுக்கு முன் உங்கள் விருப்பப்படியே கட்டப்பட்ட பல்லவராயன் கட்டு முருகன் கோயில் கும்பாபிஷேகத்திற்கு நாம் அனைவரும் ஒன்றாக சென்றபோது உங்கள் உடல்நலம் முடியாமையால் கோயிலிற்கு எதிரே இருந்த பேருந்து தரிப்பிடத்தில் இருந்து கொண்டே பூஜை நிகழ்வுகளை இரசித்தீர்கள். அப்போது தண்ணீர், உணவு என எது தேவையெனினும் அருகில் அமர்ந்திருந்த என்னிடமே கேட்டீர்கள். எனக்கு ஏழு அல்லது எட்டு வயது இருக்கும் போது உங்களைப் பார்க்க உங்களது வீட்டிற்கு வரும்போதெல்லாம் என்னை உங்கள் அருகில் அமர வைத்து என்னுடைய கல்வியைப் பற்றிக் கேட்பது மட்டுமல்லாது இலக்கங்களை சொல்லச் சொல்லி கேட்டு மகிழ்வீர்கள். அதை என்னால் என்றும் மறக்க முடியாது அப்பப்பா.

இப்படிக்கு,
உங்களின் மறுபிறவியில் உங்களை காண்பேன்
என காத்திருக்கும் அன்பு பேரன்
சி. அருணோதன்

## பேர்த்தி சோபிறாவின் புலம்பல்

அப்பப்பா! நீங்கள் இறந்ததில் எனக்கு மிகவும் கவலை. நான் எப்போது உங்கள் வீட்டிற்கு வந்தாலும் சிரித்த முகத்துடன் என்னை வரவேற்று, என்னுடன் ஆங்கிலத்தில் பேசுவீர்கள். அதை என்னால் எப்போதும் மறக்க முடியாது. உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**ஓம்சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!**

இப்படிக்கு,
அன்பு பேத்தி
சி. சோபிறா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளைய மகளின் இதயத்துளிகள்...

அப்பா எனும் அகல் விளக்காய்
எங்கள் இல்லத்தின் அடையாளமாய்
உள்ளத்தின் உறைவிடமாய்
வார்த்தையில் மட்டும் அப்பாவாக அல்ல
அன்பு, காப்பு கணிப்புடனே
வலிமை நம்பிக்கையுடன்
நாணயமும் ஊட்டி ஊக்குவித்த
பரிசாய்க் கிடைத்த இறைவன் நீங்களப்பா.

ஏழ்மை நிலையிலும் ஏணியாய் நின்று - எம்
பதினொருவரையும் பாசமொடு வளர்த்திட்ட
பகலவன் நீங்களப்பா!
வெட்ட வெளியில் தன்னந்தனியாய்
அழகான வீடமைத்து அதிசயமாய் - எமை
ஆளாக்கிய புதுமை மனிதன் நீங்களப்பா!.

கல்வியொடு கலைகளும் நாம்பெற வேண்டுமென்று
கழனியிலே கால்புதைத்த விவசாயி நீங்களப்பா.
நல்ல கல்வி நாம் பெறவே நாலாதிசையும்
எமையனுப்பி தட்டந்தனியே அம்மாவோடு
"ஆ" வளர்த்து வளம் பெருக்கி
தொலைதூரம் சைக்கிளிலே கால்வலிக்க
விறகுடன் வேண்டுவனவெல்லாம் கட்டிவந்து
எங்கள் கல்விப் பயணத்தைக் கண்காணித்த
காவல் தெய்வம் நீங்களப்பா...

நீங்களுண்ட மீதிச் சோற்றுப் பருக்கையிற்காய்
சண்டையிடும் சகோதரர் எம்வியூகம் அறிந்தே
வேண்டுமென்றே மீதம் விடும் உங்கள் உன்னத பாசம்
சொல்லி முடியாதப்பா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்பத்தைந்து அகவையிலும்
எண்ணிய இடங்களிற் கெல்லாம்
கவனமாகக் காரிலேற்றித் திரிந்த
எங்கள் பார்த்தசாரதி நீங்களப்பா...

கோடிவளம் கண்டபோதும்
பொன்னே அணியாத
பொன்னப்பா நீங்களப்பா
சென்ற திங்களில் உங்கள் திருமுகம் பார்த்து
சிந்தை மகிழச் சேவைகள் புரிந்தோமே.
விந்தையொடு எழுந்திடுவீர்கள் என்றெண்ணி
நித்தமும் முயன்று தொழுதோமே
எட்டும் திக்கும் எட்டாத் திசைகளில் இருந்தும் உங்கள் பிள்ளைகள் தளராது முயன்றார்களே!
நீங்கள் மருத்துவனாக்கி அழகுபார்த்த கடைசி மகன் கூட காலனொடு இறுதிவரை போராடித் தோற்றானே அப்பா!

இறுதியில் ஆசைமுகம் பார்க்கவென ஆனந்தியை
அழைத்து அகமகிழ்ந்தீர்களே அப்பா.
இற்றைத் திங்கள் உங்கள் முகம் காணாமல்
கண்ணீர் விழிகளுடன் நிழற்படங்கள் தேடுகிறோமப்பா....

கடைக்குட்டி நானென்று காலமெலாம் - எனைக் கைக்குள்ளே வைத்துக் காத்தீர்களே!
செல்லப்பிள்ளை இவளென்று எல்லோர்க்கும் அறிமுகம் செய்வீர்களே

எங்கு நான் சென்றாலும் திரும்பி நான் வரும்வரை வைத்த கண் வாங்காமல் வாயிலையே பார்த்திருப்பீர்களே
அகல், பகல் என அழகான பெயரிட்டு அன்புடனே அழைத்தீர்களே!
இத்தனையும் இனி எப்போதப்பா கிடைக்கும்?

எத்தனையோ செல்வங்களை அள்ளி
எனக்குத் தந்தீர்கள். அத்தனை
செல்வங்களிலும் உங்கள்
தெய்வமுகம் தெரியுதப்பா.

மகள்
தமயந்தி சந்திரகுமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்திரனிடமிருந்து........

மாமா

உங்கள் ஒவ்வொரு ஆலோசனையும், வழிகாட்டல்களும் பிரமிப்பானவை. அவற்றை எம் வாழ்வில் பின்பற்றி உதாரண புருசராய் உங்களைக் கொண்டு எம் பணி தொடரும் மாமா. உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

மருமகன்
சந்திரன்

## பேரப்பிள்ளைகளிடமிருந்து........

ஆறுபேர் கொண்ட அழகான குடும்பமிது.
என்றல்லவோ நாமிருந்தோம் அம்மப்பா!.
அறுவர் செல்லும் கார் வாங்கவேண்டுமென்று
அப்பாவிடம் அடம்பிடித்து நின்றோமே அம்மப்பா!
"அகல் அகல்" என்று அடிக்கடி நீங்கள்
அழைக்கும் குரலை கேட்கத்தான் ஆசை அம்மப்பா!.
அன்போடு அதட்டலும் உங்கள்
ஆலோசனைகள் ஒவ்வொன்றும் - எம்மை
உயர வைக்கும் தத்துவங்கள் அம்மப்பா!
உங்கள் செல்லப்பேரன் குஜியின் குறும்புகளை
கொடுப்புக்குள் சிரிப்புடன் இரசிக்கும் உங்கள்
அழகான முகம் காண ஆசை தான் அம்மப்பா
நீங்கள் இல்லா எம் இல்லம்
வெறுமையாகப் போனதே அம்மப்பா.
எப்போதும் உங்கள் ஆசி
எமக்கு வேண்டும் அம்மப்பா
உங்கள் நிழலிலே நாம்
நல்லவர்களாக வல்லவர்களாக
வளர்வோம் அம்மப்பா.
உங்களைப்போலவே நீதிக்காய் குரல்கொடுக்கும்
உங்கள் பேரர்கள் நாமாவோம் அம்மப்பா...

பேரப்பிள்ளைகள்
அகல், பகல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாட்டுப் பயணங்களின் போது....















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்காத நினைவலைகள்....

அண்ணா எதை மறப்பது?
தங்க நிறம், முத்துச்சிரிப்பு. தூய்மையில் சிகரமான தோற்றத்தையா?
பெற்றோர் தங்கள் மீது வைத்த பாசத்தையா?
சிறு வயதில் தங்களிடம் எதிர்த்துப்பேசி அடி வாங்காது ஓடியதையா?
கூட்டுக் குடும்பமாய் இருந்து கூடி மகிழ்ந்த காலத்தையா...
உங்கள் மூத்தமகளை சைக்கிள் கூடைக்குள் இருத்தி சுத்தித் திருந்ததையா?
எதை மறப்பது அண்ணா???
தங்கள் வாழ்க்கையில் வறுமை குடி கொண்ட போது போட்ட எதிர்நீச்சலையா?
தாங்கள் செல்வச் செழிப்போடு இருந்து மகிழ்ந்த காலத்தையா?
பிள்ளைகளின் நல் நிலையைக் கண்டு பூரித்திருந்த நிலையையா??
நோய் வாய்ப்பட்டிருந்த போது தாங்கள் பட்ட வேதனையைக் கண்டு நாங்கள் துடித்ததையா?
இறுதியாக தங்களின் கைபிடித்து தலை தடவி கதைத்த சில வார்த்தைகளையா,
அண்ணா எதை மறப்பது அண்ணா?

எனத் தவிக்கும்
தங்கள் இரத்தினம்
கணவர், பிள்ளைகள்

## அன்பு அண்ணாவே!....

அண்ணா! கவர்ச்சியும் , கம்பீரமும் ,மிடுக்கும் கொண்ட உங்கள் நடை எச் செயலிலும் நேர்த்தியும், தூய்மையும், பேணும் திறன், செய்வன திருந்தச் செய் என்ற பணிப்புரை உங்களை என்று எம் மனதில் பதிய வைக்கும். எம் கிராமத்தையே உலுப்பும் உங்களின் விதம் விதமான விசில் ஒலி, உங்கள் கை அளைந்த மீதி உணவுக்காய் தங்கைகள் நாங்கள் இடும் சண்டை பார்த்து உங்கள் சிரிப்பு, உங்களைப் போலவே ஜொலிக்கும் உங்கள் துவிச்சக்கரவண்டி, எம் பெற்றோருக்கு மட்டுமல்ல உறவினர்களுக்கும் செல்லப் பிள்ளையாக வாழ்ந்த காட்சி இவையெல்லாம் நெஞ்சத்து நினைவுகள்

இல்லற வாழ்வில் கொண்டவளைக் கோணாது பேணிய பெருந்தகை. பதினொரு பிள்ளைகளைப் பெற்று நல்நடை நல்கி "சான்றோன் ஆக்குதல் தந்தையர்க் கடன்" என்பதை நிரூபித்துக் காட்டினீர்கள். பிள்ளைகளை நீங்கள் வாழும் காலத்திலேயே அவையத்து முந்தியிருக்கச் செய்த செம்மல் அண்ணா. நீங்கள் கஷ்டங்கள் வந்த காலத்தில் "இடுக்கண் வருங்கால் நகுக" என்பதைப் புரிந்து, சிறு முறுவலுடன் இதுவும் கடந்து போகும்" என வாழ்ந்து காட்டிய வல்லமையாளன். எமது பிள்ளைகளுக்கு மாமன் என்ற பந்தத்தை எப்போதும் கொடுத்தவர் நீங்கள்.

முதுமை வலியது. உங்களின் மூப்புக் காலத்தில் அண்மையில் இருந்து அடிக்கடி பார்க்க வில்லையே என்ற மனச் சுமையுண்டு. உங்கள் "ராசு" வைப் பிரிந்து சென்று விட்டீர்கள் என்ற கவலையும் மனதை வருத்துகின்றது. உங்கள் வாழ்வை நேரத்தியாகவே வாழ்ந்து சென்ற உங்கள் ஆன்ம ஈடேற்றத்திற்காக எல்லாம் வல்ல பரம்பொருளை என்றும் மன்றாடுவோம்.

தங்கை சோதி
பிள்ளைகள்
அவுஸ்ரேலியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகுந்தலா பிள்ளைகளின் மனத்துயர்

கண்டதும் "சகுந்தலாவா...?. எதில் வந்தாய்? இனி நாளைக்குத்தானே போகலாம். சாப்பிடு"என்ற குரலை நான் இனி எங்கே கேட்பேன்? வாழ்வின் பொருள் விளங்க வாழ்ந்து காட்டிய உங்களுக்கு வருத்தம் என்றதும் வழமைபோல் சரியாகிவிடும் என்றல்லோ நாமிருந்தோம். காதில் விழுந்த செய்தி கேட்டு கலங்கிவிட்டோம்... யாவும் பொய்யாகிப் போகாதோ? அன்று எம் வீட்டு நிகழ்வில் கூடி மகிழ்ந்தது இன்று போலுள்ளது பெரியப்பா..

பெரியப்பா... என்றழைக்கும்போது காணும் அந்த சின்னப் புன்னகையைக்கூட காலன் இரக்கமின்றிப் பறித்துவிட்டானே பெரியப்பா...எம் தந்தை இறுதிக்கடமைகள் செய்தீர்களே! இன்று நீங்களும் அவருடன் செல்வதைத் தாங்கமுடியவில்லை பெரியப்பா..... எம் மனம் ஏற்க மறுக்கும் இழப்புடன் இறையடி சேர்ந்த உங்கள் ஆத்மா சாந்தியடைய விழிநீர் சொரிய இறைவனைப் பிரார்த்தனை செய்கின்றோம்.

பெரியப்பா, என் தந்தை தந்த அன்பையே நீங்களும் தந்தீர்கள். நான் உங்களுடன் வளர்ந்த நாட்களில் என்னருகில் நீங்கள் இருந்தால் உலகமே என்னிடத்தில் என்றிருப்பேன். குழந்தையாய் உங்களருகில் தூங்கிய நாட்களும், காலைச்சுற்றிச்சுற்றி வலம் வந்ததையும், இருவரும் சைக்கிலில் பயணித்ததையும் மறக்கவே முடியவில்லைப் பெரியப்பா. "வீடியோக்கோலில் கடைசிமுறை உங்களைப்பார்த்த வதனம் இன்னமும் வாடவில்லைப் பெரியப்பா... நீங்கள் மறைந்ததை நான் தாங்குவேனென நினைத்தா சென்றீர்கள் பெரியப்பா. இறுதி நேரக் கடமைகூடச் செய்யமுடியாத பாவிநான் பெரியப்பா.... கனக்கிறது இதயம். கரைகிறது விழியிரண்டும், சிக்கிறது வார்த்தைகள், தாங்க முடியவில்லைப் பெரியப்பா. உங்கள் இழப்பால் தவிக்கும் மனதுடன் கண்ணீர் அஞ்சலி செய்து ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தனை செய்கின்றேன்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

அமரர் தம்பி பாலச்சந்திரன் அவரின்
மனைவி சகுந்தலா, பிள்ளைகள்,
தாரணி (வளர்ப்பு மகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனத்திட்ட நினைவுகளுடன் கண்ணீர் அஞ்சலி

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுயர்ந்த தெய்வம் எங்கள் அப்பா. வான்புகழ பிள்ளைகளை வனப்புடன் வளர்த்திட்ட நீங்கள் முழங்காவிலில் முதல் மனிதனாய் முயற்சியிலே முழு மனிதனாய் உயர்ந்து வாழ்ந்து வாழ்வில் தன் புகழ் பெருக்கி வாழ்ந்த உத்தமர் நீங்கள் அப்பா. பிள்ளைகளை வளமுடன் வளர்த்தெடுத்து உள்ளமதில் அன்பு, பாசம் என்ற உரம் இட்டே ஊன்றி வளர்த்திட்ட உத்தமர் நீங்கள் அப்பா. ஒவ்வொரு பிள்ளைகளிலும் ஓங்கி நிற்பது உங்கள் உயர் பண்பன்றோ. சீராட்டி தாலாட்டி வளர்த்திட்டே பெருமை சேர வாழ்வு தந்த நீங்கள் மறுவழி தேடி மாயமாய் மறைந்ததுதான் ஏனோ? உங்கள் குரல் கேட்க ஒரு கணம் ஆசை கொள்ளும் பிள்ளைகளுக்கு ஆறுதல் கூறி அமைதிப்படுத்துங்கள் அப்பா.

அப்பா கையைப் பிடித்து நடந்தால் ஆனந்தம் என்று சொல்லும் உங்கள் பிள்ளைகளுக்கு ஆறுதல் வார்த்தை கூறிடுங்கள் அப்பா. நிழல் கொடுத்த ஆலமரம் அடியோடு சரிந்தது போல் உணரும் உறவுகளுக்கு ஒரு வார்த்தை நீங்கள் கூறிடுங்கள் அப்பா. அப்பா! உங்களைப்போல் யாருமே இல்லை என்று அங்கலாய்க்கும் பிள்ளைகளுக்கு அன்பு விழியால் ஒரு பார்வைதனும் பார்த்து விடுங்கள் அப்பா. பிள்ளைகளுக்கு பெயர் வைப்பதில் இருந்து பெருந்திட்டம் போட்ட நீங்கள் இன்று பெருவழி தேடி பிரிந்து சென்றிட்டதேனோ? எத்தனை ஜென்மம் எடுத்தாலும் நீங்களே அப்பாவாக வரவேண்டும் என்று ஆசைகொள்ளும் உங்கள் அன்புச் செல்வங்களுக்கு அசையாத நம்பிக்கை கொடுத்து செல்லுங்கள். அப்பா என்று கேட்டு நாமும் விழி நிறைந்த துயரத்துடன் வழி அனுப்பி வைக்கின்றோம். போய் வாருங்கள் அப்பா.

**ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி**

ஆனந்தி மாமா கிருஷ்ணபிள்ளை குடும்பத்தின்
சார்பாக சுமதி **( FROM LONDON )**

## அமரர் சகோதரர் செல்லத்துரை, பிள்ளைகள்

எங்கள் அப்பா எங்களை விட்டுப் பிரிந்த வேளை
எமக்கு ஆறுதல் கூறிய அப்பாவே! - ஒரு கணம் கூறாமல்
சென்றதேனோ? அப்பா என்று தானே நாங்களும் அழைத்தோம்.
தள்ளாத வயதிலும் மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மனிடம் வந்த போது என் வீட்டுக்கும் வந்தீர்களே அப்பா. நான் தனிமையில் இருந்தாலும் உங்கள் ஆறுதல் வார்த்தைகள் தான் என்னை வாழ வைத்தது. துடியாய்த் துடிக்கின்றேன் எங்கள் அப்பு (ஐயா) உங்களைக் கூட்டி விட்டார். நோயுற்ற போதும் நான் ஓடோடி வருவேனே இன்று நோயின்றி திடீர் செய்தி கண்ணை மறைத்து விட்டது அப்பா, உங்கள் ஆன்ம ஈடேற்றத்திற்கு வணங்குகின்றோம்.

சுந்தரம், ராணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நண்பன் மயில்வாகனத்திடமிருந்து.....

வளம் மிகுந்த கலையொளி மிளிரும் புகழ்பூத்த முழங்காவில், காலம் காலமாக பல கலைஞர்களும், பொது நிலைத் தொண்டர்களும், விளையாட்டு வீரர்களும் தமது அரிய பணியினால் மக்கள் மனங்களில் நிறைந்திருக்கின்றவர்கள். அவ்வகையில் அமரர் காலஞ்சென்ற கதிரவேலு பொன்னுச்சாமி அவர்களின் சமூகப்பணியை நோக்குவது பொருத்தமானதாகும்.

அவருடன் சிறு வயது தொடக்கம் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. விளையாட்டுக்களில் பங்குபற்றுவது, கொட்டும் மழையிலும் மைதானத்தில் நின்று உதைப்பந்தாட்டம் விளையாடுவதுமாக எமது நெருக்கம் வலுவுற்று விரிவடைந்தது.

இளைஞராக வளர்ந்த பின்பும் பல ஸ்தாபனங்களில் சேர்ந்து பணியாற்றினேன். பாடசாலை அபிவிருத்திச் சங்கம், ஆலய பரிபாலன சபை, சனசமூக நிலைய நிர்வாக சபை என அவருடன் இணைந்து பழகிச் செயற்படும் வாய்ப்புக்கள் அதிகம் கிடைத்தது.

சமூக சேவையை உயர்வாகக் கருதி இருந்த இவர் சமூகத்தில் தலைவராக, கோவில் சபை உறுப்பினராக விளங்கினார். பல சேவைகளை மனமுவந்து ஏற்றுக் கொண்டார். இவரைப்பற்றி மதிப்பிடும் போது பல்துறை ஆற்றல் வாய்ந்த ஒரு உயர்ந்த மனிதராகவே நாம் காணலாம். அரசியல், சமயம், சமூகம் தொடர்பான அனைத்திலும் இவரது பணி இடம் பெற்றிருக்கின்றது.

ஒரு சமூகத்தலைவருக்கு இருக்க வேண்டிய அத்தனை பண்புகளும் பொருந்தியவராக கடைசி வரையும் மிளிந்தார். ஒரு சேவைத் தலைவனை இழந்து நம் சமூகம் தவிக்கின்றது. சேவை என்ற நேர்கோட்டில் களையாது பயணம் செய்தார். அவர் பயணம் செய்த ஒவ்வொரு நேர்கோட்டுப் பாதையும் இன்னும் என் கண்முன் தெளிவாகத் தென்படுகின்றது.

தனது சமூக மக்களின் முன்னேற்றத்தையே தனது வாழ்வாகக் கொண்டு வாழ்ந்த அவர் மக்களின் அன்றாட தேவைக்காக அரச அதிபர் காரியாலயம், கிராம சேவகர் அலுவலகம், நீதிமன்றம், பொலிஸ் நிலையம், வைத்தியசாலை, காணிக்கந்தோர் போன்ற மக்களின் அத்தியாவசிய அன்றாட தேவைகளை அவர்களுடன் சென்று நிறைவேற்றி வைப்பார். தனது சமூக மக்களிற்கு மட்டுமல்லாமல் அயல் கிராமங்களில் உள்ள மக்களிற்கும் தன்னாலியன்ற உதவிகளைச் செய்து வந்தார். எனது ஆருயிர் நண்பன் பொன்னுச்சாமி அவர்களின் இழப்பு எனக்கு ஆறாத்துயரைத் தந்துள்ளது.

**ஓம்சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!**

நண்பன்
மயில்வாகனம்
முழங்காவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீள நினைக்க வைக்கும் ஆளுமையாளர் கதிரவேலு, பொன்னுச்சாமி

மட்டுவிலில் பிறந்த இவர் இளமையிலேயே துடிப்புடன் காணப்பட்டார், சங்கத்தானை இந்துக்கல்லூரியில் ஆங்கில மொழி மூலம் கற்றுத்தேறிய இவர் மணப்பருவம் அடைந்ததும் மீசாலையைச் சேர்ந்த இராசம்மா என்பவரைக் கரம் பற்றி இன்பமாக வாழ்ந்தார். இக்காலத்தில் இவர் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க முகாமையாளராகக் கடமையாற்றினார். **1962**இல் பல்லவராயன் கட்டுப் பிராந்தியத்தில் குடியேறினார். "சிறுமை கண்டு பொங்கும் "இயல்பு இயற்கையாக அவரிடம் காணப்பட்டது. சரியெனப்பட்டதை யாராக இருந்தபோதும் அவர்களுடன் முறையாகப்பேசி எடுத்த கருமத்தைச் சாதித்து விடும் ஆற்றல் அவருக்கே உரித்தான சிறந்த பண்பு "மங்கலம் என்ற மனைமாட்சியின்" பயனாய் "நன்கலங்களாக நன்மக்கள்" 11பேரைப் பெற்றெடுத்தார். அவர்களை முறையாகக் கற்பித்து "அவைநடுவே முந்தியிருக்கச் செய்தார்", "தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்" என்ற வள்ளுவர் குறளுக்கு எச்சம் என்பது

ஒருவர் விட்டுச்செல்வது எனப்பொருள் - கொள்ளின் அவர் தான் வாழ்ந்த பிரதேசத்துக்குச் செய்த சேவைகளாலும், அவர் விட்டுச் சென்ற பிள்ளைகளாலும் அவர் புகழோடு வாழ்ந்தார் என்பதை எடுத்தியம்பும் ஆதாரங்களாகும், "பெருமைக்கும் ஏனைச்சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல்." என்பான் வள்ளுவன். ஒருவர் பெருமை அடைவதற்கும் அவ்வாறு அல்லாது சிறுமை அட்வதற்கும் அவரவர் ஆற்றுகின்ற கருமத்திலேதான் தங்கியிருக்கிறது. அமரர் பொன்னுச்சாமி அவர்கள் ஆற்றிய செயல்களால் அவர் பெருமை அடைகின்றார். **1996**ஆம் ஆண்டின் பின்னர் முழங்காவில் பிரதேசத்தில் அக்கறை காட்டத் தொடங்கினார், அவரிடம் காணப்பட்ட தமிழ், ஆங்கிலப் புலமையால் பிரதேச அபிவிருத்திக்கு பாரிய பங்காற்றினார். இதனால் இவருக்கு "பெட்டிசம் பொன்னுச்சாமி" என்ற புனைபெயரும் காணப்படுகின்றது. "மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்த மாமனிதர்கள் மரணத்தால் மறக்கப்படுவதில்லை" என்ற வேத விவிலியத்தின் அடிப்படையில் அவர் புகழ் நீண்டு நிலைபேறு உடையதாய் வாழும். 87ஆம் அகவையில் இறையடி எய்துதற்கு இருவாரங்களுக்கு முன்னர் பூநகரி பிரதேச சபை உதவி தவிசாளரைச் சந்தித்த போதும் பிரதேச முன்னேற்றத்தைப்பற்றியே உரையாடினார் என்ற பிரதேச சபை உதவித் தவிசாளரின் கூற்றில் இருந்து அவர் தான் வாழ்ந்த பிரதேசத்தை எப்படி நேசித்தார் என்பதைக் கண்டுகொள்ளலாம். கிளிநொச்சி மகாவித்தியாலய அதிபர் திருமதி ஜெயந்தி அவர்களிடமும், அவரது சகோதரர்களிடமும் காணப்படும் கண்டிப்பும், காருண்யமும் எடுத்ததைச் சாதிக்க வேண்டும் என்ற வேணவாவும், பிழையானதற்கு உடன்படாத பிடிவாதமும் அவர்களின் தந்தை வழி மரபணுவில் இருந்து கிடைத்த கொடைகள் என்றே குறிப்பிடலாம். ஆசிரிய சேவை, அதிபர்சேவை, வைத்திய சேவை என்று பல்துறைசார் சேவைக்காக மக்களைக் கொடுத்த மகாஉன்னத பெருமகன் மரணிக்கவில்லை.

அவர் சேவைகளால், அவர் பிள்ளைகளால் அவர் வாழ்ந்து கொண்டேருப்பார். "நெருநல் உளனொருவன் இன்றில்லை எனும் பெருமை படைத்திவ்வுலகு" அவரின் ஆத்மா நித்தியத்தில் இறையடியில் வாழும், அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அனைவருக்கும் ஆறுதல் தர எல்லாம் வல்ல இறையாசியை வேண்டுகிறேன்.

ஓம் சாந்தி.

மா, கணபதிப்பிள்ளை
ஓய்வுநிலைப் பிரதி அதிபர்
றோயல் கல்லூரி, கொழும்பு 07.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெருவாழ்வு கண்டாய் பெருமகனே பெறற்கரிய செல்வங்களோடு....

பெரும்பரப்பு கொண்ட பல்லவராயன்கட்டு எனும் பேர் பெற்ற ஊரில் பெருவாழ்வு கண்டு அமரரான கதிரவேலு பொன்னுசாமி சாவகச்சேரி, சரசாலை, செட்டியகுறிச்சி கிராமத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர். 1934 இல் கதிர்காமர் கதிர்வேலு மற்றும் செல்லமுத்து தம்பதியருக்கு மகனாகப் பிறந்து மட்டுவில் கமலாசினி வித்தியாசாலையில் ஆரம்ப கல்வியைப் பெற்றும், சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடைநிலைக் கல்வியை ஆங்கிலத்திலும் படித்தும் சிறப்புப் பெற்றவர்.

1950 களில் யாழ்ப்பாணத்தில் மெய்கண்டான் அச்சகத்தில் பணியாளராகத் தொழிற் பயிற்சி பெற்றுக் கொண்டார். பின்னர் 1956 இல் கூட்டுறவுத் துறையில் இணைத்துக் கொண்டு முகாமையாளராகப் பணி நியமனம் பெற்றார். பெரியார்களின் சித்தப்படி இல்லறம் எனும் நல்லறத்தில் 1957 இல் இணைத்துக் கொண்டு மீசாலை சப்பச்சி மாவடியைச் சேர்ந்த மாணிக்கம் வள்ளிப்பிள்ளை தம்பதியர்தம் கனிஷ்ட புத்திரி செல்வி. இராசம்மாவைக் கரம் பற்றி சீரும் சிறப்புடன் வாழ்ந்தும் பிள்ளைச்செல்வங்கள் பெற்றும் சிறப்புடன் வாழ்ந்து வந்தார்கள்.

வளம் பல கொண்ட வன்னி மண்ணில் பல்லவராயன்கட்டு கிராமம் நோக்கிய இல்லிட நகர்வு ஒரு பெரும் தீட்சண்யம் மிக்க முடிவாக அமைந்தது. 1960 இல் பல்லவராயன்கட்டு கிராமத்தில் குடியேறிய பொன்னுச்சாமி அவர்கள் அவ்வூர் கூட்டுறவுச் சங்கத்திலும் மற்றும் 10 கிராமங்களிலும் அமைந்திருந்த கூட்டுறவுச் சங்கங்களிலும் முகாமையாளராகக் கடமை ஆற்றினார். தொடர்ந்து பயிர்ச்செய்கையில் நாட்டம் கொண்டு விவசாயத்தில் ஈடுபட்டார். கரியாலை நாகபடுவான் நீர்ப்பாசனத் திட்டம், முழங்காவில் படித்த வாலிபர் திட்டம் ஆகியன அப் பிரதேசத்தை வளம் கொண்ட பூமி ஆக்கின.

சிறந்த விவசாயியாகத் திகழ்ந்தவர். புதிய "சுப்படெக்ஷா" உழவு இயந்திரம் வைத்திருந்தார். புதிய அறிமுகம். பல்லவராயன்கட்டு கிராம முன்னேற்ற சங்க தலைவர் மட்டுமல்லாது கமநலச்சேவை நிலைய தலைவர் ஆகவும் பணி புரிந்தார். முதல் முழங்காவிலில் குடியேறிய பின் விநாயகர் ஆலய பரிபாலன சபையின் பொருளாளராகவும், இணக்கமன்று, முதியோர் இல்லம், முழங்காவில் தேசிய பாடசாலை அபிவிருத்தி சங்க மற்றும் பல்லவராயன்கட்டு கமக்காரர் அமைப்பு உறுப்பினராகவும் சேவையாற்றினார்.

பொன்ராசு நிதியம் ஊடாக பல்கலைக்கழக மாணவர் மற்றும் புலமைப்பரிசு பெற்ற மாணவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கும் பணி என பல்வேறு பணிகளில் தம்மை இணைத்துக் கொண்டவர். பூநகரி சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்க உறுப்பினராக பூநகரி கோட்ட மாணவர்களுக்கு ஊக்கத்தொகை, கொறோனா இடர் கால ஊக்கத்தொகை வழங்கும் பணி என சமூகப் பணிகளில் இறுதிக் காலத்திலும் ஈடுபட்டுள்ளார். "இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றில் நின்ற துணை" என வாழ்ந்து காட்டியிருக்கிறார்.

"மங்கலம் என்பது மனைமாட்சி மற்று அதன்
நன்கலம் நன்மக்கட் பேறு"

என்ற திருவள்ளுவர் வாக்குக்கு ஏற்ப நல்ல புத்திரர்கள், புத்திரிகளைப் பெற்று அவையத்தில் முந்தியிருக்கச் செய்து புகழ் பெற்று வானவர்க்கு விருந்தினர் ஆனார் அமரர் பொன்னுச்சாமி அவர்கள். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்தனை செய்து கொள்வோம்.

கலாநிதி கந்தையா ஸ்ரீகணேஷன் சிரேஸ்ர விரிவுரையாளர்,
ஆங்கில மொழிக் கற்பித்தல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவப்புலவர் பண்டிதர் மா. கணநாதனிடமிருந்து.....

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு"

நேற்று இருந்த ஒருவரை இன்று காணவில்லை என்ற பெருமை கொள்வது போன்ற பெருமைக்கு உரியவர் அமரர் பொன்னுச்சாமி அவர்கள். தாம் வாழ்ந்த காலத்தில் காலத்தின் தேவை அறிந்து கடமை புரிந்த புனிதப் புண்ணியர் இவரே ஆவார்.

"நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது

என்ற குறள் வழியே அடக்கத்தின் ஆணிவேராகவும் திகழ்ந்தார். எடுப்பான தோற்றம், மிடுக்கான நடை, கண்டிப்பான, நேர்த்தியான செயற்பாடும் இவரின் அணிகலன் ஆகும்.

மலை போல உயர்ந்தும்
மலர் போல மணம் வீசியும்
நிலம் போல அடங்கியும்
துலாக்கோல் போல சமன் செய்யும்

சீராகவும் வாழ்ந்த செம்மலாகத் திகழ்ந்தார். நாம் இடம் பெயர்ந்து வன்னியில் வாழ்ந்த காலத்தில் அன்னாரின் பெருமையை நன்கு அறிந்தோம்.

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"

என்ற வள்ளுவ வழியே கண்டதும் உணவு பரிமாறும் உயர்ந்த குணம் இவர்கள் குடும்பத்தார்க்கு இருந்தது. கூறும் வார்த்தைகள் இணையற்ற சொல்லோவியங்களாக இருந்தன. மற்றையோர் மனம் புண்படாது இவ்வாறு நடந்தால் நன்றாய் இருக்கும் என மொழிவார்.

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்"

என்ற திருக்குறளும்

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப"

என்ற தொல்காப்பியமும் இவரின் பெருமையை எடுத்தியம்புவனவாக உள்ளன.

பிறர்மனை யின்கண் செவிடாய்த் திறனறிந்து
ஏதிலார் இல்கண் குருடனாய்த் தீய
புறங்கூற்றின் மூங்கையாய் நிற்பானேல் யாதும்
அறங்கூற வேண்டா அவற்கு.

என்ற நாலடியார் வழியே நடந்த நல்மாந்தர் குலத்து மாணிக்கம் எங்கள் பொன்னாரம் பொன்னுச்சாமி

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப் படும்"

என்றார் வள்ளுவர். இக்குறள் வழி அமரர் பெருமையை அன்னாரின் பிள்ளைகளின் கல்வி நிலையால் உணர முடிகின்றது. கல்வியால் உயர்ந்தவர்கள் மட்டுமல்ல, பண்பாலும் உயர்ந்தவர்கள்.

மேலானவர் மகன் முழங்காவில் அரசினர் வைத்தியசாலையில் வைத்தியராகக் கடமை புரிந்த போது அவருடன் அவ் வைத்தியசாலை உத்தியோகத்தராகப் பணியாற்றியமை பெருமை அளிக்கிறது.

இத்தோடு அவர் மருமகன் பழனி (கதிரவேற்பிள்ளை) சோலையில் தமது வளவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்கு வீடு கட்டித் தந்தார். அப்போது அவர் மனைவியும், அமரரின் மகளுமான அமரர் சாந்தி அவர்களும் வைத்தியசாலையில் கடமை புரிந்தார். அவ்வப்போது எமது குடும்பத்தாருக்கு அவர் பரிமாறிய உணவின் சுவையும் ஆதரவும் ஐயாவின் பெருமைக்கு அணிகலனாகின்றது.

மேலும் அதிபர் ஜெயந்தி அவர்கள் எமது குடும்பத்தாருக்கு அவ்வப்போது ஆற்றிய உதவிகளும் பொன்னுச்சாமி ஐயாவின் பெருமையை மெருகூட்டுகின்றது.

மற்றும் மலேரியா நோயினால் வைத்திய மனையில் அனுமதிக்கப்பட்டபோது பொன்னுச்சாமி இராசம்மா அவர்கள் தந்த செல்வரத்தம்பூ சம்பல் இன்றும் செந்நிலாவாய் நிகழ்கின்றது.

"ஒன்றா உலகத்து உயர்ந்த புகழ்அல்லால்
பொன்றாது நிற்பதொன்று இல்"

என்ற புகழால் இவர்கள் குடும்பமே குலவிருட்சம் ஆகியுள்ளது.

"பண்பெனப் படுவது பாடறிந் தொழுகுதல்"

என்று கலித்தொகை கூறும்

"அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு"

என்று வள்ளுவம் கூறும். இக் கூற்றுக்களை குறைவில்லாது காத்த பெருமகனார் ஐயா அவர்களே.

உன்னதமான மனிதர்களின் நினைவுகள் ஞாபக இடுக்குகளில் என்றும் மின்னி மிளிர்ந்து கொண்டே இருக்கும். அன்பும், பண்பும், ஆன்ற குடிப்பிறப்பும், நண்பும் கொண்ட ஐயாவின் நினைவுகளும் நிழலாடுகின்றன.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்னும் குறளில் கசடற என்பது கற்றறிந்தாரிடம் பலமுறை சென்று ஐயங்களைத் தீர்ப்பதாகும். அதேபோல ஐயந்தீர்ந்த அகன்ற வாழ்வு வாழ்ந்தவர் அமரர் பொன்னுச்சாமி அவர்கள். அன்னார் கசடு அறல் கற்றவழி தம்மக்களைக் கல்வியில் கலங்கரை விளக்கமாக்கினார்.

தம்மின் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன் உயிர்க்கு எல்லாம் இனிது.

என்ற பெரும் பயனைத் தந்த பேராளனும், பெருமைக்கும் உரிய பெருந்தகையே அமரராவார். கொஞ்சுதமிழில் கெஞ்சிப் பேசியே மிஞ்சு தமிழால் மிளிர்தவர் இவரே. இடம் பெயர்ந்த காலத்தை மீண்டுமொரு நிழலாக்கி எண்ணும் போது மண்ணுலக வாழ்வில் மகத்தானவர்கள் மறக்கப்பட முடியாதவர்கள்; அவர்கள் செயலும் வாழ்வும் எல்லோரும் வகைப்படுத்தும்.

"நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்(டு)
எல்லார்க்கும் பெய்யும் மழை"

வாடிய பயிரின் வாட்டத்தைப் போக்கிய மழை போன்ற ஐயாவின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போம்.

சைவப்புலவர் பண்டிதர்
மா.கணநாதன்
அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞானம் சிறீதரன் பா.உ.
M.Ed.,B.A.,PGDE(Me).,Sp.Tr.(Ag)
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்.
882, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி, இலங்கை.
:021 2280024 021 2221595.
:021 2280024 021 2221595.
:077 6913244
: shritharanmp@gmail.com
: www.shritharan.com

பார்லிமேன்துவ
பாராளுமன்றம்
PARLIAMENT

SIVAGNANAM SHRITHARAN M.P
M.Ed.,B.A.,PGDE(Me).,Sp.Tr.(Ag)
Jaffna Electoral District.
882, Arumugam Road,
Vaddakachchi, Kilinochchi, Sri Lanka.
:021 2280024 021 2221595.
:021 2280024 021 2221595.
:077 6913244
: shritharanmp@gmail.com
: www.shritharan.com

2021.11.02

## மறைந்தாலும் மக்கள் மனங்களில் நிறைந்திருக்கும் மாமனிதர்।

யாழ்ப்பாணத்தின் புகழ்பூத்த பேரூர்களில் ஒன்றான, சாவகச்சேரி மண்ணைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி மாவட்டத்தின் மரபியல் வரலாற்றோடு இரண்டறக் கலந்த பூநகரிப் பிரதேசத்தின் பல்லவராயன்கட்டு, முழங்காவில் ஆகிய பழம்பெரும் பேரூர்களை வாழ்விடமாகவும் கொண்டு, மனித வாழ்வின் அத்தனை பரிமாணங்களையும் திடமோடு எதிர்கொண்டு, வாழ்வியலின் அனைத்து ஆழங்களையும் நெறியோடு நீந்திக் கடந்து, வாழ்வை வென்ற மனிதனாக வாழ்ந்து மறைந்திருக்கிறார் அமரர்.கதிரவேலு பொன்னுச்சாமி அவர்கள்.

திரும்புமிடமெல்லாம் துன்பமும், துயரமும், சவால்களும் மண்டிக் கிடக்கும் மனித வாழ்வில், ஒரு மனிதன் எண்பத்தேழு ஆண்டுகள் யாருக்கும் தீங்கிழைக்காது வாழ்தலென்பது அசாதாரணமானது. அந்த அசாத்தியத்தைக்கூடச் சாத்தியமாக்கி நம் அத்தனை பேருக்கும் முன்னுதாரணமாக தன் வாழ்வை நிறைவாய் வாழ்ந்து முடித்து, வாழ்வின் நிலையாமையை எமக்குணர்த்தி இறைபாதம் அடைந்த இவரது ஆத்மா அமைதி பெற்றிருக்கும் என்பதில் ஐயமில்லை.

சிறிய அச்சகம் ஒன்றின் பணியாளராய் தன் வாழ்வின் அடுத்தகட்டத்தை ஆரம்பித்த இவர், கூட்டுறவுச் சங்க முகாமையாளராய் கடமையாற்றி, அதன்பின் தன் சுயவிருப்பின் பேரில் முழுநேர விவசாயியாய் பரிணமித்திருக்கிறார். விவசாயத்தின் மேல் கொண்டிருந்த விருப்பே இவரை சாவகச்சேரியில் இருந்து பல்லவராயன்கட்டு நோக்கி இழுத்துவந்திருக்கிறது. இல்லற வாழ்வின் பேரில் தான் பெற்றெடுத்த பதினொரு பிள்ளைகளையும் சமூகத்தில் பெயர்சொல்லி பெருமிதம் கொள்ளத்தக்க நிறையுயர் மனிதர்களாக வளர்த்தெடுத்ததில் இவர் ஒரு தந்தையாகவும் தன் பணியை செவ்வனே ஆற்றிச் சென்றிருக்கிறார். முழுக்க முழுக்க விவசாயத்தை நம்பியிருந்த இவர், பொருளாதாரச் சுமைகளும், போராட்ட நெருக்கீடுகளும் நிறைந்திருந்த காலத்திலும், தனது சொந்த உழைப்பில் பிள்ளைகள் பதினொருவரையும் கல்வியால் உயர்ந்தவர்களாக கரை சேர்த்திருப்பதை நினைக்கையில் மறைந்த பின்னும் அவர்மீதான மதிப்பு பன்மடங்காகிறது.

தனிமனித வாழ்வில் அவர் பதித்திருக்கும் இத் தடங்களுக்கு அப்பால், சமூகம் மீது அக்கறை கொண்ட மனிதனாகவும் அவரது செயற்பாடுகள் என்றும் மனங்கொள்ளத் தக்கவையாகவே அமைந்துள்ளன. பிள்ளைகளை வளர்த்து, ஆளாக்கி தன் கடமைகள் நிறைவுற்ற பின்னர், தான் வாழ்ந்த காலம் முழுமையையும் தன் சமூகத்தின் சமய, சமூக, கல்வி சார் பொதுப்பணிகளுக்காகவே அர்ப்பணித்திருக்கிறார் என்பதும் சுட்டிச் சொல்லத்தக்கதே। பல்லவராயன்கட்டிலும், முழங்காவிலிலும் உள்ள பெரும்பாலான சமூகமட்ட அமைப்புக்களின் அங்கத்தவராக இருந்த இவர், அவ் அமைப்புக்களின் மக்கள் நலன்சார் செயற்பாடுகள் அத்தனையிலும் தன்னாலான பங்களிப்பை ஆற்றிச் சென்றிருக்கிறார். பொருளாதாரம் நலிவுற்ற நிலையில் கற்றலைத் தொடர்வதில் இடர்பாடுகளை எதிர்கொள்ளும் மாணவர்களையும், பொதுப் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெறும் மாணவர்களையும் இனங்கண்டு அவர்களின் தேவைகளை நிறைவேற்றி வைப்பதையும் தனக்கான பணியாகவே வரித்து வாழ்ந்திருக்கிறார்.

இப் பூவுலகில் தான் வாழ்ந்த 87 வருடங்களையும் நிறைவாய் வாழ்ந்து, அன்பெனும் அணிகலனால் தன் குடும்பத்தையும், உறவுகளையும், சமூகத்தையும் அலங்கரித்து, அந்திமகாலம் வரை அவற்றின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் வலுச்சேர்த்து வாழ்ந்திருந்த அமரர்.கதிரவேலு பொன்னுச்சாமி ஐயாவின் ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல இறைவனின் பாதாரவிந்தங்களைப் பணிந்து அவரின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைப் பகிர்ந்து கொள்கிறேன்.

சிவஞானம் சிறீதரன்.
பாராளுமன்ற உறுப்பினர்.
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்.
கிளிநொச்சி

சி.சிறீதரன்.
பாராளுமன்ற உறுப்பினர்.
யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்.
882, ஆறுமுகம் வீதி.
வட்டக்கச்சி,கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "சிறப்பு மிக்க சேவையாளன்" குறள் காட்டும் பாதையில் வாழ்ந்தவர்

## அமரர் பொன்னுச்சாமி ஐயா

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப் படும்"

எங்களுடன் மக்கள் தொண்டாற்றி நாடும் வீடும் போற்ற சிறப்பாக வாழ்ந்த திரு.க. பொன்னுச்சாமி ஐயா அமரத்துவம் அடைந்து விட்டார் என்ற துயரச் செய்தி காற்றோடு கலந்து வந்து காதை அடைத்தது. அதிர்ச்சி அடைந்தேன். அது இயற்கையானதும் கூட. பிறப்பவர்கள் அனைவரும் எப்படியெப்படி வாழ்ந்தாலும் அவர்கள் அனைவரும் ஒருபிடி சாம்பலாய்ப் போவது தான் உண்மையானது. நிஜமானதும் கூட. அமரர் அவர்கள் நற்குடும்பமாய் வாழ்ந்து, பத்துக்கு மேற்பட்ட பிள்ளைகளைப் பெற்று, சிறப்புடன் வளர்த்து, படிக்க வைத்ததோடு, சிறந்த ஆளுமைப் பண்புகளுடன் அவர்கள் அனைவரையும் உருவாக்கி இத்திருநாட்டில் மருத்துவர்களாக, பீடாதிபதியாக, அதிபர்களாய், ஆசிரியராய் பெரும் சிறப்புடன் சேவையாற்றுவது கண்டு பெருமகிழ்வுடன், மிடுக்குடன் வாழ்ந்தமை அவரது குடும்பச் சிறப்பையும், பெருமையையும் கட்டியம் கூறுகிறது.

அவரது பிள்ளைகள் பலர் நான் முழங்காவில் ம.வியில் அதிபராகக் கடமையாற்றிய காலப்பகுதியில் (1986, 1987,1988) என்னிடம் படித்தவர்கள். அவர்களுக்கான தனியான பண்புகளை அன்றும் ஏன்? இன்றும் இருப்பதை நான் காண்கிறேன்.

அக்காலகட்டத்தில் முழங்காவில் ம.வியாக தரம் உயர்வதற்கு இன்று அமரராகிவிட்ட மக்கள் சேவையாளன் பொன்னுச்சாமி ஐயாவுடன் ஏற்கெனவே அமரராகிவிட்ட (S.M.P) பொன்னம்பலம் ஐயா, ஏரம்பமூர்த்தி ஐயா ஆகியோர் அக்கால கட்டத்தில் எமக்கு அளித்த மகத்தான ஒத்துழைப்பையும் இச்சந்தர்ப்பத்தில் பதிவு செய்வது எனது தலையாய கடமையாகும். இன்று அவ்வித்தியாலயம் தேசிய பாடசாலையாகத் தரமுயர்ந்து பெரும் கலைக்கூடமாக சாதனைகள் படைத்து மிளிர்வது கண்டு நாம் பெருமையடைகின்றோம். அமரர் அவர்கள் என்னுடைய நண்பராக ஆலோசகராக வழிகாட்டியாக இருந்தார் என்பதை நினைத்து பெருமைப்படுவதுண்டு. அதுவே எனது உயர்வுக்கு வழி சமைத்தது என்றால் அது மிகையாகாது.

87வயது வரை குடும்பச் சிறப்புடன் வாழ்வது என்பது எல்லோர்க்கும் கிடைக்காத பாக்கியமாகும். என்றும் அவரது புகழ் பேசப்படுமென்பது உறுதி.

"மகன் தந்தைக்கு காற்றும் உதவி
இவன் தந்தை என்னோற்றன் கொல்லென்றும் சொல்"
"ஈன்ற பொழுதில் பெரிது உவக்கும்
தன்மகனைச் சான்றோன் எனக் கேட்டதாய்"

அன்னாரின் பிரிவால் பெரும் துயரால் தவிக்கும் அன்பான மனைவி பிள்ளைகளுக்கு ஆறுதல்களையும், தேறுதல்களையும் கூறி நிற்பதோடு அன்னாரின் ஆத்மா நித்திய பேரொளியில் கலக்க எல்லாம் வல்ல அரும்பொருளின் அருள் கிடைக்கும் என்பது திண்ணம்.

அன்புடன் பொன்தில்லைநாதன் (JP)
முந்நாள் அதிபர்
முழங்காவில் ம.வி
ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர்
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழிநீர்ப் படையல்

அன்புக்கு இனியாள் துணையாய்ப் பெற்றீர்.
அருமைப் பிள்ளைகள் சிறப்பாய் வளர்த்தீர்.
அன்பும் இரக்கமும் ஊட்டி வளர்த்தீர்.
அழுத வயிற்றில் பால் வார்க்க வைத்தீர்.
அடுத்தவர்க்கு உதவும் பண்பை வளர்த்தீர்.
ஆறாத்துயரில் ஒத்துணர்வு தந்தீர்.
ஆபத்தில் உதவும் நல்லுள்ளங்கள் தந்தீர்.
ஆற்றுப்படுத்தும் நன்மக்கள் தந்தீர்.
ஆளாக்கும் கற்பகதருக்கள் தந்தீர்.
ஆறாத நோய்க்கு மருந்தொன்று தந்தீர்.
இன்னலின்போது தோள் தந்தீர்.
இவ்வுலகில் நல் எச்சங்கள் பெற்றீர்.
இன்பமான இல்வாழ்வு பெற்றீர்.
இறந்தும் வாழும் வாழ்வு பெற்றீர்.
இறைவனடியில் அமைதி பெற்றீர்.
இறைவனடியில் அமைதியை
இறைஞ்சும்.

எனது மனோகரின்
அகில உலக நட்புகள்
**Uni Friends 85/86**

**கடவுளுக்கும் அப்பாவிற்கும் - சிறு**
**வேறுபாடு தான் கண்ணுக்கு**
**தெரியாதவர் கடவுள்**
**கண்ணுக்குத் தெரிந்தும் பலராலும்**
**கடவுள் என புரிந்து**
**கொள்ளப்படாதவர் "அப்பா"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூக சேவைகளும் உதவிகளும்













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "பல்லவராயன் கட்டின் பகலவன்"
## திருவாளர் கதிரவேலு பொன்னுச்சாமி

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும், பல்லவராயன் கட்டை வசிப்பிடமாகவும் கொண்டு வாழ்ந்த அமரர் பொன்னுச்சாமி அவர்கள் அக்கிராமத்தின் அபிவிருத்தி வேலைகள் பொதுவேலைகள், மக்கள் நலன் ஆகியவற்றில் முன்னோடியாகச் செயற்பட்டதுடன், மக்களின் சண்டை, சச்சரவுகளையும் சமாதானமாகத் தீர்த்து வைக்கும் திறமை கொண்டவர்.

வி.சே அலுவலராக நியமனம் பெற்று **14.02.1982**ஆம் திகதி மண்டைக்கல் ஆறு தொடக்கம் வெள்ளாங்குளம் வரையான பெரிய பிரிவாகிய பல்லவராயன் கட்டு பிரிவுக்குச் சென்ற போது திரு. பொன்னுச்சாமி அவர்களை நான் முதன் முறையாகச் சந்தித்தேன். பின்னர் அவருடன் பழகும் போது தான் அவரது நல்ல குணங்களையும், கிராம அபிவிருத்தியில் ஆவலுடன் செயற்படும் திறமையையும் அறிந்து கொண்டேன்.

பல்லவராயன் கட்டு பிரிவின் அபிவிருத்தி கருதி கிராம மக்கள் பொன்னுச்சாமி அவர்களை அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவராக தெரிவு செய்தனர். மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க அவர் திறமையாகவும் நேர்மையாகவும், துணிச்சலுடனும் தன்னலம் பேணாது கிராமம் அபிவிருத்தி பெற அரும்பாடுபட்டு செயற்பட்டதை எனது சேவைக் காலத்தில் கண்டேன். அத்துடன் தவறுகள் நடந்தால் எவருடனும் தட்டிக் கேட்கத் தயங்கமாட்டார். தனது பிரிவிலும் சரி அல்லது அரச அலுவலகங்களிலும் சரி அபிவிருத்தி சம்பந்தமான கூட்டம் என்றால் அங்கு பொன்னுச்சாமி அவர்களின் குரல் ஒலிக்கும். அதிகாரிகள் அழைப்பு விடுத்தால் அந்த இடத்துக்கு உரிய நேரத்தில் வெள்ளைச் சேட்டுடனும், தலையில் பனை ஓலைத் தொப்பி போட்டுக்கொண்டு துவிச்சக்கரவண்டியில் வருவார். அவரது சேட் பொக்கற்றில் கண்ணாடிக்கூடு தவறாமல் இருக்கும். இக் காட்சி இன்றும் எனது கண்ணில் மறையாது உள்ளது.

பல்லவராயன் கட்டு கிராமத்தில் மன்னார் வீதிக்கு அருகாமையில் உள்ள காணியில் ஒரு சிறிய வீட்டுடன், முன் பக்கத்தில் சிறிய கடையும், பின் பக்கமாக ஒரு கிணறும் இருந்தது. ஆனால் முகம் கழுவினால் கண் எரியும். அந் நிலையில் வாழ்ந்தவர்.

அவரது குடும்ப நிலைமை வறுமைக் கோட்டின் கீழ் காணப்பட்டது. அந்த நிலையில் கூட எல்லாப் பிள்ளைகளுக்கும் கல்வி பயிற்றுவிப்பதில் தவறவில்லை. பிள்ளைகளுக்கு அவரின் அன்பும், அரவணைப்பும் உரிய முறையில் இருந்ததைத் தெரிந்து கொண்டேன். கஸ்டத்தின் மத்தியிலும் கூட தனது மகன் ஸ்ரீதரை வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்தார்.

கிராம மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்து கிராமத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேற்றிய செயல் வீரன் என்று மக்கள் சொல்வர். அவரது நற் பண்புகள் காரணமாக மக்கள் அவர் மீது அளவில்லாத மதிப்பையும், மரியாதையையும் கொண்டு செயற்பட்டதைக் காணக் கூடியதாக இருந்தது.

"இவன் பொன்னுச்சாமி எங்கட ஊரின்ரை சூரியன்" என்று கூடச் சொல்லலாம். "எடா மச்சான்" என்று சிலர் குசுகுசுத்தது காதுக்கும் எட்டியது.

"தன்னலம் பேணாத் தலைமகனே நீர் - உமது
ஊரை வளப்படுத்துவதற்காகப் பிறந்தீர்"

"உங்கள் வேலையையும் விட்டு பொது வேலைக்கு முக்கியத்துவம் கொடுத்து செயற்படுகின்றீர்களே" என்று சொன்னால் "காலம் பதில் சொல்லும் காந்தி" என்பார்.

அன்னாரது தன்னலம் பேணா சேவையினால் ஆண்டவன் அவரை சீரும் சிறப்புடனும் வாழ அருள் பாலித்தார் என்பது அனைவரும் அறிந்ததே.

நான் அரச சேவை புரிந்த காலத்தில் அவருடன் ஆரம்பித்த நட்பு, அவரது அன்பு உள்ளம், நற்பண்புகள் காரணமாக அன்று தொடக்கம் இன்று வரை குடும்ப உறவாக மாறி வாழ வழி வகுத்தது.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினரின் துயரில் நாமும் கலந்து கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!

க. ஞானேஸ்வரன்.
முன்னைனாள் கிராம அலுவலர்.

**உண்மையில் உழைத்து சொந்தக்
காலில் நிற்கும் பொழுது தான்
புரிகிறது இத்தனை நாள் – தான்தோளில்
சுமப்பதற்கு எவ்வளவு வலிகளை
கடந்திருப்பார் "அப்பா" என்று**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்சபாபதி கல்வி நற்பணி மன்றத்தின்...

"தோன்றில் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்ற பெருந்தகையின் வாக்கிற்கமைய அமரர் கதிரவேலு பொன்னுச்சாமி ஐயா **1934.10.25** அன்று அவனியிலே தோன்றி திக்கெட்டும் புகழ் பரப்ப, பதினாறு செல்வங்களை தன் முயற்சியினால் பெற்று, சீரும் சிறப்புடனும், அன்பான கண்டிப்புடனும் தான் பெற்றெடுத்த குழந்தைகளை சிறப்பாய் வாழ வழிகாட்டி நல்ல வாழ்க்கைத் துணையினை அமைத்து. ஊருக்கும், உலகிற்கும் முன்மாதிரிப் பெருமகனாய் வாழ்ந்த நல்லதோர் உத்தமன். தமிழ் மட்டும் அன்றி ஆங்கிலத்திலும் தேர்ச்சி கொண்ட உன்னத கல்விமான். தன் முகாமையாளர் பணியினைச் சிறப்புடன் ஆற்றியது மட்டுமன்றி விருப்புடன் உழுதுண்டு வாழும் உன்னத விவசாயப் பணியையும் உயர்வாய் ஆற்றி வாழ்ந்த ஐயா முதுமையிலும் சளைக்காது இப்பூமியில் இடருறும் உள்ளங்களில் வலி போக்கும் உதவிக்கரம் கொடுக்கும் சேவகனாய் பல பணியாற்றி அனைவர் மனதிலும் நீங்காத நித்திலமாய் உள்ளார். அவர் உயிர்தான் காலனால் களவாடப்பட்டாலும் அவரின் ஆசி போல் அவர் வழித் தோன்றல்களால் நித்தமும் நிகழும் அவர் பணி .

ஐயாவின் ஆத்மா சாந்திக்காய்.....

ஓம் சாந்தி ! சாந்தி! சாந்தி!

இ. ஜெயசுதர்சன்
**Lion Srj** சுதன் ஆசிரியர் **(JP)**
தலைவர்
பொன்சபாபதி கல்வி நற்பணி மன்றம்

அன்பை வார்த்தையில்
வெளிப்படுத்தாமல் தன்
உழைப்பு மூலம் உணர்த்தும்
ஒரே உறவு அப்பா மட்டும் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலமரம் சரிந்தது

பழமையும், வரலாற்றுப் பெருமையும் மிக்க பூநகரியிலேயுள்ள முழங்காவில் பிரதேசத்தில் வசித்து வந்தவர் தான் எங்கள் பொன்னுச்சமி ஐயா. இவருடைய பிள்ளைகள் என்னுடைய நண்பர்களாக இருந்தமையால் ஐயாவுடன் பழகும் வாய்ப்பு எங்களுக்கு கிடைத்தது. ஐயாவின் நேரான சிந்தனையும், மிடுக்கான பேச்சும், வீறாப்பான நடையும் அவரது செயலை உணர்த்தும். அவர் இளமையிலே மிகுந்த சிரமப்பட்டாலும் தன்னுடைய பிள்ளைகள் அனைவரையும் கல்வியிலே உயர வைத்து நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் ஆக்கி கல்வித்துறையிலும், மருத்துவத்துறையிலும் உயர வைத்துள்ளார். தான் சமூகத்திற்காக எவ்வாறு உழைத்தாரோ அவ்வாறே அவரது பிள்ளைகளும் சமூகத்தில் முன்னின்று உழைப்பவர்களாகக் காணப்படுகின்றனர்.

சிறுமை கண்டு பொங்கும் மனம் எளிமையான வாழ்வு இவரது இயல்பாகும். உயர்ந்த செல்வம் இல்லாத போது மனிதாபிமானம் மிக்க ஒரு மனிதனாக நடுநிலைமை வகிக்கும் ஒரு பண்பாளனாக உதவிகேட்டு வந்தவர்களுக்கு தன்னாலான உதவிகளை வழங்கிய பெருந்தகை. எல்லா மனிதர்களிடமும் சகஜமாகப் பழகும் நல்லுறவாளராகப் பல்வேறு நற்பண்புகளைத் தன்னகத்தே கொண்டு வாழ்ந்த பெருமை இவரைச் சாரும்.

இவர் எனது சகோதரன், எனது கணவன் ஆகியோருடன் நெருங்கிய நட்புடன் காணப்பட்டமையால் எங்கள் தொடர்பு மேலும் வலுப்பெற்றது. அன்னார் நோயுற்ற காலங்களில் தன் மகளின் இல்லத்தில் கிளிநொச்சியில் நிற்கும் போது நாங்கள் அவரை அடிக்கடி சந்தித்துப் பேசுவோம். தனக்கு நோய் இருப்பதை மறந்து தன்னுடைய பழைய கதைகளை எல்லாம் எங்களுக்குக் கூறுவார். நமக்கு ஒரு நல்ல வாழ்க்கைப்பாதையைக் காட்டிச் சென்ற ஐயாவே! உடல் மறைந்ததே தவிர அவரது மூச்சு அவர் பிள்ளைகளிடத்தே தங்கி நிற்கிறது. அவரின் ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகின்றோம்

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

திருமதி இ. சுந்தரமூர்த்தி
பிரதி அதிபர்
கிளிநொச்சி. ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்தும் மறையாப் புகழுடன் பொன்னுச்சாமி ஐயா!

நாம் வாழும் இப் புவி தினம் தினம் எத்தனையோ மனிதர்களையும், மகான்களையும் பிரசவித்து வாழவிட்டு மீண்டும் தன்னகத்தே எடுத்துக்கொள்கிறது. அவ் வரிசையில் **25.10.1934**ல் கதிரவேலு ஐயாவின் புத்திரராய் தென்மராட்சி மட்டுவில் மண்ணில் பிறப்பெடுத்து வாலிப வயதை அடைந்து தொழில் தேடி பழமையும், புகழும் கொண்ட பல்லவராயன்கட்டு மண்ணில் கால் பதித்து தனது இளமைக்காலக் கனவுகளோடு காதல் செய் கன்னிகை இராசம்மா எனும் அழகும், பொலிவும் நிறைந்த அம்மாவுடன் பேரின்ப இல்லறம் கலந்து இவ்வுலகிற்கு , பதினொரு பிள்ளைச் செல்வங்களை உவந்தளித்தனர். அவ்வரிசையில் புத்திரிகளாக, சுகந்தி, வசந்தி, ஜெயந்தி, சாந்தி (அமரர்), சிவானந்தி, ஆனந்தி, தமயந்தி என அழகான ஏழு புத்திரிகளிற்கும், அழகுப் பெயர் நாமம் இட்டும், ஸ்ரீதர், மனோகர், முருகதாஸ்,ஸ்ரீசங்கர் என நான்கு சுட்டித்தனம் மிகுந்த புத்திரர்களையும் பெற்றெடுத்து, பேணி வளர்த்து அத்தனை பிள்ளைகளிற்கும், வறுமையிலும், செம்மையான கல்வி வழங்கியதுடன் அத்தனை பிள்ளைகளையும் சிறந்த மைதான விளையாட்டு வீர, வீராங்கனைகளாக மிளிரும்படி வளர்த்தெடுத்தார்.அதன் பலன்களை இன்று புலம்பெயர் தேசத்திலும், ஈழத்திலும் விருட்சங்களாய், நல்லாற்றுப்படுத்தும் நன் மக்களாக புகழுடனும், மதிப்புடனும் வாழ்வது கண்டு "கற்றாரைக் கற்றாரே காமுறுவர் "எனும் வாக்கு மெய்கண்டு நிற்கின்றது. யான் ஆசிரிய முதல் நியமனம் பெற்று சங்குப்பிட்டி இறங்கு துறையில் தேவராசா அண்ணரின் அரை லொறி வானில் பயணித்து முழங்காவில் வரும்போது திரு. ரவீந்திரன் ஆசிரியரால் அறிமுகப்படுத்தப்பட்ட முதலாவது வீடு "இதுதான் ஜெயந்தி ரீச்சரின் அப்பா பொன்னுச்சாமி ஐயாவின் வீடு" என காண்பிக்கப்பட்டது. அந்தப் பரந்த பல்லவராயன்கட்டு வெளியில் பரந்து பெரிய வீடாக அவரது இல்லம் நிமிர்ந்து நின்றது. அவ்வழியால் போய்வரும் வாகனங்கள் கூட தம்மைக் குளிர்மைப்படுத்த அவர் வீட்டு நீரையே "றேடியற்றர்கள்" உள்வாங்கின எனலாம். பெரும்பாலும் ஐயா அவர்கள் வெளியே செல்லும் போது தூய வெள்ளாடை உடுத்தி, பெரிய கறுப்புக் குடை எடுத்து, றலி துவிச்சக்கர வண்டியில் உலாப் போன அழகு இன்றும் கண்களுக்குள்ளே நினைவுகளாய் விரிகின்றது. நான் அவரைக்கண்ட **1988**ஆம் ஆண்டு முதல் அவரிடம் பிடித்த மிக முக்கிய பண்புகளாக, எதையும் நேர்மையுடன் கதைப்பார். எச்செயலிலும் துணிந்து இறங்குவார். கண்டால் நின்று கதைப்பார்,

மற்றது அவர் முகத்தில் எப்போதும் காணப்படும் மிடுக்கான தோற்றம். நான் சென்ற ஆண்டும் முழங்காவிலுக்கு வந்தபோது மூன்று சக்கர மோட்டார் சைக்கிளில் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையாகக் கண்டு அவரது கரங்களைப் பற்றிக்கொண்டு ஒரு பத்து நிமிடங்கள் பலதும் கதைத்துவிட்டு வந்திருந்தேன். ஐயாவின் செயற்பாடுகள் பற்றி பல்லவராயன்கட்டு , ஜெயபுரம், முழங்காவில் மட்டுமல்ல கிளிநொச்சி கச்சேரி வரை அவரது பொதுச்சமூகப் பணியும் ஊரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தி நாட்டமும் நன்கறியப்பட்ட ஒன்றாகும். ஐயா பொன்னுச்சாமி அவர்கள் பற்றி, அல்லது அவரின் பிள்ளைகளது பெருமைகளைப் பற்றி பக்கம் பக்கமாக எழுதிக்கொண்டே போகலாம். ஆனால் பக்க விரிவு கருதி சுருக்க முயல்கின்றேன். தற்போது கிளி/ ம.வி அதிபராக உள்ள இவரது மூன்றாவது மகள் ஜெயந்தி எம்மோடு நியமனம் பெற்று இன்றுவரை பெரும் சவால்களை எதிர்கொண்டு கல்வி முகாமைத்துவ முதிர்வு நிலையில் பணி புரியும் சிறந்த நிர்வாகியாகவும், என்றும் என் அன்புக்குரிய சகோதரி குடும்பமாகவும் உள்ளார். வசந்தி ரீச்சரும் ஒன்றாக ஆசிரியப் பணியில் பயணித்து இன்று ஓய்வு பெற்றுள்ளார். புலம் பெயர்ந்து வாழும் சுகந்தி அக்காவும் இங்கிருந்த காலத்தில் மிகுந்த அன்போடு பழகினோம். போர் காவு கொண்ட தங்கை சாந்தி கூட மிகுந்த மரியாதையுடன் பழகியவர். தற்போது கிளி/ஜெயபுரம் ம.வி அதிபராக உள்ள சிவானந்தி பரதன் அவர்கள் நாம் முழங்காவிலுக்கு DNS)**1985** இல் வரும்போது தரம் **11** இல் எம்மிடம் கல்வி பயின்ற பண்பான மாணவி அத்துடன் சிறந்த விளையாட்டு வீராங்கனையும் கூட. ஆனந்தி, தமயந்தி இருவரும் சிறுமிகளாக, அதேநேரம் மிகுந்த ஒழுக்கம் நிறைந்த கெட்டித்தனங்கள் மிகுந்த சுட்டிப் பிள்ளைகளாக எம்மிடம் வளர்ந்தனர். ஆனந்தி, தமயந்தி இருவரும் மைதானத்தில் அஞ்சல் ஓட்டத்தில் முத்திரை பதித்தவர்கள். அந்த ஆளுமைகள் தான் இன்றும் தொடர்கின்றது. ஐயாவின் மகன்மார் நான்கு பேரில் ஸ்ரீதர், மனோகர் ஆகிய இருவருடனும் நான் பழகாது விட்டாலும் அவர்களது பண்பு, திறமைகள் பற்றி அறிந்துள்ளேன். அடுத்து புலம்பெயர்ந்து வாழும் தம்பி முருகதாசுடன் பல விடயங்களில் ஒன்றாகப் பயணித்துள்ளேன். ஐயாவின் கனிஷ்ட புத்திரன் ஸ்ரீசங்கர் எனது சாரணியச் சிறுவனாக இருந்து சாரணியச் சீருடை தொப்பியுடனேயே இன்றும் என் நினைவில் உள்ளார். இன்று எனது அன்பு மாணவன் சங்கர் சிறந்த டாக்டராக கிழக்கிலங்கையில் பணி செய்வது கண்டு என்றும் எனது மாணவனே எனும் கர்வம் எனக்குண்டு. இவ்வாறு சக நண்பர்களாகவும், எனது மானசீக மாணவர்களாகவும் இருந்த ஐயாவின் பிள்ளைகளுடனான தொடர்பும், உறவும் ஐயாவின் ஆசியுடன் என்றும் தொடரும். பிறந்த மாதத்திலேயே தனது இவ்வுலக வாழ்வை நிறைவுறுத்தி அதாவது **21.10.2021**இல் அமரத்துவம் அடைந்து நிறைந்த புகழோடு தெய்வத்துள் வாழும் ஐயா கதிரவேலு பொன்னுச்சாமி அவர்களிற்கு எனது குடும்பம் சார்பாக ஆழ்ந்த இரங்கலையும், உறவுகள் அனைவருக்கும், நிறைந்த தேற்றுதலையும் பகர்ந்து நிறைவு செய்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி சாந்தி!!

க.சுந்தரலிங்கம்.
(ஓய்வுநிலை ஆசிரியர்.)
இத்தாவில், பளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எல்லோர் மனங்களிலும் நிறைந்தவர் பொன்னுச்சாமி அண்ணர்

பல்வராயன் கட்டு மண்ணில் வாழ்ந்த மனிதர்களில் சிறப்புடன் எல்லோர் மனங்களிலும் நிறைந்து வாழ்ந்தவர் பொன்னுச்சாமி அண்ணர். அவர் இந்த மண்ணில் ஒரு பலநோக்கு கூட்டுறவுச் சங்க முகாமையாளராக நியமனம் பெற்றுவந்து நீண்ட காலம் அப்பணியைப் புரிந்த பின் தான் வேலை செய்த இடத்திற்கு அருகிலேயே வீட்டையும் அமைத்து பல்லவராயன் கட்டு வாடியடி பகுதியில் தனியார் வர்த்தக நிலையம், தேநீர்ச்சாலை என்பவற்றையும் அமைத்து சிறப்புடன் வாழ்ந்ததுடன் அவ்வழியால் வருவோர் போவோர் எல்லோருக்கும் தாக சாந்தி கொடுத்த புண்ணியவானாக வாழ்ந்த பெருமைக்குரியவர்.

அதுமட்டுமன்றி பல்வராயன் கட்டு பகுதியில் தான் வாழ்ந்த காலத்தில் பல்வேறு சமூகப்பணிகளையும் செய்தவர். கிராம அபிவிருத்திச்சங்கம் பயிர்ச் செய்கை குழு, கமநல நிலையம், சனசமூக நிலையம் என்பவற்றில் தலைவராகக் கடமையாற்றி பல சமூகப் பணிகளை முன்னெடுத்த பெருமைக்குரியவர். அவர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவராக ***1988***ஆம் ஆண்டு ***33*** வருடங்களுக்கு முன் இருந்த போது அவருடன் செயலாளராகக் கடமையாற்றியவன் என்ற வகையில் இவரது நல்ல செயற்பாடுகள் என்றும் என் நினைவில் இருக்கின்றன. சேவை தான் வாழ்ந்த மண்ணுக்கு அளப்பரிய சேவை செய்த அற்புதமான இவர் தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சரளமாகப் பேசக் கூடிய ஆற்றல் உள்ளவர். இவரது பண்பால் எல்லோர் மனதிக்கும் நல்ல மனிதராய் வாழ்ந்தது மட்டுமன்றி சமூதாயம் போற்றக் கூடிய எல்லோரும் மதிக்கும் வகையில் தனது பிள்ளைகளையும் மிக உயர்ந்த நிலைக்கு கொண்டு வந்தவர். பல்வராயன் கட்டு மண்ணிற்கு பெருமை சேர்க்கும் வகையில் கல்லூரி அதிபர்களாக, ஆசிரியர்களாக, வைத்திய அதிகாரியாக, பல்கலைக்கழக பேராசிரியராக மட்டுமன்றி வெளிநாடுகளுக்கும் தங்கள் பிள்ளைகளை அனுப்பி உயர வைத்த பெருமைக்குரியவர். இவரது எல்லாப் பிள்ளைகளும் உயர் நிலைக்கு வந்து சமூகம் மதிக்கும் மனிதர்களாக வருவதற்கு அவரது முயற்சி மிகவும் முக்கியமானது. இவரது பிள்ளைகளின் பெருமைகண்டு எமது பல்வராயன் கட்டு மண் பெருமை கொண்டுள்ளது. தனது இறுதிக் காலத்தில் முழங்காவில் பகுதியில் வாழ்ந்தாலும் அங்கும் எல்லோர் மனங்களிலும் இடம் பிடித்தவராய் வாழ்ந்து பல சமூகப்பணிகளில் முன் நின்று உழைத்தவர். இவரது அனைத்து செயற்பாடுகளிற்கும் இவரது துணைவியாரின் பங்களிப்புக்களும் என்றும் இவருக்குதோள் கொடுத்து நின்றார் என்பதையும் நினைவுபடுத்த வேண்டியுள்ளது.

இவ்வாறு வாழ்ந்த அற்புதமான சமூகத் தலைவனின், நல்வழிகாட்டியின், எல்லோரையும் நேசிக்கும் பண்பாளனின் மறைவுச் செய்தி அறிந்து நான் ஒரு கணம் திகைத்து நின்றேன். ஆனாலும் என்னையும் தேற்றிக் கொண்டு இறுதி நிகழ்வில் கலந்து குடும்பத்தாரின் துயரில் பங்குபற்றி அஞ்சலி செலுத்திய போது எனக்கு அவரின் கடந்த கால நினைவுகள் வந்தன. தாம் வாழ்ந்த மண்ணின் ஒவ்வோர் துணிக்கையிலும் சொந்தமாக கால்மிதித்து சுகதுக்கங்கள் கேட்டு எல்லோர் மனங்களிலும் இடம்பிடித்த தங்க மனச் செம்மலை, தூங்காது தூங்குகின்ற தூய மனிதனை நீங்காது எல்லோர் மனங்களிலும் நிறைந்த பெருமகனை பூங்காவின் மலர் தூவி அஞ்சலி செலுத்துவதுடன் என்றும் மறக்கமுடியாத அண்ணலுக்கு எனது இறுதி வணக்கம் செலுத்துவதுடன் என்றும் ஆத்மா சாந்திக்காக பிரார்த்தனை செய்கின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம்சாந்தி!

நல்லையா செல்வராசா
அதிபர்
யா/பலாலி சித்தி விநாயகர் வித்தியாலயம்
வயாவிளான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் செய்தி

"அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது" எனக்கூறினார் ஔவைப்பிராட்டியார். "மனிதப்பிறவியும் வேண்டுவதே இம்மானிலத்தே" எனக்கூறினார் அப்பர் பெருமான். பிறவிகளில் சிறந்தது மானிடப்பிறவி என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. மானிடராய்ப் பிறந்த அனைவரும் என்றோ ஒருநாள் மடிவது திண்ணம். எனினும் தம்வாழ்நாளில் இப்பூவுலகம் சிறக்க நற்பணி செய்து மறைவோரே மக்கள் மனங்களில் நிலைத்திருக்கின்றனர்.

அந்த வகையில் அமரர் கதிரவேலு பொன்னுச்சாமி அவர்கள் இப்பூவுலகில் தான் பிறந்ததன் கடமையை செவ்வனே நிறைவேற்றி விண்ணுலகெய்தியவராவார். இவர் ஆரம்பகாலம் பல்லவராயன்கட்டிலே மிக நீண்டகாலமாக தமது குடும்பத்துடன் வசித்து பின்னர் முழங்காவில் பிரதேசத்தை தனது நிரந்தர வதிவிடமாக்கியவர். பல்லவராயன்கட்டிலே வசித்த காலத்தில் இந்தப் பிரதேசத்தில் பல்வேறு பொதுவேலைகளில் சிறப்பாக ஈடுபட்டதுடன் பிரதான வீதியில் அவரது வீடு அமைந்திருந்த காரணத்தால் அந்த வீதியால் பயணிக்கும் அனேகர் தாகம் தீர்க்கும், இளைப்பாறும் இடமாக அவரது வீட்டுடன் இணைந்த கடை அமைந்திருந்தது. இயல்பாகவே எவ்வித எதிர்பார்ப்புமின்றி பலருக்கும், பல்வேறு வகைகளிலும் உதவி நல்கும் சமூக சேவையாளராக விளங்கினார். நான் சிறுமியாக எனது தந்தையாருடன் வேரவில் செல்லும்போது அவரது வீட்டிற்குச் செல்வதும் உண்டு. அப்போதெல்லாம் அவரது பிள்ளைகள் போலவே என்னையும் கருதி எனது கல்வி தொடர்பில் அக்கறையுடன் கேட்கும் அவரது குரல் இன்றும் என்னுள் ஒலிக்கும் ஒன்றாகவே உள்ளது.

பின்னாளில் அவர் முழங்காவிலுக்கு வந்தபின்னர் அவரது பிள்ளைகள் அனைவருடனும் நானும் பழகும் வாய்ப்பு கிடைத்தது. இவர் ஒரு சிறந்த தந்தையாக தனது பிள்ளைகள் அனைவரையும் சிறப்பாக கல்வியூடாக வளர்த்தெடுத்து இன்று அவர்கள் ஒவ்வொருவரும் இந்த சமூகத்துக்கு சிறந்த சேவைபுரியக்கூடிய உயர் பதவிகளில் இருப்பது அவர்தம் கடமையுணர்வுக்கு சான்றாக உள்ளது. அன்பானவராகவும், அதேவேளை பிழைகள் கண்டால் சுட்டிக்காட்டி சரியைத் தேடுபவராகவும், நல்லதொரு சமாதான நீதவானாகவும் எமது முழங்காவில் பிரதேசத்தில் விளங்கியவரே அமரர் க.பொன்னுச்சாமி ஆவார்.

மேலும் எந்த வேளையிலும் தாம் எடுத்துக்கொண்ட வேலையை திறம்பட செய்வதில் வல்லவராக விளங்கியதுடன் தனது பிள்ளைகள் போலவே ஏனைய பிள்ளைகளும் கல்வியில் உயர்ந்து விளங்க வேண்டும் என்ற உயரிய எண்ணமுடையவராகவும் விளங்கினார்.

"நேற்று இருந்தவர் இன்று இல்லை" என்ற பெருமையுடையது இந்த உலகு. அந்த வகையில் அமரர் க.பொன்னுச்சாமி அவர்களும் தமது பாரியாரையும், இப்பிள்ளைகளையும், உறவினர், நண்பர்களையும் ஏங்கவைத்து மீளாத்துயில் கொண்டுவிட்டார். அவரது ஆன்மா இறைவனிடம் இளைப்பாறுவதாக.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

திருமதி ஜெயா மாணிக்கவாசகன்
அதிபர்
கிளி/விவேகானந்த வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"துறந்தார் பெருமை துணைக் கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக் கொண்டற்று"**

இன்று நேற்றல்ல, எத்தனையோ வருடங்களாக எமக்குள் வாழ்ந்தவர் தான் அமரர் கதிரவேலு பொன்னுச்சாமி ஐயா JP அவர்கள். எமது முதியோர் சங்கத்திற்கு பல நிகழ்விற்கு உதவிகள் ஆலோசகர்கள் கூறி வழிகாட்டியவர் நான் ஐயா. எமது கிராமத்தின் அபிவிருத்தியைக் கருத்திற் கொண்டு பல துறைகளில் முதியோர் சங்கத்திற்கு உதவிகள்புரிந்தும் உள்ளார். சிறந்த பண்புகளை உள்ளடக்கிய அம் மாமனிதர் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு அத் துன்பச் செய்தியை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையிலும் ஏற்றுக் கொண்டு இவ்வாறு தான் வாழவேண்டும் என்று வாழ்ந்து காட்டிய பொன்னுச்சாமி ஐயா அவர்களின் ஆத்மா புனித நிலையடைய பிரார்த்தனை செய்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

நன்றி

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

முதியோர் சங்கம்
முழங்காவில்

**அப்பா இல்லாத வாழ்க்கையை
வாழ்ந்து பார்க்கும் போது தான் தெரியும்
அப்பா என்பது வார்த்தை இல்லை
வாழ்க்கை என**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டக்கல்விப் பணிப்பாளரின் இதயத்திலிருந்து......

இலங்கையின் தலைப்பகுதி யாழ்ப்பாணத்தின் தென்மராட்சி மட்டுவிலைப் பிறப்பிடமாகவும், பல்லவராயன் கட்டு முழங்காவில், கிராமங்களை வசிப்பிடமாகக் கொண்ட உயர்திரு கதிரவேலு பொன்னுச்சாமி அவர்களை நான் நீண்ட நாட்களாக சேர்ந்த பழகி வாழ்ந்த அனுபவங்களோடு எண்ணிப்பார்க்கின்றேன். மேற்படி இவர் பூநகரி, பல்லவராயன்கட்டு மண்ணிலே குடியமர்ந்து, 11 பிள்ளைகளை ஈன்றெழுத்து உலகின் நாலாமருங்கிலும் பரந்த வாழ்கின்ற இவர்களை சிறந்த கல்வியறிவூட்டி துணிச்சல் மிக்க சேவையாளர்களாக உருவாக்கியுள்ளார். இவர்களிலே பொன்னுச்சாமி மனோகர் அவுஸ்ரேலிய பல்கலைக்கழகம் ஒன்றிலே பீடாதிபதியாகவும், திரு.சிறிசங்கர் மருத்துவர், போதனா வைத்தியசாலை, மட்டக்களப்பு, திருமதி ஜெயந்தி தனபாலசிங்கம், அதிபர், திருமதி.சிவானந்தி பரதன், அதிபர், திருமதி.நாகராசா வசந்தி, ஆசிரியர், திருமதி.சந்திரகுமார் தமயந்தி, ஆசிரியராகவும் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களதத்தமது பிரதேசத்திலே துணிச்சலாக செயற்பட்டு மக்கள் சேவையே மகேசன் சேவையாக பணிபுரிந்து வருகின்றார்கள்.

திருவாளர் கதிரவேலு பொன்னுச்சாமி அவர்கள் புரட்சித் தலைவர், சேகுவாரா போன்று சமூகத்தின் அநீதி கண்டு கிளர்ந்தெழுதல், சுட்டிக்காட்டுதல் போன்றவற்றால் அப்பிரதேசத்தின் அரச அலுவலர்களை நேர்மையாகப் பணியாற்ற வைத்ததர். அநீதிகளை இழைக்கும் போது பொன்னுச்சாமி ஐயா விழிப்பாக இருந்து செயற்பட்டதை அப்பகுதி மக்கள் பசுமையாக இன்றும் நினைவு கூருவர்.

கிராமத்திலே ஒரு முற்போக்கு சிந்தனை வாதியாகவும், கடுமையாக உழைத்து அப்பகுதியிலே வளர்ந்து பாடசாலைகள் இல்லாதிருந்தபோது சாவகச்சேரி, கிளிநொச்சி போன்ற இடங்களில் நிறுத்தி பிள்ளைகளைக் கற்பித்ததையும் அவர்களை வளர்ச்சியுறவைத்து செயலாற்றியதையும் அறியமுடிகின்றது. அவர் ஒரு விவசாயியாக இருந்து மாட்டுவண்டி, உழவுமாடு கொண்டு பல ஏககர் காணிகளில் வேளாண்மை செய்து பல வேலையாட்களையும் தொழிலாளர்களுக்கு தொழில் வழங்கியும், உண்டியும், உணவும் அழித்து ஒரு பண்ணையார் போன்று கிராமத்தில் மிளிர்ந்ததை எண்ணிப் பார்க்கின்றோம். அத்துடன் இவர் ஒரு சமாதான நீதவானாக இருந்து ஆறுதல் வார்த்தைகளையும், சமரசம் செய்யும் முயற்சிகளையும் மிகவும் அற்புதமாக ஆற்றினார்.

திருவாளர் பொன்னுச்சாமி ஐயாவின் மகன் மனோகர் அவர்கள் முழங்காவில் வருகை தந்திருந்தபோது என்னைச் சந்தித்தார். அக்காலப் பகுதியிலே முழங்காவில் ம.வியில் நடைபெற்ற இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு நிகழ்வில் பிரதம விருந்தினராகவும், மேலும் சில பாடசாலைகளில் சில விழாக்களிலும் கலந்து கொண்டு இப்பிரதேச பாடசாலைகளில் வளர்ச்சியில் திரு மனோகர் உதவிகள் புரிந்ததையும் அவரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சியால் தனது தந்தையார் பொன்னுச்சாமி தம்பதிகளின் பெயரில் ஒரு கல்வி வளர்ச்சி நிதியத்தை ஆரம்பித்து ஆண்டுதோறும் புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்களையும், துவிச்சக்கரவண்டிகளையும் வழங்கியமையும் அவ்வாறான நிகழ்வில் நானும் பங்களித்திருக்கிறேன்.

அந்த நிதியமும், கல்விப் பங்கெடுப்புக்களும் தொடரவேண்டும் என வேண்டுகின்றேன். நான் பூநகரி, கரைச்சி கோட்டங்களில் கோட்டக்கல்விப் பணிப்பாளராகப் பணி புரிந்தமையால் இவரின் பிள்ளைகள், மருமக்கள், அதிபர், ஆசிரியர்களாக பணிபுரிந்து வருவதையும் அவர்களின் சமூக ஆற்றல் சேவைகளையும் நன்கு அறிந்த வகையில் பொன்னுச்சாமி "கல்வி நிதியம்" மேலும் சிறப்புற இயங்கி இப்பிரதேச மக்களின் மனங்களில் வாழவேண்டும் என வேண்டுகின்றேன்.

பிள்ளைகள் உலகின் நாலாதிக்கும் பரந்து வாழ்ந்த போதும் திருவாளர் பொன்னுச்சாமி அவர்களையும் அவர் தம் பரியாரையும் வயோதிப காலத்தில் (தாயாருக்கு மருத்துவ சிகிச்சை மூலம் கால்கள் அகற்றிய போதும் சிறப்பாக பராமரித்து அரச பணிபுரியும் பிள்ளைகளாக இருந்த போதும்) முதுமைக்காலம் சிறப்படைய உழைக்கும் பிள்ளைகளையும் நான் வாழ்த்துகின்றேன். இப்பணியும் சமூகத்திற்கு நல்ல முன்னுதாரண பணியாக எண்ணுகின்றேன்.

தற்துணிவும், தன்னம்பிக்கையும், நிமிர்ந்த நன்நடை, நேர்கொண்ட பார்வை, புவியில் எவருக்கும் அஞ்சாதே நேர்மை என்பவற்றைத் தன்னகத்தே கொண்ட திருவாளர் பொன்னுச்சாமி அவர்கள் தனக்கே உரிய பாணியில் இவ்வளவு அளப்பரிய காரியங்களையும் சிறிய மனித வாழ்வில் செய்து முடித்திருக்கின்றார். இதை நோக்கும் போது "பூனையைவிட சிங்கம் வலிமையானது என்று எலிகள் ஒரு போதும் ஒத்துக்கொள்ளாது" இவ்வாறு இவரின் வலிமையும் வீரத்தையும் நோக்கலாம். இவர்கள் வாழ்ந்த காலம் பொற்காலம் .

" அலைகளில் கால்களை நனைக்கும் சுகம்
கப்பலில் கடல் நடுவில் பயணிக்கும் போது கிடைப்பதில்லை."

ஐயாவின் இறுதி தாரக மந்திரம்.

" அறிவாளியை விலை கொடுத்து வாங்கி விடலாம்"
உணர்ச்சி உள்ள மனிதனையும் அன்பான மனிதர்களையும்
விலை கொடுத்து வாங்க முடியாது"

ஒரு மனித பூரண வாழ்வு சிறப்புற நடந்தேறியுள்ளது.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!

திரு. சு.தர்மரத்தினம் **JP**
கோட்டக் கல்விப்பணிப்பாளர்
கரைச்சி
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவையுள்ளம் கொண்ட மக்கள் சேவையாளன்

பல்லவராயன் கட்டினைப் பிறப்பிடமாகவும், முழங்காவிலை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் கதிரவேலு பொன்னச்சாமி அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயர்பகிர்கின்றோம்.

சிறந்த சமூக சேவையாளரும், ஊர்ப் பற்று மிகுந்தவருமான அமரர் பொன்னுச்சாமி அவர்கள் எமது ஆலயத்தின் வளர்ச்சிக்கு பல தசாப்த காலமாக பணியாற்றியவராவார். ஆலய பரிபாலன சபையின் செயலாளராக பல்வேறு வேலைத்திட்டங்களை செயற்படுத்தியதுடன், பொருளாளராக ஆலயத்தின் சொத்துக்களை திறம் படப் பேணிப் பாதுகாத்து வந்ததுடன் மேலும் ஆலயத்தில் கணக்காய்வாளராக இருந்து கணக்காய்வும் பணிகளையும் மேற்கொண்டவராவார். ஆலயத்தின் வளர்ச்சிக்கு மாத்திரமின்றி அகில இலங்கை சமாதான நீதவானாக இருந்து எமது முழங்காவில் பிரதேசத்தில் பல்வேறு சமூகப் பணிகளை ஆற்றிய இவரின் இழப்பு அனைவராலும் தாங்கிக் கொள்ள முடியாததாகும். அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல விநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

ஆலய பரிபாலன சபை,
ஸ்ரீ செல்வ சித்தி விநாயகர் ஆலயம்
முழங்காவில்
தலைவர், மூ.நவரத்தினம் (நயினை)

அப்பாவின் அன்பை விட சிறந்தது
இந்த உலகில் எதுவுமில்லை
அது போல அப்பாவை பிரிந்த
வலியை விட கொடியது எதுவுமில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் கதிரவேலு பொன்னுச்சாமி

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையுந் தெய்வத்துள் வைக்கப்படும்."

என்ற வள்ளுவர் வாக்கு அமரர் தொடர்பாக என் எண்ணங்களில் நிழலாடிச் செல்கிறது. 1985இல் நான் கிளி/கரியாலை நாகபடுவான் இல:1, அ.த.க பாடசாலைக்கு அதாவது தற்போதைய முழங்காவில் ம.விக்கு ஆசிரியராக வருகை தந்தபோது அமரர் அவர்கள் இப்பகுதியில் எல்லோராலும் மதிக்கப்பட்ட பெருமனிதராக அறியப்பட்டார். நிகழ்வுகளிலும், பாடசாலை, கிராமம், கோயில் தொடர்பான கலந்துரையாடல்களிலும் இவரது பிரசன்னம் தவிர்க்க முடியாததொன்றாக இருந்தமை என்னால் உணரக்கூடியதாக இருந்தது. இவரது கருத்துக்கு மக்களிடையே அங்கீகாரமும், பெருமதிப்புமிருந்தது என்றால் மிகையாகாது. பொது நலன் சார்ந்த விடயங்களில் ஈடுபாட்டுடன் கருத்துரைக்கும் துணிவு, ஆற்றல் இவரிடம் காணப்பட்டது. அந்தவகையில் வையத்துள் வாழ வேண்டிய வழிமுறையைக் கடைப்பிடித்து வாழ்ந்தவர் என்பதில் ஐயமேதுமில்லை.

பல்லவராயன்கட்டு பகுதியில் தனித்திருந்த ஒரிரு குடும்பங்களில் இவரது குடும்பமும் ஒன்று. உயரிய நற் பிள்ளைச் செல்வங்களுடன் வறுமையிலும் செழுமையாக வாழ்ந்தவர். இல்வாழ்வில் ஆற்ற வேண்டிய கருமங்களை இவர் தனது குடும்பத்திற்கும், தான் சார்ந்த சமூகத்திற்கும் குறைவற்று வழங்கி வாழ்ந்து நிறைவாக தன் கடமையை முடித்துள்ளார். "தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் காணப் படும்." என்ற வகையில் அமரர் பொறுப்புமிக்க, அன்பு நிறைந்த, கண்டிப்பு கலந்த நல்ல தந்தை. தன் பிள்ளைகளை அழகுற நேசித்து சமூகத்திற்கேற்ற நல் விளைநிலங்களாய் உருவாக்கிய இலட்சிய தந்தை. சுகந்தி, வசந்தி, ஜெயந்தி , சாந்தி, சிவானந்தி, ஆனந்தி, தமயந்தி என்ற அழகிய நாமம் கொண்ட பெண் பிள்ளைகளையும் ஸ்ரீதர், மனோகர், முருகதாஸ், சிறிசங்கர் என்ற ஆண் பிள்ளைகளையும் பெற்றெடுத்து அறிவூட்டி ஆளாக்கி அழகு பார்த்தவர். இவர் பிள்ளைகளுக்கு இட்ட நாமங்களைப் பார்த்து நாம் நயந்து வியந்து பாராட்டிய சமயங்கள் பல உண்டு.

நல் விருந்தோம்பி வருவிருந்து காத்திருக்கும் நற்பண்பாளன். அமரரின் பிள்ளைகள் இன்று சமூகத்தில் நல்லாசான்களாயும், வைத்தியராயும் இன்னும் சமூக நலனோம்பும் நன்மனத்தோராயும் வாழ்வதன் மூலம் அமரரின் சமூகப்பற்றும் நெறிகாட்டும் வாழ்வும் வையத்துள் வாழ்வோர்களுக்கெல்லாம் வழிகாட்டுமென்பது கண்கூடு. நற்தந்தையாய், அருமைத்துணைவனாய், சமூகசேவகனாய், சமூகத்தின் வழிகாட்டியாய், நல் உதாரண புருசனாய் வாழ்ந்த இவரின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது. உறவுகளின் உணர்வுகளோடு கலந்து அமரரின் ஆன்மா இறைவனில் இளைப்பாற இறையாசீர் வேண்டுகின்றேன்.

ம. அன்ரனிசாந்தா
அதிபர் - கிளி /புனித திரேசா பெண்கள் கல்லூரி
சாந்தா ரீச்சர்
கிளி /முழங்காவில் ம.வி - முன்னாள் ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் மனங்களை வென்ற உத்தமன் ...!

**21.10.2021** இல் அமரத்துவம் அடைந்த கதிரவேலு பொன்னுச்சாமி ஐயாவை சிறுவயதிலிருந்தே நான் அறிவேன். நான் பழகிய காலத்திலிருந்து இறுதிக்காலம் வரை அவரது உடற்தோற்றத்தில் பெரிய மாறுபாடுகள் எவற்றையும் என்னால் கண்டு கொள்ள முடியவில்லை கட்டடக்கமான உயரமில்லாத கட்டையுமில்லாத உடற்தோற்றம். சரியென்று பட்டால் எதையும் விட்டுக் கொடுக்கவும் மாட்டார். குடும்பம், பொது நலம் இரண்டையும் சரிவரவே பேணி வந்தார்.

சமூகப் பொறுப்பு வலுவாகவே இருந்தது. இறுதிக்காலத்தில் தொய்வு வருத்தம் அடிக்கடி வந்து போகும். எனினும் தளர்வு விடமாட்டார். உறுதியாகவே இருப்பார். "தம்பி தம்பி" எனவும் சில பொழுது "மாஸ்டர்" எனவும் அன்போடு கூறி என்னை சிறைப்படுத்தி விட்டார். இதனால் என்ன முக்கியமான வேலையிருந்தாலும் கண்டால் தப்பவே முடியாது, கதைத்து விட்டே செல்ல வேண்டியிருந்தது. **90** களின் முற்பகுதியில் சில காலம் சங்கக்கடையில் நான் வேலை செய்தமையால் தனது நீண்ட கால அனுபவங்களை என்னுடன் பகிர்ந்தார். சிவன் ஸ்ரோர் படிக்கட்டில் சாய்ந்த படி உட்கார்ந்து விடுவார். நீண்ட நேர உரையாடல் சிலகாலம் தொடர்ந்தது. ஐயாவை நினைத்தவுடன் பற்நாட்டுச் சந்தி (பல்லவராயன் கட்டுச் சந்தி) தபாற்கந்தோர், பள்ளிக்கூடம், ஐயாவின் வீடு, எரிக்கேசன் கந்தோரிலையே ஏறுவரிசையாகவும் இறங்குவரிசையாகவும் வந்து போகிறது.

எனக்கு மட்டுமல்ல **A32** என்று இப்போது சொல்லப்படும் இவ் வீதியால் பயணம் செய்த பலருக்கு மனப்பாடமாகிய இடங்களே இவையாகும். பலருக்கு இவரது வீடும், கடையுமே தாகசாந்தி நிலையமாகவும் கடையின் முன்னே இருந்த நீளமான வாங்கு ஓய்வு எடுக்கும் இடமாகவும் இருந்தது.

எல்லாவற்றிற்கும் மேலாக தனது பிள்ளைகள் அனைவரையும் சிறந்த கல்விமான்களாகவும் சிறந்த நற்பண்புடையவர்களாகவும் ஆக்கி சிறப்போடு வாழ்ந்தமையே எனக்கு மட்டுமல்ல எல்லோர்க்கும்இவர் மீது நன்மதிப்பை உண்டு பண்ணியது. இறுதிக்காலத்தில் நோயுற்றிருந்த போது பிள்ளைகள் அவரைப் பராமரித்த விதத்தினைப் பார்த்து வியந்தே போய் விட்டேன்.

"தந்தை மகன் காற்றுமுதவி அவையத்து முந்தியிருப்பச் செயல்"

என்பதுவும்

"மகன் தந்தைக் காற்றுமுதவி இவன் தந்தை என்னோற்றான்
கொல்லெனும் சொல்"

என்பதுவும் உணர்த்தும் பொருளை வாழ்ந்து

காட்டி இறைபதம் அடைந்த அமரரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்

நன்றி

சிவகுமார் ஸ்ரீரஞ்சன்
முழங்காவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலைத்திருக்கும் நின்புகழ்

ஆழ்ந்த அஞ்சலிகள் அன்னாரது நல்லாத்மா சிவப்பேறு அடைவதாக. அன்னாரது ஊரிலே பெரிய மனிதராக எல்லோராலும் மதிக்கப்பட்ட ஒருவர். வேலை நிமித்தமாக அவரது அழகிய இல்லத்தில் தங்கிய நினைவுகள் அலைபாய்கின்றன. நல்ல உபசரிப்போடு பழகும் குடும்பத்தினர். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த உத்தமர். நிச்சயம் தெய்வத்துள் வைக்கப்படுவார்.

ஆழ்ந்த இரங்கல் மண்ணின் வாசனை இன்று மறைந்து விட்டது பல ஆண்டுகளாக பூநகரி பல்லவராயன்கட்டில் பொன்னான வேர் கொண்ட பொன்னுச்சாமி மேனேஜர் இன்று இந்தப் பூவுலகை விட்டு மறைந்து விட்டார். அன்னார் அக்கிராமத்தில் ஆற்றிய பணிகள் சொல்லி அடங்காதவை. தமிழராய் பிறந்து தமிழை வளர்த்து ஆங்கிலேயருக்கு இணையான ஆங்கில அறிவை கொண்ட அறிவு ஆசான் இன்று நாம் இழந்து விட்டோம். இவரின் கல்வி பங்கானது இவ்வுலகத்திற்கு பெரும் உதவுகின்றது. இவர் பெற்ற குழந்தைகளுக்கு உலகம் போற்றும் அளவுக்கு கல்வியிலே வளர்ச்சியடைந்த பல சேவைகளைச் செய்து வருகின்றார்கள். இவரின் அன்பு மனைவி ராசம்மா இந்த தனிமையை நினைத்து ஏங்கி மங்கள பொட்டு வைத்த கணவனை இழந்து தவிக்கும் அன்பு மனைவி இராசம்மா அம்மாவின் ஆறுதலுக்கு யாருண்டு? அப்பாவை இழந்து விட்டோம்? விம்மித் தவிக்கின்ற குழந்தைகளுக்கு யார் ஆறுதல் கூறுவார்கள். "மேனேஜர் பொன்னுசாமியை இழந்துவிட்டோம்" என்று மண்ணின் மக்கள் வருந்துகிறார்கள். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம்.

இருந்தும் தங்கள் துக்கத்தில் கலந்து
கொள்ளும் மண்ணின் மைந்தன்
நல்லையா நாகராசா (சுவிஸ்லாந்து)

சுயநலம் இல்லாத அன்பின்
மூன்றெழுத்து மந்திரம் - அப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி, பதாதைகள் பிரசுரித்தோர்பதாதைகள்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிநீர்க் காணிக்கை

மண்ணில் 1934 . 10 . 25



விண்ணில் 2021 . 10 . 21

அமரர்

## கதிரவேலு பொன்னுச்சாமி

(அகில இலங்கை சமாதான நீதவான் முழங்காவில்)

பிறப்பு என்பது இயற்கையின் நியதி
இறப்பு என்ன விதிவிலக்கா? இருந்தும்
இத்தனை விரைவில் வருவது
இறைவன் செய்த சதிக்கணக்கா?
பிரிவினைத் தாங்கும் வரங்களைத்தானே
இறைவனைத் தினம்தினம் வேண்டி வந்தோம்
அவ் வரத்தினை தந்திட மறந்த இறைவன்
உங்கள் உயிரினை மீட்டுத் தருவானா?

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் உறவுகள் நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம்சாந்தி ஓம்சாந்தி ஓம்சாந்தி

துயர்பகிர்வு
விநாயகர் விளையாட்டுக்கழகம்
முழங்காவில்

---

# கண்ணீர் விழிகள்

மண்ணில் 1934 . 10 . 25



விண்ணில் 2021 . 10 . 21

அமரர்

## கதிரவேலு பொன்னுச்சாமி

(அகில இலங்கை சமாதான நீதவான்)
முழங்காவில்

[illegible]

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் உறவுகள் நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம்சாந்தி ஓம்சாந்தி ஓம்சாந்தி

துயர்பகிர்வு
கமலநாதன்
பாடசாலை முன்னாள் அதிபர் [illegible]
முழங்காவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## கதிரவேலு பொன்னுச்சாமி

(அகில இலங்கை சமாதான நீதவான்)

[illegible]






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று"

எமது குடும்பத்தின் ஆணிவேராக விளங்கி பண்பால், அன்பால் எமை வழிநடாத்தி இப் பூமியிலே தலை நிமிர்ந்து நடக்க வைத்து எம்மை விட்டு 21.10.2021 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வம் மறைந்த செய்தி கேட்டு வருகை தந்து எமது துன்பத்தில் கலந்து கொண்ட உற்றார், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள், அனைவர்க்கும், அஞ்சலியில் கலந்து கொண்டு உரையாற்றியவர்களுக்கும், ஊர்வலத்தில் கலந்து கொண்டோருக்கும், நேரில் சமூகமளிக்கமுடியாத நிலையில் இரங்கல் செய்தி அனுப்பியோர்க்கும், தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஆறுதல் கூறியோர்க்கும், அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டோர்க்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள், பதாகைகள் வெளியிட்டோர்க்கும், உணவுகள் தந்து உபசரித்தோர்களுக்கும், ஏனைய உதவிகள் புரிந்தோர்க்கும், இன்று நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு எமது குடும்ப விளக்கின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஐயனின் பாதார விந்தங்களை இறைஞ்சி நிற்கின்றோம். "காலத்தினால் செய்த உதவி ஞானத்தின் மாணப் பெரிது" என இதயபூர்வமாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி



31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

அன்புடையீர்,

கடந்த 21.10.2021 (வியாழக்கிழமை) அன்று
சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

அமரர்
கதிரவேலு பொன்னுச்சாமி

அவர்களின்

அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 18.11.2021 (வியாழக்கிழமை) கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வு 20.11.2021 (சனிக்கிழமை) அவரின் இல்லத்திலும் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

இங்ஙனம்
குடும்பத்தினர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வப்புலவர்
திருவள்ளுவர் அருளிச்செய்த

# திருக்குறள்

## மூலமும் - உரையும்



வெளியீடு :

**யுனிலங்காஸ் பப்ளிக்கேஷன்**

கொழும்பு - 13.

தொ.பே : 011 4014438

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளின் திருவருளை முன்வைத்து தெய்வப்புலவர் திருவள்ளுவர் பெருமானால் அருளிச் செய்யப் பெற்ற உலகப் பொதுமறை திருக்குறள் ஓர் அரிய கருத்துக் களஞ்சியம். இந்நூல் இன்று எல்லோராலும் போற்றிப் புகழ்ந்து பாராட்டி விரும்பிக் கற்கப்படுகிறது. அந்த வகையில் தமிழ்மீது கொண்ட பெருவிருப்பின் நிமித்தம் நாமும் எமது வெளியீடாக திருக்குறளை எத்தனையோ சிரமத்தின் மத்தியில்ஒரு பொருள் விளக்க நூலாக உருவாக்கியிருக்கின்றோம்.

"திருக்குறள்" பொதுவாக எல்லோருமே படித்திருக்க வேண்டிய ஒரு கருத்துக் களஞ்சியமாகும். அதில் கூறப்பட்டிருக்கும் தத்துவார்த்தமான பொருள் விளக்கங்கள் மனிதவாழ்க்கைக்கு மிகவும் அவசியமானதாகும்.

எனவே, தமிழ்மக்கள் ஒவ்வொருவருடைய இல்லத்திலும் இருக்கவேண்டிய தெய்வத்தமிழ் நூல் திருக்குறளை அறிஞர் பெருமக்கள் அனைவரும் உவந்தேற்று நல்லாதரவளித்து எமக்கு உதவவேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொண்டு இதனை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றோம். தமிழ் அபிமானிகள், அன்பர்கள், நலன்விரும்பிகள் பூரண ஆதரவு நல்கி ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்று சிரந்தாழ்த்திக் கரங்கூப்பி வணங்கி வாழ்த்தி நிற்கின்றோம்.

தெய்வப் புலவர் வான்புகழ் வள்ளுவப் பெருந்தகை திருவாய்மலர்ந்தருளிய "திருக்குறள்" உலகப் பொது மறையாகப் போற்றப்படுகின்றது. அதில் கூறப் படுகின்ற முப்பாலும் மனித வாழ்வின் அடிப்படை அம்சங்களாகும். ஒரு மனிதன் இப்படித்தான் வாழவேண்டும் என்ற வாழ்வியற் கோட்பாடுகள் மிக நல்ல முறையில் முன்னு தாரணங்களுடன் விளக்கப்பட்டிருக்கின்றன. ஆதலால் இந்நூல் தமிழ் மக்களின் தனிப்பெரும் சொத்து எனக் கூறின் மிகையாகாது. ஆகவே எல்லோரும் வாங்கிப் படித்துப் பயன் பெற வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.

" உங்கள் தேவை எங்கள் சேவை! "

நன்றி

– பதிப்பாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி**
**பகவன் முதற்றே உலகு.** 1

உலகில் வழங்கி வரும் எழுத்துக்கள் எல்லாம் "அ" என்ற எழுத்தை முதலாக உடையன. அது போல, உலகம் கடவுளை முதன்மையாக உடையது.

**கற்றதனால் ஆய பயனென்கொல், வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்.** 2

கடவுளின் புனிதமான திருவடிகளை வணங்காதவன் படித்ததனால் ஒரு பயனும் இல்லை.

**மலர்மிசை ஏகினான் மாண்அடி சேர்ந்தார்**
**நிலமிசை நீடுவாழ் வார்.** 3

மலரின் மீது வாழுகின்ற கடவுளின் பெருமை பெற்ற அடிகளை நினைப்பவர்கள் உலகில் நெடுங்காலம் வாழ்வார்கள்.

**வேண்டுதல் வேண் டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு**
**யாண்டும் இடும்பை இல.** 4

விருப்பும் வெறுப்பும் இல்லாத கடவுளின் திருவடிகளை உறுதியாய் நினைப்பவர்களுக்கு வாழ்வில் எத்தகைய துன்பமும் ஏற்படாது.

**இருள்சேர் இருவினையும் சேரா; இறைவன்**
**பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.** 5

கடவுளின் உண்மையான திருவடிகளை விரும்பிப் போற்றுகிறவர்களை நல்வினை, தீவினை ஆகிய இரு வினைகளும் தொடர மாட்டா.

**பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க**
**நெறிநின்றார் நீடுவாழ் வார்.** 6

ஐம்பொறிகள் வழியாக வரும் ஆசைகளை நீக்கிய கடவுளின் உண்மையான புகழைப் போற்றுபவர்கள் நிலைபெற்று வாழ்வார்கள்.

**தனக்குஉவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்**
**மனக்கவலை மாற்றல் அரிது.** 7

தனக்கு ஈடில்லாத கடவுளின் திருப்பாதங்களை அடையாதவர்களால் மனக்கவலையை மாற்றிக் கொள்ளமுடியாது.

**அறஆழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்**
**பிறஆழி நீந்தல் அரிது.** 8

அறக்கடலாய் விளங்கும் கடவுளது திருவடிகளை நினைக்காதவர்களால் உலக ஆசைகள் என்ற கடல்களைக் கடக்க முடியாது.

**கோள்இல் பொறியில் குணம் இலவே எண்குணத்தான்**
**தாளை வணங்காத் தலை.** 9

கேட்க முடியாத காதுகள், பார்க்க முடியாத கண்கள் போலவே எட்டுக் குணங்களைக் கொண்ட இறைவனின் திருப்பாதங்களை வணங்காத தலையும் பயனில்லாதது.

**பிறவிப் பெருங்கடல் நீந்துவர், நீந்தார்**
**இறைவன் அடிசேரா தார்.** 10

இறைவனின் திருவடிகளைச் சேர்ந்தவர்களே பிறவி என்னும் பெருங்கடலைக் கடப்பார்கள். அவ்வாறு சேராதவர்கள் கடக்க மாட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுஉணரற் பாற்று. 11
மழை பெய்வதனால்தான் உலகம் வளத்தோடு வாழ்கின்றது. எனவே, அதை நாம் அமுதத்திற்கு ஒப்பானது என்று நினைக்க வேண்டும்.

துப்பார்க்குத் துப்புஆய துப்புஆக்கித் துப்பார்க்குத்
துப்புஆய தூஉம் மழை. 12
உண்பவர்களுக்கு நல்ல உணவுகளை உண்டாக்கி அவற்றை உண்பவர்களுக்கு தானும் ஓர் உணவாகும் சிறப்புடையது மழை.

விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியன்உலகத்து
உள்நின்று உடற்றும் பசி. 13
மழை பெய்யாமல் பொய்க்குமானால் கடல் நீரால் சூழ்ந்த இந்த உலகத்தில் பசியானது நின்று உயிர்களைத் துன்பப்படுத்தும்.

ஏரின் உழாஅர் உழவர் புயல்என்னும்
வாரி வளம்குன்றிக் கால். 14
மழை என்னும் வருவாய் வளம் குறைந்தால் உணவுப் பொருள்களை உண்டாக்கும் உழவர்களும் ஏர் கொண்டு உழ மாட்டார்கள்.

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றுஆங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை. 15
பெய்யாமல் உயிரினங்களைக் கெடுப்பதும் மழை; வளமிழந்த உயிரினங்களுக்குத் துணையாய்ப் பெய்து வாழ்விப்பதும் மழையே ஆகும்.

விசும்பின் துளிவீழின் அல்லால் மற்று ஆங்கே
பசும்புல் தலைகாண்பு அரிது. 16
வானம் மழை பெய்யாவிட்டால் பசும்புல்லும் கருகிப் போகும். எல்லாமே வாடிவிடும்.

நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்து எழிலி
தான்நல்காது ஆகி விடின். 17
மேகம் கடலிலிருந்து நீரைக் கொண்டு மழையாய் அதனிடத்துப் பெய்யாமல் போகுமானால், பெரிய கடலும் தன் வளம் குன்றிப் போகும்.

சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு. 18
மழை பெய்யாமல் பொய்க்குமானால் தெய்வங்களுக்குச் செய்யும் வழிபாடும் நிகழாது, திருவிழாவும் நிகழாது.

தானம் தவம்இரண்டும் தங்கா வியன்உலகம்
வானம் வழங்காது எனின். 19
மழை பெய்யவில்லையென்றால், பிறருக்குச் செய்கின்ற தானமும் தங்களுக்காகச் செய்யும் தவமும் இல்லாமல் போகும்.

நீர்இன்றி அமையாது உலகுஎனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு. 20
எந்த நிலையில் உள்ளவருக்கும் நீர் இல்லாமல் உலக வாழ்க்கை நடைபெறாது. வானம் பொய்த்தால் ஒழுக்கமும் நிலை பெறாமல் போகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு. 21
சிறந்த ஒழுக்கமுடையவராய் இருந்து பற்றுகளை விட்டவரின்
பெருமையைச் சிறந்த நூல்கள் உயர்த்திச் சொல்லும்.

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று. 22
இவ்வுலகில் இறந்தவர்களைக் கணக்கிட்டுச் சொல்லமுடியாது.
அது போலத்தான் துறந்தவர்களின் பெருமையையும் அளந்து கூறமுடியாது.

இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு. 23
பிறப்பு, பிறவாமை என்ற இரண்டு நிலைகளையும் ஆராய்ந்து
துறவு கொண்டவர்களின் பெருமையே உலகத்தில் உயர்வானது.

உரன்என்னும் தோட்டியான் ஓர்ஐந்தும் காப்பான்
வரன்என்னும் வைப்பிற்குஓர் வித்து. 24
வலிமை என்ற அங்குசத்தால் ஐம்பொறிகளாகிய யானையை
அடக்கி ஆள்பவன், வீடுபேற்றிற்கு விதையாகும் சிறப்பினை அடைவான்.

ஐந்து அவித்தான் ஆற்றல் அகல்விசும்பு உளார்கோமான்
இந்திரனே சாலும் கரி. 25
ஐந்து புலன்களின் ஆசையை அடக்கியவனுடைய ஆற்றலுக்கு
இந்திரனே தகுந்த சாட்சி ஆவான்.

செயற்குஅரிய செய்வார் பெரியார்; சிறியர்
செயற்குஅரிய செய்கலா தார். 26
மற்றவர்களால் செய்ய முடியாத உயர்ந்த செயல்களைச் செய்பவரே பெரியோர்.
அது போலச் செய்ய முடியாதவர் சிறியோர்.

சுவைஒளி ஊறுஓசை நாற்றம்என்று ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு. 27
சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்து வகைத் தன்மைகளையும்
ஆராய்ந்து அறிய வல்லவனின் ஆற்றலில் உலகம் அடங்கும்.

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும். 28
நிறைவான அறிவு உடையவர்களின் பெருமையை, அது உலகில் நிலைத்து நிற்கும்
வண்ணம், அவர்கள் மந்திரங்களாகச் சொல்லிய மணிமொழிகளே காட்டிவிடும்.

குணம்என்னும் குன்றுஏறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது. 29
குணம் என்ற மலை மேல் வாழும் துறவிகளின் கோபம் ஒரு கணமே என்றாலும், அவர்கள்
கோபத்திற்கு ஆளானவர்கள் அதிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள முடியாது.

அந்தணர் என்போர் அறவோர்மற்று எவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டு ஒழுக லான். 30
எல்லா உயிர்களிடத்திலும் உண்மையான அன்பு செலுத்தும் உயர்ந்தவர்களாய்
விளங்குவதால் அந்தணர்கள் அறத்தைக் காப்பவர்களாய் மதிக்கப்படுகிறார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தின்ஊஉ ங்கு**
**ஆக்கம் எவனோ உயிர்க்கு.** 31

அறம் சிறப்பையும் அளிக்கும், செல்வத்தையும் அளிக்கும். ஆதலால், உயிர்களுக்கு அறத்தைவிட நன்மை பயப்பது வேறென்ன இருக்கிறது?

**அறத்தின் ஊஉ ங்கு ஆக்கமும் இல்லை; அதனை**
**மறத்தலின் ஊங்குஇல்லை கேடு.** 32

ஒருவனது வாழ்க்கைக்கு அறத்தைவிட நன்மை பயப்பது வேறெதுவும் இல்லை. அறத்தைப் போற்றாமல் இருந்தால் அதைப் போலத் தீமை பயப்பதும் வேறில்லை.

**ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே**
**செல்லும்வாய் எல்லாம் செயல்** 33

செய்யக் கூடிய அளவு செய்யக் கூடிய முறையில் செல்லும் இடமெல்லாம் அறச்செயலைப் போற்றிச் செய்ய வேண்டும்.

**மனத்துக்கண் மாசுஇலன் ஆதல் அனைத்து அறன்**
**ஆகுல நீர பிற.** 34

ஒருவன் தன் மனத்தில் குற்றம் இல்லாமல் இருக்கவேண்டும். அதுவே அறம் மனத்தூய்மை இல்லாத மற்றச் செயல்கள் வெறும் ஆரவாரமே ஆகும்.

**அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்**
**இழுக்கா இயன்றது அறம்.** 35

பொறாமை, ஆசை, வெகுளி, பிறரைப் புண்படுத்தும் கடுஞ்சொற்கள் ஆகிய நான்கினையும் ஒதுக்கி வாழ்வதே அறம் ஆகும்.

**அன்று அறிவாம் என்னாது அறம்செய்க; மற்று அது**
**பொன்றுங்கால் பொன்றாத் துணை.** 36

நாம் இப்போது இளையவர்களாய் இருக்கிறோம். வயதான காலத்தில் அறம் செய்வோம் என எண்ணாமல் அறத்தைச் செய்யுங்கள். அது உடலிலிருந்து உயிர்போகும் போது துணையாய் இருக்கும்.

**அறத்துஆறு இதுஎன வேண்டா; சிவிகை**
**பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை.** 37

பல்லக்கைச் சுமந்து செல்பவன், அதன் மேல் அமர்ந்து செல்பவன் ஆகியோர் இடையே உள்ள ஏற்றத்தாழ்வை அறத்தின் பயன் இது என்று சொல்ல வேண்டியதில்லை.

**வீழ்நாள் படாஅமை நன்றுஆற்றின் அஃதுஒருவன்**
**வாழ்நாள் வழிஅடைக்கும் கல்.** 38

அறம் செய்யத் தவறிய நாள் என்று ஒன்று ஏற்படாமல் ஒருவன் அறம் செய்வானேயாயின், அச்செயலே மறுபடியும் பிறவி எடுக்கும் வழியை அடைக்கும் கல்லாய் அமையும்.

**அறத்தான் வருவதே இன்பம்; மற்று எல்லாம்**
**புறத்த புகழும் இல.** 39

அறத்தினால் வருவதே உண்மையான இன்பம், மற்றச் செயல்களால் வருகின்றவை இன்பம் போலத் தோன்றினாலும் துன்பத்தில் முடியும். அவற்றால் புகழும் அழியும்.

**செயற்பாலது ஓரும் அறனே; ஒருவற்கு**
**உயற்பாலது ஓரும் பழி.** 40

ஒருவர் செய்ய வேண்டியது அறமே;
ஒழிக்க வேண்டியது தீவினையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்ஆற்றின் நின்ற துணை. 41

தன் பெற்றோர், மனைவி, மக்கள் ஆகிய மூன்று தரப்பினருக்கும் நல்வழியே நின்று துணை புரிபவனே இல்லறத் தலைவன் ஆவான்.

துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை. 42

துறவிகள், ஏழைகள், யாரும் ஆதரவு இல்லாமல் தன்னிடம் வந்து இறந்தவர்கள் ஆகியோருக்கு இல்லறத்தில் வாழ்பவன் துணையாய் இருக்க வேண்டும்.

தென்புலத்தார், தெய்வம், விருந்துஒக்கல் தான்என்று ஆங்கு
ஐம்புலத்துஆறு ஓம்பல் தலை. 43

தன் குடிப்பிறந்த முன்னோர், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தான் என்ற ஐவகையாரையும் காக்க வேண்டியது இல்லறத்தானின் தலையாய கடமை.

பழிஅஞ்சிப் பாத்துஊண் உடைத்துஆயின் வாழ்க்கை
வழிஎஞ்சல் எஞ்ஞான்றும் இல். 44

பொருள் தேடும்போது அறவழியில் தேடி, செலவு செய்யும்போது பகுத்துக் கொடுத்து வாழும் அந்த வாழ்க்கை குறைபாடில்லாத சிறப்புடையதாய் விளங்கும்.

அன்பும் அறனும் உடைத்துஆயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. 45

இல்வாழ்க்கை அன்பும் அறனும் உடையதாய் விளங்குமானால் அந்த வாழ்க்கையின் பண்பும் பயனும் அதுவே ஆகும்.

அறத்துஆற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்துஆற்றில்
போஒய்ப் பெறுவது எவன். 46

ஒருவன் அறவழிப்படி இல்லற வாழ்க்கையை நடத்துவானானால் அவன் அதை விட்டு விட்டுத் துறவறம் மேற்கொண்டு பெறும் பயன் ஒன்றுமில்லை.

இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை. 47

அறத்தின் இயல்போடு இல்வாழ்க்கையில் நின்று வாழ்பவன், பிற வழிகளில் வாழ்கிறவர்களை விடவும் மேம்பட்டு விளங்குபவன் ஆவான்.

ஆற்றின் ஒழுக்கி, அறன்இழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து. 48

தவம் செய்வாரைத் தமது வழியில் வாழச்செய்து, தானும் தனக்குரிய அறவழியில் வாழுகின்ற வாழ்க்கை, தவம் செய்வாரைவிடச் சிறப்புடைய வாழ்க்கையாகும்.

அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை; அஃதும்
பிறன்பழிப்பது இல்லாயின் நன்று. 49

அறம் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது இல்வாழ்க்கையே ஆகும். துறவறமும் பிறர் பழிக்கும் குற்றத்திற்கிலக்காகாமல் விளங்கினால் நன்மை ஆகும்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும். 50

உலகில் வாழ வேண்டிய முறையில் இல்லறத்தில் வாழ்பவன் விண்ணுலகத்துத் தெய்வம் என மதிக்கப்படுவான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை. 51

குடும்பத்திற்கேற்ற பண்பு உள்ளவளாகி, கணவன் வருவாய் அறிந்து செலவு செய்பவளே நல்ல மனைவி என்ற சிறப்புக்கு உரியவள் ஆவாள்.

மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின், வாழ்க்கை
எனைமாட்சித்து ஆயினும் இல். 52

குடும்பத்திற்கு வேண்டிய நல்ல பண்புகள் மனைவியிடம் இல்லை என்றால், கணவன் எவ்வளவு பெருமை உடையவனாயினும் ஒரு பயனும் இல்லை.

இல்லதென் இல்லவள் மாண்பானால், உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை. 53

மனைவி மாண்புடையவள் என்றால் குடும்பத்தில் இல்லாததென எதுவுமில்லை. அவள் மாண்பு இல்லாதவளானால் குடும்பத்தில் உள்ளது என்று எதுவும் இல்லை.

பெண்ணின் பெருந்தக்க யாஉள, கற்புஎன்னும்
திண்மைஉண் டாகப் பெறின். 54

ஒரு பெண்ணிடம் கற்பு என்னும் உறுதியான நிலை இருக்குமானால், அந்தப் பெண்ணைவிட மேம்பட்டவர் என்று எவரும் இலர்.

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதுஎழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை. 55

பிற தெய்வங்களை வணங்காமல் காலையில் எழும் போதே கணவனை வணங்கி எழுகிறவள் பெய் என்று சொன்னால் மழை பெய்யும்.

தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்வுஇலாள் பெண். 56

கற்பு நெறியில் தன்னைக் காத்துக்கொண்டு, தன் கணவனையும் காப்பாற்றி, தன் புகழையும் காப்பாற்றி உறுதியோடு வாழ்பவளே பெண்.

சிறைகாக்கும் காப்புஎவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை. 57

பெண்களைக் காவல் வைத்துக் காப்பாற்றும் முறை என்ன பயனைத் தரும்? அவர்கள் நிறை என்ற பண்பால் தங்களைக் காப்பாற்றிக் கொள்வதே சிறந்ததாகும்.

பெற்றான் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு. 58

தன் கணவனைத் தெய்வமாய் மதித்து வாழ்பவள் தேவர்கள் வாழும் உலகத்திலும் போற்றப்படுவாள்.

புகழ்புரிந்த இல்இலோர்க்கு இல்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை. 59

தன் புகழை விரும்பிக் காப்பாற்றும் மனைவியைப் பெறாத கணவனால் தன்னை இகழ்ந்து பேசும் பகைவர் முன் சிங்கம் போல் பெருமிதமாய் நடக்க முடியாது.

மங்கலம் என்ப மனைமாட்சி; மற்றுஅதன்
நன்கலம் நன்மக்கள் பேறு. 60

குடும்பத்திற்கு மங்கலம் என்பது நல்ல மனைவியைப் பெறுவதே அதற்கு நல்ல அணிகலன்கள் என்பவை நல்ல மக்களைப் பெறுவதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறும்அவற்றுள் யாம்அறிவது இல்லை அறிவுஅறிந்த
மக்கள்பேறு அல்ல பிற. 61

ஒருவன் பெற வேண்டிய செல்வங்களுள், அறிய வேண்டியவற்றை
அறியக்கூடிய மக்களைப் பெறுவதே, மிக உயர்ந்த செல்வமாகும்.

எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கள் பெறின். 62

பழி இல்லாத பண்புடைய மக்களைப் பெறுகின்ற பெற்றோரை ஏழு
பிறவியிலும் துன்பங்கள் தொடரமாட்டாது.

தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
தம்தம் வினையான் வரும். 63

எல்லாரும் தம் பிள்ளைகளைத் தம் பொருள் என்று ஆசையோடு கூறுவார்கள்.
அவர்கள் நல்ல மக்கள் ஆவதும் தீய மக்கள் ஆவதும் வினைப் பயனால் உண்டாவதாகும்.

அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ். 64

குழந்தை தன் பிஞ்சுக் கைகளால் பிசைந்த சோறானது அதன்
பெற்றோருக்கு அமுதத்தைவிட மிக இனிமை தருவதாகும்.

மக்கள்மெய் தீண்டல் உடற்குஇன்பம்; மற்றுஅவர்
சொல்கேட்டல் இன்பம் செவிக்கு. 65

பெற்றோருக்குத் தம் குழந்தைகளின் உடலைத் தீண்டுவது அவர்கள் உடலுக்கு
இன்பம் தரும்; மழலைச் சொற்களைக் கேட்பது செவிக்கு இன்பம் தரும்.

குழல்இனிது, யாழ்இனிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர். 66

தம் மக்களின் மழலைச் சொற்களைக் கேட்டு உணராதவர்களே, குழல் இசை
இனியது, யாழிசை இனியது என்று கூறுவார்கள்.

தந்தை மகற்குஆற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல். 67

கற்றவர் கூடிய அவையில் எல்லோருக்கும் முன்னவனாக இருக்கத் தக்க வகையில் தம்
மகனைக் கல்வியில் மேம்பட்டவனாக்குவதே தந்தை தன் மகனுக்குச் செய்யும் உதவியாகும்.

தம்மின் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்உயிர்க்கு எல்லாம் இனிது. 68

தம்மைவிடத் தம் மக்கள் சிறந்த அறிவுடையவர்களாக விளங்குவது இவ்வுலகில்
வாழும் எல்லா உயிர்களுக்கும் இன்பத்தைத் தருவதாகும்.

ஈன்ற பொழுதின் பெரிதுஉவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய். 69

தன் மகன் ஆன்றோர் போற்றும் அறிவு உடையவன் என்பதைக் கேட்கும் தாய்,
அவனைப் பெற்றபோது அடைந்த மகிழ்ச்சியை விட அதிகம் மகிழ்ச்சி அடைவாள்.

மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல். 70

அறிவறிந்த மகன் செய்யும் கைம்மாறு என்னவென்றால், "இவனைப் பெறுவதற்கு இவன்
தந்தை என்ன தவம் செய்தானோ?" என்று அனைவரும் வியக்கும் நிலையை உருவாக்குவதேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. அன்புடைமை

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்? ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும். 71
பிறர் அறியாமல் அன்பினை அடைத்து வைக்கும் தாழ்ப்பாள் இல்லை.
அன்புடையவர்கள் சிந்தும் கண்ணீரே. அவர்கள் அன்பினைப் பிறருக்குத் தெரிவித்துவிடும்.

அன்புஇலார் எல்லாம் தமக்குஉரியர்; அன்புஉடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. 72
அன்பில்லாதவர்கள் எல்லா வகையிலும் தங்களுக்கு மட்டுமே உரியவர்கள்.
அன்புடையவர்கள் தங்கள் உடம்பாலும் (எலும்புகளாலும்) பிறருக்கு உரியவர்கள்.

அன்போடு இயைந்த வழக்குஎன்ப; ஆர்உயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு. 73
உயிருக்கும் உடலுக்கும் உள்ள தொடர்பு என்பது அன்போடு பொருந்தி
வாழும் வாழ்க்கையின் பயன் என்றே கூறுவார்கள்.

அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்புஎன்னும் நாடாச் சிறப்பு. 74
அன்பு மற்றவர்களிடம் விருப்பம் உடையவராய் வாழும் தன்மையை உண்டாக்கும்.
அது எல்லாரிடத்திலும் நட்பாய் இருத்தல் என்ற அளவற்ற சிறப்பைத் தரும்.

அன்பு உற்று அமர்ந்த வழக்குஎன்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு. 75
உலகத்தில் இன்பமாய் வாழ்பவர்களின் உயர்வுக்குக் காரணமாய் விளங்குவது
அனைவரிடமும் அன்பு செய்து வாழும் வாழ்க்கையே ஆகும்.

அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்;
மறத்திற்கும் அஃதே துணை. 76
அன்பு அறத்திற்கு மட்டுந்தான் துணை ஆகும்; என்று அறியாதவர்கள்
சொல்லுவார்கள். ஆராய்ந்து பார்த்தால் வீரத்திற்கும் அன்பே துணை ஆகிறது.

என்பு இலதனை வெயில்போலக் காயுமே
அன்பு இலதனை அறம். 77
எலும்பு இல்லாத உயிர்களை வெயில் துன்புறுத்துவது போல, அன்பு
இல்லாதவர்களை அறக்கடவுள் துன்புறுத்துவார்.

அன்புஅகத்து இல்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரம்தளிர்த்து அற்று. 78
உள்ளத்தில் அன்பில்லாத வாழ்க்கை வாழ்பவன், பாலைவனத்தில் பட்ட
மரம் தளிர்த்தது போன்ற நிலைக்குத்தான் ஒப்பாவான்.

புறத்துஉறுப்பு எல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துஉறுப்பு அன்பு இலவர்க்கு. 79
உடம்பின் அகத்து உறுப்பாகிய அன்பு என்பது இல்லாதவருக்கு,
உடம்பின் வெளியில் உள்ள உறுப்புகளால் ஒரு பயனும் ஏற்படாது.

அன்பின் வழியது உயிர்நிலை; அஃதுஇலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு. 80
அன்பு உடையவர்களே உயிர் உள்ளவர்கள். அன்பில்லாதவர்கள், எலும்பைத்
தோலால் போர்த்திய வெறும் உடம்பைப் பெற்றவர்களே ஆவார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்துஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்துஓம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு. 81
இல்லறத்தில் இருந்து மனைவியோடு வாழ்வதென்பது
விருந்தினரை உபசரிப்பதற்கே ஆகும்.

விருந்து புறத்ததாத் தான்உண்டல் சாவா
மருந்துஎனினும் வேண்டற்பாற்று அன்று. 82
அமுதமாய் இருந்தாலும், விருந்தினரை வெளியில் இருக்கும்படி
செய்து, தான் மட்டும் தனித்து உண்பது என்பது விரும்பத் தகாததாகும்.

வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று. 83
தன்னை நாடி வரும் விருந்தினரை நாள்தோறும் போற்றுகின்றவனுடைய
வாழ்க்கை ஒருபோதும் துன்பத்தால் வருந்திக் கெட்டுப் போவதில்லை.

அகன்அமர்ந்து செய்யாள் உறையும் முகன்அமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல். 84
முகம் மலர்ந்து விருந்தினரை வரவேற்பவன் இல்லத்தில்
திருமகள் மனமகிழ்ச்சியோடு தங்கியிருப்பாள்.

வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்துஓம்பி
மிச்சில் மிசைவான் புலம். 85
விருந்தினரை முதலில் போற்றி உணவளித்துப் பின் மிஞ்சும் உணவை உண்டு
வாழ்கின்றவர் நிலத்தில் விதையும் விதைக்க வேண்டுமா? தானே விளையும்.

செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்துஇருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு. 86
வந்த விருந்தினர் உணவு உண்டு செல்ல, வரும் விருந்தினரை எதிர்பார்த்திருப்பவன்
தேவர்களுக்கு நல்ல விருந்தினன் ஆவான்.

இனைத்துணைத்து என்பதுஒன்று இல்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன். 87
விருந்தோம்பலான வேள்வியின் பயன், இவ்வளவு என்று அளவிட்டுக் கூறமுடியாது.
எந்த அளவிற்கு அவன் விருந்தினரைப் போற்றுகிறானோ அந்த அளவுக்கு அது பயன் தரும்.

பரிந்துஓம்பிப் பற்றுஅற்றேம் என்பர்; விருந்துஓம்பி
வேள்வி தலைப்படா தார். 88
விருந்து என்ற வேள்வியை மேற்கொள்ளாதவர்கள், ஒரு காலத்தில் செல்வர்களாய்
இருந்து அதனை இழக்கும் போது, வாழ்ந்த காலத்தில் செய்ய வேண்டிய கடமையைச்
செய்யவில்லை என்று வருந்துவார்கள்.

உடைமையுள் இன்மை விருந்துஓம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு. 89
செல்வம் உள்ள காலத்தில் வறுமை எதுவென்றால் விருந்தினரைப் போற்றாமல்
வாழ்வதுதான். இது அறிய வேண்டியவற்றை அறியாத பேதையரிடந்தான் உண்டாகும்.

மோப்பக் குழையும் அனிச்சம்; முகம்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து 90
அனிச்சப்பூ முகர்ந்தவுடன் வாடிவிடும். அதுபோல, முகம் மலராமல் வேறுபட்டு
நோக்கினால் விருந்தினர் வாடி ஒதுங்குவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல். 91
அறநெறியை அறிந்து செந்நெறிக்கண் வாழ்பவர்கள் வாயிலிருந்து வரும் சொற்கள் வஞ்சனை இல்லாத இனிமை உடைய சொற்களாகவே இருக்கும்.

அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகன்அமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின். 92
உள்ளம் விரும்பி ஒருவருக்குப் பொருள் தந்து உதவுவதைவிட, முகம் மலர்ந்து இனிய சொற்களைப் பேசுவது மிகவும் உயர்ந்தது.

முகத்தான் அமர்ந்துஇனிது நோக்கி அகத்தானாம்
இன்சொ லினதே அறம். 93
முகம் மலர்ந்து இனிமையாகப் பார்த்து மனம் விரும்பி இனிய சொற்களைப் பேசுவது அறம் ஆகும்.

துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொ லவர்க்கு. 94
எல்லாரிடத்திலும் மகிழ்ச்சியை உண்டாக்கக் கூடிய இனிய சொற்களையே பேசுபவர்களுக்கு வறுமை என்னும் துன்பம் ஒரு போதும் வர மாட்டாது.

பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணிஅல்ல மற்றுப் பிற. 95
பணிவுள்ளவனாகவும் இன்சொல்லைப் பேசுபவனாகவும் விளங்குவதே ஒருவனுக்கு உண்மையான அணிகலன்கள். மற்ற அணிகலன் எதுவும் அணிகலன் ஆகமாட்டாது.

அல்லவை தேய அறம்பெருகும்; நல்லவை
நாடி இனிய சொலின். 96
ஒருவன் நன்மைகளையே விரும்பி இனிய சொற்களையே பேசினால் பாவங்கள் தேய்ந்து அறம் வளரும்.

நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல். 97
பிறருக்கு நன்மையைத் தரும் இனிய சொற்கள் பேசுபவனுக்கும் நல்ல இன்பத்தைத் தந்து, நன்மை உண்டாக்கும்.

சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பம் தரும். 98
பிறருக்குத் துன்பத்தை உண்டாக்காத இனிய சொற்கள் இம்மைக்கும் மறுமைக்கும் இன்பம் தரும்.

இன்சொல் இனிதுஈன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது. 99
பிறர் கூறும் இனிய சொற்கள் தனக்கு இன்பம் உண்டாக்குவதை உணர்கிறவன், மற்றவர்களிடம் வன்சொற்களைப் பேசுவது என்ன பயன் கருதியோ?

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந்து அற்று. 100
இனிய சொற்கள் இருக்கும் போது, அவற்றை நீக்கி, கடுஞ்சொற்களைச் சொல்லுவதென்பது, கனிகள் இருக்கும் போது காய்களைப் பறித்துத் தின்பதைப் போன்றதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது. 101

நாம் ஒருவருக்கு ஓர் உதவியும் செய்யாதிருக்கும் போது அவர் கைம்மாறு கருதாது செய்யும் உதவிக்கு விண்ணுலகத்தையும் மண்ணுலகத்தையும் கொடுத்தாலும் போதாது.

காலத்தி னால்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது. 102

தேவைப்படும் காலத்தில் ஒருவன் செய்த உதவி அளவால் சிறியதாய் இருந்தாலும் அதன் தன்மையை நினைத்துப் பார்த்தால் அது உலகத்தை விட மிகப் பெரியதாகும்.

பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது. 103

என்ன பயன் கிடைக்கும் என ஆராயாமல் ஒருவன் செய்த உதவியை எண்ணிப் பார்த்தால் அதன் தன்மை கடலை விடப் பெரியதாகும்.

தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாகக்
கொள்வர் பயன்தெரி வார். 104

ஒருவன் தினை அளவாகிய மிகச் சிறிய உதவி செய்தாலும் அதன் பயனை எண்ணிப் பார்க்கிறவர்கள் அதனையே பனை அளவாகக் கொண்டு போற்றுவார்கள்.

உதவி வரைத்துஅன்று உதவி, உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து. 105

நன்றியறிதலோடு கைம்மாறாகச் செய்யும் உதவி முன் செய்யப்பட்ட உதவியின் அளவைப் பொறுத்தது ஆகாது. உதவியைப் பெற்றவரின் தகுதிக்கேற்ற அளவாய் அமையும்.

மறவற்க மாசுஅற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்புஆயார் நட்பு. 106

துன்பம் தோன்றும் போது துணையாய் இருந்தவர் நட்பினை எப்போதும் போற்ற வேண்டும். மனத்தில் மாசு அற்றவர்கள் நட்பினை ஒருபோதும் மறவாது இருக்க வேண்டும்.

எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தம்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு. 107

தமக்குத் துன்பம் நேர்ந்த போது அதைப் போக்க உதவியவரின் நட்பைப் பெரியோர், எத்தனை பிறவி எடுத்தாலும் மறக்காமல் இருப்பார்கள்.

நன்றி மறப்பது நன்றுஅன்று; நன்று அல்லது
அன்றே மறப்பது நன்று. 108

ஒருவர் செய்த உதவியை மறப்பது அறம் ஆகாது;
தீமையை உடனே மறப்பது அறம் ஆகும்.

கொன்றுஅன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன்று உள்ளக் கெடும். 109

முன்னர் உதவி செய்தவர் பின்னர் கொல்வதைப் போன்ற துன்பத்தைச் செய்தாராயினும், அவர் முன் செய்த ஒரு நன்மையை நினைத்தாலும் அத்துன்பம் கெடும்.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வுஇல்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. 110

எந்த அறத்தை அழித்தவருக்கும் தப்பிப் பிழைக்க வழி உண்டு. ஆனால் ஒருவர் செய்த உதவியை மறந்தவனுக்கு மன்னிப்பே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகுதி எனஒன்று நன்றே பகுதியான்
பால்பட்டு ஒழுகப் பெறின். 111

அயலார், பகைவர், நண்பர் என எத்தரப்பினராய் இருந்தாலும் நடுநிலையோடு ஒருவன் நடந்தால் அதுவே பெரும் அறமாய் மதிக்கப்படும்.

செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவுஇன்றி
எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து. 112

நடுநிலையோடு வாழ்பவனின் செல்வம் அவனுக்கு மட்டுமன்றி அவன் பரம்பரைக்கும் பாதுகாப்பாய் இருக்கும்.

நன்றே தரினும் நடுவுஇகந்துஆம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல். 113

நன்மையையே தந்தாலும் நடுநிலை தவறுவதால் வருகின்ற செல்வத்தை அப்போதே வெறுத்து ஒதுக்க வேண்டும்.

தக்கார் தகவுஇலர் என்பது அவர்அவர்
எச்சத்தால் காணப் படும். 114

ஒருவன் நடுநிலைமை உடையவனா, நடுநிலைமை இல்லாதவனா என்பதை அவனுக்குப் பின் கிடைக்கும் புகழாலும் பழியாலும் அறிந்து கொள்ளலாம்.

கேடும் பெருக்கமும் இல்அல்ல; நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க்கு அணி. 115

நன்மையும் தீமையும் வாழ்வில் இல்லாதவை அல்ல. ஆகவே, உள்ளத்தில் நடுநிலைமை தவறாமல் இருப்பதே அறிவுடையோர்க்கு அழகாகும்.

கெடுவல்யான் என்பது அறிகதன் நெஞ்சம்
நடுஒரீஇ அல்ல செயின். 116

ஒருவன் மனம் நடுநிலையிலிருந்து நீங்கித் தவறு செய்ய எண்ணும்போது, "நான் கெடப் போகிறேன்" என்பதை அவன் நன்கு அறிந்து கொள்ள வேண்டும்.

கெடுவாக வையாது உலகம்; நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு. 117

நடுநிலைமையோடு வாழ்பவன் வறுமைப்பட்டால், பெரியோர், அதனை வறுமையாகக் கருதாமல், பெருமையாகவே கருதுவார்கள்.

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்துஒருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி. 118

முன் சமமாய் இருந்து பின்னர் பொருளைச் சரியாய் எடை காட்டும் தராசு போல் இருந்து, எப்பக்கமும் சாயாமல் நடுநிலையோடு வாழ்வது சான்றோர்க்கு அழகாகும்.

சொல்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உள்கோட்டம் இன்மை பெறின். 119

உள்ளத்தில் நெறி தவறாத எண்ணத்தை உறுதியாய்க் கொள்வதோடு, சொல்லிலும் வளைவு நேராமல் இருப்பதே நடுநிலை ஆகும்.

வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோல் செயின். 120

பிறர் பொருளையும் தம் பொருளாய் எண்ணி நடுநிலை வழுவாது நின்று வாணிபம் செய்வதுதான் வணிகருக்குச் சிறந்த நிலை ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அடக்கம் அமரருள் உய்க்கும்; அடங்காமை**
**ஆர்இருள் உய்த்து விடும்.** 121
அடக்கம், சிறப்புத் தந்து, தேவர் உலகில் சேர்க்கும். அடங்காமை
கொடிய இருளான துன்பத்தில் தள்ளி விடும்.

**காக்க பொருளா அடக்கத்தை; ஆக்கம்**
**அதனின் ஊஉங்கு இல்லை உயிர்க்கு.** 122
அடக்கத்தை மிக உயர்ந்த பொருளாகக் கருதிக் காக்க வேண்டும். அந்த
அடக்கத்தை விட உயிருக்கு மேன்மை தரக்கூடியது வேறொன்றும் இல்லை.

**செறிவுஅறிந்து சீர்மை பயக்கும் அறிவுஅறிந்து**
**ஆற்றின் அடங்கப் பெறின்.** 123
அடக்கத்தோடு வாழ்வதுதான் அறிவுடையார் தன்மை என்று தெரிந்து ஒருவன்
வாழ்ந்தால், அந்த உயர்ந்த தன்மை பெரியவர்களால் அறியப்பட்டுப் போற்றப்படும்.

**நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்**
**மலையினும் மாணப் பெரிது.** 124
வாழ்க்கைக்கு வகுத்த நெறியில் சிறிதும் மாறுபடாமல் வாழ்பவனுடைய உயர்ச்சி,
மலையின் உயர்ச்சியைவிட மாபெரும் உயர்ச்சியாகும்.

**எல்லார்க்கும் நன்றுஆம் பணிதல்; அவர்உள்ளும்**
**செல்வர்க்கே செல்வம் தகைத்து.** 125
பணிவோடு வாழ்வது எல்லாருக்கும் பெருமையைத் தரும். ஆயினும், செல்வர்
பணிவோடு வாழ்ந்தால் அது அவர்களுக்கு மற்றொரு பெரும் செல்வமாய் அமையும்.

**ஒருமையுள் ஆமைபோல் ஐந்துஅடக்கல் ஆற்றின்**
**எழுமையும் ஏமாப்பு உடைத்து.** 126
ஒரு பிறப்பில் ஆமையைப் போல ஐந்து பொறிகளையும் அடக்கி வாழ்ந்தால்
அது அவனுக்கு ஏழு பிறவிக்கும் சிறந்த பாதுகாப்பாய் அமையும்.

**யாகாவார் ஆயினும் நாகாக்க; காவாக்கால்**
**சோகாப்பர் சொல்இழுக்குப் பட்டு.** 127
காக்க வேண்டிய அனைத்தையும் காக்கா விட்டாலும் நாவை இன்றியமையாது
காக்க வேண்டும். இல்லையென்றால் சொற்குற்றத்தில் சிக்கித் துன்பப்பட நேரிடும்.

**ஒன்றானும் தீச்சொல் பொருள்பயன் உண்டாயின்**
**நன்றாகாது ஆகி விடும்.** 128
ஒரு தீய சொல்லினால் உண்டாகும் தீமையால் அவன் முன் செய்த அறச் செயல்களால்
ஏற்பட்ட பலன்கள் அனைத்தும் பயன் இல்லாமல் போகும்.

**தீயினால் சுட்டபுண் உள்ஆறும்; ஆறாதே**
**நாவினால் சுட்ட வடு.** 129
தீயால் ஏற்பட்ட புண் தழும்பு இருந்தாலும் உள்ளத்தில் ஆறிவிடும். ஆனால் நாவினால்
கூறப்படும் கொடுஞ் சொற்கள் ஒருபோதும் ஆறாமல் உள்ளத்தில் வடுவாய் நிலைத்துவிடும்.

**கதம்காத்துக் கற்றுஅடங்கல் ஆற்றுவான் செவ்வி**
**அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து.** 130
சினத்தை அடக்கி, கற்க வேண்டியவற்றைக் கற்று அடக்கமுடன் வாழ்கின்றவனை
அடைவதற்கு வழிகளை அறக் கடவுளே தேடி நிற்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14. ஒழுக்கமுடைமை

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். 131

ஒழுக்கம் உள்ளவர்களுக்கு அது உயர்வைத் தருவதால் அதனை உயிரை விட மேலாய்க் கருத வேண்டும்.

பரிந்துஓம்பிக் காக்க ஒழுக்கம்; தெரிந்துஓம்பித்
தேரினும் அஃதே துணை. 132

பலவற்றையும் ஆராய்ந்து பார்த்தாலும் ஒழுக்கமே வாழ்க்கைக்கு உயர்ந்ததாய் இருப்பதால் எத்தனை துன்பம் வந்தாலும் அதனை அழிவில்லாமல் காக்க வேண்டும்.

ஒழுக்கம் உடைமை குடிமை; இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும். 133

ஒழுக்கம் உள்ளவன் என்பதே அவன் உயர்ந்த குடியில் பிறந்தவன் என்பதைக் காட்டும். ஒழுக்கம் இல்லாதவன் இழிந்த குடியைச் சேர்ந்தவன் ஆவான்.

மறப்பினும் ஒத்துக் கொளலஆகும்; பார்ப்பான்
பிறப்புஒழுக்கம் குன்றக் கெடும். 134

வேதியன் தான் கற்ற வேதத்தை மறந்தால்கூடத் திரும்ப அதனைப் படித்து உணரலாம். ஆனால், பிறப்பிற்குரிய ஒழுக்கத்திலிருந்து தவறி விடுவானானால் இழி குலத்தவன் என்றே எண்ணப்படுவான்.

அழுக்காறு உடையான்கண் ஆக்கம்போன்று இல்லை
ஒழுக்கம் இலான்கண் உயர்வு. 135

பொறாமை கொண்டவனிடம் செல்வம் தங்க மாட்டாது. அது போல, ஒழுக்கம் இல்லாதவனிடம் உயர்வு நிலைக்காது.

ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர்; இழுக்கத்தின்
ஏதம் படுபாக்கு அறிந்து. 136

ஒழுக்கம் தவறுவதால் பல குற்றங்கள் ஏற்படுவதை அறிந்து, மன வலிமை உடையவர்கள் என்றுமே ஒழுக்கத்திலிருந்து மாறவே மாட்டார்கள்.

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை; இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி. 137

எல்லாரும் ஒழுக்கத்தினால் மேன்மையை அடைவார்கள். ஒழுக்கத்திலிருந்து தவறினால் அடையத் தகாத பெரும் பழியை அடைவார்கள்.

நன்றிக்கு வித்துஆகும் நல்ஒழுக்கம்; தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும். 138

நல்லொழுக்கம் இன்பமான வாழ்க்கைக்கு விதை போடுவது போன்றதாகும். தீய ஒழுக்கம் என்றைக்கும் துயரத்தையே தரும்.

ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயால் சொலல். 139

ஒழுக்கத்தைப் போற்றி வாழ்பவர்கள் மறந்துங்கூடத் தீய சொற்களை ஒருபோதும் சொல்ல மாட்டார்கள்.

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவுஇலா தார். 140

உலக மக்களோடு பொருந்தி வாழும் முறையைக் கல்லாதவர்கள் பல சிறந்த நூல்களைக் கற்றிருந்தாலும் அறிவில்லாதவரேயாவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15. பிறன்இல் விழையாமை

பிறன்பொருளாள் பெட்டுஒழுகும் பேதைமை ஞாலத்து
அறம்பொருள் கண்டார்கண் இல். 141
பிறனுக்கு உரிய மனைவியை விரும்புகின்ற அறியாமை, அறத்தின்
பொருளை உணர்ந்தவர்களிடம் ஒருபோதும் இராது.

அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை
நின்றாரின் பேதையார் இல். 142
பிறன் மனைவியை விரும்பி, அவள் வாயிற்படியில் நிற்பவன், பிற பாவங்களைச்
செய்கின்ற அனைவரையும் விட மிகக் கொடிய பாவி ஆவான்.

விளிந்தாரின் வேறுஅல்லர் மன்ற தெளிந்தார்இல்
தீமை புரிந்துஒழுகு வார். 143
தன்னை நம்புகிறவன் மனைவியை விரும்பித் தவறு செய்து வாழ்பவன்
உயிரோடு இருந்தாலும் இறந்தவனே ஆவான்.

எனைத்துணையர் ஆயினும் என்ஆம் தினைத்துணையும்
தேரான் பிறன்இல் புகல். 144
தீமை செய்கிறோம் என்பதைச் சிறிதும் சிந்திக்காமல், மற்றவர் மனை விரும்பிச்
செல்பவன் எவ்வளவு பெருமை உடையவனாய் இருந்தாலும் ஒரு பயனும் இல்லை.

எளிதுஎன இல்இறப்பான் எய்தும்எஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி. 145
எளிதானதாய் எண்ணிப் பிறன் மனைவியிடம் தவறாகச் செல்பவன் எப்போதும்
தீராத பழியை அடைவான்.

பகைபாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவாம் இல்இறப்பான் கண். 146
பிறன் மனைவியை விரும்பி வஞ்சகமாய் வாழ்பவனிடம் பகை, பாவம், அச்சம், பழி
என்ற நான்கு குற்றங்களும் என்றும் நீங்காதிருக்கும்.

அறன்இயலான் இல்வாழ்வான் என்பான் பிறன்இயலாள்
பெண்மை நயவா தவன். 147
பிறன் மனைவியை விரும்பித் தவறு செய்யாதவனே அறநெறி தவறாமல் இல்லறம்
புரிபவன் ஆவான்.

பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறன்ஒன்றோ ஆன்ற ஒழுக்கு. 148
பிறன் மனைவியை மனத்தாலும் நினைக்காமல் இருப்பதே பெருமைக்கு
உரிய ஆண்மை ஆகும். அது சான்றோருக்கு அறமும் ஒழுக்கமும் ஆகும்.

நலக்குஉரியார் யார்எனின் நாமநீர் வைப்பில்
பிறர்க்குஉரியாள் தோள்தோயா தார். 149
கடல் சூழ்ந்த இந்த உலகத்தில் பிறன் மனைவியின் தோளைத் தழுவாதவரே
நன்மைக்குரியவர் ஆவார்.

அறன்வரையான் அல்ல செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று. 150
ஒருவன் அறம் நீங்கிய செயல்களைச் செய்தாலும் பிறன் மனைவியை
விரும்பும் குற்றத்தைச் செய்யாமல் இருப்பதே அவனுக்கு நன்மை ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை. 151
தன்னைத் தோண்டுபவர்களைக்கூடக் காப்பாற்றித் தாங்குகிற நிலத்தைப் போலத் தம்மை இகழ்ந்து பேசுவாரைப் பொறுத்துக் கொள்வதே மிகச் சிறந்த பண்பாகும்.

பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று. 152
எல்லையைத் தாண்டிப் பிறர் செய்யும் தீமையைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். அத்தீங்கை மறந்து விடுவது பொறுத்துக் கொள்வதை விட உயர்ந்ததாகும்.

இன்மையுள் இன்மை விருந்துஒரால்; வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை. 153
ஒருவனுக்கு வறுமையினுள் எல்லாம் பெரிய வறுமை விருந்தினரை உபசரிக்க முடியாமல் போவதே. வல்லமையில் எல்லாம் சிறந்த வல்லமை அறிவிலாதவர் செய்யும் தீங்குகளைப் பொறுத்துக் கொள்வதேயாகும்.

நிறைஉடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை
போற்றி ஒழுகப் படும். 154
மன உறுதி நீங்காமல் இருக்க வேண்டுமானால் பொறுமையைப் போற்றி நடக்க வேண்டும்.

ஒறுத்தாரை ஒன்றாக வையாரே; வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து. 155
தமக்குத் தீமை செய்தவரைத் தண்டிப்போரை உலகம் மதிக்காது; தீமையைப் பொறுத்தவரைப் பொன் போல எண்ணிப் போற்றும்.

ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ். 156
தீங்கு செய்தவரைத் தண்டிப்பவருக்கு அன்று ஒருநாள் மட்டுந்தான் இன்பம். தண்டிக்காமல் பொறுத்துக் கொண்டவருக்கு உலகம் உள்ள அளவும் புகழ் நிலைக்கும்.

திறன்அல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறன்அல்ல செய்யாமை நன்று. 157
தகுதியற்ற செயல்களைத் தனக்குப் பிறர் செய்தாலும் அந்தத் துன்பத்திற்காக வருந்திப் பிறருக்கு அறம் அல்லாத செயல்களைச் செய்யாமல் இருக்க வேண்டும்.

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியால் வென்று விடல். 158
செருக்கு மிகுதியால் பெரும் தீங்கு செய்தவருக்குக்கூட நாம் நம் பொறுமைக் குணத்தால் பொறுப்பதன் மூலம் அவர்களை வென்றுவிட வேண்டும்.

துறந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய்
இன்னாச்சொல் நோற்கிற் பவர். 159
எல்லை மீறிப் பிறர் பேசும் தீய சொற்களைப் பொறுத்துக் கொள்பவர் துறவிகளினும் மேம்பட்ட தூய்மையானவர்.

உண்ணாது நோற்பார் பெரியர்; பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரின் பின். 160
பிறர் சொல்லும் கொடிய சொற்களைப் பொறுத்துக் கொள்பவர், உணவுண்ணாமல் நோன்பிருப்பவரைவிட உயர்ந்தவர் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17. அழுக்காறாமை

ஒழுக்காறாக் கொள்க; ஒருவன்தன் நெஞ்சத்து
அழுக்காறு இலாத இயல்பு. 161
ஒருவன் தன் நெஞ்சில் பொறாமை இல்லாமல் இருப்பதைத் தனக்கு
உள்ள ஒழுக்க நெறியாகக் கொள்ள வேண்டும்.

விழுப்பேற்றின் அஃதுஒப்பது இல்லையார் மாட்டும்
அழுக்காற்றின் அன்மை பெறின். 162
ஒருவரிடத்திலும் பொறாமை கொள்ளாமல் இருப்பதே
ஒப்புயர்வற்ற பெரும் சிறப்பாகும்.

அறன்ஆக்கம் வேண்டாதான் என்பான் பிறன்ஆக்கம்
பேணாது அழுக்கறுப் பான். 163
பிறருக்கு ஏற்படும் பெருமையைக் கண்டு மகிழ்ச்சி அடையாமல் பொறாமை
கொள்பவன் தனக்கு அறத்தையும் உயர்வையும் விரும்பாதவனாவான்.

அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்
ஏதம் படுபாக்கு அறிந்து. 164
பொறாமை என்னும் தீய குணத்தினால் துன்பம் ஏற்படுவதை அறிந்தவர்கள்
பொறாமை கொண்டு பொல்லாத செயல்களைச் செய்ய மாட்டார்கள்.

அழுக்காறு உடையார்க்கு அதுசாலும்; ஒன்னார்
வழுக்கியும் கேடு ஈன் பது. 165
பகைவர் தீங்கு செய்யத் தவறினாலும் பொறாமை தீங்கு செய்யத் தவறாது.
எனவே பொறாமை உடையவருக்கு வேறு பகை வேண்டா. அதுவே போதும்.

கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும். 166
ஒருவர் மற்றொருவருக்கு உதவியாகக் கொடுப்பதைப் பார்த்துப் பொறாமைப்பட்டுத்
தடுப்பவனின் உறவினருங்கூட, உடையும் உணவும் இன்றிக் கெட்டழிவார்கள்.

அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும். 167
பொறாமை உடையவனைக் காணும் திருமகள் அவனைத் தன்
தமக்கையான மூதேவிக்குக் காட்டி விட்டுத் தான் அகன்று விடுவாள்.

அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும். 168
பொறாமை என்று சொல்லப்படுகின்ற ஒரு பாவி ஒருவனது செல்வத்தை
அழிப்பதோடு தீய வழியிலும் செலுத்திவிடும்.

அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும். 169
பொறாமை கொள்பவனுடைய செல்வமும் பொறாமை
இல்லாதவனுடைய வறுமையும் ஆராய வேண்டியவை.

அழுக்கற்று அகன்றாரும் இல்லை; அஃது இல்லார்
பெருக்கத்தின் தீர்ந்தாரும் இல். 170
உலகத்தில் பொறாமைப்பட்டவன் பெருமை அடைந்ததும் இல்லை.
பொறாமைப்படாதவன் சிறுமை அடைந்ததும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவுஇன்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும். 171
ஒருவன் நடுநிலை இல்லாமல் பிறரது பொருளை அடைய நினைத்தால்
அவன் குடும்பம் கெடும். அழிவு தரும் பல குற்றங்களும் வந்து சேரும்.

படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவுஅன்மை நாணு பவர். 172
நடுநிலைமை இல்லாத செயல்களைக் கண்டு வெட்கப்படுகிறவர்கள், பிறர்
பொருளை விரும்பிப் பழிச் செயல்களைச் செய்ய மாட்டார்கள்.

சிற்றின்பம் வெஃகி அறன்அல்ல செய்யாரே
மற்றுஇன்பம் வேண்டு பவர். 173
அறநெறியில் அடையும் இன்பத்தை விரும்புகிறவர்கள், சிறுமையான
இன்பத்தை விரும்பி அறம் அல்லாத செயல்களைச் செய்ய மாட்டார்கள்.

இலம்என்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மைஇல் காட்சி யவர். 174
புலன்களை அடக்கும் ஆற்றலை உடையவர்கள் தம் வறுமையை
எண்ணி ஒருபோதும் பிறர் பொருளை விரும்ப மாட்டார்கள்.

அஃகி அகன்ற அறிவுஎன்னாம் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்? 175
பிறர் பொருளை அடைய எண்ணி, அறிவுக்கு ஒவ்வாத செயல்களைச் செய்பவர்கள்
எவ்வளவு நுட்பமான விரிவான அறிவைப் பெற்றிருந்தாலும் ஒரு பயனும் இல்லை.

அருள்வெஃகி ஆற்றின்கண் நின்றான் பொருள்வெஃகிப்
பொல்லாத சூழக் கெடும். 176
அருளை விரும்பி நல்ல வழியில் நின்றவன், பிறர் பொருள் விரும்பித்
தீய செயல்களைச் செய்தால் அழிந்து போய்விடுவான்.

வேண்டற்க வெஃகிஆம் ஆக்கம்; விளைவயின்
மாண்டற்கு அரிதாம் பயன். 177
பிறர் பொருளை அடைவதால் உண்டாகும் ஆக்கத்தை விரும்பக் கூடாது.
அது ஒரு போதும் நல்ல பயனைத் தர மாட்டாது.

அஃகாமை செல்வத்திற்கு யாதுஎனின் வெ ஃ காமை
வேண்டும் பிறன்கைப் பொருள். 178
தன் செல்வம் குறையாதிருக்க வேண்டும் என்று ஒருவன் விரும்பினால்,
அவன் பிறர் பொருளை விரும்பாமலிருக்க வேண்டும்.

அறன்அறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்
திறன்அறிந்து ஆங்கே திரு. 179
பிறர் பொருளை விரும்பாதிருப்பதுதான் அறம் என்று அறிந்தவர்களைத்
திருமகள் தானே தேடி வந்து சேர்வாள்.

இறல்ஈனும் எண்ணாது வெஃகின் விறல்ஈனும்
வேண்டாமை என்னும் செருக்கு. 180
பிறர் பொருளை விரும்பினால் அது அழிவையே தரும்.
விரும்பாமல் வாழ்ந்தால் அது வெற்றியைத் தரும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறம்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறம்கூறான் என்றல் இனிது. 181

ஒருவன் அறநெறிகளைப் போற்றி வாழாதவனாகவும், அறச் செயல்களைச் செய்து வாழாதவனாகவும் இருந்தாலும் புறங்கூறாதவன் என்று சொல்லும்படி வாழ்வதுதான் உயர்ந்தது.

அறன்அழீஇ அல்லவை செய்தலின் தீதே
புறன்அழீஇப் பொய்த்து நகை. 182

ஒருவன் இல்லாத போது பழித்துப் பேசி, இருக்கும் போது பொய்யாக முகம் மலர்ந்து பேசுவதென்பது அறத்தைப் பழித்துப் பேசுவதை விடக் கொடுமை ஆகும்.

புறம்கூறிப் பொய்த்துஉயிர் வாழ்தலின் சாதல்
அறம்கூறும் ஆக்கம் தரும். 183

ஒருவன் இல்லாத போது அவனைப் பற்றிப் பழித்துக் கூறிப் பொய்யாக வாழ்வதை விட அவ்வாறில்லாமல் வறுமையால் வாடி இறப்பதே அறமாகும்.

கண்நின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க
முன்நின்று பின்நோக்காச் சொல். 184

ஒருவனுக்கு முன்னால் நின்று இரக்கமற்ற சொற்களைச் சொன்னாலும் சொல்லலாம். அவன் இல்லாத போது பின் விளைவைக் கருதாமல் பேசக் கூடாது.

அறம்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறம்சொல்லும்
புன்மையால் காணப் படும். 185

ஒருவன் உண்மையில் அற நெஞ்சம் உடையவன் அல்லன் என்பதை அவன் புறங்கூறும் இழிவான செயலால் நன்கு அறிந்து கொள்ள முடியும்.

பிறன்பழி கூறுவான் தன்பழி உள்ளும்
திறன்தெரிந்து கூறப் படும். 186

ஒருவன் மற்றவர்களைப் பற்றிப் புறங்கூறினால், அவன் பழிகளை நன்கு ஆராய்ந்து, அவற்றுள் கடுமையான பழியை மற்றவர் கூறுவர்.

பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாடல் தேற்றா தவர். 187

மகிழ்ச்சியாகப் பேசி நட்புக்கொள்ளும் தன்மையை அறியாதவர், புறம் பேசி நண்பர்களைப் பிரித்துவிடுவார்கள்.

துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்
என்னைகொல் ஏதுஇலார் மாட்டு? 188

நெருங்கிப் பழகியவரின் குற்றத்தையே புறம் கூறித் தூற்றும் தன்மை உடையவர்கள் பழகாத அயலாரிடத்தில் என்னென்ன செய்வார்களோ?

அறன்நோக்கி ஆற்றும்கொல் வையம் புறன்நோக்கிப்
புன்சொல் உரைப்பான் பொறை? 189

பிறர் இல்லாத போது அவர்களைப் பற்றிப் பழித்துப் பேசுகின்றவன் உடலின் பாரத்தைச் சுமப்பது தனக்கு அறம் எனக் கருதி நிலம் தாங்கிக் கொண்டிருக்கின்றதோ?

ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுஉண்டோ மன்னும் உயிர்க்கு 190

ஒருவன் மற்றவர்களிடம் உள்ள குற்றத்தைக் காண்பதைப் போலத் தன்னிடம் உள்ள குற்றத்தையும் கண்டு திருந்தினால் அவன் வாழ்வில் துன்பமே நேராது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20. பயன்இல சொல்லாமை

பல்லார் முனியப் பயன்இல சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும். 191
பலரும் கேட்டு வெறுக்கக் கூடிய பயன் இல்லாத சொற்களைச் சொல்பவன்
எல்லாருடைய ஏளனத்திற்கும் ஆளாவான்.

பயன்இல பல்லார்முன் சொல்லல் நயன்இல
நட்டார்கண் செய்தலின் தீது. 192
ஒருவன் தன் நண்பர்களுக்குத் தீமை செய்வதைவிட மிகக் கொடியது,
பயன் சிறிதும் இல்லாத சொற்களைப் பலர் முன் கூறுவது தான்.

நயன்இலன் என்பது சொல்லும் பயன்இல
பாரித்து உரைக்கும் உரை. 193
ஒருவன் பயனில்லாத சொற்களையே விரிவாகப் பேசுவது, அவன் அறம்
இல்லாதவன் என்பதைக் காட்டிவிடும்.

நயன்சாரா நன்மையின் நீக்கும் பயன்சாராப்
பண்புஇல்சொல் பல்லார் அகத்து. 194
பயன் இல்லாத சொற்களைப் பண்பு இல்லாமல் பலரிடமும் பேசுவது,
அறத்துக்குப் பொருந்தாமலும் நன்மை அடைய முடியாமலும் செய்துவிடும்.

சீர்மை சிறப்பொடு நீங்கும் பயன்இல
நீர்மை உடையார் சொலின். 195
நல்ல பண்பினை உடையவர்கள் பயனில்லாத சொற்களைச்
சொல்லுவார்களானால் சிறப்பும் மதிப்பும் சேர்ந்து அழிந்து விடும்.

பயன்இல்சொல் பாராட்டு வானை மகன்எனல்
மக்கட் பதடி எனல். 196
பயனில்லாத சொற்களையே திரும்பத் திரும்பப் பேசுகிறவனை மனிதன் என்று
சொல்லக் கூடாது. அவனை மனிதர்களுள் பதர் என்றுதான் சொல்ல வேண்டும்.

நயன்இல சொல்லினும் சொல்லுக; சான்றோர்
பயன்இல சொல்லாமை நன்று. 197
அறிவுடையவர்கள் அறம் இல்லாத சொற்களைச் சொன்னாலும் சொல்லலாம்.
ஆனால், ஒருபோதும் பயன் இல்லாத சொற்களைச் சொல்லக் கூடாது.

அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல். 198
சிறந்த பயன்களை ஆராயும் அறிவுடையவர்கள் பெரிய பயன்
எதையும் தராத சொற்களைக் கூற மாட்டார்கள்.

பொருள்தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார் மருள்தீர்ந்த
மாசுஅறு காட்சி யவர். 199
மயக்கம் இல்லாத குற்றமற்ற தெளிந்த அறிவை உடையவர்கள்
மறந்துங்கூடப் பயன் இல்லாத சொற்களைப் பேச மாட்டார்கள்.

சொல்லுக சொல்லில் பயன்உடைய; சொல்லற்க
சொல்லில் பயன்இலாச் சொல். 200
சொற்களுள் பயன் உடைய சொற்களை மட்டுமே சொல்ல வேண்டும்.
பயன் இல்லாத சொற்களைச் சொல்லக் கூடாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
தீவினை என்னும் செருக்கு. 201
தீங்கு செய்வதற்கு அதனையே பழக்கமாய் உடைய ஆணவக்காரர்கள்
அஞ்ச மாட்டார்கள், அறிவில் சிறந்த மேலோர் அஞ்சுவார்கள்.

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும். 202
தீய செயல்கள் தீமையை உண்டாக்கும், எனவே அவற்றைத் தீயை
விடக் கொடுமையானவையாக எண்ணி அச்சப்பட வேண்டும்.

அறிவினுள் எல்லாம் தலைஎன்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல். 203
நமக்குத் தீங்கு செய்வோருக்கும் நாம் ஒருபோதும் தீங்கு
செய்யாமல் இருப்பதே அறிவிற் சிறந்த செயல் ஆகும்.

மறந்தும் பிறன்கேடு சூழற்க; சூழின்
அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு. 204
மறந்துங்கூட நீ பிறருக்குக் கேடு செய்ய நினைக்காதே. ஏனென்றால், தீங்கு
செய்ய நினைப்பவனுக்கு அறமே தீங்கு செய்யும்.

இலன்என்று தீயவை செய்யற்க; செய்யின்
இலன்ஆகும் மற்றும் பெயர்த்து. 205
'நான் இல்லாதவன்' என்றெண்ணி, உன் வறுமை காரணமாய்த் தீங்கு
செய்யாதே! செய்தால் நீ மேலும் வறியவனாகி விடுவாய்.

தீப்பால தான்பிறர்கண் செய்யற்க; நோய்ப்பால
தன்னை அடல்வேண்டா தான். 206
துன்பம் செய்யும் தீவினைகள் தன்னை வருத்துவதை விரும்பாதவன், பிறருக்குத்
துன்பம் உண்டாக்கும் தீய செயல்களைத் தானும் செய்யாமல் இருக்க வேண்டும்.

எனைப்பகை உற்றாரும் உய்வர்; வினைப்பகை
வீயாது பின்சென்று அடும். 207
எவ்வளவு கொடிய பகையை உடையவரும் அதிலிருந்து தப்பி வாழலாம். ஆனால்,
தீவினை செய்வதால் வரும் பகை, விடாமல் பின்தொடர்ந்து பெரும் துன்பம் தரும்.

தீயவை செய்தார் கெடுதல்; நிழல்தன்னை
வீயாது அடிஉறைந்து அற்று. 208
தீமை செய்தவன் கெடுவதென்பது, அவன் நிழல் அவனை விடாமல்
அவன் காலடியிலேயே தங்கி இருப்பதைப் போன்றது.

தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்துஒன்றும்
துன்னற்க தீவினைப் பால். 209
ஒருவன் தன்னைத்தான் விரும்பி வாழ்வதென்பது உண்மையானால்,
அவன் யாருக்குமே சிறு தீங்கும் செய்யக் கூடாது.

அருங்கேடன் என்பது அறிக மருங்குஓடித்
தீவினை செய்யான் எனின். 210
ஒருவன் தவறான வழியில் சென்று ஒருவருக்கும் ஒரு கேடும் செய்யாதிருப்பவன்
என்றால், அவன் கேடு இல்லாதவன் என்று நன்கு தெரிந்து கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்ஆற்றும் கொல்லோ உலகு? 211
உலகத்தார் தமக்கு உதவும் மழைக்கு என்ன கைம்மாறு செய்கிறார்கள்?
ஒன்றுமில்லை. அது போலவே மழை போன்றவர்கள் தாம் செய்யும் உதவிக்கு
எந்த உதவியையும் எதிர்பார்ப்பதில்லை

தாள்ஆற்றித் தந்த பொருள்எல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு. 212
உயர்ந்தவன் பாடுபட்டுத் தேடிய பொருள் அனைத்தும் தகுதி உடைய
பிறருக்கு உதவி செய்வதற்காகவே ஆகும்.

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல்அரிதே
ஒப்புரவின் நல்ல பிற. 213
பிறருக்கு உதவி செய்து வாழும் உயர்ந்த செயலைப் போன்ற நற்செயலை
இவ்வுலகிலும், ஏன், தேவர் உலகிலுங்கூடக் காண முடியாது.

ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும். 214
உலக நடப்பை அறிந்து பிறருக்கு உதவியாய் வாழ்பவன்தான் உயிர்
வாழ்பவன் ஆவான். மற்றவன் செத்தவனாகவே மதிக்கப்படுவான்.

ஊருணி நீர்நிறைந்து அற்றே உலகுஅவாம்
பேரறி வாளன் திரு. 215
உலகத்தின் தன்மையை அறிந்து பிறருக்கு மனமுவந்து உதவும் பெரும் அறிவினை உடையவன்
செல்வம் ஊரில் உள்ளவர்கள் உண்பதற்கு ஏற்ற நீரை உடைய குளம் நிறைந்ததைப் போன்றதாகும்.

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயன்உடை யான்கண் படின். 216
பிறருக்கு உதவும் நல்ல உள்ளத்தைப் படைத்தவனிடம் சேரும் செல்வம்,
பயனை அதிகமாய்த் தரும் நல்ல மரம் ஊரின் நடுவே பழுத்ததைப் போன்றதாகும்.

மருந்து ஆகித் தப்பா மரத்துஅற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின். 217
பிறருக்கு உதவும் பெருந்தன்மை உடையவரிடம் சேரும் செல்வம், தனது
எல்லா உறுப்புகளாலும் மருந்தாகப் பயன்படும் மரத்திற்கு ஒப்பானதாகும்.

இடன்இல் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்
கடன்அறி காட்சி யவர். 218
பிறருக்கு உதவி செய்வதையே தம் கடமையாகக் கொண்ட அறிவுடையவர் தம்மிடம்
செல்வம் இல்லாத காலத்திலும் அக்கடமையைச் செய்வதில் தவறமாட்டார்கள்.

நயன்உடையான் நல்கூர்ந்தான் ஆதல் செயும்நீர
செய்யாது அமைகலா வாறு. 219
மற்றவருக்கு உதவுகின்ற நற்குணத்தை உடையவன் பிறருக்கு உதவ வேண்டியதை
உதவ முடியாமல் போவதுதான் அவனுக்கு வறுமை ஆகும்.

ஒப்புரவி னால்வரும் கேடுஎனின் அஃது ஒருவன்
விற்றுக்கோள் தக்கது உடைத்து. 220
பிறருக்கு உதவுவதால் ஒருவனுக்குக் கேடு வரும் என்றால் அக்கேடானது
தன்னை விற்றாவது வாங்கிக் கொள்ளும் தகுதியை உடையது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறியார்க்குஒன்று ஈவதே ஈகை; மற்று எல்லாம்
குறிஎதிர்ப்பை நீரது உடைத்து. 221
பயனை எதிர்பாராமல் ஏழைகளுக்குக் கொடுப்பதே ஈகை ஆகும். ஏனையோருக்குக் கொடுப்பனவெல்லாம் தனக்கு வரும் பயனை எதிர்பார்த்துக் கொடுப்பனவே ஆகும்.

நல்லாறு எனினும் கொளல்தீது; மேல்உலகம்
இல்எனினும் ஈதலே நன்று. 222
நன்மை செய்வதற்காகக்கூடப் பிறரிடமிருந்து பொருளைப் பெறக் கூடாது. மேல் உலகம் இல்லை என்றாலும் பிறருக்குக் கொடுப்பதே நல்லது.

இலன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலன்உடையான் கண்ணே உள. 223
நான் ஏழை என்ற துயரச் சொல்லை ஒருவன் கூறுவதற்கு முன்னால், அவனுக்கு உதவுவதே நல்ல குடியில் பிறந்தவனின் பண்பாகும்.

இன்னாது இரக்கப் படுதல் இரந்தவர்
இன்முகம் காணும் அளவு. 224
பொருளை விரும்பிக் கேட்பவன் பெற்றதைக் கொண்டு மனம் மகிழ்ந்து இனிய முகத்தைக் காட்டும்வரை, ஈகையுங்கூடப் பெரும் துன்பம் தருவதாகும்.

ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின். 225
தவ வலிமை உடையவர்களுக்குப் பசியைப் பொறுத்துக் கொள்ளும் ஆற்றல் உண்டு. அவர்கள் வலிமையையும் விட மேலானது அப்பசியைப் போக்குபவருடைய வலிமை ஆகும்.

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதுஒருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. 226
பொருள் இல்லாதவர் பசியைப் பொருள் உள்ளவன் தீர்க்க வேண்டும். அதுவே பொருள் பெற்றவன் பின் வந்து உதவுவதற்கு வைத்தற்கு உரிய இடமாகும்.

பாத்தூண் மரீஇ யவனைப் பசிஎன்னும்
தீப்பிணி தீண்டல் அரிது. 227
தான் பெற்ற உணவைப் பலரோடு பகிர்ந்து உண்ணும் பழக்கம் உள்ளவனைப் பசி என்னும் தீய நோய் நெருங்க மாட்டாது.

ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர். 228
தான் சேர்த்து வைத்த பொருளைப் பிறருக்கு உதவாமல் வைத்திருந்து, பின் அதை இழந்து விடும் கொடியவர்கள், பிறருக்குக் கொடுப்பதால் ஏற்படும் உயர்ந்த இன்பத்தை அறிய மாட்டார்கள்.

இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய
தாமே தமியர் உணல். 229
தன்னிடம் நிரம்பி உள்ள பொருளை ஈயாமல் தான் மட்டுமே அனுபவிக்கும் தன்மை, இல்லை என்று யாசிப்பதை விட மிகவும் துன்பமானது.

சாதலின் இன்னாதது இல்லை; இனிதுஅதூஉம்
ஈதல் இயையாக் கடை. 230
சாவதைவிடத் துன்பமானது வேறெதுவுமே இல்லை. ஆனால் ஏழைகளுக்கு உதவ முடியாத நிலை வந்தபோது இறந்து விடுவதும் இனிமையானதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈதல் இசைபட வாழ்தல் அதுஅல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு. 231
வறுமைப் பட்டவர்களுக்கு வேண்டியதைக் கொடுத்து அதன் மூலம் புகழ் உண்டாக வாழ வேண்டும். அந்தப் புகழைத் தவிர உயிருக்கு உறுதி தருவது வேறெதுவும் இல்லை.

உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்குஒன்று
ஈவார்மேல் நிற்கும் புகழ். 232
பெருமையாகப் பேசப்படுவனவெல்லாம், வறுமையால் துன்பப்படுபவர்களுக்குக் கொடுத்து உதவுகின்றவரின் புகழைப் பற்றியே ஆகும்.

ஒன்றா உலகத்து உயர்ந்த புகழ்அல்லால்
பொன்றாது நிற்பது ஒன்று இல். 233
தாம் பெற்ற உயர்வு மிகுந்த ஓங்கு புகழைத் தவிர, இவ்வுலகில் அழியாமல் நிலைத்திருப்பது எதுவுமில்லை.

நிலவரை நீள்புகழ் ஆற்றின், புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு. 234
ஒருவர் இந்த உலகத்தில் என்றும் நிலைத்து நிற்கும் புகழைப் பெற்றால், வானுலகம் தேவர்களைக்கூடப் போற்றாமல், அவரையே மிக உயர்வாகப் போற்றும்.

நத்தம்போல் கேடும் உளதுஆகும்; சாக்காடும்
வித்தகர்க்கு அல்லால் அரிது. 235
ஒருவருக்குச் செல்வம் குறையக் குறையப் புகழ் வளர்வதும், அவர் உடம்பு அழிய அப்புகழ் நிலைத்து நிற்பதும், அறிவிற் சிறந்தவர்களுக்கு அல்லாமல் மற்றவருக்கில்லை.

தோன்றின் புகழொடு தோன்றுக; அஃதுஇலார்
தோன்றலின் தோன்றாமை நன்று. 236
உலகத்தார் முன் ஒருவன் தோன்றினால் புகழோடுதான் தோன்ற வேண்டும். புகழ் இல்லாதவர் தோன்றுவதை விடத் தோன்றாமல் இருப்பதே நல்லது.

புகழ்பட வாழாதார் தம்நோவார் தம்மை
இகழ்வாரை நோவது எவன்? 237
தமக்குப் புகழ் உண்டாகுமாறு வாழ முடியாதவர்கள் தம்மைத் தாமே நொந்து கொள்ளாமல் தம்மை இகழ்ந்து பேசுகின்றவரை நோவதால் என்ன பயன்?

வசைஎன்ப வையத்தார்க்கு எல்லாம் இசைஎன்னும்
எச்சம் பெறாஅ விடின். 238
தமக்குப் பின் எஞ்சி நிற்பது புகழே ஆகும். அப்புகழைத் தேடிக் கொள்ளாதவருடைய வாழ்க்கை உலகத்தவரின் பழிக்கு ஆளாகும்.

வசைஇலா வண்பயன் குன்றும் இசைஇலா
யாக்கை பொறுத்த நிலம். 239
புகழ் பெறாமல் வாழ்நாளைக் கழித்தவருடைய உடம்பைத் தாங்குகின்ற பூமி நல்ல பயனைத் தராமல் விளைவு குன்றிப் போகும்.

வசைஒழிய வாழ்வாரே வாழ்வார்; இசைஒழிய
வாழ்வாரே வாழா தவர் 240
தம்முடைய வாழ்க்கையில் பழி உண்டாகாமல் வாழ்கின்றவரே உயிர் வாழ்பவர். புகழ் உண்டாகாமல் வாழ்கின்றவரே உயிர் வாழாதவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்செல்வம் செல்வத்துள் செல்வம்; பொருள்செல்வம்
பூரியார் கண்ணும் உள. 241

பொருள் என்னும் செல்வம் இழிந்தவர்களிடங்கூட இருக்கிறது. உயர்ந்தவர்களிடம் மட்டுமே உள்ள அருளாகிய செல்வமே மிகச் சிறந்த செல்வமாகும்.

நல்ஆற்றான் நாடி அருள்ஆள்க; பல்ஆற்றான்
தேரினும் அஃதே துணை. 242

நல்ல வழியில் ஆராய்ந்து நாம் அருள் உடையவர்களாய் விளங்க வேண்டும். ஏனென்றால், பல வழிகளில் ஆராய்ந்து பார்த்தாலும் அருளே வாழ்க்கைக்குத் துணையாய் விளங்குகிறது.

அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை இருள்சேர்ந்த
இன்னா உலகம் புகல். 243

அறியாமை என்ற இருள் நிறைந்த உலகத்தில் வாழ்கின்ற வாழ்க்கை, அருள் பொருந்திய உள்ளம் உள்ளவர்களுக்கு இல்லை.

மன்உயிர் ஓம்பி அருள்ஆள்வார்க்கு இல்என்ப
தன்உயிர் அஞ்சும் வினை. 244

உலகத்தில் வாழும் மற்ற உயிர்களைக் காப்பாற்றி வாழுகின்ற அருள் உடையவனுக்குத் தன்னுடைய உயிரின் பொருட்டு அஞ்சி வாழுகின்ற இழிநிலை இல்லை.

அல்லல் அருள்ஆள்வார்க்கு இல்லை; வளிவழங்கும்
மல்லல்மா ஞாலம் கரி. 245

அருள் நெஞ்சம் உடையவருக்குத் துன்பம் என்பதே இல்லை. அதற்குக் காற்று இயங்குகின்ற இப்பெரிய உலகத்தில் வாழுகின்ற அருள் உடையவர்களே சாட்சி ஆவார்கள்.

பொருள்நீங்கிப் பொச்சாந்தார் என்பர் அருள்நீங்கி
அல்லவை செய்துஒழுகு வார். 246

அருள் இல்லாமல் தீங்கு செய்வோரை, முற்பிறப்பிலும் அவர் அறமாகிய உறுதிப் பொருளை மறந்தவர் என்று கூறுவர்.

அருள்இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருள் இல்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு. 247

அருள் இல்லாதவர்களுக்கு அவ்வுலக வாழ்க்கை இல்லை. அது போலப் பொருள் இல்லார்க்கு இவ்வுலக வாழ்க்கையும் இல்லை.

பொருள் அற்றார் பூப்பர் ஒருகால்; அருள் அற்றார்
அற்றார்மற்று ஆதல் அரிது. 248

பொருளை இழந்தவன் ஒரு காலத்தில் பொருளைப் பெற்று வளமுடன் வாழ முடியும். அருளை இழந்தவன் பயனற்றவனாகச் சிறப்பினை இழந்து அழிவான்.

தெருளாதான் மெய்ப்பொருள் கண்டுஅற்றால் தேரின்
அருளாதான் செய்யும் அறம். 249

அருள் இல்லாதவன் செய்கின்ற அறச்செயலை நினைத்தால் அறிவற்றவன் ஒரு நூலின் உண்மைப் பொருளைக் காண்பது போன்றதாகும்.

வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்
மெலியார்மேல் செல்லும் இடத்து. 250

ஒருவன் தன்னை விட மெலிந்தவரை அருள் இன்றித் துன்புறுத்தும்போது தன்னை விட வலியவர் முன்னால் தான் அஞ்சி நிற்கும் நிலையை எண்ணிப் பார்த்துக் கொள்ள வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்ஊன் பெருக்கற்குத் தான்பிறிது ஊன்உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்? 251
தன் உடம்பைப் பெருக்க வைக்க மற்றோர் உயிரின் உடம்பைத்
தின்கிறவன் சிறிதும் அருள் உள்ளம் இல்லாதவன்.

பொருள்ஆட்சி போற்றாதார்க்கு இல்லை, அருள்ஆட்சி
ஆங்குஇல்லை ஊன்தின் பவர்க்கு. 252
பொருளை வைத்துக் காப்பவருக்கு உள்ள சிறப்பு அதைக் காப்பாற்றாதவருக்கில்லை.
அது போல, அருள் உடையவருக்குள்ள சிறப்பு புலால் உண்பவருக்கில்லை.

படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றுஊக்காது ஒன்றன்
உடல்சுவை உண்டார் மனம். 253
கொலை செய்யும் ஆயுதத்தைக் கையில் வைத்திருப்பவன் உள்ளத்தில் இரக்கம்
இராது. அது போல, ஓர் உயிரின் உடம்பை விரும்பி உண்பவன் மனத்தில் அருள் இராது.

அருள் அல்லது யாதுஎனின் கொல்லாமை கோறல்
பொருள்அல்லது அவ்வூன் தினல். 254
ஓர் உயிரைக்கூடக் கொல்லாமல் இருப்பதே அறம். ஓர் உயிரைக் கொன்று அதன்
உடம்பைத் தின்பது அருளும் ஆகாது, அறமும் ஆகாது..

உண்ணாமை உள்ளது உயிர்நிலை; ஊன்உண்ண
அண்ணாத்தல் செய்யாது அளறு. 255
புலால் உண்ணாதிருந்தால் பல உயிர்கள் அழிவின்றி நிலைத்து வாழும்.
புலால் உண்பவனை நரகம் விழுங்கிவிடும். வெளிச்செல்ல விடாது.

தினல்பொருட்டால் கொல்லாது உலகுஎனின் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல். 256
புலால் உண்பதற்காக என்று உலகத்தில் உயிர்களைக் கொல்லாமல் இருந்தால்
வியாபாரத்திற்காக மாமிசத்தை விற்பனை செய்பவர்களே இருக்க மாட்டார்கள்.

உண்ணாமை வேண்டும். புலாஅல்; பிறிதுஒன்றன்
புண்அது உணர்வார்ப் பெறின். 257
ஆராய்ந்து பார்த்தால் புலால் என்பது ஓர் உயிரின் புண் என்பது நன்கு தெரியும்.
எனவே, புலால் உண்பதனை அறவே ஒழிக்க வேண்டும்.

செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்
உயிரின் தலைப்பிரிந்த ஊன். 258
குற்றம் என்பதில்லாத நல்ல அறிவை உடையவர்கள் ஓர் உயிரானது
பிரிந்து விட்ட உடம்பான புலாலை ஒருபோதும் உண்ணமாட்டார்கள்.

அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று. 259
நெய் முதலிய பொருள்களைத் தீயில் சொரிந்து ஆயிரம் யாகங்களைச் செய்வதை
விட, ஓர் உயிரைக் கொன்று தின்னாமல் இருப்பது உயர்ந்தது.

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும். 260
உயிரைக் கொல்லாமலும் புலால் உண்ணாமலும் வாழ்கின்றவனை
உலகத்தில் உள்ள எல்லா உயிர்களும் கை கூப்பி வணங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்றநோய் நோன்றல் உயிர்க்குஉறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு. 261
தனக்கு வரும் துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளுதலும் பிற உயிர்களுக்குத் தீங்கு செய்யாமல் இருத்தலும் தவத்தின் தன்மைகள் ஆகும்.

தவமும் தவம்உடையார்க்கு ஆகும்; அவம்அதனை
அஃதுஇலார் மேற்கொள் வது. 262
தவ வடிவம் அதற்கு ஏற்ற ஒழுக்கம் உடையவர்க்குத் தான் பொருந்தும், அந்த வடிவத்தை ஒழுக்கம் இல்லாதவர்கள் மேற்கொள்வது வீண் முயற்சியே ஆகும்.

துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி, மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம்? 263
துறவிகளுக்கு உணவு முதலியவற்றைக் கொடுத்து உதவவேண்டும் என்ற காரணத்தால்தான், இல்லறத்தார் தவம் மேற்கொள்வதை மறந்தார்களோ?

ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணின் தவத்தான் வரும். 264
தீமை செய்யும் பகைவரை அடக்குதல், நன்மை செய்யும் நண்பரை உயர்த்துதல் ஆகிய இரண்டும் தவ வலிமையால் முடியும்.

வேண்டிய வேண்டியாங்கு எய்தலால், செய்தவம்
ஈண்டு முயலப் படும். 265
விரும்பியதை விரும்பியபடியே தவத்தால் அடையலாம். எனவே, இல்லறத்தில் உள்ளவர்களும் முயன்று தவம் செய்து நல்ல பயன்களை அடையலாம்.

தவம்செய்வார் தம்கருமம் செய்வார் மற்று அல்லார்
அவம்செய்வார் ஆசையுள் பட்டு. 266
தவம் செய்கிறவர்களே தங்களுக்கு உரிய கடமைகளைச் செய்கிறவர்கள். மற்றவர்கள் ஆசை வலையில் அகப்பட்டு வீண் முயற்சி செய்கின்றவர்களே.

சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோக்கிற் பவர்க்கு. 267
சுடச்சுடப் பொன் ஒளி பெறும். அதைப் போலத் தவம் செய்வோரைத் துன்பம் வருத்த வருத்த அவர்களுக்கு மெய்யுணர்வு மிகுதியாகும்.

தன்உயிர் தான் அறப் பெற்றானை ஏனைய
மன்உயிர் எல்லாம் தொழும். 268
தன்உயிர், தான் என்ற பற்றுகளை விட்டு விட்டவனை, அவன் பெருமையை உணர்ந்து உலகத்தில் உள்ள எல்லா உயிர்களும் வணங்கும்.

கூற்றம் குதித்தலும் கைகூடும், நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு. 269
தவ வலிமையால் பெரும் ஆற்றல்களைப் பெற்றவர்கள் மரணத்தையும் வென்று விடுவார்கள்.

இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர். 270
உலகில் ஆற்றல் இல்லாதவர் பலராகவும் ஆற்றல் உள்ளவர் சிலராகவும் இருப்பதற்குக் காரணம், தவம் செய்யாதவர் பலராகவும் தவம் செய்வோர் சிலராகவும் இருப்பதே ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஞ்ச மனத்தான் படிற்றுஒழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும். 271
வஞ்ச மனம் கொண்டவனுடைய பொய்யான ஒழுக்கத்தைக் கண்டு
அவன் உடம்பில் கலந்து நிற்கும் ஐம்பூதங்களும் தங்களுக்குள் சிரிக்கும்.

வான்உயர் தோற்றம் எவன்செய்யும் தன்நெஞ்சம்
தான்அறி குற்றப் படின்? 272
தன் மனம் அறியக் குற்றம் செய்தவன் உயர்ந்த தவக்கோலத்தை
உடையவனாய் இருந்தாலும் ஒரு பயனும் இல்லை.

வலிஇல் நிலைமையான் வல்உருவம், பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந்து அற்று. 273
மனத்தை அடக்கும் வல்லமை இல்லாதவனுடைய தவக்கோலம்,
பசு, புலியின் தோலைப் போர்த்திக் கொண்டு, பயிரை மேய்வது போன்றது.

தவம்மறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து
வேட்டுவன் புள்சிமிழ்த்து அற்று. 274
ஒருவன் தவக் கோலத்தில் மறைந்து கொண்டு தீய காரியங்களைச் செய்வது,
வேடன் புதரில் மறைந்து கொண்டு வலை வீசிப் பறவைகளைப் பிடிப்பது போன்றது.

பற்றுஅற்றேம் என்பார் படிற்றுஒழுக்கம் எற்றுஎற்றுஎன்று
ஏதம் பலவும் தரும். 275
ஆசைகளை விட்டு விட்டோம் என்று கூறுகிறவரின் பொய் ஒழுக்கம்
என்ன செய்தோம் என்று எண்ணி எண்ணி வருந்தும் துன்பத்தைத் தரும்.

நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல். 276
மனத்தில் ஆசைகளை நீக்காமல், ஆனால், ஆசைகளே இல்லாத துறவிகளைப்
போல் வஞ்சித்து வாழ்கின்றவர்களைப் போல் கொடியவர்கள் வேறு யாரும் இல்லை.

புறம்குன்றி கண்டுஅனைய ரேனும் அகம்குன்றி
மூக்கில் கரியார் உடைத்து. 277
குன்றிமணியின் புறத்தே காணப்படும் செம்மை நிறம் போல, வேடத்தால்
செம்மையானவர்கள் போலத் தங்களைக் காட்டிக் கொண்டாலும், குன்றிமணியின்
கறுத்த மூக்கினைப் போல மனம் இருண்ட தன்மை உடையவர்கள் உலகில் இருக்கிறார்கள்.

மனத்தது மாசாக மாண்டார்நீர் ஆடி
மறைந்துஒழுகும் மாந்தர் பலர். 278
மனத்தில் குற்றத்தை வைத்துக் கொண்டு தவத்தில் சிறந்தவர் போல வஞ்சனையோடு
வாழ்பவர்களும் உலகில் இருக்கிறார்கள்.

கணைகொடிது யாழ்கோடு செவ்விது ஆங்கு அன்ன
வினைபடு பாலால் கொளல். 279
நேராய் இருந்தாலும் அம்பு கொடியது. வளைவாய் இருந்தாலும் யாழ் இனியது.
எனவே, ஒருவரை அவர் குணத்தையும் செயலையும் வைத்தே மதிப்பிட வேண்டும்.

மழித்தலும் நீட்டலும் வேண்டா; உலகம்
பழித்தது ஒழித்து விடின். 280
உலகம் பழிக்கின்ற தீய செயல்களைச் செய்யாமல் விட்டுவிட்டவர்கள், மொட்டை
அடிக்கவும் வேண்டாம், சடை வளர்க்கவும் வேண்டாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்துஒன்றும்**
**கள்ளாமை காக்கதன் நெஞ்சு.** 281
பிறர் தன்னை இகழக் கூடாது என்றெண்ணுகிறவன் எந்தப் பொருளையும் யாரிடமிருந்தும் வஞ்சித்து அடைகிற நெஞ்சம் இல்லாதவனாய் இருக்க வேண்டும்.

**உள்ளத்தால் உள்ளலும் தீதே; பிறன்பொருளைக்**
**கள்ளத்தால் கள்வேம் எனல்.** 282
ஒருவன் பிறருக்குரிய பொருளைத் தவறான வழியில் அடைய வேண்டும் என்று நினைப்பதுகூடத் தீமை ஆகும்.

**களவினால் ஆகிய ஆக்கம் அளவுஇறந்து**
**ஆவது போலக் கெடும்.** 283
திருட்டுப் பொருள்களால் ஏற்படுகிற வளர்ச்சி அளவுக்கு அதிகமாய் வளர்வது போலத் தோன்றினாலும் உள்ளதும் அழிந்து போய்விடும்.

**களவின்கண் கன்றிய காதல் விளைவின்கண்**
**வீயா விழுமம் தரும்.** 284
திருட்டுத்தனத்தால் ஏற்படுகின்ற விருப்பம் இறுதியில் அளவு கடந்த துன்பத்தையே உண்டாக்கும்.

**அருள்கருதி அன்புடையர் ஆதல், பொருள்கருதிப்**
**பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல்.** 285
பிறர் பொருளைக் களவாடக் கருதி, தக்க நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவன் அருளைப் பெரிதாக எண்ணி அன்புடையவனாயிருக்க மாட்டான்.

**அளவின்கண் நின்றுஒழுகல் ஆற்றார் களவின்கண்**
**கன்றிய காத லவர்.** 286
களவாடிப் பிறர் பொருளில் வாழ விரும்புபவன் வாழ்வின் அளவறிந்து, அவ்வளவுக்கு ஏற்றபடி வாழமாட்டான்.

**களவுஎன்னும் கார்அறிவு ஆண்மை அளவுஎன்னும்**
**ஆற்றல் புரிந்தார்கண் இல்.** 287
அளவு அறிந்து வாழ்வதில் நல்ல ஆர்வம் உடையவர்கள் களவு செய்வதென்ற வஞ்சகச் செயலில் ஒருபோதும் ஈடுபட மாட்டார்கள்.

**அளவுஅறிந்தார் நெஞ்சத்து அறம்போல நிற்கும்**
**களவுஅறிந்தார் நெஞ்சில் கரவு.** 288
அளவறிந்து வாழ்பவன் நெஞ்சில் அறம் என்றும் நீங்காமல் வாழும். களவாடி வாழ்பவன் நெஞ்சில் வஞ்சம் என்றும் நீங்காது வாழும்.

**அளவுஅல்ல செய்துஆங்கே வீவர் களவுஅல்ல**
**மற்றைய தேற்றா தவர்.** 289
திருடுவதைத் தவிர மற்ற நல்ல செயல்களை அறியாதவர்கள், அளவு கடந்த குற்றங்களைச் செய்து அப்போதே அழிவார்கள்.

**கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை; கள்ளார்க்குத்**
**தள்ளாது புத்தேள் உலகு.** 290
திருடி வாழ்பவர்களுக்கு உடம்புங்கூட உற்ற துணையாகாது கெட்டழியும். களவு செய்யாமல் வாழ்பவர்களுக்கு வீடு பேறெனும் வாழ்வு உறுதியாய் வாய்க்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30. வாய்மை

வாய்மை எனப்படுவது யாதுஎனின் யாதுஒன்றும்
தீமை இலாத சொலல். 291
மற்றவர்களுக்குச் சிறிதும் தீங்கினை உண்டாக்காத
சொற்களைப் பேசுவதே வாய்மை ஆகும்.

பொய்ம்மையும் வாய்மை இடத்த, புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின். 292
குற்றமில்லாத நன்மையைச் செய்யும் என்றால் பொய்யான
சொற்களும் வாய்மைக்கு இணை ஆகும்.

தன்நெஞ்சு அறிவது பொய்யற்க; பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும். 293
ஒருவன் தன் மனம் அறிந்து பொய் சொல்லக் கூடாது. அவ்வாறு
சொன்னால் அவன் மனமே அவனைச் சுடும்.

உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன். 294
ஒருவன் தன் மனம் அறிந்து பொய் சொல்லாமல் வாழ்வானானால் அவன்
உலகத்தில் உள்ள நல்லவர்களின் உள்ளங்களில் எல்லாம் நிலைத்து வாழ்வான்.

மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானம்செய் வாரின் தலை. 295
தன் மனம் அறிய உண்மை பேசுபவன் தவத்தையும் தானத்தையும்
செய்வோரை விட மிக உயர்ந்தவன் ஆவான்.

பொய்யாமை அன்ன புகழ்இல்லை; எய்யாமை
எல்லா அறமும் தரும். 296
ஒருவனுக்குப் பொய் சொல்லாமல் வாழ்வதைப் போன்ற புகழுக்கு உரியது
வேறொன்றும் இல்லை. அவனுக்கு எல்லா நன்மைகளும் தானே வந்து சேரும்.

பொய்யாமை பொய்யாமை ஆற்றின், அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று. 297
பொய் சொல்லாமல் இருப்பதென்ற அறச்செயலை உண்மையாகவே ஒருவன்
கடைப்பிடித்தால் அவன் வேறு அறங்களையும் செய்ய வேண்டும் என்ற அவசியம் இல்லை.

புறந்தூய்மை நீரால் அமையும்; அகம்தூய்மை
வாய்மையால் காணப் படும். 298
ஒருவனுக்கு வெளிப்புறத்தில் உள்ள தூய்மை நீரினால் ஏற்படும். அது போல
உள்ளத் தூய்மை என்பது வாய்மையால்தான் உண்டாகும்.

எல்லா விளக்கும் விளக்குஅல்ல; சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு. 299
வெளி இருளை நீக்குகின்ற விளக்குகள் எல்லாம் விளக்குகள் அல்ல. உயர்ந்தவர்களுக்குப்
பொய்யாமை என்னும் உள்ளத்தில் உள்ள இருளை அகற்றும் விளக்கே சிறந்த விளக்கு ஆகும்.

யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற. 300
உலகில் உண்மையாய்க் கண்ட பொருள்களுள்
வாய்மையே மிகச் சிறந்த பொருள் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்இடத்துக் காப்பான் சினம்காப்பான் அல்இடத்துக்
காக்கின்என்? காவாக்கால் என்? 301
பலிக்கின்ற இடத்தில் கோபம் வராமல் காப்பவனே சினத்தைக் காப்பவன் ஆகிறான்.
பலிக்காத இடத்தில் சினத்தைக் காப்பதென்பது பெருமைக்குரியதன்று.

செல்லா இடத்துச் சினம்தீது செல்இடத்தும்
இல்அதனின் தீய பிற. 302
வலியவரிடம் சினம் பலிக்காது. அவர்களிடம் கோபம் கொள்வது தீங்காகும்.
எளியாரிடம் கோபத்தைக் காட்டுவது போன்ற தீமை வேறு எதுவும் இல்லை.

மறத்தல் வெகுளாமை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனால் வரும். 303
யாரிடத்திலுமே கோபம் கொள்ளாமல் அதை நீக்கிவிட வேண்டும்.
கோபத்தால் தீமையான விளைவுகளே உண்டாகும்.

நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற? 304
முக மலர்ச்சியையும் பெருமகிழ்ச்சியையும் அழிக்கின்ற கோபத்தை
விட ஒருவனுக்குக் கொடிய வேறு பகை என்பதே இல்லை.

தன்னைத்தான் காக்கின் சினம்காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம். 305
ஒருவன் தன்னைக் காத்துக் கொள்ள வேண்டுமானால் அவன் தன் கோபத்தை
அடக்க வேண்டும். இல்லை என்றால் அவனது சினம் அவனையே அழிக்கும்.

சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும். 306
சினம் என்னும் நெருப்பு தன்னைச் சேர்ந்தவரை அழிக்கும்.
இனம் என்ற இன்பத் தெப்பத்தையும் சுட்டழிக்கும்.

சினத்தைப் பொருள்என்று கொண்டவன் கேடு
நிலத்து அறைந்தான் கைபிழையாது அற்று. 307
நிலத்தை நோக்கி ஓங்கி அடித்தவன் கை துன்பப்படுவது எவ்வளவு நிச்சயமோ,
அவ்வளவு நிச்சயம், சினத்தை முக்கியம் என்று எண்ணுபவன் அழிவதும்.

இணர்எரி தோய்வு அன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று. 308
பல சுடர்களாய் வீசும் நெருப்பு ஒன்றாய்ச் சேர்ந்து வந்து சுடுவது போன்ற துன்பத்தை
ஒருவன் செய்தாலும் நாம் அவன்மீது கோபம் கொள்ளாமல் இருப்பது நல்லது.

உள்ளிய எல்லாம் உடன்எய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின். 309
ஒருவன் தன் மனத்தால் கோபத்தை எண்ணாமல் வாழ்வானானால், அவன்
எண்ணிய நன்மைகள் எல்லாவற்றையும் பெறுவான்.

இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை. 310
அளவு கடந்த கோபத்தைக் கொண்டவர் செத்தாரைப் போன்றவர்.
கோபத்தை அடியோடு விட்டவர் துறவியைப் போன்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புஈனும் செல்வம் பெறினும் பிறர்க்குஇன்னா
செய்யாமை மாசுஅற்றார் கோள். 311
சிறப்பைத் தரும் பெரும் செல்வத்தைப் பெறுவதாய் இருந்தாலுங்கூடப் பிறருக்குத்
துன்பம் செய்யாமல் வாழ்வதே குற்றமில்லாதவரின் கொள்கை ஆகும்.

கறுத்து இன்னா செய்தவக் கண்ணும் மறுத்துஇன்னா
செய்யாமை மாசுஅற்றார் கோள். 312
ஒருவன் கடுங்கோபம் கொண்டு பெருந்துன்பம் செய்த போதிலும் திரும்ப
அவனுக்குத் துன்பம் செய்யாமல் இருப்பதே குற்றமில்லாதவர் கொள்கையாகும்.

செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்
உய்யா விழுமம் தரும். 313
தான் குற்றம் செய்யாதபோது தனக்கு ஒருவன் துன்பம் செய்தால் அதை எண்ணி
அவனுக்குத் தீங்கு செய்தால் அது தனக்குத் தீராத துன்பத்தையே தரும்.

இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல். 314
ஒருவன் தனக்குத் தீங்கு செய்தால் அவனைத் தண்டிப்பதென்பது,
தீமை செய்தவன் தானே வெட்கப்படும்படி அவனுக்கு நன்மை செய்வதேயாகும்.

அறிவினால் ஆகுவது உண்டோ, பிறிதின்நோய்
தம்நோய்போல் போற்றாக் கடை? 315
மற்ற உயிர்களுக்கு உண்டாகும் துன்பத்தைத் தமக்கேற்பட்ட
துன்பமாய்க் கருதி அதை நீக்காவிட்டால் அறிவிருந்தும் பயன் என்ன?

இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கண் செயல். 316
ஒருவன் துன்பமானவை என்று தன் வாழ்க்கையில்
அறிந்தவற்றை அவன் மற்றவர்களிடம் செய்யக்கூடாது.

எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்
மாணாசெய் யாமை தலை. 317
சிறிதளவுதானே என்று எண்ணிக்கூட நாம் யாருக்கும்
எப்போதும் தீங்கு செய்யாமல் இருக்க வேண்டும்.

தன்உயிர்க்கு இன்னாமை தான் அறிவான் என்கொலோ
மன்உயிர்க்கு இன்னா செயல்? 318
தன் உயிர்க்கு இவை துன்பமானவை என்பதை அறிந்தவன் மற்ற
உயிர்களுக்கு அத்துன்பங்களைச் செய்வது என்ன காரணத்தால்?

பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா
பிற்பகல் தாமே வரும். 319
ஒருவன் மற்றவருக்கு முற்பகலில் துன்பம் செய்தால் பிற்பகலில்
துன்பங்கள் தாமே அவனைத் தேடி வந்து துன்பப்படுத்தும்.

நோய்எல்லாம் நோய்செய்தார் மேலவாம்; நோய்செய்யார்
நோய்இன்மை வேண்டு பவர். 320
மற்றவருக்குத் துன்பம் செய்தவன் துன்பம் அடைவது நிச்சயம்.
எனவே, தனக்குத் துன்பம் வருவதை விரும்பாதவன் பிறருக்குத் துன்பம் செய்யக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அறவினை யாதுஎனில் கொல்லாமை; கோறல்**
**பிறவினை எல்லாம் தரும்.** 321
எந்த உயிரையும் கொல்லாமல் வாழ்வதுதான் அறம் ஆகும். உயிர்க் கொலை
என்பது அறம் இல்லாத எல்லாச் செயல்களுக்கும் வழி வகுக்கும்.

**பகுத்துஉண்டு பல்லுயிர் ஓம்புதல், நூலோர்**
**தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.** 322
கிடைக்கின்றவற்றைப் பல உயிர்களுக்கும் பகுத்துக் கொடுத்துத் தானும் உண்டு
வாழ்வது நீதி நூல்கள் கூறுகின்ற அறங்கள் எல்லாவற்றினும் மிக உயர்ந்ததாகும்.

**ஒன்றாக நல்லது கொல்லாமை; மற்றுஅதன்**
**பின்சாரப் பொய்யாமை நன்று.** 323
மிக உயர்ந்த அறச்செயல் என்பது, எந்த உயிரையும் கொல்லாமல் இருப்பது.
அதற்கு அடுத்தது பொய்சொல்லாமல் இருப்பது.

**நல்லாறு எனப்படுவது யாதுஎனின் யாதுஒன்றும்**
**கொல்லாமை சூழும் நெறி.** 324
உயிர்களுள் எதையும் அழிக்காமல் வாழும் வாழ்க்கைதான்
மிகச் சிறந்த அறம் என்று நீதி நூல்கள் கூறுகின்றன.

**நிலைஅஞ்சி நீத்தாருள் எல்லாம் கொலைஅஞ்சிக்**
**கொல்லாமை சூழ்வான் தலை.** 325
வாழ்க்கைத் துன்பங்களுக்கு அஞ்சித் துறவிகள் ஆனவர்களை விட, இல்லற
வாழ்வில் இருந்து கொண்டு கொல்லாமையைக் கடைப்பிடிப்பவர்களே உயர்ந்தவர்கள்.

**கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவான் வாழ்நாள்மேல்**
**செல்லாது உயிர்உண்ணும் கூற்று.** 326
கொல்லாமை என்ற அறத்தைக் கைக்கொண்டு வாழ்பவனை,
உலகத்து உயிர்களை எல்லாம் அழிக்கும் எமனும் நெருங்க மாட்டான்.

**தன்உயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது**
**இன்உயிர் நீக்கும் வினை.** 327
தன்னுடைய உயிருக்கே ஆபத்து என்று தெரிந்தாலும் அதைத்
தடுப்பதற்காகப் பிற உயிர்களைக் கொல்லும் கொடிய செயலைச் செய்யக் கூடாது.

**நன்றுஆகும் ஆக்கம் பெரிதுஎனினும் சான்றோர்க்குக்**
**கொன்றுஆகும் ஆக்கம் கடை.** 328
கொல்வதால் ஏற்படும் பயனை அறிவில்லாதவர்கள் பெரிதாய் எண்ணலாம்.
ஆனால், அறிவுடையவர்கள் அதனை மிக இழிவாய்க் கருதுவார்கள்.

**கொலைவினையர் ஆகிய மாக்கள் புலைவினையர்**
**புன்மை தெரிவார் அகத்து.** 329
கொலைத் தொழிலின் இழிவை அறிந்த பெரியவர்கள் கொலை
செய்து வாழ்கின்றவரைப் புலையர் என்றே கருதுவார்கள்.

**உயிர்உடம்பின் நீக்கியார் என்ப, செயிர்உடம்பின்**
**செல்லாத்தீ வாழ்க்கை யவர்.** 330
நோய் மிகுந்த உடம்போடு வறுமையில் வாடித் துன்பப்படும் நிலை,
முன்னர்ப் பல கொலை செய்து உயிர்களை அழித்தவர்களுக்கு ஏற்பட்டுவிடும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நில்லாத வற்றை நிறையின என்றுஉ ணரும்
புல்லறி வாண்மை கடை. 331
நிலை இல்லாதவற்றை நிலையானவை என்று தவறாக எண்ணுவது
அறிவின்மை ஆகும். அது இழிவையே தரும்.

கூத்துஆட்டு அவைக்குழாத்து அற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந்து அற்று. 332
பெருஞ்செல்வம் வரும்போது, கூத்தாடும் இடத்தில் நிறைய மக்கள் வந்து
சேர்வதைப் போலச் சேரும் அச்செல்வம் போகும் போது கூத்துப் பார்த்த கூட்டம்
கலைந்து செல்வதைப் போலப் போய்விடும்.

அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல். 333
செல்வம் ஓர் இடத்தில் நிலைத்து நிற்காது. எனவே, அச்செல்வம்
இருக்கும்போதே நிலைத்து நிற்கும் அறங்களைச் செய்ய வேண்டும்.

நாள்என ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்
வாள்அது உணர்வார்ப் பெறின். 334
உணர்ந்து பார்த்தால் நாள் என்பது ஒரு கால அளவு. அது
உடம்பிலிருந்து உயிரைப் பிரித்து அறுக்கும் வாள் ஆகும்.

நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும். 335
நாவை அடக்கி விக்கல் எழுந்து சாவு நெருங்குவதற்கு முன்னே
நல்ல அறச் செயல்களை முடிந்த அளவு விரைந்து செய்ய வேண்டும்.

நெருநல் உளன்ஒருவன் இன்றுஇல்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு. 336
நேற்றிருந்தவன் இன்றில்லை, இறந்து போனான் என்று சொல்லும்
பெருமையை (இயலாமையை) உடையது இந்த உலகம்.

ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப
கோடியும் அல்ல பல. 337
ஒருவேளையாவது முறையோடு வாழ வேண்டும் என்பதை ஆராய்ந்து
அறியாதவர்கள் வீணாகப் பல கோடி எண்ணங்களைக் கொள்கிறார்கள்.

குடம்பை தனித்துஒழியப் புள்பறந்து அற்றே
உடம்போடு உயிர்இடை நட்பு. 338
உடம்பிற்கும் உயிருக்கும் உள்ள உறவென்பது கூட்டுக்கும் பறவைக்கும் உண்டான
தொடர்பு போன்றது. கூட்டை விட்டுப் பறவை எந்த நேரத்திலும் பறந்து சென்றுவிடும்.

உறங்கு வதுபோலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு. 339
சாவு என்பது ஒருவன் உறங்குவது போன்றது. பிறப்பு என்பது
அவன் விழிப்பதைப் போன்றது.

புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு. 340
நோய்களுக்கிடமான உடம்பின் ஒரு மூலையில் தங்கி இருக்கும்
உயிருக்கு நிலையாகத் தங்கி இருக்கும் இடம் இதுவரையில் அமையவில்லையோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன். 341
ஒருவன் எந்தெந்தப் பொருள்களிலிருந்து ஆசையை நீக்கிக் கொள்கிறானோ அந்தந்தப் பொருள்களால் அவன் துன்பம் அடைவதில்லை.

வேண்டின்உண் டாகத் துறக்க, துறந்தபின்
ஈண்டுஇயற் பால பல. 342
துன்பம் இல்லாத நிலை வேண்டும் என்றால் பொருள்களின் மீதுள்ள ஆசையை நீக்கிவிட வேண்டும். நீக்கிவிட்டால் அவனுக்கு இன்பங்கள் கிடைக்கும்.

அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு. 343
ஐந்து புலன்களின் ஆசையையும் அடக்கி வெற்றி பெற வேண்டும். அதற்காகத் துறக்க வேண்டிய எல்லாவற்றையும் ஒன்றாய்த் துறக்க வேண்டும்.

இயல்புஆகும் நோன்பிற்குஒன்று இன்மை; உடைமை
மயலாகும் மற்றும் பெயர்த்து. 344
தவம் செய்வதற்கு ஒரு பற்றும் இல்லாமல் இருக்க வேண்டும். பற்றிருந்தால் மீண்டும் மயங்குவதற்கு வழி உண்டாகும்.

மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல் பிறப்பு அறுக்கல்
உற்றார்க்கு உடம்பும் மிகை? 345
பிறவித் துன்பத்தை நீக்கிக் கொள்ள விரும்புகிறவனுக்கு உடம்பை வைத்திருப்பதே மிகுதி ஆகும். அப்படி இருக்கும்போது ஆசையால் வேறு பொருள்கள் மீது தொடர்பு கொள்வது எதற்கு?

யான்எனது என்னும் செருக்கு அறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும். 346
நான் எனது என்னும் அஞ்ஞானத்தை அழிப்பவன், தேவர்களும் அடைய முடியாத வீட்டுலகத்தை அடைவான்.

பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு. 347
நான், என்னுடையது என்னும் பற்றுகளை விடாதிருப்பவனைத் துன்பங்கள் விடாது பற்றிக் கொள்ளும்.

தலைப்பட்டார் தீரத் துறந்தார்; மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர். 348
முற்றும் துறந்தவரே துறவிகளுள் உயர்ந்தவர். அவ்வாறு துறக்காத மற்றவர்கள் அறியாமை என்னும் வலையில் அகப்பட்டுத் தவிப்போர் ஆவர்.

பற்றுஅற்ற கண்ணே பிறப்புஅறுக்கும்; மற்று
நிலையாமை காணப் படும். 349
ஆசைகளிலிருந்து முற்றிலும் விலகும்போது பிறவித் துயரம் நீங்கும். ஆசையை விடாதவர்கள் பிறப்பு, இறப்பாகிய நிலையற்ற தன்மையை அடைவார்கள்.

பற்றுக பற்றுஅற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு. 350
உலகத்தில் உள்ள எல்லாப் பற்றுகளையும் விட்டு விடுவதற்குப் பற்று இல்லாதவனாகிய கடவுளுடைய பற்றை மட்டும் நாம் விட்டு விடாமல் இருக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் அல்ல வற்றைப் பொருள் என்று உணரும்
மருளான்ஆம் மாணாப் பிறப்பு. 351
மெய்யான பொருள்களைப் பொய்யான பொருள்கள்
என்று எண்ணுவதால் பிறப்பு உயர்வை இழக்கிறது.

இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு. 352
மயக்கம் நீங்கிய குற்றம் இல்லாத அறிவை உடையவருக்கு
அறியாமை நீங்கும் இன்பம் உண்டாகும்.

ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணியது உடைத்து. 353
எதையும் சந்தேகம் இல்லாமல் தெளிவாய் அறியக் கூடியவர்களுக்கு, இந்த
உலகத்தை விட, அவர்கள் அடைய வேண்டிய விண்ணுலகம் அருகில் உள்ளது ஆகும்.

ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயம்இன்றே
மெய்யுணர்வு இல்லா தவர்க்கு. 354
மெய்யுணர்வு இல்லாதவர்கள் ஐம்புலன்களின் உணர்வுகளை
முழுமையாகப் பெற்றிருந்தாலும் பயன் இல்லை.

எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. 355
எந்தப் பொருளாய் இருந்தாலும் அதன் தோற்றத்தைக் கண்டு மயங்காமல்
அந்தப் பொருளின் உண்மையான தன்மையை அறிவதே அறிவாகும்.

கற்றுஈண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றுஈண்டு வாரா நெறி. 356
கற்க வேண்டியவற்றைக் கற்று, உணர வேண்டிய உண்மைப் பொருள்களை
உணர்ந்தவர்கள், மீண்டும் பிறவி எடுக்காத நிலையை அடைவார்கள்.

ஓர்த்துஉள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாப்
பேர்த்துஉள்ள வேண்டா பிறப்பு. 357
ஒருவனுடைய உள்ளம் உண்மைப் பொருளை ஆராய்ந்து உறுதியாய்
உணர்ந்து விட்டால் அவனுக்கு மீண்டும் பிறப்பு என்பதேயில்லை.

பிறப்புஎன்னும் பேதைமை நீங்கச் சிறப்புஎன்னும்
செம்பொருள் காண்பது அறிவு. 358
பிறவித் துன்பத்திற்குக் காரணம் அறியாமை. அறியாமை நீங்கப் பெருமைக்குரிய
செம்பொருளை உணர்வதே அறிவாகும்.

சார்புஉணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றுஅழித்துச்
சார்தரா சார்தரு நோய். 359
எல்லாவற்றிற்கும் தொடர்புடைய செம்பொருளான தெய்வத்தை உணர்ந்து, பொருள்கள்மீது
பற்று இல்லாமல் வாழ்ந்தால் அவனைச் சார்வதற்குரிய துன்பங்கள் மறுபடி வந்து அடையா.

காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய். 360
ஆசை, சினம், அறியாமை ஆகிய மூன்று குற்றங்களும் அடியோடு ஒழிந்து
விட்டால் அவற்றால் ஏற்படும் துன்பங்கள் இல்லாமல் ஒழியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அவாஎன்ப எல்லா உயிர்க்கும்எஞ் ஞான்றும்**
**தவாஅப் பிறப்பு ஈனும் வித்து.** 361
எல்லா உயிர்களுக்கும் எக்காலத்திலும் நீங்காமல் வருகின்ற
பிறவி என்ற துன்பத்திற்கு ஆசை என்பதே விதை ஆகும்.

**வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை; மற்று அது**
**வேண்டாமை வேண்ட வரும்.** 362
ஒருவன் ஒன்றை விரும்ப வேண்டும் என்றால் மறுபடியும் பிறவாமல் இருப்பதைத்தான்
விரும்பவேண்டும். அந்த நிலை, எந்த ஒரு பொருளையும் விரும்புவதை விட்டு விட்டால்தான் வரும்.

**வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டு இல்லை**
**யாண்டும் அஃதுஒப்பது இல்.** 363
ஆசை இல்லாமல் இருப்பதை விடச் சிறந்த செல்வம் இவ்வுலகில்
வேறில்லை. அதற்கு நிகரான வேறொன்றும் எங்கும் இல்லை.

**தூஉய்மை என்பது அவாஇன்மை; மற்று அது**
**வாஅய்மை வேண்ட வரும்.** 364
தூய நிலை என்பது, ஆசை இல்லாத நிலையே. அது வாய்மை
பேசுவது என்பதை விரும்பினால் உண்டாகும்.

**அற்றவர் என்பார் அவாஅற்றார்; மற்றையார்**
**அற்றாக அற்றது இலர்.** 365
ஆசையை முழுமையாய் நீக்கியவரையே அவா அற்றவர் என்று சொல்ல வேண்டும்.
ஆசையை விடாதவரைப் பற்றில்லாதவர் என்று சொல்ல முடியாது.

**அஞ்சுவ தோரும் அறனே; ஒருவனை**
**வஞ்சிப்ப தோரும் அவா.** 366
ஒருவனை வஞ்சித்து அவன் வீடுபேறு அடைவதிலிருந்து கெடுப்பது ஆசையே
ஆகும். எனவே, ஆசைக்கு அஞ்சி வாழ்வதே அறம்.

**அவாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை**
**தான்வேண்டும் ஆற்றான் வரும்.** 367
ஆசையை அறவே நீக்கிவிட்டால், அவன் வாழ்க்கை கெடாமல் இருப்பதற்குரிய
நல்ல செயல், அவன் விரும்புகின்ற முறையில் வந்து சேரும்.

**அவாஇல்லார்க்கு இல்லாகும் துன்பம்; அஃது உண்டேல்**
**தவாஅது மேன்மேல் வரும்.** 368
ஆசை இல்லாதவருக்குத் துன்பம் இல்லை. ஆசை இருந்தால் துன்பங்கள்
நீங்காமல் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கும்.

**இன்பம் இடையறாது ஈண்டும் அவாஎன்னும்**
**துன்பத்துள் துன்பம் கெடின்.** 369
துன்பங்களிலெல்லாம் கொடியதான ஆசைத் துன்பம்
அழிந்து போனால் இன்பம் தொடர்ந்து வந்து சேரும்.

**ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே**
**பேரா இயற்கை தரும்.** 370
ஒருபோதும் அடங்காத நிலையை உடையது ஆசை. அதை அடக்கி
அழித்தால் நீங்காத இன்ப வாழ்வு அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகூழால் தோன்றும் அசைவு இன்மை, கைப்பொருள்
போகூழால் தோன்றும் மடி. 371
ஒருவனுக்குச் செல்வம் வளர்வதற்கு விதி முயற்சியை உண்டாக்கும்.
செல்வம் அழிவதற்கு அந்த விதியே சோம்பலை உண்டாக்கும்.

பேதைப் படுக்கும் இழவு ஊழ்; அறிவுஅகற்றும்
ஆகல்ஊழ் உற்றக் கடை. 372
பொருள் இழப்பதற்குக் காரணமான விதி ஒருவனை அறிவற்றவனாய் ஆக்கும்.
பொருள் சேர்வதற்குக் காரணமான விதி அவனை அறிவாளியாக்கும்.

நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றும்தன்
உண்மை அறிவே மிகும். 373
ஒருவன் பலதுறை நூல்களையும் மிக நுட்பமாய்க் கற்றாலும் விதியின் காரணமாய் அவன் நூல்களைக் கற்பதற்கு முன் அவனுக்கு இருந்த அறியாமையே மிகுதியாய்த் தோன்றும்.

இருவேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளியர் ஆதலும் வேறு. 374
ஊழின் காரணமாய் உலகத்தில் இரண்டு தன்மைகள் அமைகின்றன. செல்வம் உள்ளவராய் இருப்பது வேறு; அறிவு உள்ளவராய் இருப்பது வேறு.

நல்லவை எல்லா அம் தீயவாம்; தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு. 375
செல்வத்தைத் தேடுகின்ற முயற்சியில் விதிப் பயனால் நல்லவை
தீயவை ஆகலாம். தீயவை நல்லவை ஆகலாம்.

பரியினும் ஆகாவாம் பால் அல்ல உய்த்துச்
சொரியினும் போகா தம. 376
ஊழின் காரணத்தால் நமக்குரியவை அல்லாத பொருள்களைக் கட்டிக் காத்தாலும் அவை நம்மிடம் நிலைத்திரா. நமக்குரிய பொருள்களை வெளியே கொண்டுபோய்க் கொட்டினாலும் அவை நம்மை விட்டு நீங்கா.

வகுத்தான் வகுத்த வகைஅல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது. 377
கோடி கோடியாய்ப் பொருள்களைச் சேர்த்தாலும் அனுபவிப்பதற்கு
விதி இருந்தால்தான் அனுபவிக்க முடியும்.

துறப்பார்மன் துப்புரவு இல்லார் உறற்பால
ஊட்டா கழியும் எனின். 378
விதியானது ஒருவனுக்குக் கொடுக்கிற துன்பங்களைக் கொடுக்காமல்
இருக்குமானால், அனுபவிக்கப் பொருள் இல்லாத அந்த வறியவன் துறவி ஆவான்.

நன்றுஆங்கால் நல்லவாக் காண்பவர் அன்று ஆங்கால்
அல்லல் படுவது எவன்? 379
நல்வினை வரும்போது மகிழ்ச்சி அடைகிறவன் தீவினை வரும்போது வருத்தப்படுவது ஏன்? இருவினைகளுக்கும் ஊழ்வினையே காரணம் ஆகும்.

ஊழின் பெருவிலி யாஉள மற்றுஒன்று
சூழினும் தான்முந்து உறும். 380
விதியை விட வலிமையானது வேறெதுவும் இல்லை. விதியை விலக்குவதற்கு
வேறு வழிகளைத் தேடினாலும் அங்கும் விதியே முன்வந்து நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு. 381
சிறந்த படை, உயர்ந்த குடிமக்கள், உணவுப் பொருள்கள், அமைச்சர்கள், உயர் நட்பு, பாதுகாப்பு முறைகள் ஆகிய ஆறு அங்கங்களைப் பெற்றவனே அரசர்களுக்குள் ஆண் சிங்கம் போன்றவன் ஆவான்.

அஞ்சாமை ஈகை அறிவுஊக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க்கு இயல்பு. 382
அச்சம் இல்லாமல் இருத்தல், வறியவனுக்கு உதவுதல், அறிவுடன் இருத்தல், ஊக்கமுடன் இருத்தல் என்ற நான்கு தன்மைகளும் குறையாமல் இருப்பவனே சிறந்த அரசன் ஆவான்.

தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலன்ஆள் பவர்க்கு. 383
காலம் தாழ்த்தாமல் விழிப்புடன் இருப்பது, கல்வி அறிவுடைமை, துணிவுடைமை என்ற மூன்றும் ஆட்சி செய்யும் அரசனிடம் நீங்காமல் இருக்க வேண்டியவை ஆகும்.

அறன்இழுக்காது அல்லவை நீக்கி மறன்இழுக்கா
மானம் உடையது அரசு. 384
ஆட்சி முறையில் அறம் தவறாமல், நீதி இல்லாதனவற்றை நீக்கி, வீரத்தில் குறையாது, மானத்தைப் போற்றுபவனே சிறந்த அரசன் ஆவான்.

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு. 385
பொருள் வரும் வழிகளை உண்டாக்குதல், வரும் பொருள்களைச் சேர்த்தல், சேர்ந்த பொருள்களைக் காத்தல், காத்த பொருள்களைப் பகிர்ந்து கொடுத்தல் ஆகிய பண்புகளை உடையவனே நல்ல அரசன் ஆவான்.

காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம். 386
குடிமக்கள் நெருங்குவதற்கு எளியவனாகவும் கடுமையான சொற்களைப் பேசாதவனாகவும் விளங்கும் அரசன் ஆளும் நாட்டை உலகமே புகழும்.

இன்சொலால் ஈத்துஅளிக்க வல்லாற்குத் தன்சொலால்
தான்கண்டு அனைத்து இவ்வுலகு. 387
எளிய மக்களிடம் இன்சொல் பேசித் தகுந்தவண்ணம் உதவி செய்யும் அரசனுக்குப் புகழ் சேரும். அவன் விருப்பம் போல் குடிமக்களும் அமைவார்கள்.

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன், மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும். 388
நீதி நெறிமுறைகள் தவறாமல் குடிகளைக் காப்பாற்றும் அரசனை, மக்கள் தனிப் பெரும் தெய்வம் என்று மதித்துப் போற்றுவார்கள்.

செவிகைப்பச் சொல்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு. 389
மனம் புண்படும்படியாய்க் காதில் விழும் சொற்களைக் கூடப் பொறுத்துக் கொள்ளும் அரசனின் ஆட்சியின் கீழ் உலகமே தங்கும்.

கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க்கு ஒளி. 390
குடிமக்களுக்குக் கொடுக்கும் பண்பு, காக்கும் மனம், நீதி தவறாத ஆட்சி, எல்லாரையும் பாதுகாக்கும் குணம் ஆகிய நான்கு தன்மைகளையும் கொண்ட அரசன், அரசர்களுக்கெல்லாம் ஒளிவிளக்கு போன்றவனாவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்க கசடுஅறக் கற்பவை; கற்றபின்
நிற்க அதற்குத் தக. 391
கற்பதற்கேற்ற நூல்களைக் குற்றம் இல்லாமல் கற்கவேண்டும். கற்ற நூல்களில் அறிந்து கொண்டவற்றிற்குத்தக்கவாறு வாழ்க்கையில் அவற்றைப் பின்பற்றி நடக்க வேண்டும்.

எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு. 392
எண் பற்றிய கல்வியும் எழுத்து பற்றிய கல்வியும் மக்களுக்கு இரண்டு கண்களைப் போன்றவை ஆகும்.

கண்உடையர் என்பவர் கற்றோர்; முகத்துஇரண்டு
புண்உடையர் கல்லா தவர். 393
கற்றவர்களே கண் உடையவர் என்ற சிறப்பிற்குரியவர்கள். கல்லாதவர் முகத்தில் இருப்பவை புண்களே ஆகும்.

உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில். 394
மகிழ்ச்சியோடு ஒன்றாய்க் கூடிப் பழகி, இனி இவரை எப்போது காணப்போகிறோம்? என்று பசுமையாய் நினைத்துப் பிரிந்து செல்வது புலமை உடையவர்களின் செயலாகும்.

உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்;
கடையரே கல்லா தவர். 395
செல்வர்கள் முன்னே ஏழைகள் ஏங்கி நிற்பது போலக் கற்றவர் முன்னே ஏங்கிப் பணிந்து நின்றாவது கல்வி கற்றவரே உயர்ந்தவர், கல்லாதவர் தாழ்ந்தவரேயாம்.

தொட்டனைத்து ஊறும் மணல்கேணி; மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு. 396
மணலில் எந்த அளவு தோண்டுகிறோமோ அந்த அளவுக்கு நீர் சுரக்கும். அது போல, மக்கள் எந்த அளவுக்கு நூல்களைக் கற்கிறார்களோ அந்த அளவுக்கு அறிவும் சுரக்கும்.

யாதானும் நாடாமால், ஊர்ஆமால், என்ஒருவன்
சாந்துணையும் கல்லாத வாறு? 397
கற்றவர்களுக்குத் தம் நாட்டையும் ஊரையும் போலவே பிறநாடுகளும் ஊர்களும் உரிமை உடையனவாகும். உண்மை இவ்வாறிருக்க, ஒருவன் சாகும்வரை கல்வி கற்காமல் காலம் கழிப்பது ஏன்?

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி, ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து. 398
ஒருவன் ஒரு பிறவியில் கற்ற கல்வியால் வரும் பெருமையானது, அப்பிறப்புக்கு மட்டும் அல்லாமல் ஏழு பிறப்பிற்கும் தொடர்ந்து வரும்.

தாம்இன் புறுவது உலகுஇன் புறக்கண்டு
காமுறுவர் கற்றுஅறிந் தார். 399
நன்குகற்றறிந்தவர்கள்தம்முடையமகிழ்ச்சிக்குக்காரணமானகல்வியேஉலகமக்களின் மகிழ்ச்சிக்கும்காரணமாய்இருப்பதைஅறிந்து, அக்கல்வியையேமேலும்மேலும்கற்கவிரும்புவார்கள்.

கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடுஅல்ல மற்றை யவை. 400
ஒருவனுக்கு அழிவில்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும். மற்றச் செல்வங்கள் அத்தகைய சிறப்புடையவை அல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரங்குஇன்றி வட்டு ஆடி அற்றே நிரம்பிய
நூல்இன்றிக் கோட்டி கொளல். 401
அறிவு நிரம்புவதற்குரிய நூல்களைக் கற்காமல் கற்றோர் நிறைந்த அவையில் பேசுவது, ஆடுவதற்குரிய இடத்தை உண்டாக்கிக் கொள்ளாமலேயே சூதாட்டக்காயை உருட்டி ஆடுவதைப் போன்றது.

கல்லாதான் சொல்கா முறுதல் முலையிரண்டும்
இல்லாதாள் பெண்காமுற்று அற்று. 402
கற்றவர்கள் நிறைந்த அவையில் கல்லாதவன் ஒன்றைச் சொல்ல விரும்புவது, மார்பகங்கள் இரண்டும் இல்லாதவள் பெண் தன்மையை விரும்புவது போன்றது.

கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்
சொல்லாது இருக்கப் பெறின். 403
கற்றவரின் முன்னிலையில் ஒன்றையும் சொல்லாமல் இருந்தால் கல்லாதவரும் மிக நல்லவரே!

கல்லாதான் ஒட்பம் கழியநன்று ஆயினும்
கொள்ளார் அறிவுடை யார். 404
கல்வி அறிவில்லாதவன் சில வேளைகளில் சிறப்பாய்த் தன் அறிவைக் காட்டிக் கொண்டாலும் கற்றவர்கள் அதனை அறிவுடைமையென ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும். 405
கல்லாதவன் தன்னை அறிவுடையவன் போலக் காட்டிக்கொள்ளும் தன்மை, கற்றவர் முன்னே அவன் வாய் திறந்து பேசும்போது அந்தப் பேச்சினால் கெட்டுவிடும்.

உளர்என்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களர்அனையர் கல்லா தவர். 406
கல்லாதவர்கள் உயிரோடு இருக்கிறார்கள் என்று சொல்லும் நிலையில்தான் இருக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் ஒன்றுமே விளையாத களர் நிலத்தைப் போன்று பயன்படாதவர்கள்.

நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை அற்று. 407
நுட்பமாய் எதையும் அறியும் தன்மையில்லாதவனின் அழகிய தோற்றம், மண்ணால் உருவாக்கப்பட்ட அழகான பொம்மை போன்றது.

நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கண் பட்ட திரு. 408
கல்லாதவனிடம் சேர்ந்துள்ள செல்வமானது, நல்லவரிடம் உள்ள வறுமையை விட மிகக் கொடிய துன்பத்தை உண்டாக்கக் கூடியது.

மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்துஇலர் பாடு. 409
கல்லாதவர்கள் உயர்ந்த குடியில் பிறந்திருந்தாலும் தாழ்ந்தவரே. கற்றவர்கள் தாழ்ந்த குடியில் பிறந்தவர்கள் ஆயினும் உயர்ந்தவரே.

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர். 410
அறிவு மிகுந்த நூல்களைக் கற்றவரே மக்களாய் மதிக்கப்படுவார்கள். கல்லாதவர்கள் மிருகத்திற்குச் சமம் ஆவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்**
**செல்வத்துள் எல்லாம் தலை.** 411
செவியால் கேட்டறிவது ஒரு செல்வமாகும். அது ஏனைய செல்வங்கள் அனைத்திலும் தலைமையானதாகும்.

**செவிக்கு உணவு இல்லாத போழ்து சிறிது**
**வயிற்றுக்கும் ஈயப் படும்.** 412
கேட்டறிதல் என்னும் உணவு செவிக்கு இல்லாத போது சிறிதளவு உணவு வயிற்றுக்கும் தரப்படும்.

**செவிஉணவின் கேள்வி உடையார் அவிஉணவின்**
**ஆன்றாரோடு ஒப்பர் நிலத்து.** 413
செவி உணவான கேள்வி அறிவை உடையவர் நிலத்தில் வாழ்ந்தாலும், விண்ணுலகில் அவி உணவை உண்ணும் தேவர்களுக்கு இணையாவார்கள்.

**கற்றிலன் ஆயினும் கேட்க அஃதுஒருவற்கு**
**ஒற்கத்தின் ஊற்றுஆம் துணை.** 414
ஒருவன் கற்கவில்லை என்றாலும், கற்றவர்களிடம் கேட்டு, அறிய வேண்டியவற்றை அறிய வேண்டும். தளர்ச்சி வரும்போது அந்த அறிவு, ஊன்றுகோல்போலத் துணை ஆகும்.

**இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே**
**ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல்.** 415
ஒழுக்கம் உடையவர்களின் வாய்ச்சொற்கள், வழுக்குகின்ற சேற்று நிலத்தில் நடக்க ஊன்றுகோல் போல உதவும்.

**எனைத்தானும் நல்லவை கேட்க; அனைத்தானும்**
**ஆன்ற பெருமை தரும்.** 416
மிகச் சிறிதளவாய் இருந்தாலும் நல்ல சொற்களைக் கேட்க வேண்டும். கேட்ட அளவிற்கு அவை நிறைவான பெருமையைத் தரும்.

**பிழைத்துஉணர்ந்தும் பேதைமை சொல்லார் இழைத்துஉணர்ந்து**
**ஈண்டிய கேள்வி யவர்.** 417
நுட்பமான கேள்வி ஞானத்தை உடையவர்கள், சில சமயம் பொருளைத் தவறாய் உணர்ந்திருந்தாலும் பேதைமையான எதையும் பேச மாட்டார்கள்.

**கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்**
**தோட்கப் படாத செவி.** 418
பெரியவர்களின் அறிவுரைகளைக் கேட்காதவர்களின் காதுகள், கேட்கும் தன்மை உடையவையாய் இருந்தாலுங்கூட, அவை கேட்கும் சக்தி இல்லாதவையே.

**நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய**
**வாயினர் ஆதல் அரிது.** 419
கேட்டுத் தெரிந்த நுட்பமான அறிவுடையர் அல்லாத மற்றவர், பணிவுடைய சொற்களைப் பேசும் வாயினராய் இருக்க மாட்டார்கள்.

**செவியின் சுவைஉணரா வாய்உணர்வின் மாக்கள்**
**அவியினும் வாழினும் என்?** 420
செவியால் கேள்விச் சுவையை உணராமல் வாயால் உண்ணும் உணவின் சுவையை மட்டும் அறிந்தவர்கள் வாழ்ந்தால் என்ன, இறந்தால் என்ன?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுஅற்றம் காக்கும் கருவி; செறுவார்க்கும்
உள்அழிக்கல் ஆகா அரண். 421
அறிவு, அழிவு வாராமல் காக்கும் கருவியாகும்; பகைவர்களால்
அழிக்க முடியாத உள் கோட்டையுமாகும்.

சென்ற இடத்தால் செலவிடாது தீதுஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு. 422
மனத்தை அது போன போக்கிலே போகவிடாமல் தீமையிலிருந்து
விலக்கி நல்ல வழியில் போகச் செய்வதே அறிவு ஆகும்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்,அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. 423
எந்தப் பொருளை எவர் சொல்லக் கேட்டாலும், அப்பொருளை அப்படியே ஏற்றுக்
கொள்ளாமல், அதன் உண்மைப் பொருளை அறிந்து கொள்வதே அறிவு ஆகும்.

எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்பது அறிவு. 424
தான் பிறருக்குச் சொல்லும்போது, அது அவர்களுக்குப் புரியும்படியும் மனதில்
பதியும்படியும் சொல்ல வேண்டும். பிறரிடம் கேட்கும்போது அதில் உள்ள
நுட்பமான பொருளை ஆராய்ந்து அறிய வேண்டும். அதுவே அறிவாகும்.

உலகம் தழீஇயது ஒட்பம், மலர்தலும்
கூம்பலும் இல்லது அறிவு. 425
உலகத்தில் உயர்ந்தவர்களை நட்பாய் ஆக்கிக் கொள்வது அறிவு. அந்த அறிவு
விரிவதும் சுருங்குவதும் இல்லாமல் எப்போதும் ஒரே அளவில் இருக்கும்.

எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு. 426
உலகத்தில் உயர்ந்தவர்கள் எப்படி வாழ்கிறார்களோ அது போல
அவர்களைப் பின்பற்றி அவ்வாறு வாழ்வதே அறிவுடைமை ஆகும்.

அறிவுஉடையார் ஆவது அறிவார் அறிவுஇலார்
அஃதுஅறி கல்லா தவர். 427
பின் நடக்க இருக்கின்றவற்றை முன்னரே அறிந்து கொள்ளக் கூடியவர்கள்
அறிவுடையவர்கள்; அவ்வாறு தெரிந்து கொள்ள முடியாதவர்கள் அறிவில்லாதவர்கள்.

அஞ்சுவது அஞ்சாமை பேதைமை, அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில். 428
அஞ்ச வேண்டியதற்கு அஞ்சாமல் இருப்பது அறிவில்லாத தன்மை;
அஞ்ச வேண்டியதற்கு அஞ்சுவதே அறிவுடைமை.

எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய். 429
பின் வரக்கூடியவற்றை முன்னே அறிந்து கொள்ளும் அறிவுடையவருக்கு,
அவர் அதிர்ச்சியடைந்து நடுங்கும்படியாக ஒரு துன்பமும் வராது.

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர். 430
அறிவுடையார், வேறொன்றும் இல்லாதிருந்தாலும், எல்லாம் உடையவரே.
அறிவில்லாதவர், எல்லாம் உடையவராய் இருந்தாலும் ஒன்றும் இல்லாதவரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து. 431
கர்வம், சினம், காமம் ஆகிய குற்றங்கள் இல்லாதவருடைய உயர்வே
அனைவரும் விரும்பும் பெருமையை உடையதாகும்.

இவறலும் மாண்பு இறந்த மானமும் மாணா
உவகையும் ஏதம் இறைக்கு. 432
பொருள் கொடுத்து உதவாத தன்மையும், பெருமை இல்லாத தன்மானமும், தகுதி
இல்லாத மகிழ்ச்சியும் நாட்டை ஆளுகின்றவர்களுக்குக் குற்றங்கள் ஆகும்.

தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார். 433
பழிக்கு அஞ்சுகின்ற பெருமக்கள், தினையளவான சிறுகுற்றம் ஏற்பட்டாலும், அதைப் பனையளவு
மிகப் பெரியதாய் எண்ணி மறுபடி அக்குற்றத்தைச் செய்யாமல் காத்துக் கொள்வார்கள்.

குற்றமே காக்க பொருள்ஆகக் குற்றமே
அற்றம் தரூஉம் பகை. 434
குற்றமே ஒருவனுக்கு அழிவை உண்டாக்கும் பகையாகும். எனவே, குற்றம்
செய்யாமல் இருப்பதையே கொள்கையாகக் கொள்ள வேண்டும்.

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும். 435
குற்றம் உண்டாவதற்கு முன்னரே அதை வராமல் காத்துக் கொள்ளாதவனுடைய
வாழ்க்கை, நெருப்பின் அருகில் வைத்த வைக்கோல் போல் அழிந்துவிடும்.

தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்றம் ஆகும் இறைக்கு? 436
தன்னிடம் உள்ள குற்றத்தை முதலில் நீக்கிவிட்டுப் பின்னர் மற்றவர்களிடம்
உள்ள குற்றங்களை ஆராயவல்ல தலைவனுக்கு ஒரு குற்றமும் நேராது.

செயற்பால செய்யாது இவறியான் செல்வம்
உயற்பாலது அன்றிக் கெடும். 437
செய்ய முடிந்த நன்மைகளைக்கூடச் செய்யாமல் சேர்த்து வைத்திருப்பவனுடைய
செல்வம் அவனாலேயே பாதுகாக்க வழி இல்லாமல் அழியும்.

பற்றுஉள்ளம் என்னும் இவறன்மை எற்றுள்ளும்
எண்ணப் படுவதுஒன்று அன்று. 438
பொருளின் மீது அளவு கடந்த ஆசை வைத்து யாருக்கும் உதவாமல் இருக்கும்
உலோபித்தனம், மற்றக் குற்றங்களோடு ஒப்பிட முடியாத தனிப் பெரும் குற்றமாகும்.

வியவற்க எஞ்ஞான்றும் தன்னை; நயவற்க
நன்றி பயவா வினை. 439
தன்னைப் பெரிதாய் எண்ணி வியந்து தற்பெருமை கொள்ளக் கூடாது
நன்மை தராத செயலில் ஒரு போதும் விருப்பம் கொள்ளக் கூடாது.

காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்
ஏதில ஏதிலார் நூல். 440
தாம் விரும்புவனவற்றைத் தம் பகைவர் அறியாதபடி பயன்படுத்த
முடிந்த தலைவனிடம் பகைவரின் வஞ்சகமான சூழ்ச்சிகள் பயனற்றுப் போகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறன்அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறன்அறிந்து தேர்ந்து கொளல். 441
அறம் உணர்ந்தவராய்த் தம்மை விட மூத்தவராய் உள்ள அறிவுடையவரின்
நட்பை அடைகின்ற வழியை ஆராய்ந்து, அறிந்து பெற வேண்டும்.

உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல். 442
வந்துள்ள துன்பத்தைப் போக்கி இனித் துன்பம் என்பது வாராதவண்ணம் முன்னதாகவே
தெரிந்து காக்கின்ற தன்மை உடையவரைத் தெரிந்து துணையாய்க் கொள்ள வேண்டும்.

அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல். 443
பெரியவரைப் போற்றித் தமக்குச் சுற்றமாய் ஆக்கிக் கொள்ளுதல், ஒருவன்
அடையும் பெருஞ்சிறப்புகளுள் எல்லாம் முதன்மையானதாகும்.

தம்மின் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாம் தலை. 444
தம்மைவிட எல்லா வகையிலும் பெரியவரைத் தமக்குச் சொந்தமாய்க் கொண்டு
அவர்கள் வழி நடப்பது, வல்லமைகளுளெல்லாம் பெரிய வல்லமை ஆகும்.

சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல். 445
தக்க வழிகளை ஆராய்ந்து சொல்பவர்கள் அரசனுக்கு ஒளி தரும் கண்களைப் போன்றவர்கள்.
அரசன் அத்தகையவர்களை ஆராய்ந்து தனக்குத் துணையாய்க் கொள்ள வேண்டும்.

தக்கார் இனத்தனாய்த் தான்ஒழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்தது இல். 446
அறிவிற் சிறந்தவர்களை உறவாய்க் கொண்டு அவர்கள் ஆலோசனைப்படி நடக்கின்ற
தலைவனுக்குப் பகைவர்கள் ஒருபோதும் எந்தத் தீமையும் செய்யமுடியாது.

இடிக்கும் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்கும் தகைமை யவர். 447
தவறு செய்யும்போது கடுமையாய்க் கண்டித்துக் காக்கும் பெரியவர்களைத் தக்க
துணையாய்க் கொண்டு ஆட்சி செய்பவனைக் கெடுக்கும் ஆற்றல் யாருக்கும் இல்லை.

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும். 448
கண்டித்து அறிவுரை கூறுகின்ற பெரியவர்களைப் பெறாத ஆட்சியாளன், காவல் அற்றவன்
ஆவான். அப்படிப்பட்டவனைக் கெடுக்கப் பகைவர் இல்லையாயினும் அவன் தானே கெடுவான்.

முதல்இலார்க்கு ஊதியம் இல்லை; மதலையாம்
சார்புஇலார்க்கு இல்லை நிலை. 449
மூலதனம் இல்லாத வியாபாரிக்கு வருவாய் இல்லை. தம்மைத் தக்க தருணத்தில்
தாங்கிக் காப்பாற்றும் துணை இல்லாதவனுக்கு ஆட்சி நிலை இல்லை.

பல்லார் பகைகொளலின் பத்துஅடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல். 450
நல்லவராகிய பெரியவர்களின் தொடர்பை விட்டு விடுவது, பலரது பகையைத்
தேடிக் கொள்ளுவதை விடப் பத்துப் பங்கு தீமை உடையதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்றினம் அஞ்சும் பெருமை; சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும். 451

பெருமைக்குரிய குணம் கொண்டவர்கள் சிறுமதியாளர்களைக் கண்டு அஞ்சுவார்கள். இழிகுணம் கொண்டவர்கள் சிறுமதியாளர்களையே சுற்றமாய் அணைத்துக் கொள்வார்கள்.

நிலத்துஇயல்பால் நீர்திரிந்து அற்றுஆகும் மாந்தர்க்கு
இனத்துஇயல்பது ஆகும் அறிவு. 452

நீரானது, சேரும் நிலத்தின் தன்மையை அடைந்து, இயல்பான தன்மையிலிருந்து வேறுபடும். அதுபோல மக்கள்தம் அறிவு, சேரும் இனத்திற்கேற்ப மாறுபடும்.

மனத்தான்ஆம் மாந்தர்க்கு உணர்ச்சி இனத்தான்ஆம்
இன்னான் எனப்படும் சொல். 453

மக்களுக்கு இயற்கை அறிவு மனத்தால் உண்டாகும். அதுபோல, இப்படிப்பட்டவன் என்று மதிக்கும் சொல் அவன் இனத்தால் ஏற்படும்.

மனத்து உளதுபோலக் காட்டி ஒருவற்கு
இனத்துஉளது ஆகும் அறிவு. 454

ஒருவனுடைய சிறப்பு அறிவு அவனுடைய மனத்தின் அறிவு போலத் தோன்றும். ஆனால், அந்த அறிவு அவன் சேர்ந்த இனத்திலிருந்து தோன்றியதே ஆகும்.

மனம்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனம்தூய்மை தூவா வரும். 455

மனத்தின் தூய்மையும் அவனுடைய செயலின் தூய்மையும் அவன் சேர்ந்த இனத்தின் தூய்மையைப் பொறுத்தே அமையும்.

மனம்தூயார்க்கு எச்சம்நன்று ஆகும்; இனம்தூயார்க்கு
இல்லைநன்று ஆகா வினை. 456

மனத்தூய்மை உடையவருக்கு அவருக்குப் பின் எஞ்சி நிற்கும் புகழ் முதலிய அனைத்தும் நல்லவையாய் அமையும். நல்ல இனத்தோடு தொடர்பு கொண்டவருக்கு அனைத்தும் நல்லவையாய் அமையும்.

மனநலம் மன்உயிர்க்கு ஆக்கம்; இனநலம்
எல்லாப் புகழும் தரும். 457

மனத்தின் நன்மை எல்லா உயிருக்கும் ஆக்கத்தைக் கொடுக்கும். இனத்தின் நன்மை ஆக்கத்தோடு எல்லாப் புகழையும் சேர்த்துக் கொடுக்கும்.

மனநலம் நன்குஉடையர் ஆயினும் சான்றோர்க்கு
இனநலம் ஏமாப்பு உடைத்து. 458

இயல்பாகவே மனநலம் கொண்டவராய் இருந்தாலும் அவர்களுக்குச் சான்றோர் உறவு மேலும் நல்ல காவலாய் அமையும்.

மனநலத்தின் ஆகும் மறுமை; மற்று அஃதும்
இனநலத்தின் ஏமாப்பு உடைத்து. 459

மனத்தின் நலத்தால் மறுபிறவியிலும் இன்பம் உண்டாகும். அதுவும் நல்லவர் உறவால் மேலும் கூடுதலான சிறப்பைப் பெறும்.

நல்இனத்தின் ஊங்கும் துணைஇல்லை; தீஇனத்தின்
அல்லல் படுப்பதூஉம் இல். 460

உலகில் ஒருவருக்கு நல்ல இனத்தை விடச் சிறந்த துணையும் இல்லை, தீய இனத்தைவிடத் துன்பம் தரும் பெரும் பகையும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 47. தெரிந்து செயல்வகை

**அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்**
**ஊதியமும் சூழ்ந்து செயல்.** 461
ஒரு செயலைத் தொடங்குமுன் அதனால் வரும் அழிவையும் அழிந்த பின் வரும் ஆக்கத்தையும், செய்து முடித்த பின் வரும் பயன்களையும் எண்ணிப் பார்த்துச் செய்ய வேண்டும்.

**தெரிந்த இனத்தொடு தேர்ந்துஎண்ணிச் செய்வார்க்கு**
**அரும்பொருள் யாதுஒன்றும் இல்.** 462
ஒரு செயலைச் செம்மையாய்ச் செய்யத் தெரிந்தவர்களோடு நன்கு ஆலோசித்து, தாமும் நன்கு சிந்தித்துச் செய்பவருக்கு அரிய செயல் என ஒன்றும் இல்லை.

**ஆக்கம் கருதி முதல் இழக்கும் செய்வினை**
**ஊக்கார் அறிவுடை யார்.** 463
வரவிருக்கும் வருவாயைக் கருதி இப்போதுள்ள மூலதனத்தை இழந்துவிடக்கூடிய செயலை அறிவுடையவர்கள் செய்ய மாட்டார்கள்.

**தெளிவில் அதனைத் தொடங்கார், இளிவுஎன்னும்**
**ஏதப்பாடு அஞ்சு பவர்.** 464
தமக்கு இழிவேற்படக்கூடாது என்று எச்சரிக்கையோடு நினைப்பவர்கள், தாம் தெளிவாய் அறிந்து கொள்ளாத எந்தச் செயலையும் செய்யத் தொடங்க மாட்டார்கள்.

**வகையறச் சூழாது எழுதல் பகைவரைப்**
**பாத்திப் படுப்பது ஓர் ஆறு.** 465
செயலின் தன்மையை நன்கு ஆராயாமல் செயல்படத் தொடங்குவது என்பது பகைவரை வளரும் வழியில் மேலும் நிலைபெறச் செய்வதாய் முடியும்.

**செய்தக்க அல்ல செயக்கெடும்; செய்தக்க**
**செய்யாமை யானும் கெடும்.** 466
ஒருவன் செய்ய வேண்டாதவற்றைச் செய்வதும் கேடாகும், செய்ய வேண்டியவற்றைச் செய்யாமல் விடுவதும் கேடாகும்.

**எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின்**
**எண்ணுவம் என்பது இழுக்கு.** 467
செய்யும் வழிகளை நன்கு ஆலோசித்தே செயல்படத் தொடங்க வேண்டும். தொடங்கிய பிறகு ஆலோசிக்கலாம் என்பது தவறாகும்.

**ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று**
**போற்றினும் பொத்துப் படும்.** 468
செய்ய வேண்டிய முறைப்படி செய்யாத முயற்சி, பலர் சேர்ந்து துணையாய் இருந்தாலும் தோல்வியடையும்.

**நன்றுஆற்றல் உள்ளும் தவறுஉண்டு அவர்அவர்**
**பண்பறிந்து ஆற்றாக் கடை.** 469
அவரவர் பண்புகளை நன்கு அறியாமல் நன்மை செய்வது, சில சமயங்களில் தவறாய் ஆகிவிடுவதும் உண்டு.

**எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு**
**கொள்ளாத கொள்ளாது உலகு.** 470
தம் நிலைக்குப் பொருந்தாதவற்றை மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். எனவே, இகழ்ச்சிக்கு இடம் இல்லாத செயல்களை ஆராய்ந்து செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்**
**துணைவலியும் தூக்கிச் செயல்.** 471

தான் எடுத்துக் கொண்ட செயலின் வலிமை, தன்னுடைய வலிமை, பகைவனுடைய வலிமை, இரு தரப்பினருக்கும் துணை வருபவரின் வலிமை ஆகியவற்றை ஆராய்ந்து செயல்பட வேண்டும்.

**ஒல்வது அறிவது அறிந்துஅதன் கண்தங்கிச்**
**செல்வார்க்குச் செல்லாதது இல்.** 472

தன்னால் எதைச் செய்ய முடியும் என்பதையும் அதை எப்படிச் செய்ய வேண்டும் என்பதையும் அறிந்து செயலில் தளராமல் முயல்கிறவர்களுக்கு முடியாத செயல் என எதுவும் இல்லை.

**உடைத்தம் வலிஅறியார் ஊக்கத்தின் ஊக்கி**
**இடைக்கண் முரிந்தார் பலர்.** 473

தம்முடைய வலிமை என்ன என்பதையே சரிவர அறியாமல் செயலில் ஈடுபட்டு இடையிலேயே விட்டு விடுபவர்கள் பலர் ஆவர்.

**அமைந்து ஆங்கு ஒழுகான் அளவுஅறியான் தன்னை**
**வியந்தான் விரைந்து கெடும்.** 474

ஆற்றல் உடையவர்களுடன் ஒத்துப் போகாமல், தன் வலிமையையும் அறிந்து கொள்ளாமல், தன்னைத் தானே பெரிதாய் நினைப்பவன் விரைவிலேயே கெட்டுப் போவான்.

**பீலிபெய் சாகாடும் அச்சுஇறும்; அப்பண்டம்**
**சால மிகுத்துப் பெயின்.** 475

மிக மெல்லிய பொருளான மயில் இறகே ஆயினும், அளவுக்கு அதிகமாய் வண்டியில் ஏற்றினால் வண்டியின் அச்சு முறிந்துவிடும்.

**நுனிக்கொம்பர் ஏறினார் அஃது இறந்து ஊக்கின்**
**உயிர்க்கு இறுதி ஆகி விடும்.** 476

மரத்தின் உச்சிக் கொம்புவரை ஏறியவர் அதையும் கடந்து மேலே ஏற முயன்றால், அவருடைய உயிருக்கே அது ஆபத்தாய் முடியும்.

**ஆற்றின் அளவுஅறிந்து ஈக; அதுபொருள்**
**போற்றி வழங்கும் நெறி.** 477

நம் வருவாயின் அளவு என்ன என்பதை நன்கறிந்து அதற்குத் தக்கபடிதான் பிறருக்கு உதவ வேண்டும். அதுவே பொருளைப் போற்றி வாழும் முறையாகும்.

**ஆகுஆறு அளவுஇட்டிது ஆயினும் கேடில்லை**
**போகுஆறு அகலாக் கடை.** 478

பொருள் வரும் வழி (வருவாய்) சிறியதாய் இருந்தாலும், பொருள் போகும் வழி (செலவு) பெரியதாய் இல்லாவிட்டால் தீங்கு இல்லை.

**அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல**
**இல்லாகித் தோன்றாக் கெடும்.** 479

தன் வருவாயின் அளவினை அறிந்து செலவு செய்யாதவனுடைய வாழ்க்கை, இருப்பது போலத் தோன்றினாலும் இல்லாமல் அழிந்துவிடும்.

**உளவரை தூக்காத ஒப்புரவு ஆண்மை**
**வளவரை வல்லைக் கெடும்.** 480

தனக்கு உள்ள பொருளின் அளவை ஆராயாமல் மற்றவர்களுக்கு உதவும் உபகாரியின் சொத்து விரைவில் அழிந்து போகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகல்வெல்லும் கூகையைக் காக்கை; இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது. 481
காக்கை தன்னைவிட வலிமை உடைய கோட்டானைப் பகல் நேரத்தில் வென்றுவிடும். (கோட்டானுக்குப் பகலில் கண் தெரியாது). அது போலப் பகைவனை வெல்ல நினைக்கும் அரசனுக்கு அதற்கேற்ற காலம் எது என்பது தெரிய வேண்டும்.

பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு. 482
ஒருவன் காலத்திற்கேற்றபடி நடந்து கொள்வது என்பது, செல்வம் அவனை விட்டு நீங்காமல் கட்டிக் காக்கும் கயிறு போன்றது.

அருவினை என்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின். 483
செயலை முடிப்பதற்கேற்ற கருவிகளோடு காலத்தையும் அறிந்து செயல்பட்டால், வெற்றி கொள்வதற்கு இயலாத அருஞ்செயல் என்று எதுவும் இல்லை.

ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தால் செயின். 484
செய்வதற்கேற்ற காலத்தையும் இடத்தையும் அறிந்து செயல்படுவோர், இந்த உலகத்தையே அடையவேண்டுமென்று நினைத்தால் அதுவும் கை கூடும்.

காலம் கருதி இருப்பர், கலங்காது
ஞாலம் கருது பவர். 485
இந்த உலகத்தை அடைய நினைப்பவர்கள், அதைப் பற்றி எண்ணிக் கலக்கம் கொள்ளாமல் தக்க காலத்தை எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள்.

ஊக்கம் உடையான் ஒடுக்கம், பொருதகர்
தாக்கற்குப் பேரும் தகைத்து. 486
ஊக்கம் உடையவன் அடங்கி இருப்பது, சண்டை இடும் ஆட்டுக்கடா தாக்குவதற்குரிய வேகத்தைப் பெறுவதற்காகப் பின்னாலே செல்வதைப் போன்றது.

பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்து
உள்வேர்ப்பர் ஒள்ளி யவர். 487
அறிவுடையவர்கள், பகைவர் தீங்கு செய்யும்போது உடனே தம் சினத்தைக் காட்டமாட்டார்கள். பகைவரை வெல்ல ஏற்ற காலம் பார்த்து அதுவரை உள்ளத்தில் சினத்தை அடக்கிக் கொண்டிருப்பார்கள்.

செறுநரைக் காணின் சுமக்க; இறுவரை
காணின் கிழக்குஆம் தலை. 488
தமக்கு வெல்லும் காலம் வரும்வரை, பகைவரைக் கண்டால் பொறுத்திருக்க வேண்டும். பகைவருக்கு அழிவு காலம் வரும்போது அவர்கள் தலை தானே கீழே விழும்.

எய்தற்கு அரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற்கு அரிய செயல். 489
கிடைப்பதற்கரிய காலம் வாய்த்ததாயின் அந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டு செய்வதற்கரிய செயல்களைச் செய்து முடிக்க வேண்டும்.

கொக்குஒக்க கூம்பும் பருவத்து; மற்றுஅதன்
குத்துஒக்க சீர்த்த இடத்து. 490
பெரிய மீன் வரும்வரை காலத்தை எதிர்பார்த்துக் கொக்கு பொறுமையுடன் இருப்பதைப் போலக் காலம் வரும்வரை அடங்கி இருக்க வேண்டும். காலம் வாய்க்கும் போது கொக்கு குத்தி மீனைப் பிடிப்பதைப் போல விரைந்து செயல்பட்டு வெற்றி அடையவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கற்க எவ்வினையும்; எள்ளற்க முற்றும்
இடம்கண்ட பின்அல் லது. 491

முழுமையாகச் செய்து வெற்றியடையும் வாய்ப்பு ஏற்படும்வரை எந்தச் செயலையும் தொடங்கக் கூடாது. பகைவரை எளிதாய் எண்ணி இகழலாகாது.

முரண்சேர்ந்த மொய்ம்பி னவர்க்கும் அரண்சேர்ந்தாம்
ஆக்கம் பலவும் தரும். 492

வலிமை மிக்க மனத்தை உடையவருக்குப் பாதுகாப்பு என்ற பக்கத் துணையும் அமையுமானால் பலவகைப் பயன்கள் உண்டாகும்.

ஆற்றாரும் ஆற்றி அடுப, இடன் அறிந்து
போற்றார்கண் போற்றிச் செயின். 493

வெற்றி பெற ஏற்ற இடத்தினை அறிந்து, எதிரியின் வலிமையையும் உள்ளபடி அறிந்து, தக்கபடி செயல் மேற்கொண்டால் வலிமை இல்லாதவனும் வெற்றி காண்பான்.

எண்ணியார் எண்ணம் இழப்பர் இடன்அறிந்து
துன்னியார் துன்னிச் செயின். 494

ஏற்ற இடம் எது என்பதை அறிந்து எதிரியை நெருங்கிச் செயல் மேற்கொண்டால், வென்றுவிடலாம் என்று எண்ணி இருந்த பகைவர் அந்த எண்ணத்தைக் கை விடுவர்.

நெடும்புனலுள் வெல்லும் முதலை; அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற. 495

ஆழம் நிறைந்த நீர் நிலையில் இருக்கும்போது முதலை பிற உயிர்களைக் கொன்றுவிடும். ஆனால், அந்த முதலை நீரைவிட்டுத் தரைக்கு வந்து விடுமானால் மற்ற உயிர்கள் அதனை வென்றுவிடும்.

கடல்ஓடா கால்வல் நெடுந்தேர்; கடல்ஓடும்
நாவாயும் ஓடா நிலத்து. 496

வலிமை மிக்க சக்கரங்களை உடைய தேர், கடலில் செல்லாது.
கடலில் ஓடும் கப்பல் தரையில் ஓடாது.

அஞ்சாமை அல்லால் துணைவேண்டா, எஞ்சாமை
எண்ணி இடத்தான் செயின். 497

செய்யும் செயல்களைக் குறைவில்லாமல் எண்ணிப் பார்த்து, தக்க இடம் அறிந்து காரியம் செய்தால், வெற்றி பெறுவதற்கு, அஞ்சாமை தவிர வேறு துணை வேண்டியதில்லை.

சிறுபடையான் செல்லிடம் சேரின் உறுபடையான்
ஊக்கம் அழிந்து விடும். 498

சிறிய படையை உடைய அரசனாய் இருந்தாலும் அவன் வாய்ப்பான இடத்தை அடைந்து விட்டால் அவனை வெல்ல எடுத்துக் கொண்ட வலிமை நீங்கிவிடும்.

சிறைநலனும் சீரும் இலர்எனினும் மாந்தர்
உறைநிலத்தோடு ஒட்டல் அரிது. 499

பலத்த கோட்டையும் வலிமை மிக்க வீரர்களும் இல்லாத பகைவர்களைக்கூட, அவர்கள் வாழும் இடத்திற்குச் சென்று வெற்றி பெறுதல் அரிது.

கால்ஆழ் களரின் நரிஅடும்; கண்அஞ்சா
வேல்ஆள் முகத்த களிறு. 500

வேல் கொண்ட வீரர்களைக் கண்டு அஞ்சாமல் வெற்றி கொண்ட யானையும் கால் புதைந்து விடும் சேற்று நிலத்தில் சிக்கிக் கொண்டால் நரிகள் அதனைக் கொன்றுவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறம்பொருள் இன்பம் உயிர்அச்சம் நான்கின்
திறம்தெரிந்து தேறப் படும். 501
அறம், பொருள், இன்பம், தன் உயிருக்காக அஞ்சுகின்ற அச்சம் ஆகிய நான்கு வகையாலும் ஆராயப்பட்ட பிறகே ஒருவன் செயலுக்குத் தகுந்தவன்தானா என்று அறிய முடியும்.

குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்
நாணுஉடையான் கட்டே தெளிவு. 502
நற்குடியில் பிறந்து குற்றங்களிலிருந்து நீங்கிப் பாவச் செயலைச் செய்ய நாணப்பட்டு அஞ்சுபவனை நம்பித் தெளியலாம்.

அரியகற்று ஆசுஅற்றார் கண்ணும் தெரியுங்கால்
இன்மை அரிதே வெளிறு. 503
அரிய நூல்கள் பலவற்றைக் கற்று குற்றங்கள் இல்லாமல் இருப்பவரிடமும், ஆராய்ந்து பார்க்குங்கால் சில அறியாமைகள் இருக்கும்.

குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல். 504
ஒருவனுடைய குணங்களை ஆராய்ந்து, பின்னர்க் குற்றங்களையும் ஆராய்ந்து, அவற்றுள் எது மிகுதியாய் இருக்கிறதோ, அதைக் கொண்டே அவன் இத்தகையவன் என்று ஏற்றுக் கொள்ளவேண்டும்.

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல். 505
ஒருவனுடைய பெருமைக் குணத்தையும் சிறுமைக் குணத்தையும் அறிந்து கொள்ள உரைகல்லாய் இருப்பவை அவனுடைய செயல்களே ஆகும்.

அற்றாரைத் தேறுதல் ஓம்புக; மற்றுஅவர்
பற்றுஇலர் நாணார் பழி. 506
சுற்றத்தாரிடம் தொடர்பில்லாதவர்களை நம்பக் கூடாது. ஏனென்றால் அவர்களுக்கு உலக வாழ்வில் பற்று இருக்க மாட்டாது. எனவே, பழிக்கு அவர்கள் அஞ்சமாட்டார்கள்.

காதன்மை கந்தா அறிவுஅறியார்த் தேறுதல்
பேதைமை எல்லாம் தரும். 507
அறிய வேண்டியவற்றை அறியாதவர்களை அன்பின் காரணமாய் நம்பினால் அவர்கள் பல துன்பங்களை அடையும் நிலை ஏற்படும்.

தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா இடும்பை தரும். 508
ஆராயாமல் யாரையும் ஒருபோதும் நம்பக் கூடாது. நம்பினால் அது அவனுக்கு மட்டுமல்லாமல் அவன் தலைமுறைக்கே தீராத துன்பத்தைக் கொடுக்கும்.

தேறற்க யாரையும் தேராது தேர்ந்தபின்
தேறுக தேறும் பொருள். 509
யாராக இருந்தாலும் ஆராய்ந்தே தெளிய வேண்டும். தெளிந்த பிறகே அவரிடம் நற்செயல்களை ஒப்படைக்கவேண்டும்.

தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும். 510
ஒருவரை ஆராயாமல் நம்புவதும், நம்பியவரிடம் சந்தேகம் கொள்வதும் ஆகிய இவை இரண்டுமே நீங்காத துன்பத்தைத் தரும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப் படும். 511

நன்மையையும் தீமையையும் ஆராய்ந்து, நன்மை தருகின்றவற்றையே விரும்புகின்ற இயல்பினை உடையவனைச் செயல்களுக்கு உரியவனாய் அரசன் ஏற்றுக் கொள்வான்.

வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை. 512

பொருள் வரும் வழிகளைப் பெருக்கி, அவற்றை வளம் உண்டாகும்படி மேலும் வளர்த்து, இடையில் ஏற்படும் துன்பங்களைப் போக்குவதற்கு வல்லவனே செயல் புரிவதற்கேற்றவன் ஆவான்.

அன்புஅறிவு தேற்றம் அவாஇன்மை இந்நான்கும்
நன்குஉடையான் கட்டே தெளிவு. 513

அன்பு, அறிவு, ஐயமில்லாமல் தெளியும் ஆற்றல், ஆசை இல்லாமை ஆகிய நான்கு பண்புகளும் நிலையாய் உள்ளவனே நம்பிக்கைக்குரியவன் ஆவான்.

எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்
வேறுஆகும் மாந்தர் பலர். 514

எவ்வாறு ஆராய்ந்து தெளிந்தாலும் செயல் மேற்கொண்டு செய்யும்போது வேறுபடும் மனிதர் பலர் இருக்கிறார்கள்.

அறிந்துஆற்றிச் செய்கிற்பாற்கு அல்லால் வினைதான்
சிறந்தான்என்று ஏவற்பாற்று அன்று. 515

செய்யும் வழிகளை நன்றாய் அறிந்து, எதிர்வரும் இடையூறுகளைத் தாங்கிக் கொண்டு செயலை முடிப்பவனை விட்டுவிட்டு, வேறேதாவது காரணத்தால் சிறந்தவன் என்றெண்ணி, வேறொருவனைச் செயலைச் செய்ய ஏவக் கூடாது.

செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு
எய்த உணர்ந்து செயல். 516

செய்கின்றவனுடைய திறமையை ஆராய்ந்து, அவன் செய்ய வேண்டிய வேலையினை ஆராய்ந்து, தக்க காலம் பொருந்துமாறு உணர்ந்து செய்விக்க வேண்டும்.

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து
அதனை அவன்கண் விடல். 517

இந்தச் செயலை இத்தகைய முறையால் இவன் முடிப்பான் என்று நன்றாய்த் தெரிந்த பிறகே அந்தச் செயலை அவனிடம் ஒப்படைக்க வேண்டும்.

வினைக்குஉரிமை நாடிய பின்றை அவனை
அதற்குரியன் ஆகச் செயல். 518

இந்தச் செயலை முடிக்க இவன்தான் தகுதியானவன் என்று ஆராய்ந்து தெளிந்த பிறகே, அதைச் செய்யும் பொறுப்பு முழுமையையும் அவனிடம் கொடுக்க வேண்டும்.

வினைக்கண் வினைஉடையான் கேண்மைவே றாக,
நினைப்பானை நீங்கும் திரு. 519

தான் மேற்கொண்ட தொழிலில் எப்போதும் முயற்சி உடையவனின் உறவைத் தவறாய் நினைக்கும் தலைவனை விட்டுச் செல்வம் நீங்கும்.

நாடோறும் நாடுக மன்னன்; வினைசெய்வான்
கோடாமை கோடாது உலகு. 520

தொழில் செய்பவன் மனம் கோணாமல் தொழிலைச் செய்யும்வரை உலகம் கெடாது. எனவே, ஆட்சி செய்பவன் தொழில் செய்பவனது மனம் கோணாதபடி அவன் நலனில் அக்கறை செலுத்தவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றுஅற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே உள. 521
ஒருவன் வறியவனான காலத்திலும் அவனுடைய பழைய உறவைப் பாராட்டிப் பேசும் குணம், நல்ல உறவினரிடத்தில் எப்போதும் இருக்கும்.

விருப்புஅறாச் சுற்றம் இயையின் அருப்புஅறா
ஆக்கம் பலவும் தரும். 522
அன்பு நீங்காத உறவு ஒருவனுக்குக் கிடைத்தால், அது அவனுக்கு மேலும் மேலும் செல்வத்தைக் கொடுக்கும்.

அளவளாவு இல்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடுஇன்றி நீர்நிறைந்து அற்று. 523
சுற்றத்தாரோடு மனம் கலந்து பழகாதவனுடைய வாழ்க்கை, கரை இல்லாத குளம் நீர் நிறைந்ததைப் போலாகும்.

சுற்றத்தால் சுற்றப் படஒழுகல்; செல்வந்தான்
பெற்றத்தால் பெற்ற பயன். 524
ஒருவனைச் சுற்றத்தார் சுற்றி இருக்கும்படி வாழ்வது ஒருவன் செல்வத்தைப் பெற்றதனால் அடைந்த பயனாகும்.

கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய
சுற்றத்தால் சுற்றப் படும். 525
சுற்றத்தாருக்கு உதவிகள் செய்தும் இனிமையாகப் பேசியும் வாழ்பவனைச் சுற்றத்தார் எப்போதும் சூழ்ந்திருப்பார்கள்.

பெருங்கொடையான் பேணான் வெகுளி அவனின்
மருங்குஉடையார் மாநிலத்து இல். 526
ஒருவன் பெருங்கொடை வள்ளலாகவும் கோபம் என்பது இல்லாதவனாகவும் இருந்தால், அவனைப் போலச் சுற்றத்தை உடையவன் இந்த உலகத்தில் யாரும் இரார்.

காக்கை கரவா கரைந்துஉண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள. 527
காக்கை தனக்குக் கிடைத்ததை மறைத்து வைக்காமல் தன் இனத்தைக் கூவி அழைத்துச் சேர்ந்தே உண்ணும். அத்தகைய குணம் உடையவருக்கே சுற்றத்தாரால் ஆக்கம் உண்டாகும்.

பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர். 528
அரசன் எல்லாரையும் பொதுவாக ஒரே மாதிரியாகப் பாராமல், அவரவர் தகுதியறிந்து நடந்து கொண்டால், அந்தச் சிறப்பினை எண்ணி அவனை நெருங்கி வாழ்வோர் பலர் ஆவர்.

தமர்ஆகித் தன்துறந்தார் சுற்றம் அமராமைக்
காரணம் இன்றி வரும். 529
உறவினரானவர் ஏதோ காரணத்தால் பிரிந்து சென்றிருந்தாலும், அப்பிரிவிற்கு உரிய காரணம் பொருந்தாது என்பதை அறிந்த பின், மீண்டும் உறவினராய் வந்து சேருவர்.

உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன்
இழைத்து இருந்து எண்ணிக் கொளல். 530
தம்மை விட்டுக் காரணமின்றி விலகிப் போய், பின் காரணத்தை அறிந்து வந்து சேர்ந்தவனை நன்கு ஆராய்ந்து அறிந்து உறவாக்கிக் கொள்ள வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இறந்த வெகுளியின் தீதே சிறந்த**
**உவகை மகிழ்ச்சியின் சோர்வு.** 531
மிகப் பெரிய மகிழ்ச்சியால் மறதி கொண்டு தன் கடமையை மறப்பது, ஒருவனுக்கு அளவு கடந்த கோபம் வருவதைவிடத் தீமையானதாகும்.

**பொச்சாப்புக் கொல்லும் புகழை அறிவினை**
**நிச்ச நிரப்புக்கொன்று ஆங்கு.** 532
தொடர்ந்து வரும் வறுமை அறிவைக் கொல்வது போல, அவனுடைய மறதியானது அவனது புகழைக் கொன்று விடும்.

**பொச்சாப்பார்க்கு இல்லை புகழ்மை அதுஉலகத்து**
**எப்பால்நூ லோர்க்கும் துணிவு.** 533
மறதியால் சோர்ந்து வாழ்பவருக்குப் புகழ் ஒருபோதும் கிடைக்காது. இது உலகில் உள்ள எல்லா நூல்களாலும் ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மையாகும்.

**அச்சம் உடையார்க்கு அரண்இல்லை; ஆங்குஇல்லை**
**பொச்சாப்பு உடையார்க்கு நன்கு.** 534
உள்ளத்தில் பயம் உடையவருக்குக் கோட்டையிருந்தாலும் பாதுகாப்பு இல்லை. அது போல மறதி உடையவருக்கு எல்லாச் செல்வமும் இருந்தாலும் பயன் இல்லை.

**முன்உறக் காவாது இழுக்கியான் தன்பிழை**
**பின்ஊறு இரங்கி விடும்.** 535
வரும் துன்பங்களை முன்னரே அறிந்து காத்துக் கொள்ளாதவன், பின் அவை வந்து விட்டபோது, தன் பிழையை அறிந்து மிகவும் வருந்துவான்.

**இழுக்காமை யார்மாட்டும் என்றும் வழுக்காமை**
**வாயின் அஃதுஒப்பது இல்.** 536
யாரிடத்திலும் எக்காலத்திலும் மறதியால் ஏற்படும் சோர்வென்பது இல்லாமல் இருந்தால், அதற்கு ஒப்பான நன்மை வேறெதுவும் இல்லை.

**அரியஎன்று ஆகாத இல்லைபொச் சாவாக்**
**கருவியால் போற்றிச் செயின்.** 537
மறவாமை என்ற கருவியால் ஆராய்ந்து காரியங்களைச் செய்பவனுக்கு முடியாத செயல் என்பதே எதுவும் இல்லை.

**புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும்; செய்யாது**
**இகழ்ந்தார்க்கு எழுமையும் இல்.** 538
அறிவுடையோர் போற்றிய செயல்களை மதித்துச் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யாமல் மறந்து சோர்ந்தவருக்கு ஏழு பிறவியிலும் நன்மை இல்லை.

**இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக; தாம்தம்**
**மகிழ்ச்சியின் மைந்துஉறும் போழ்து.** 539
தாம் தம்முடைய மகிழ்ச்சியால் கர்வம் கொள்கிறபோது அத்தகைய மகிழ்ச்சியால் கர்வம் கொண்டு கடமை மறந்து அழிந்தவர்களை நினைத்துப் பார்க்க வேண்டும்.

**உள்ளியது எய்தல் எளிதுமன்; மற்றும்தான்**
**உள்ளியது உள்ளப் பெறின்.** 540
ஒருவன், தான் அடைய எண்ணியதைத் தொடர்ந்து எண்ணி, விடாது முயன்று வந்தால், அவன் எண்ணம் கை கூடுவது எளிதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை. 541
யாராய் இருந்தாலும் அவர்கள் குற்றத்தை ஆராய்ந்து யாருக்கும் இரக்கம் காட்டாமல்
நடுவு நிலைமையில் நின்று தக்க தண்டனை அளிப்பதே சிறந்த நீதி நெறியாகும்.

வான்நோக்கி வாழும் உலகுஎல்லாம்; மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி. 542
உலகத்தில் உள்ள உயிர்கள் அனைத்தும் மழையை நம்பி வாழ்கின்றன. குடிகள்
அனைவரும் அரசனுடைய செங்கோலை நம்பி வாழ்கின்றனர்.

அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல். 543
அந்தணர் ஓதும் வேதத்திற்கும் அறத்திற்கும் அடிப்படையாய்
இருந்து உலகத்தைக் காப்பது அரசனுடைய செங்கோலேயாகும்.

குடிதழீஇக் கோல்ஓச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு. 544
குடி மக்களை அணைத்துக் கொண்டு நல்லாட்சி புரியும்
அரசனைப் பின்பற்றி உலகம் நடக்கும்.

இயல்புளிக் கோல்ஓச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு. 545
நீதி முறைப்படி நல்லாட்சி நடத்தும் அரசனுடைய நாட்டில்
பருவ மழையும் குறையாத விளைவும் ஒரு சேர நிறைந்திருக்கும்.

வேல்அன்று வென்றி தருவது மன்னவன்
கோல்அதூஉம் கோடாது எனின். 546
ஒருவனுக்கு வெற்றி பெற்றுத் தருவது ஆயுதங்கள் அல்ல,
நீதி நெறி தவறாத சிறந்த ஆட்சி செய்யும் முறையே ஆகும்.

இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின். 547
ஆட்சி செய்யும் அரசன் உலகத்தையெல்லாம் காப்பாற்றுவான். அவனை,
நீதிநெறி தவறாத அவனது நல்லாட்சியானது காப்பாற்றும்.

எண்பதத்தான் ஓரா முறைசெய்யா மன்னவன்
தண்பதத்தான் தானே கெடும். 548
மக்கள் தங்கள் குறைகளை முறையிட நேரில் காண்பதற்கு இயலாதவனாகவும், ஆராய்ந்து பார்க்காமல்
நீதி வழங்குபவனாகவும் உள்ள அரசன், பகைவரின்றித் தானே தன் நிலை குலைந்து கெடுவான்.

குடிபுறம் காத்துஓம்பிக் குற்றம் கடிதல்
வடுஅன்று வேந்தன் தொழில். 549
குடிமக்களுக்குப் பிறராலும் தன்னாலும் துன்பம் வராமல் காத்து, அதே சமயம் கொடிய
செயல்களைச் செய்பவர்களைத் தண்டிப்பது ஆள்கின்றவனுக்குப் பழியாகாது. அது
அவன் கடமை ஆகும்.

கொலையின் கொடியாரை வேந்துஒறுத்தல் பைங்கூழ்
களைகட்டு அதனோடு நேர். 550
அரசன், கொடிய குற்றங்கள் செய்பவர்களுக்குக் கொலைத் தண்டனை கொடுத்து,நல்லோரைக்
காப்பாற்றுவது, பயிர்களின் நன்மைக்காக உழவர்கள் களையைப் பிடுங்கி எறிவதற்குச் சமமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 56. கொடுங்கோன்மை

கொலைமேற்கொண் டாரின் கொடிதே அலைமேற்கொண்டு
அல்லவை செய்துஒழுகும் வேந்து. 551
ஆசைகளுக்கு ஆளாகி முறையற்ற செயல்களால் குடிமக்களைத் துன்புறுத்தும் அரசன், கொலைத் தொழிலைச் செய்பவனைவிடக் கொடியவன் ஆவான்.

வேலொடு நின்றான் இடுஎன் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு. 552
செங்கோல் ஏந்தி ஆட்சி செய்யும் அரசன் முறையற்ற வழிகளில் குடிமக்களிடம் பொருள் பறிப்பது, கையில் வேல் ஏந்தி நின்ற வழிப்பறிக் கள்வன் பயணிகளிடம் பொருள் கொடு என்று பயமுறுத்துவது போன்றது.

நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாள்தொறும் நாடு கெடும். 553
தன் ஆட்சியில் விளையும் நன்மை தீமைகளை நாள்தோறும் ஆராயாமல் ஆட்சி செய்யும் அரசன் நாள்தோறும் தன் நாட்டைக் கொஞ்சம் கொஞ்சமாய் இழப்பான்.

கூழும் குடியும் ஒருங்குஇழக்கும் கோல்கோடிச்
சூழாது செய்யும் அரசு. 554
கொடுங்கோலனாகி ஆராயாமல் எதையும் செய்யும் அரசன் பொருளையும் குடிமக்களையும் ஒருசேர இழந்துவிடுவான்.

அல்லல்பட்டு ஆற்றாது அழுதகண் ணீர்அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை. 555
அரசனது கொடுமை தாங்காமல் மக்கள் குமுறி அழுத கண்ணீரே அவன் ஆட்சியை அடியோடு அழிக்கும் ஆயுதமாகும்.

மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை; அஃதுஇன்றேல்
மன்னாவாம் மன்னர்க்கு ஒளி. 556
அரசனது புகழை நிலை நிறுத்துவது அவனது ஒழுங்கான ஆட்சி முறையே ஆகும். அதிலிருந்து அவன் தவறினால் புகழ் இல்லாமல் போகும்.

துளிஇன்மை ஞாலத்திற்கு எற்றுஅற்றே; வேந்தன்
அளிஇன்மை வாழும் உயிர்க்கு. 557
மழைத்துளி இல்லை என்றால் உலகம் எத்தகைய பெரும் துன்பத்தை அடையுமோ, அதுபோல, அருள் இல்லாத அரசனது ஆட்சியால் மக்கள் பெரும் துன்பத்தை அடைவார்கள்.

இன்மையின் இன்னாது உடைமை முறைசெய்யா
மன்னவன் கோல்கீழ்ப் படின். 558
முறையில்லாத அரசனது ஆட்சியின் கீழ் வாழும் மக்களுக்குச் செல்வம் உடையவர்களாய் வாழ்வது, வறுமையில் வாழ்வதை விடத் துன்பம் தரும்.

முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல். 559
அரசன் முறை தவறி ஆட்சி செய்வானானால் அவன் நாட்டில் பருவமழை பெய்யாது பொய்க்கும்.

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின். 560
அரசன் மக்களை முறைப்படி காக்காவிட்டால், அந்த நாட்டில் பசுக்கள் பால் தருவது குறையும், அந்தணர்கள் அற நூல்களை மறந்து போவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து. 561
ஒருவன் குற்றம் செய்தால் தக்கபடி ஆராய்ந்து மீண்டும் அவன் அக்குற்றத்தைச் செய்யாதபடி தகுந்த தண்டனை வழங்குவது அரசனின் கடமை ஆகும்.

கடிதுஓச்சி மெல்ல எறிக நெடிதுஆக்கம்
நீங்காமை வேண்டு பவர். 562
ஆட்சிப் பொறுப்பென்ற செல்வம் தம்மை விட்டு எப்போதும் நீங்காமல் இருக்க விரும்புகின்ற அரசன், குற்றம் செய்தவரை மிகக் கடுமையாய்த் தண்டிப்பவன் போலக் காட்டிக்கொண்டு. ஆனால் மென்மையாய்க் கண்டிக்க வேண்டும்.

வெருவந்த செய்துஒழுகும் வெங்கோலன் ஆயின்
ஒருவந்தம் ஒல்லைக் கெடும். 563
குடிமக்கள் அஞ்சும்படி கொடுமைகளைச் செய்து வாழும் அரசன் உறுதியாய் விரைவில் அழிந்து போவான்.

இறைகடியன் என்றுஉரைக்கும் இன்னாச்சொல் வேந்தன்
உறைகடுகி ஒல்லைக் கெடும். 564
நம்மை ஆள்கின்ற அரசன் கொடியவன் என்று குடிமக்கள் மனம் நொந்து சொல்லும் நிலையில் ஆளும் அரசன், தன் ஆயுள் குறைந்து விரைவில் அழிந்து போவான்.

அருஞ்செவ்வி இன்னா முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய்கண் டன்னது உடைத்து. 565
எளிதில் காண முடியாதவனாகவும், இனிமையற்ற முகத்தை உடையவனாகவும் உள்ள அரசனது பெரும் செல்வம், பேய் காத்து வைத்திருப்பதைப் போன்றதாகும்.

கடுஞ்சொல்லன் கண்ணிலன் ஆயின் நெடுஞ்செல்வம்
நீடுஇன்றி ஆங்கே கெடும். 566
கடுமையான சொற்களைப் பேசுபவனாகவும், இரக்கமில்லாதவனாகவும் உள்ள அரசனின் நிறைந்த செல்வம், நீடித்து நிற்காமல் அப்போதே அழிந்து போகும்.

கடுமொழியும் கைஇகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம். 567
மக்கள் வெறுக்கின்ற பேச்சும், அளவுக்கு அதிகமான தண்டனையும் அரசனின் வெற்றிக்குக் காரணமான வலிமையைத் தேய்க்கும் அரமாகும்.

இனத்துஆற்றி எண்ணாத வேந்தன் சினத்துஆற்றிச்
சீறின் சிறுகும் திரு. 568
ஆட்சி புரியும் அரசன் அரசியல் செயல்களில் தனக்குத் துணையாய் இருக்கும் அமைச்சர் முதலானாரோடு கலந்து யோசிக்காமல் அர்த்தமின்றிச் சீற்றம் கொள்வானானால் அவன் செல்வம் சுருங்கிப் போகும்.

செருவந்த போழ்தில் சிறைசெய்யா வேந்தன்
வெருவந்து வெய்து கெடும். 569
முன்னதாகவே தக்க பாதுகாப்புகளைச் செய்து கொள்ளாத அரசன், போர் வந்த காலத்தில் தன்னைக் காத்துக் கொள்ள முடியாமல் விரைவில் அழிவான்.

கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல்; அதுவல்லது
இல்லை நிலக்குப் பொறை. 570
கொடுங்கோலனான அரசன் கற்காத அறிவில்லாதவர்களையே பாதுகாப்பாய் வைத்துக் கொள்வான். அதைப் போல் பூமிக்குப் பாரமானது வேறெதுவும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 58. கண்ணோட்டம்

கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை
உண்மையான் உண்டுஇவ் வுலகு. 571
கண்ணோட்டம் என்று சொல்லப்படுகின்ற இரக்கம் என்னும் சிறப்பு மிக்க அழகு இருக்கின்ற காரணத்தாலேயே இந்த உலகம் அழியாமல் இருக்கின்றது.

கண்ணோட்டத்து உள்ளது உலகுஇயல்; அஃதுஇலார்
உண்மை நிலக்குப் பொறை. 572
கண்ணோட்டத்தால்தான் உலகம் நடைபெறுகின்றது. கண்ணோட்டம் இல்லாதவர் உலகில் வாழ்வதென்பது பூமிக்குச் சுமையே தவிர வேறொரு பயனும் இல்லை.

பண்என்ஆம் பாடற்கு இயைபுஇன்றேல்; கண்என்ஆம்
கண்ணோட்டம் இல்லாத கண்? 573
பாட்டோடு பொருந்தாத இசையால் பயன் இல்லை. அது போலக் கண்ணோட்டம் (இரக்கம்) இல்லாத கண்களால் பயன் இல்லை.

உளபோல் முகத்துஎவன் செய்யும் அளவினால்
கண்ணோட்டம் இல்லாத கண்? 574
முகத்தில் உள்ளவை போலக் காட்சி தந்தாலும், கண்ணோட்டம் இல்லாத கண்களால் என்ன பயன்? ஒரு பயனும் இல்லை.

கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம்; அஃதுஇன்றேல்
புண்என்று உணரப் படும். 575
ஒருவனது கண்ணுக்கு ஆபரணம் இரக்கமே ஆகும். இரக்கம் இல்லாத கண்கள் புண்கள் என்றே கருதப்படும்.

மண்ணோடு இயைந்த மரத்துஅனையர்; கண்ணோடு
இயைந்துகண் ஓடா தவர். 576
இரக்கம் கொள்ள வேண்டிய கண்கள் இருந்தும் இரக்கம் கொள்ளாதவர்கள் மண்ணோடு இருக்கும் மரத்தைப் போன்றவர்கள்.

கண்ணோட்டம் இல்லவர் கண்இலர்; கண்உடையார்
கண்ணோட்டம் இன்மையும் இல். 577
இரக்கம் இல்லாதவர்கள் கண் இல்லாதவர்களே. இரக்கமுடையவர்களே கண் உள்ளவர்கள் எனப்படுவர்.

கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை உடைத்துஇவ் வுலகு. 578
தம் கடமையாகிய தொழில் கெடாமல் இரக்கம் உள்ளவர்களாய் இருக்க வல்லவர்களுக்கு இந்த உலகம் உரிமை உடையதாகும்.

ஒறுத்துஆற்றும் பண்பினார் கண்ணும்கண் ணோடிப்
பொறுத்துஆற்றும் பண்பே தலை. 579
தண்டனைக்குரிய குற்றங்களைச் செய்தவர்களிடத்திலும் இரக்கம் காட்டி அக்குற்றத்தைப் பொறுத்துக் கொள்வது சிறந்த குணமாகும்.

பெயக்கண்டும் நஞ்சுஉண்டு அமைவர், நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர். 580
எல்லாரும் மதிக்கின்ற நாகரிகமான கண்ணோட்டத்தை விரும்புகின்றவர், தம்மிடம் நன்கு பழகியவர் தம் கண்ணெதிரே நஞ்சினை இட்டுக் கொடுத்தாலும், அதை மறுக்காமல் பெற்றுக் கொண்டு உண்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றும் உரைசான்ற நூலும் இவைஇரண்டும்
தெற்றுஎன்க மன்னவன் கண். 581
ஒற்றர்களையும், தம் பொருட்சிறப்பால் புகழ் பெற்ற நீதி நூல்களையும்
அரசன் தன் இரு கண்களாய்க் கருதவேண்டும்.

எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்
வல்அறிதல் வேந்தன் தொழில். 582
எல்லாரிடத்திலும் நிகழ்கின்ற எல்லா நிகழ்ச்சிகளையும் உடனுக்குடன்
ஒற்றர் மூலம் அறிந்து கொள்வது அரசனின் கடமை ஆகும்.

ஒற்றினான் ஒற்றிப் பொருள்தெரியா மன்னவன்
கொற்றம் கொளக்கிடந்தது இல். 583
ஒற்றர் மூலம் நாட்டு நிகழ்ச்சிகளை ஆராய்ந்து, நன்மை தீமைகளை உணர்ந்து
அரசன் செயல்படாவிட்டால் அவன் வெற்றி பெற வழியே இல்லை.

வினைசெய்வார் தம்சுற்றம் வேண்டாதார் என்றுஆங்கு
அனைவரையும் ஆராய்வது ஒற்று. 584
தொழில் செய்கிறவர், சுற்றத்தார், பகைவர் ஆகிய அனைவரையும்
ஆராய்பவனே ஒற்றன் ஆவான்.

கடாஅ உருவொடு கண்அஞ்சாது யாண்டும்
உகாஅமை வல்லதே ஒற்று. 585
யாரும் ஐயப்பட முடியாத உருவத்தோடும் அச்சமற்ற தன்மையோடும் எந்தச்
சூழ்நிலையிலும் உள்ளத்தில் உள்ளதை வெளிப்படுத்தாமலும் இருப்பவனே ஒற்றன் ஆவான்.

துறந்தார் படிவத்தர் ஆகி இறந்துஆராய்ந்து
என்செயினும் சோர்விலது ஒற்று. 586
செல்ல முடியாத இடங்களுக்கெல்லாம் துறவிக் கோலத்தில் மறைந்து சென்று ஆராய்ந்து
எத்தகைய சோதனை நேர்ந்தாலும் தான் இன்னான் என்பதைக் காட்டிக் கொள்ளாதவனே ஒற்றன்.

மறைந்தவை கேட்கவற்று ஆகி அறிந்தவை
ஐயப்பாடு இல்லதே ஒற்று. 587
மறைந்த செய்திகளை எவ்வாறேனும் கேட்டறிந்து கண்டுபிடித்து விடுபவனாகவும், அறிந்த
செய்திகளில் ஐயம் கொள்ளாமல் உறுதிப் படுத்திக் கொள்பவனாகவும் செயல்படுபவனே ஒற்றன்.

ஒற்றுஒற்றித் தந்த பொருளையும் மற்றும்ஓர்
ஒற்றினால் ஒற்றிக் கொளல். 588
ஓர் ஒற்றன் மறைந்திருந்து அறிந்து வந்து சொன்ன செய்தியையும் வேறோர் ஒற்றனால்
அது சரியானதுதானா? என அறிந்து வரச்செய்து இருவர் செய்திகளையும் ஒப்பிட்டுப் பார்த்து
அரசன் உண்மையை அறிய வேண்டும்.

ஒற்றுஒற்று உணராமை ஆள்க; உடன்மூவர்
சொல்தொக்க தேறப் படும். 589
ஒருவர் செல்வதுமற்றவர்களுக்குத் தெரியாதவாறுமூன்றுஒற்றர்களை அனுப்பிச் செய்திகளைச் சேகரித்துவரச்செய்ய
வேண்டும். அவர்கள் மூவரும் கூறும்செய்திகளும் ஒன்றாய் இருப்பின் அதை உண்மைஎன்றுதெளியவேண்டும்.

சிறப்பு அறிய ஒற்றின்கண் செய்யற்க; செய்யின்
புறப்படுத்தான் ஆகும் மறை. 590
அரசன் ஒற்றர்களுக்குச் செய்யும் சிறப்பைப் பிறர் அறியும்படி செய்யக் கூடாது. அவ்வாறு
செய்தால், வெளிப்படுத்தக்கூடாத இரகசியத்தைத் தானே வெளிப்படுத்தியவன் ஆவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடையர் எனப்படுவது ஊக்கம்; அஃது இல்லார்
உடையது உடையரோ மற்று. 591
ஒருவர் உடையவர் என்று சொன்னால் ஊக்கத்தை உடையவரே. ஊக்கம் இல்லாதவர் வேறெதைப் பெற்றிருந்தாலும் அவர் உடையவர் ஆக மாட்டார்.

உள்ளம் உடைமை உடைமை; பொருள்உடைமை
நில்லாது நீங்கி விடும். 592
ஊக்கமுடைமையே ஒருவருக்கு நிலையான செல்வமாகும். வேறெந்தப் பொருளைப் பெற்றிருந்தாலும் அது நிலை இல்லாதது. அழியக் கூடியது.

ஆக்கம் இழந்தேம்என்று அல்லாவார் ஊக்கம்
ஒருவந்தம் கைத்துஉடை யார். 593
ஊக்கத்தை உறுதிப் பொருளாய்க் கொண்டவர்கள் செல்வத்தை இழக்கும் நிலை வந்தாலும், இழந்துவிட்டோமே என்று கலக்கமடைய மாட்டார்கள்.

ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவுஇலா
ஊக்கம் உடையான் உழை. 594
சோர்வில்லாத ஊக்கமுடையவனிடத்தில் செல்வமானது அவன் இருக்கும் இடம் தேடி வழி கேட்டு வந்து சேரும்.

வெள்ளத்து அனைய மலர்நீட்டம்; மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு. 595
தண்ணீரிலே மலர்கின்ற பூவினுடைய தாளின் நீளம் தண்ணீர் உயரத்துக்கு இருக்கும். அதுபோல உள்ளத்தில் ஊக்கம் எந்த அளவு இருக்கின்றதோ அந்த அளவுக்கு உயர்வும் இருக்கும்.

உள்ளுவது எல்லாம் உயர்வுஉள்ளல்; மற்றுஅது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து. 596
உள்ளத்தில் எண்ணுவன எல்லாம் உயர்வானவையாகவே இருக்க வேண்டும். நினைக்கிற அளவு உயர்வு கைகூடாவிட்டாலும் உயர்வாய் எண்ணுவதை விட்டு விடக்கூடாது.

சிதைவிடத்து ஒல்கார் உரவோர்; புதைஅம்பிற்
பட்டுப்பாடு ஊன்றும் களிறு. 597
உடம்பை மறைக்கும் அளவுக்கு அம்புகளால் புண்பட்டபோதும் யானை தன் பெருமையை நிலை நிறுத்தும். அதுபோல ஊக்கமுடையவர்கள் அழிவு வந்தபோதும் தளர மாட்டார்கள்.

உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து
வள்ளியம் என்னும் செருக்கு. 598
ஊக்கம் இல்லாதவர்கள், இந்த உலகத்தில் யாம் உயர்ந்த கொடையாளி என்று தம்மை மதித்துக் கொள்ளும் பெருமையினை அடைய மாட்டார்கள்.

பரியது கூர்ங்கோட்டது ஆயினும், யானை
வெரூஉம் புலிதாக் குறின். 599
யானை பருத்த உடம்பையும் கூர்மையான கொம்புகளையும் உடையது. ஆனாலுங்கூட ஊக்கம் உடையதான புலி தாக்கினால் அதற்கு அஞ்சும்.

உரம்ஒருவற்கு உள்ள வெறுக்கை; அஃது இல்லார்
மரம்மக்கள் ஆதலே வேறு. 600
ஒருவனுக்கு வலிமை என்பது ஊக்க மிகுதியே ஆகும். ஊக்கமில்லாதவர்கள் மரங்களே! அவர்கள் மனிதர்களைப் போலத் தோற்றம் கொண்டிருப்பதுதான் வேறுபாடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிஎன்னும் குன்றா விளக்கம் மடிஎன்னும்
மாசுஊர மாய்ந்து கெடும். 601
ஒருவனுடைய குடும்பம் என்னும் மங்காத விளக்கு, சோம்பலாகிய
தூசு படியப் படிய ஒளி குறைந்து அழிந்துவிடும்.

மடியை மடியா ஒழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர். 602
தன் குடும்பத்தைச் சிறந்த குடும்பமாக ஆக்க விரும்புகின்றவன் சோம்பலை
ஒழித்து, நன்முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

மடிமடிக் கொண்டுஒழுகும் பேதை பிறந்த
குடிமடியும் தன்னினும் முந்து. 603
அழிக்கும் தன்மையைக் கொண்ட சோம்பலை உடைய அறிவில்லாதவன்
குடும்பம் அவனுக்கு முன்னாலேயே அழிந்துவிடும்.

குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து
மாண்ட உஞற்றஇ லவர்க்கு. 604
சோம்பலுக்கு அடிமைப்பட்டு முயற்சியில்லாமல் வாழுகின்றவனுடைய
குடும்பம் பெருமையை இழக்கும். அதோடு குற்றமும் பெருகும்.

நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன். 605
காலதாமதம், மறதி, சோம்பல், அளவுக்கு அதிகமான தூக்கம் ஆகிய நான்கும்
கெட்டுப்போவோர் தாங்களே விரும்பி ஏறும் மரக்கலங்களாகும்.

படிஉடையார் பற்றுஅமைந்தக் கண்ணும் மடியுடையார்
மாண்பயன் எய்தல் அரிது. 606
நாட்டை ஆளுகின்ற தலைவருடைய நட்பு, தானே வந்து சேர்ந்தாலுங்கூடச்
சோம்பல் உடையவர் ஒரு போதும் சிறந்த பயனை அடைய முடியாது.

இடிபுரிந்து எள்ளும்சொல் கேட்பர் மடிபுரிந்து
மாண்ட உஞற்றுஇ லவர். 607
சோம்பலை விரும்பி மேற்கொண்டு முயற்சி செய்யாமல் வாழுகின்றவர்கள் பிறர் இடித்துக்
கூறும் சொற்களுக்கும் இகழ்ந்து பேசும் சொற்களுக்கும் ஆளாவார்கள்.

மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்கு
அடிமை புகுத்தி விடும். 608
நல்ல குடியில் பிறந்தாலுங்கூடச் சோம்பல் வந்து சேர்ந்துவிட்டால் அவனும்
அவனைச் சேர்ந்தவர்களும் பகைவருக்கு அடிமையாகும் நிலையே ஏற்படும்.

குடிஆண்மை யுள்வந்த குற்றம் ஒருவன்
மடிஆண்மை மாற்றக் கெடும். 609
ஒருவன் சோம்பலை மேற்கொள்ளாமல் முயற்சி உடையவன் ஆவானாயின்,
அவனுடைய குடும்பத்திற்கும் அவன் ஆண்மைக்கும் வந்த குற்றங்கள் நீங்கிவிடும்.

மடிஇலா மன்னவன் எய்தும் அடிஅளந்தான்
தாஅயது எல்லாம் ஒருங்கு. 610
ஆளுகின்ற அரசனுக்குச் சோம்பல் இல்லை என்றால், திருமாலின் திருவடிகளால்
அளக்கப்பெற்ற இந்த உலகம் முழுவதையும் அவன் அடைவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அருமை யுடைத்துஎன்று அசாவாமை வேண்டும்**
**பெருமை முயற்சி தரும்.** 611

இச்செயல் செய்வதற்கு அரியது என்று சிறிதும் சோர்வடையக் கூடாது. அதனைச் செய்வதற்குத் தக்க பெருமையை முயற்சி உண்டாக்கும்.

**வினைக்கண் வினைகெடல் ஓம்பல்; வினைக்குறை**
**தீர்ந்தாரின் தீர்ந்தன்று உலகு.** 612

முழுவதும் முடிக்காமல் அரைகுறையாகத் தொழிலை விட்டவரை உலகம் கைவிட்டு விடும். எனவே, முயற்சியில் தளர்ச்சி இல்லாமல் இருக்க வேண்டும்.

**தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே**
**வேளாண்மை என்னும் செருக்கு.** 613

பிறருக்கு உதவி செய்ய வேண்டும் என்ற மேலான எண்ணம், விடா முயற்சியுடன் செயல்பட்டு வெற்றி அடைபவரிடமே இருக்கும்.

**தாள்ஆண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை**
**வாள்ஆண்மை போலக் கெடும்.** 614

முயற்சி இல்லாதவன் பிறருக்கு உதவி செய்ய நினைப்பது, ஒரு பேடி தன் கையில் வாளை எடுத்து ஆண்மையைக் காட்டுவது போன்றதாகும்.

**இன்பம் விழையான் வினைவிழைவான், தன்கேளிர்**
**துன்பம் துடைத்துஊன்றும் தூண்.** 615

தன் இன்பத்தைப் பெரிதாய் நினைக்காதவன், தான் எடுத்துக் கொண்ட ஒரு செயலை முடிப்பதையே விரும்புவன், தன் சுற்றத்தாரின் துன்பத்தைப் போக்கி அவர்களைத் தாங்குகின்ற தூண் போன்றவன் ஆவான்.

**முயற்சி திருவினை ஆக்கும்; முயற்றின்மை**
**இன்மை புகுத்தி விடும்.** 616

முயற்சி ஒருவனுக்குச் செல்வத்தைப் பெருகச் செய்யும். முயற்சி இல்லாதிருந்தால் அவனுக்கு அது வறுமையை உண்டாக்கி விடும்.

**மடிஉளாள் மாமுகடி என்ப மடியிலான்**
**தாள்உளாள் தாமரையி னாள்.** 617

சோம்பல் உள்ளவனிடம் மூதேவி வாழ்கிறாள். சோம்பல் இல்லாதவனுடைய முயற்சியில் திருமகள் வாழ்கிறாள்.

**பொறிஇன்மை யார்க்கும் பழிஅன்று; அறிவுஅறிந்து**
**ஆள்வினை இன்மை பழி.** 618

பிறவியிலேயே ஊழ்வினையால் செல்வம் இல்லாதிருப்பது பழியன்று. அறிய வேண்டியவற்றை அறிந்து எந்தத் தொழிலைச் செய்தால் செல்வம் தேடலாம் என்று முயற்சி செய்யாமல் இருப்பதே பழியாகும்.

**தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்**
**மெய்வருத்தக் கூலி தரும்.** 619

தெய்வத்தின் துணையைக் கொண்டும் ஒரு செயலில் வெற்றி பெற முடியாத நிலை இருந்தாலும், ஒருவன் தன் உடலை வருத்தி மேற்கொண்ட உழைப்பின் அளவுக்குப் பலன் கிடைக்கும்.

**ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவுஇன்றித்**
**தாழாது உஞற்று பவர்.** 620

சோர்வென்பதே இல்லாது முயற்சியில் தொடர்ந்து ஈடுபடுகின்றவர்கள், வெற்றிக்குத் தடையாய் வரும் விதியையும் வென்று விடுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடுக்கண் வருங்கால் நகுக; அதனை
அடுத்துஊர்வது அஃதுஒப்பது இல். 621
துன்பம் வரும்போது அதைக் கண்டு கலங்காமல் சிரிக்க வேண்டும். அத்துன்பத்தை வெல்வதற்குச் சிறந்த வழி அதுவேயாகும்.

வெள்ளத்து அனைய இடும்பை; அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும். 622
வெள்ளம் போலத் துன்பம் பெருகி வரும்போது அறிவுடையவன் அதைப் போக்குவதற்கு உறுதியோடு நினைக்கும் போதே அத்துன்பம் இல்லாமல் போகும்.

இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
இடும்பை படாஅ தவர். 623
துன்பம் வரும்போது அதற்காக வருந்திக் கலங்காதவர்கள், அத்துன்பத்திற்கே துன்பத்தை உண்டாக்கி வென்று விடுவார்கள்.

மடுத்தவாய் எல்லாம் பகடுஅன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து. 624
தடைப்பட்ட இடங்களிலெல்லாம் தளராமல் வண்டியை இழுத்துச் செல்லும் எருதைப் போல, விடாமுயற்சி உடையவனுக்கு வரும் துன்பமே துன்பப்பட்டு விலகிப்போகும்.

அடுக்கி வரினும் அழிவுஇலான் உற்ற
இடுக்கண் இடுக்கண் படும். 625
அடுக்கடுக்காய்த் துன்பம் வந்தாலும் அதைக் கண்டு உள்ளம் கலங்காத வலிமை உடையவனுக்கு அந்தத் துன்பமே நொந்து போய்விடும்.

'அற்றேம்' என்று அல்லல் படுபவோ 'பெற்றேம்' என்று
ஓம்புதல் தேற்றா தவர்? 626
செல்வம் வந்தபோது இதனைப் பெற்றோமே என்று பற்றுக் கொண்டு அதனைக் காத்துக் கொள்ளாதவர்கள், அந்தச் செல்வத்தை இழந்து வறியவரானபோது வருந்திப் பயன் இல்லை.

'இலக்கம் உடம்பு இடும்பைக்கு' என்று கலக்கத்தைக்
கையாறாக் கொள்ளாதாம் மேல். 627
உடம்பு என்பது துன்பத்திற்கு இலக்காகக் கூடியது என்பதனை உணர்ந்த அறிவிற் சிறந்த மேலோர், தம் உடலுக்கு ஏற்படும் துன்பத்தை ஒருபோதும் துன்பமாய்க் கொள்ள மாட்டார்கள்.

இன்பம் விழையான்; 'இடும்பை இயல்பு'என்பான்
துன்பம் உறுதல் இலன். 628
இன்பத்தை விரும்பாதவனாய், துன்பம் இயற்கையானதே என்று தெளிவாய் உணர்ந்தவன், துன்பம் வந்தபோது கலங்க மாட்டான்.

இன்பத்துள் இன்பம் விழையாதான்; துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன். 629
இன்பம் வந்த காலத்தில் அதைப் பெரிதாய்ப் போற்றி மகிழாதவன், துன்பம் வந்தபோது அதற்காக வருந்தமாட்டான்.

இன்னாமை இன்பம் எனக்கொளின், ஆகும்தன்
ஒன்னார் விழையும் சிறப்பு. 630
தனக்கு வரும் துன்பத்தையே இன்பம் என்று கருதி ஏற்றுக் கொள்பவனுக்குப் பகைவரும் போற்றும் உயர்வு உண்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கருவியும் காலமும் செய்கையும் செய்யும்**
**அருவினையும் மாண்டது அமைச்சு.** 631
செயலுக்கு உள்ள கருவி, காலம், செய்யும் முறை ஆகியவற்றை நன்கு அறிந்து சிறப்போடு செயல்படுபவனே சிறந்த அமைச்சன் ஆவான்.

**வன்கண் குடிகாத்தல் கற்றுஅறிதல் ஆள்வினையோடு**
**ஐந்துடன் மாண்டது அமைச்சு.** 632
அஞ்சாமை, உயர்குடிப் பிறப்பு, பாதுகாக்கும் திறமை, கற்றுணர்ந்த அறிவு, சோர்வற்ற முயற்சி ஆகிய ஐந்து தன்மைகளையும் முழுமையாகப் பெற்றவனே சிறந்த அமைச்சன்.

**பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்**
**பொருத்தலும் வல்லது அமைச்சு.** 633
பகைவர் பக்கத்திலிருப்போரைப் பிரித்தலும், தம்மிடம் நட்புள்ளவரைக் காத்தலும், ஏதாவது வருத்தத்தால் பிரிந்தவரைச் சேர்த்துக் கொள்ளுதலும் ஆகியவற்றில் வல்லமை உள்ளவனே அமைச்சன்.

**தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்**
**சொல்லலும் வல்லது அமைச்சு.** 634
செய்யத் தகுந்த செயல்களை அறிந்து கொள்ளுதலும், அதற்குரிய வழிமுறைகளை ஆராய்ந்து செய்தலும், துணிவோடு சொல்லுதலும் ஆகியவற்றில் வல்லவன் அமைச்சன்.

**அறன்அறிந்து ஆன்றுஅமைந்த சொல்லான் எஞ்ஞான்றும்**
**திறன்அறிந்தான் தேர்ச்சித் துணை.** 635
அறத்தை நன்கறிந்தவனாகவும் அறிவு நிறைந்த சொற்களைக் கூறுபவனாகவும் எக்காலத்திலும் செயல் திறம் நிறைந்தவனாகவும் விளங்குபவனே அரசனுக்கு முதல் தரமான துணை ஆவான்.

**மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்**
**யாவுள முன்நிற் பவை.** 636
இயல்பான அறிவுக் கூர்மையோடு பல நூல்களையும் கற்றுத் தேர்ந்த உயர்வான அறிவும் உடையவருக்குத் தீர்க்க முடியாத மிக நுட்பமான சூழ்ச்சி என்று எதுவும் இல்லை.

**செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து**
**இயற்கை அறிந்து செயல்.** 637
ஒருவன் நூல் அறிவால் செயல்களைச் செய்யும் முறைகளை எவ்வளவுதான் அறிந்திருந்த போதிலும், உலக இயற்கையை அறிந்து அதனுடன் பொருந்தும்படி செயல்பட வேண்டும்.

**அறிகொன்று அறியான் எனினும் உறுதி**
**உழைஇருந்தான் கூறல் கடன்.** 638
அறிவுறுத்துவாரின் அறிவுரைகளையும் ஏற்காமல் தானும் அறியாமல் அரசன் இருந்தாலும், அவனுக்கு உறுதியானவற்றைக் கூறி உணரும்படி செய்வது அமைச்சனின் கடமையாகும்.

**பழுதுஎண்ணும் மந்திரியின் பக்கத்துஉள் தெவ்வோர்**
**எழுபது கோடி உறும்.** 639
பக்கத்திலிருந்து கொண்டு ஆட்சிக்குத் தவறான வழிகளைக் காட்டும் ஓர் அமைச்சனை விட, எழுபது கோடிப் பகைவர் பக்கத்தில் இருந்தாலும், நன்மையே ஆகும்.

**முறைப்படச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர்**
**திறப்பாடு இலாஅ தவர்.** 640
செயல்களைச் சிறப்பாகச் செய்து முடிக்கும் திறமை இல்லாத அமைச்சன், முதலில் சரியாக எண்ணித் திட்டமிட்டிருந்தாலும் செய்யும்போது குறைபாடுடையதாகவே செய்வான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாநலம் என்னும் நலன்உடைமை அந்நலம்**
**யாநலத்து உள்ளதூஉம் அன்று.** 641
நாவன்மை என்று கூறப்படும் பேச்சுத் திறமை என்ற செல்வம், பெரியோர்களால் சிறப்பித்துச் சொல்லப்படும் எல்லா நலன்களையும் விட மிக உயர்ந்ததாகும்.

**ஆக்கமும் கேடும் அதனால் வருதலான்**
**காத்துஓம்பல் சொல்லின்கண் சோர்வு.** 642
நன்மையும், தீமையும், சொல்லுகின்ற சொல்லால் வருகின்றன. எனவே ஒருவன் தான் சொல்லுகின்ற சொற்களில் தவறு நேராமல் காத்துக் கொள்ளவேண்டும்.

**கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்**
**வேட்ப மொழிவதாம் சொல்.** 643
பேசும்போது கேட்பவரைக் கவரக் கூடியதாகவும், கேட்காதவருக்கும் கேட்க வேண்டும் என்ற ஆவலைத் தூண்டக் கூடியதாகவும் அமைவதே சிறந்த பேச்சுவன்மை ஆகும்.

**திறன்அறிந்து சொல்லுக சொல்லை; அறனும்**
**பொருளும் அதனின்ஊஉங்கு இல்.** 644
சொற்களின் வலிமையை அறிந்து, கேட்பவர் தகுதியையும் நோக்கிச் சொற்களைச் சொல்ல வேண்டும். அந்தச் சொல்வன்மையை விடச் சிறந்த அறமோ பொருளோ இல்லை.

**சொல்லுக சொல்லைப் பிறிதுஓர்சொல் அச்சொல்லை**
**வெல்லும்சொல் இன்மை அறிந்து.** 645
தான் சொல்லுகின்ற சொல்லை வெல்லக் கூடிய வேறு சொல் எதுவும் இல்லை என்பதை அறிந்த பிறகே சொல்ல நினைத்ததைச் சொல்ல வேண்டும்.

**வேட்பத்தாம் சொல்லிப் பிறர்சொல் பயன்கோடல்**
**மாட்சியின் மாசுஅற்றார் கோள்.** 646
கேட்கிறவர்களுக்கு விருப்பம் உண்டாகும்படி தன் எண்ணத்தைச் சொல்லி, பிறர் சொல்வதில் உள்ள பயனை ஆராய்ந்து ஏற்றுக் கொள்வது குற்றமற்றவர்களின் சிறப்புடைய கொள்கையாகும்.

**சொலல்வல்லன்; சோர்வுஇலன், அஞ்சான் அவனை**
**இகல்வெல்லல் யார்க்கும் அரிது.** 647
தன் கருத்தைத் தெளிவாக எடுத்துக் கூறுவதில் வல்லவனாகவும், சொல்லும்போது மறதி இல்லாமல் சொல்பவனாகவும், சபைக்கு அஞ்சாதவனாகவும் உள்ளவனை யாராலும் வெல்ல முடியாது.

**விரைந்து தொழில்கேட்கும் ஞாலம்; நிரந்துஇனிது**
**சொல்லுதல் வல்லார்ப் பெறின்.** 648
கருத்துகளை ஒழுங்குபடுத்திச் சொல்ல வேண்டிய முறைப்படி இனிமையாகச் சொல்லக் கூடியவர்களின் பேச்சைக் கேட்டு அதன்படி நடக்க உலகம் காத்துக் கொண்டிருக்கும்.

**பலசொல்லக் காமுறுவர் மன்றமாசு அற்ற**
**சிலசொல்லல் தேற்றா தவர்.** 649
குற்றம் இல்லாத சில சொற்களைச் சொல்லத் தெரியாதவர்களே பயனற்ற பல சொற்களை நீண்ட நேரம் பேசிக் கொண்டிருப்பார்கள்.

**இணர்ஊழ்த்தும் நாறா மலர்அனையர் கற்றது**
**உணர விரித்துரையா தார்.** 650
தாம் கற்றறிந்த கருத்துகளை மற்றவர்கள் புரிந்து கொள்ளும்படி தெளிவுபடச் சொல்லும் ஆற்றல் இல்லாதவர்கள், கொத்தாய் மலர்ந்துங்கூட மணம் பரப்பாத மலரைப் போன்றவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணைநலம் ஆக்கம் தரூஉம்; வினைநலம்
வேண்டிய எல்லாம் தரும். 651
ஒருவருக்கு நல்லவர்களின் துணை செல்வத்தைக் கொடுக்கும். அவன் செய்யும் நல்ல செயல்கள் விரும்பிய எல்லாவற்றையும் கொடுக்கும்.

என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை. 652
புகழையும் அறத்தையும் தராத தூய்மை இல்லாத செயல்களை ஒருவன் எப்போதும் செய்யக் கூடாது.

ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
'ஆஅதும்' என்னும் அவர். 653
மேலும் மேலும் உயர்வடைய வேண்டும் என்று விரும்புவோர், தம் புகழ் கெட்டுப் போவதற்குரிய செயல்களைச் செய்யக் கூடாது.

இடுக்கண் படினும் இளிவந்த செய்யார்
நடுக்குஅற்ற காட்சி யவர். 654
நிலையான தெளிவு மிக்க அறிவைப் பெற்றவர்கள் துன்பம் வந்த போதும் அத்துன்பத்தைத் தீர்ப்பதற்காகக் கூட இழிவான செயல்களைச் செய்ய மாட்டார்கள்.

எற்றுஎன்று இரங்குவ செய்யற்க; செய்வானேல்
மற்றுஅன்ன செய்யாமை நன்று. 655
இதை ஏன் செய்தோம் என்று எண்ணி வருந்தும்படியான செயல்களைச் செய்யக் கூடாது. ஒருவேளை அறியாமல் ஒரு முறை தவறு செய்தாலும் மீண்டும் ஒருபோதும் அவ்வாறு செய்யக் கூடாது.

ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை. 656
பெற்ற தாய் பசியால் வாடுவதைக் காண நேர்ந்தாலும், அறிவுடையோர் பழிப்பதற்குக் காரணமான இழி செயலை ஒருவன் செய்யக் கூடாது.

பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்
கழிநல் குரவே தலை. 657
பழிக்குக் காரணமான இழிதொழில்களைச் செய்து பெறுகின்ற செல்வத்தை விடச் சான்றோராக இருந்து தூய்மையோடு வாழ்ந்து அடையக் கூடிய கொடிய வறுமை சிறந்தது.

கடிந்த கடிந்துஓரார் செய்தார்க்கு அவைதாம்
முடிந்தாலும் பீழை தரும். 658
செய்யத் தகாதவை எனப் பெரியவர்களால் விலக்கப்பட்ட செயல்கள் ஒருவேளை வெற்றியாய் முடிந்தாலும் முடிவில் அவை துன்பமே தரும்.

அழக்கொண்ட எல்லாம் அழப்போம்; இழப்பினும்
பிற்பயக்கும் நற்பா லவை. 659
பிறர் வருந்தும்படி ஒருவன் அடைந்த பொருள் அனைத்தும் பின்னொரு காலத்தில் அவன் வருந்தி அழும்படி அப்பொருள் நிச்சயம் அவனை விட்டு நீங்கிவிடும். நல்ல வழியில் வந்த பொருள் போனாலும் பிறகு நன்மையே தரும்.

சலத்தால் பொருள்செய்து ஏமார்த்தல் பசுமண்
கலத்துள்நீர் பெய்துஇரீஇ யற்று. 660
வஞ்சகமான வழியில் பொருளைச் சேர்த்துப் பாதுகாப்பது, பச்சை மண் பாத்திரத்தில் நீரை ஊற்றிப் பாதுகாப்பது போன்ற பயனற்ற செயலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்;**
**மற்றைய எல்லாம் பிற.** 661
ஒரு செயலின் வலிமை என்பது அவனுடைய மன வலிமையே ஆகும். மற்ற அனைத்துமே மன வலிமைக்குப் பிறகுதான்.

**ஊறுஒரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்**
**ஆறுஎன்பர் ஆய்ந்தவர் கோள்.** 662
துன்பம் வருவதற்கு முன்னரே கவனமாய்க் காத்துக் கொள்வது, ஒருவேளை துன்பம் வந்தால் மனம் தளராமல் இருப்பது ஆகிய இரண்டும் தொழில் வலிமை உடையவர்களின் கொள்கைகள் ஆகும்.

**கடைக்கொட்கச் செய்தக்கது ஆண்மை; இடைக்கொட்கின்**
**எற்றா விழுமம் தரும்.** 663
செய்யும் செயலை நிறைவேற்றிய பின் வெளியில் தெரிவிப்பதே தொழில் வலிமை ஆகும். இடையில் வெளிப்படுத்தினால் அது நீங்காத துன்பத்தையே தரும்.

**சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்**
**சொல்லிய வண்ணம் செயல்.** 664
இத்தொழிலை இவ்வாறு செய்து முடிக்கலாம் என்று சொல்வது எல்லாருக்கும் எளியது. சொல்லியபடி செய்து முடித்தல் என்பது மிகவும் அரியதாகும்.

**வீறுஎய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்**
**ஊறுஎய்தி உள்ளப் படும்.** 665
செய்து முடிக்கும் திறமையால் புகழ் பெற்றவரின் செயல் ஆற்றலை, நாட்டை ஆளும் அரசன் அறிந்து போற்றுவான்.

**எண்ணிய எண்ணியாங்கு எய்துப, எண்ணியார்**
**திண்ணியர் ஆகப் பெறின்.** 666
எண்ணியவர் எண்ணியபடி செயல் ஆற்றுவதில் உறுதியுடன் இருப்பாரானால், அவர் எண்ணியபடியே செயலில் வெற்றி காண்பார்.

**உருவுகண்டு எள்ளாமை வேண்டும்; உருள்பெருந்தேர்க்கு**
**அச்சாணி அன்னார் உடைத்து.** 667
பெரிய தேரை இயக்குவதற்கு மிகச் சிறிய அச்சாணி பயன்படுவது போல, மென்மையான சிலர், தாம் மேற்கொள்ளும் செயலில் திண்மை உள்ளவர்களாய் விளங்குகிறார்கள். ஆகவே யாரையும் அவர்கள் உருவத்தின் சிறுமை கண்டு இகழக் கூடாது.

**கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது**
**தூக்கம் கடிந்து செயல்.** 668
ஏற்றுக்கொண்ட தொழிலை மனம் கலங்காமல், காலம் தாழ்த்தாமல், தளராமல் முயற்சியோடு செய்து முடிக்க வேண்டும்.

**துன்பம் உறவரினும் செய்க, துணிவுஆற்றி**
**இன்பம் பயக்கும் வினை.** 669
முடிவில் இன்பம் கொடுக்கும் தொழிலைச் செய்யும் போது, இடையில் துன்பங்கள் தோன்றினாலும், துணிவோடு அதைச் செய்து முடிக்க வேண்டும்.

**எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்**
**வேண்டாரை வேண்டாது உலகு.** 670
வேறு செயல்களில் எவ்வளவு உறுதியுடையவராய் இருந்தாலும், எடுத்த செயலை முடித்து வெற்றி காண்பதில் உறுதியாய் இல்லாதவரை உலகம் மதிக்காது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ்ச்சி முடிவு துணிவுஎய்தல்; அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது. 671

ஆராய்ந்து எண்ணுவதன் முடிவு துணிவைப் பெறுவதே ஆகும். அத்தகைய உயர்ந்த துணிவைப் பெற்ற பிறகும் காலந்தாழ்த்துவது தீமையாகவே முடியும்.

தூங்குக தூங்கிச் செயற்பால; தூங்கற்க
தூங்காது செய்யும் வினை. 672

காலம் தாழ்த்திச் செய்ய வேண்டிய செயல்களைக் காலம் தாழ்த்தியே செய்ய வேண்டும். தாமதமின்றிச் செய்ய வேண்டிய செயல்களை உடன் செய்ய வேண்டும்.

ஒல்லும்வாய் எல்லாம் வினைநன்றே; ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல். 673

முடியும் இடங்களிலெல்லாம் நல்ல செயல்களை உடன்செய்து முடிக்கவேண்டும். முடியாத போதும் தக்க வேறு வழிகளை ஆராய்ந்து செயல்பட வேண்டும்.

வினைபகை என்றுஇரண்டன் எச்சம் நினையுங்கால்
தீஎச்சம் போலத் தெறும். 674

தொடங்கப்பட்டு இடையில் நிறுத்தப்பட்ட தொழில், தீர்க்காத பகை ஆகிய இரண்டும் அணைக்காமல் விட்ட சிறு நெருப்பைப் போல இருந்து பின் பெரிதாகித் துன்பம் உண்டாக்கும்.

பொருள்கருவி காலம் வினைஇடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல். 675

தொழில் செய்வதற்கு வேண்டிய பொருள், தேவையான கருவி, தக்க காலம், செய்ய வேண்டிய முறை, தொழில் செய்வதற்கேற்ற இடம் என்னும் ஐந்தனையும் தெளிவாய் ஆராய்ந்து செய்ய வேண்டும்.

முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும்
படுபயனும் பார்த்துச் செயல். 676

செயலை முடிக்கும் வகையையும் இடையில் வரக்கூடிய இடையூறுகளையும் முடிந்தபோது கிடைக்கும் பெரும் பயனையும் ஆராய்ந்து செயல்பட வேண்டும்.

செய்வினை செய்வான் செயல்முறை அவ்வினை
உள்ளறிவான் உள்ளம் கொளல். 677

எடுத்துக் கொண்ட செயலில் வெற்றி அடைய விரும்புகிறவன், முன்னரே அது போன்ற செயல்களில் ஈடுபட்டு அனுபவம் பெற்றவரின் கருத்துகளை முதலில் அறிந்து கொள்ள வேண்டும்.

வினையான் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று. 678

ஒருவன் ஒரு செயலைச் செய்யும்போது, அதற்குத் தொடர்பான மற்றொரு செயலையும் சேர்த்து முடித்துக் கொள்ளுதல் என்பது, ஒரு யானையை வைத்து மற்றொரு யானையைப் பிடிப்பது போன்றது.

நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை ஒட்டிக் கொளல். 679

நண்பரானவருக்கு நன்மை செய்து கொண்டிருப்பதை விட, மிக விரைவாய்ச் செய்ய வேண்டியது பகைவரை நண்பராக ஆக்கிக் கொள்வதுதான்.

உறைசிறியார் உள்நடுங்கல் அஞ்சிக் குறைபெறின்
கொள்வர் பெரியார்ப் பணிந்து. 680

வலிமை குறைந்த மன்னன், பகை நாட்டு மன்னனின் படை வலிமை கண்டு, தன் நாட்டு மக்கள் அஞ்சி நடுங்கும் நிலை நேர்ந்தால், பகை நாட்டு மன்னனின் வலிமை கருதிப் பணிந்து அவனை ஏற்றுக் கொள்வான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புஉடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்துஅவாம்
பண்புஉடைமை தூதுஉரைப்பான் பண்பு. 681

அன்புடைமை, நற்குடிப் பிறப்பு, அரசர் விரும்பும் பண்பு ஆகியவற்றைப் பெற்றிருப்பதே தூது செல்பவனுக்கு உரிய தகுதிகள் ஆகும்.

அன்புஅறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுஉரைப்பார்க்கு
இன்றி யமையாத மூன்று. 682

அன்பு, அறிவு, ஆராய்ந்து சொல்லுகின்ற சொல்வன்மை ஆகிய மூன்றும் தூது உரைப்பவருக்கு வேண்டிய இன்றியமையாத பண்புகள் ஆகும்.

நூலாருள் நூல்வல்லன் ஆகுதல் வேலாருள்
வென்றி வினைஉரைப்பான் பண்பு. 683

ஒரு நாட்டுக்குத் தூது சென்று தன் நாட்டை ஆளும் அரசனது வெற்றிக்கு ஏற்ற காரணங்களை எடுத்துச் சொல்பவன், மிகக் கற்றவரை விட அதிகம் கற்றவனாக இருக்க வேண்டும்.

அறிவுஉரு ஆராய்ந்த கல்விஇம் மூன்றன்
செறிவுஉடையான் செல்க வினைக்கு. 684

இயற்கையான அறிவு, காண்பவரைக் கவரும் தோற்றம், ஆராய்ந்து தேர்ந்த கல்வி ஆகிய மூன்றும் உடையவன் தூது செல்லத் தகுந்தவன் ஆவான்.

தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாம் தூது. 685

பலவற்றைத் தொகுத்துச் சொல்லியும், அவற்றுள் பயனற்றவற்றை நீக்கியும், மகிழ்ச்சி ஏற்படுமாறு சொல்லியும் தனது நாட்டிற்கு நன்மை சேர்ப்பவனே நல்ல தூதன் ஆவான்.

கற்றுக்கண் அஞ்சான் செலச்சொல்லிக் காலத்தால்
தக்கது அறிவதாம் தூது. 686

கற்க வேண்டியவற்றைக் கற்று, பகைவரின் கொடிய பார்வைக்கு அஞ்சாமல், சொல்லுகின்றவற்றைக் கேட்பவர் உள்ளத்தில் ஆழமாய்ப் பதியும்படி சொல்லி, காலத்தை அறிந்து, தக்கபடி செயல் புரிபவனே தூதன்.

கடன்அறிந்து காலம் கருதி இடன்அறிந்து
எண்ணி உரைப்பான் தலை. 687

தன் கடமையை இன்னதென்று தெளிவாக அறிந்து, அதைச் செயலாக்குவதற்குரிய காலத்தையும் பொருத்தமான இடத்தையும் அறிந்து தெளிந்து சொல்கிறவனே தூதன்.

தூய்மை, துணைமை, துணிவுடைமை இம்மூன்றன்
வாய்மை வழிஉரைப்பான் பண்பு. 688

தூய்மையான ஒழுக்கம், வலிமையான துணை, மிகுந்த துணிவு ஆகிய மூன்றையும் உடையவனே தூது உரைப்பதற்குத் தக்கவன் ஆவான்.

விடுமாற்றம் வேந்தர்க்கு உரைப்பான் வடுமாற்றம்
வாய்சோரா வன்க ணவன். 689

எந்தச் சூழ்நிலையிலேயும் தவறான சொற்களை வாய் தவறிக்கூடச் சொல்லாத உறுதி மிக்கவன், தன் அரசன் சொல்லிய சொற்களை மற்ற வேந்தர்க்கு உரைக்கும் தகுதி உடையவன்.

இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவற்கு
உறுதி பயப்பதாம் தூது. 690

தனக்கு அழிவே நேர்வதாய் இருந்தாலும், அதற்காக அஞ்சாமல், சொல்ல வேண்டியவற்றை உறுதியுடன் சொல்லித் தன் அரசனுக்கு நன்மை உண்டாகும்படி செய்பவனே தூதன் ஆவான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்துஒழுகு வார்.
அரசனைச் சார்ந்து வாழ்கின்றவர்கள் அதிகமாய் நீங்கிச் செல்லாமலும், மிக 691
நெருங்காமலும், நெருப்பின் முன் குளிர் காய்பவர்கள் போல இருக்க வேண்டும்.

மன்னர் விழைப விழையாமை மன்னரால்
மன்னிய ஆக்கம் தரும்.
அரசர் விரும்புவனவற்றை அவரைச் சார்ந்து வாழ்பவர்கள் விரும்பாமல் 692
இருப்பது அரசனால் நிலையான நன்மைகளை அடைய வழி வகுக்கும்.

போற்றின் அரியவை போற்றல்; கடுத்தபின்
தேற்றுதல் யார்க்கும் அரிது.
அரசரைச் சார்ந்தவர்கள் தங்களைக் காத்துக் கொள்ள விரும்பினால் தவறுகள் நேராமல் பார்த்துக் 693
கொள்ள வேண்டும். அரசரின் சந்தேகத்திற்கு ஆளாகி விட்டால் அதை நீக்குவது முடியாததாகும்.

செவிச்சொல்லும் சேர்ந்த நகையும் அவித்துஒழுகல்
ஆன்ற பெரியார் அகத்து.
அரசன் அருகில் இருக்கும்போது, அவர் காணும்படி, பிறர் காதருகே சென்று சொல்வதையும், 694
ஒருவர் முகம் நோக்கிச் சிரிப்பதையும் செய்யாமல் கவனமுடன் இருக்க வேண்டும்.

எப்பொருளும் ஓரார் தொடரார்மற்று அப்பொருளை
விட்டக்கால் கேட்க மறை.
அரசர் இரகசியம் பேசும்போது உற்றுக் கேட்காமலும் அதைத் தொடர்ந்து கேள்விகள் கேட்காமலும் 695
இருந்து அது பற்றி அவரே வந்து சொல்லும் போது கேட்டுக் கொள்ள வேண்டும்.

குறிப்புஅறிந்து காலம் கருதி வெறுப்புஇல
வேண்டுப வேட்பச் சொலல்.
அரசருடைய குறிப்பினை அறிந்து, தகுந்த சமயத்தைப் பார்த்து, வெறுப்பில்லாத 696
செய்திகளையும் விருப்பமான செய்திகளையும் அவர் விரும்புமாறு சொல்ல வேண்டும்.

வேட்பன சொல்லி வினையில எஞ்ஞான்றும்
கேட்பினும் சொல்லா விடல்.
அரசருக்கு விருப்பமானவற்றை மட்டும் சொல்லி, அவரே கேட்டாலும்கூட வெறுக்கத் 697
தக்கவற்றைச் சொல்லாமல் விட்டு விட வேண்டும்.

'இளையர்; இனமுறையர்' என்றுஇகழார் நின்ற
ஒளியோடு ஒழுகப் படும்.
அரசரைத் தனக்கு இளையவர் என்றோ, இன்ன முறையில் உறவினர் என்றோ, 698
இகழாமல் அவர்தம் தகுதிக்கு ஏற்பப் புகழ்ந்து, மதித்து நடக்க வேண்டும்.

'கொளப்பட்டேம்' என்றுஎண்ணிக் கொள்ளாத செய்யார்
துளக்குஅற்ற காட்சி யவர்.
நிலையான தெளிந்த அறிவினை உடையவர்கள் அரசருக்குத் தாம் விருப்பமானவர் 699
என்றெண்ணித் தகாத காரியங்களைச் செய்ய மாட்டார்கள்.

'பழையம்' எனக்கருதிப் பண்புஅல்ல செய்யும்
கெழுதகைமை கேடு தரும்.
அரசருக்குத் தாம் நெடுங்காலமாய்த் தொடர்புடையவர் என்றெண்ணி, அவர் 670
விரும்பாத செயல்களைச் செய்பவர்கள் தீமையை அடைவார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 71. குறிப்புஅறிதல்

கூறாமை நோக்கிக் குறிப்புஅறிவான் எஞ்ஞான்றும்
மாறாநீர் வையக்கு அணி. 701

ஒருவன் சொல்லாமலே அவன் முகத்தைப் பார்த்த அளவிலேயே அவன் என்ன நினைக்கிறான் என்பதை அறிந்து கொள்ளுகின்ற ஆற்றல் பெற்றவன், உலகத்திற்கு உயர்ந்த ஆபரணம் போன்றவன் ஆவான்.

ஐயப் படாஅது அகத்தது உணர்வானைத்
தெய்வத்தோடு ஒப்பக் கொளல். 702

ஒருவன் மனத்தில் உள்ளதை அவன் சிறிதும் சந்தேகப்படாத வகையில் அறிந்து கொள்ளக் கூடியவன் தெய்வத்திற்குச் சமமாவான்.

குறிப்பிற் குறிப்புஉணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல். 703

ஒருவனுடைய கண்களையும் முகத்தையும் கொண்டு அவன் என்ன நினைக்கிறான் என்று அறிந்து கொள்ள வல்லவனை, நாட்டில் உள்ள எவ்வளவு உயர்ந்த பொருளாயினும் அதனைக் கொடுத்துத் தமக்குத் துணையாக்கிக் கொள்ள வேண்டும்.

குறித்தது கூறாமைக் கொள்வாரோடு ஏனை
உறுப்போர் அனையரால் வேறு. 704

ஒருவனுடைய மனத்தில் உள்ளவற்றை அறிந்து கொள்ள வல்லவன் உறுப்புகளால் மற்றவர்களோடு ஒன்றுபட்டிருந்தாலும் அறிவினால் வேறுபட்டவனே ஆவான்.

குறிப்பின் குறிப்புஉணரா ஆயின் உறுப்பினுள்
என்ன பயத்தவோ கண்? 705

ஒருவனது கண்கள், முகம் ஆகியவற்றை பார்த்தே அவன் என்ன எண்ணுகிறான் என்று அறிந்து கொள்ள முடியாதவனுக்குக் கண்கள் இருந்தும் ஒரு பயனும் இல்லை.

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம். 706

தன்னை அடுத்திருக்கும் பொருளை அப்படியே காட்டும் கண்ணாடியைப் போல், ஒருவன் உள்ளத்தில் மிகுந்து தோன்றும் உணர்ச்சிகளை அவன் முகம் காட்டும்.

முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ? உவப்பினும்
காயினும் தான்முந் துறும். 707

ஒருவன் விருப்பம் கொண்டாலும் வெறுப்புக் கொண்டாலும் அந்த உணர்ச்சிகளை முந்திக் கொண்டு முகம் காட்டிவிடும். எனவே, அந்த முகத்திற்கு இணையாய் அறியவுள்ளது வேறு எதுவும் இல்லை.

முகம்நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி
உற்றது உணர்வார்ப் பெறின். 708

உள்ளத்தின் குறிப்பை வைத்து என்ன நடந்தது என்பதை அறிந்து கொள்ளும் வல்லமை உள்ளவன், எதிரியின் முகத்தை நோக்கினாலே போதும், அவன் மற்ற அனைத்தையும் அறிந்து கொள்வான்.

பகைமையும் கேண்மையும் கண்உரைக்கும் கண்ணின்
வகைமை உணர்வார்ப் பெறின். 709

கண் பார்வையின் வேறுபாடுகளைக் கொண்டு, அவற்றின் பொருள் என்ன என்று அறிந்து சொல்ல வல்லவர் துணை இருந்தால், எதிரியின் பகையையும் நட்பையும் கண்களைக் கொண்டே தெரிந்து கொள்ள முடியும்.

நுண்ணியம் என்பார் அளக்கும்கோல் காணுங்கால்
கண்அல்லது இல்லை பிற. 710

நுட்பமாக அறிந்து சொல்கிறவர்களுக்கு அவ்வாறு சொல்லுவதற்கு அளவு கோலாகத் துணை நிற்பது அவருடைய கண்களைத் தவிர வேறில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 72. அவை அறிதல்

அவைஅறிந்து ஆராய்ந்து சொல்லுக; சொல்லின்
தொகைஅறிந்த தூய்மை யவர். 711
சொற்களின் வகை தொகைகளை அறிந்த நல்லவர்கள், சபையில்
நிறைந்திருப்பவர்களின் தன்மை அறிந்து பேச வேண்டும்.

இடைதெரிந்து நன்குஉணர்ந்து சொல்லுக; சொல்லின்
நடைதெரிந்த நன்மை யவர். 712
நல்ல நடையில் பேசத் தெரிந்த வல்லவர்கள், சபையில் உள்ளவர்கள் எவ்வாறு
தம் பேச்சை ஏற்றுக் கொள்கிறார்கள் என்று இடையிடையே ஆராய்ந்து பேச வேண்டும்.

அவையறியார் சொல்லல்மேற் கொள்பவர் சொல்லின்
வகையறியார் வல்லதூஉம் இல். 713
சபையில் கூடி உள்ளவர்களின் தன்மையினை அறியாமல் பேசுகிறவர்கள், எப்படிச் சொல்ல
வேண்டும் என்ற முறையை அறியாதவர்கள். அவர்கள் சொல்லக் கூடியது ஏதும் இல்லை.

ஒளியார்முன் ஒள்ளியர் ஆதல்; வெளியார்முன்
வான்சுதை வண்ணம் கொளல். 714
அறிவிற் சிறந்தவர்கள் முன் தாமும் அறிவுள்ளவராகப் பேச வேண்டும். அறிவில்லாதவர்
முன் வெண்சுண்ணாம்பு போலத் தாமும் அறிவில்லாதவர் போல இருந்து விட வேண்டும்.

நன்றுஎன்ற வற்றுள்ளும் நன்றே முதுவருள்
முந்து கிளவாச் செறிவு. 715
அறிவில் மிகுந்தவர்கள் கூடி உள்ள சபையில் தான் முந்திக் கொண்டு போய் ஏதும் பேசாமல்
இருப்பது, ஒருவனுக்கு நன்மை என்று சொல்லப்பட்ட எல்லாவற்றிலும் நன்மை உடையது.

ஆற்றின் நிலைதளர்ந்து அற்றே வியன்புலம்
ஏற்றுஉணர்வார் முன்னர் இழுக்கு. 716
தெளிந்த அறிவுடையவர்கள் முன்னே குற்றம் ஏற்படப் பேசுவதென்பது, நல்ல
ஒழுக்கத்திலிருந்து நிலை தவறி விழுவதைப் போன்றது.

கற்றுஅறிந்தார் கல்வி விளங்கும் கசடுஅறச்
சொல்தெரிதல் வல்லார் அகத்து. 717
சொற்களின் பொருளைக் குற்றம் இல்லாமல் அறிந்திருப்பவர்கள் சபையில்
கற்றறிந்தவர் ஒருவர் பேசும்போது, அவருடைய சிறந்த புலமை எல்லாருக்கும் விளங்கும்.

உணர்வது உடையார்முன் சொல்லல் வளர்வதன்
பாத்தியுள் நீர்சொரிந்து அற்று. 718
தாமே அறிந்து கொள்ளும் திறமை உடையவர்கள் முன் நன்கு கற்றவர் பேசுவது
தானாகவே வளரும் பயிர்கள் உள்ள பாத்தியில் நீர் ஊற்றுவது போன்றதாகும்.

புல்அவையுள் பொச்சாந்தும் சொல்லற்க; நல்அவையுள்
நன்கு செலச்சொல்லு வார். 719
நல்ல அறிஞர்கள் கூடிய சபையில் நல்ல கருத்துகளைச் சொல்ல வல்லமை
உள்ளவர்கள், அறிவில்லாதவர்கள் கூட்டத்தில் மறந்துங்கூடப் பேசக் கூடாது.

அங்கணத்துள் உக்க அமிழ்துஅற்றால் தம்கணத்தர்
அல்லார்முன் கோட்டி கொளல். 720
தமக்கிணையான அறிவிற் சிறந்தவர்கள் இல்லாத சபையில் ஒரு பொருள்
பற்றிப் பேசுதல் தூய்மை இல்லாத இடத்தில் கொட்டிய அமிழ்தம் போன்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வகைஅறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்**
**தொகைஅறிந்த தூய்மை யவர்.** 721

சொற்களின் தொகுதியை அறிந்த தூய்மையான அறிவுடையவர்கள், சபையில் கூடி உள்ளவர்களின் வல்லமையை அறிந்து வாய் தவறிக்கூடப் பிழையாகப் பேச மாட்டார்கள்.

**கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்**
**கற்ற செலச்சொல்லு வார்.** 722

தாம் நன்கு கற்றறிந்த கருத்துகளைச் சபையில் உள்ளவர்களின் மனதில் பதியுமாறு எடுத்துக் கூற வல்லவர்கள், கற்றவர்கள் அனைவரையும் விடக் கற்றவராய் மதிக்கப்படுவார்கள்.

**பகைஅகத்துச் சாவார் எளியர்; அரியர்**
**அவை அகத்து அஞ்சா தவர்.** 723

பகைவர் நிறைந்த போர்க்களத்திற்கு அஞ்சாமல் சென்று போரிட்டுச் சாகத் துணிந்தவர் பலர், ஆனால் கற்றவர் நிறைந்த சபைக்குச் சென்று அஞ்சாமல் பேசத் துணிவு கொள்பவர் சிலரே.

**கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம்கற்ற**
**மிக்காருள் மிக்க கொளல்.** 724

கற்றவர்கள் முன் தாம் கற்றவற்றை அவர்கள் மனத்தில் பதியுமாறு எடுத்துச் சொல்ல வேண்டும். தம்மைவிட அதிகம் கற்றவரிடமிருந்து தாம் அதிகமாய் அறிந்து கொள்ள வேண்டும்.

**ஆற்றின் அளவுஅறிந்து கற்க; அவைஅஞ்சா**
**மாற்றம் கொடுத்தற் பொருட்டு.** 725

சபையில் உள்ளவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு அஞ்சாமல் பதில் கூறும் அளவிற்குத் தெளிவாய் விடைகளை அறிந்து கொள்ளக்கூடிய சிறந்த நூல்களை நிறையப் படிக்க வேண்டும்.

**வாளொடுஎன் வன்கண்ணர் அல்லார்க்கு நூலொடுஎன்**
**நுண்அவை அஞ்சு பவர்க்கு?** 726

வீரமில்லாத கோழையின் கையில் வாள் இருந்துதான் என்ன பயன்? நுண்ணறிவு மிக்கவர்கள் கூடியுள்ள சபையில் பேச அச்சப்படுபவன் நிறைய நூல்களைப் படித்து என்ன பயன்?

**பகைஅகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்து**
**அஞ்சும் அவன்கற்ற நூல்.** 727

சபையில் உள்ள அறிஞர்களுக்கு அஞ்சுகின்றவன் கற்ற நூல், பேடியின் கையில் உள்ள கூர்வாளைப் போன்றது.

**பல்லவை கற்றும் பயம்இலரே நல்அவையுள்**
**நன்கு செலச்சொல்லா தார்.** 728

அறிஞர்கள் கூடிய அவையில் அவர்கள் ஏற்றுக் கொள்ளும் வகையில் சொல்ல முடியாதவன், பல நூல்களைக் கற்றிருந்தாலும் ஒரு பயனும் இல்லை.

**கல்லா தவரின் கடைஎன்ப, கற்றுஅறிந்தும்**
**நல்லார் அவைஅஞ்சு வார்.** 729

உயர்ந்த நூல்களைக் கற்றுத் தேர்ந்திருந்தாலும் அறிஞர்களிடையே பேச அஞ்சுபவன், படிக்காதவனை விடக் கீழானவனே ஆவான்.

**உளர்எனினும் இல்லாரோடு ஒப்பர் களன்அஞ்சிக்**
**கற்ற செலச்சொல்லா தார்.** 730

தான் விரிவாகக் கற்றதைப் பிறர் ஏற்றுக் கொள்ளும் வகையில் சொல்ல அஞ்சுபவன், உயிரோடு வாழ்ந்தாலும் இறந்தவனுக்கு ஒப்பானவனே ஆவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்வுஇலாச்
செல்வரும் சேர்வது நாடு. 731
குறைவில்லாத விளைபொருள்களை உருவாக்குவோரும், தகுதி மிக்க அறிஞர்களும், குறைவற்ற செல்வர்களும் பொருந்தியுள்ள நாடே சிறந்த நாடாகும்.

பெரும்பொருளால் பெட்டக்கது ஆகி அருங்கேட்டான்
ஆற்ற விளைவது நாடு. 732
மிகுந்த செல்வ வளம் உடையதாய், பிற நாட்டு மக்களும் விரும்பக் கூடியதாய், பெருந்துன்பம் வந்தாலும் அதை எதிர்த்து நின்று வளம் குன்றாத நிலையில் உள்ளதே சிறந்த நாடாகும்.

பொறைஒருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்கு
இறைஒருங்கு நேர்வது நாடு. 733
பிற நாட்டிலிருந்து வந்து குடியேறியவர்களால் ஏற்படும் சுமையைத் தாங்கிக் கொண்டு தன்னை ஆளும் அரசனுக்கு ஆட்சி புரிவதற்கு வேண்டிய வரிப்பொருளையும் குறையாமல் வழங்குவதே நாடாகும்.

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு. 734
மிகக் கொடிய பசியும், தீராத நோயும், அழிவினை உண்டாக்கும் பகையும் வந்து சேராமல் இருப்பதே வளம் மிக்க நாடாகும்.

பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்துஅலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு. 735
ஆட்சிக்கு எதிராக இயங்கும் பல குழுக்களும், உடனிருந்தே கேடு செய்யும் உட்பகையும், அரசனுக்குத் துன்பம் கொடுக்கும் கெடுமதியாளர்களின் தொல்லைகளும் இல்லாமல் இருப்பதே நல்ல நாடு ஆகும்.

கேடுஅறியாக் கெட்ட இடத்தும் வளம்குன்றா
நாடுஎன்ப நாட்டின் தலை. 736
பகைவர்களால் கெடுக்க முடியாததாய், கேடு நேர்ந்தபோதும் வளம் குறையாததாய் விளங்கும் நாடே மற்ற நாடுகளுக்கெல்லாம் தலையாய நாடாகும்.

இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்அரணும் நாட்டிற்கு உறுப்பு. 737
ஊற்று நீர், மழை நீர் என்ற இரு வகைகளில் நீர் வளமும், இயற்கையாகவே அரணாய் அமைந்த மலையும், அம்மலை தரும் ஆற்று நீரும், வலிமைமிக்க கோட்டையும் ஒரு நாட்டின் உறுப்புகள் ஆகும்.

பிணிஇன்மை செல்வம் விளைவுஇன்பம் ஏமம்
அணிஎன்ப நாட்டிற்குஇவ் ஐந்து. 738
நோய் இல்லாமல் இருத்தல், சிறந்த செல்வம், விளைபொருள் வளம், இன்பமயமான வாழ்க்கை, நல்ல பாதுகாப்பு ஆகிய ஐந்தும் நாட்டிற்கு அழகாகும்.

நாடுஎன்ப நாடா வளத்தன; நாடுஅல்ல
நாட வளம்தரும் நாடு. 739
முயற்சி செய்து சிரமப்படாமலே தானே வளம் தரும் நாட்டைச் சிறந்த நாடு என்று கூறுவார்கள். தேடி முயன்று தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் நிலையில் உள்ள நாடுகள் சிறந்த நாடுகள் அல்ல.

ஆங்குஅமைவு எய்தியக் கண்ணும் பயம்இன்றே
வேந்து அமைவு இல்லாத நாடு. 740
ஒரு நாட்டில் நல்ல அரசனின் நலம் தரும் ஆட்சி அமையாவிட்டால், தேவைக்கேற்ற எல்லா வளங்களையும் அது உடையதாய் இருந்தாலும், அவற்றால் பயனில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்று பவர்க்கும் அரண்பொருள் அஞ்சித்தற்
போற்று பவர்க்கும் பொருள். 741
பிற நாட்டின் மீது போர் புரியப் படை எடுத்துச் செல்பவருக்கும் அரண் பாதுகாப்பாகிறது. அதே சமயம் பகைவர் படை எடுத்து வரும்போது பதுங்கிப் பாதுகாப்பாய் இருக்கவும் அரண் பயன்படுகிறது.

மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்
காடும் உடையது அரண். 742
மணி போல் தெளிந்த நீரும், வெட்ட வெளியான நிலமும், மலையும், குளிர் நிழல் தரும் காடும் ஆகிய நான்கும் உள்ளதே அரண் ஆகும்.

உயர்வுஅகலம் திண்மை அருமைஇந் நான்கின்
அமைவுஅரண் என்றுஉரைக்கும் நூல். 743
உயரம், அகலம், உறுதி, பகைவரால் அழிக்க முடியாத தன்மை ஆகிய நான்கும் பொருந்தி இருப்பதே சிறந்த அரண் ஆகும்.

சிறுகாப்பின் பேரிடத்தது ஆகி உறுபகை
ஊக்கம் அழிப்பது அரண். 744
காக்க வேண்டிய வாயில் சிறியதாயும், மற்ற இடங்கள் மிகப்பெரியனவாயும், எதிர்த்து வரும் பகைவரின் எழுச்சியைக் கெடுக்க வல்லதாயும் உள்ளதே அரண் ஆகும்.

கொளற்குஅரிதாய்க் கொண்டகூழ்த்து ஆகி அகத்தார்
நிலைக்குஎளிதாம் நீரது அரண். 745
பகைவரால் கைப்பற்ற முடியாததாய், கையிருப்பில் பல வகை உணவுப் பொருள்களையும் கொண்டதாய், உள்ளே இருப்பவர்கள் அச்சமின்றி நிலைத்து வாழ்வதற்கு ஏற்புடையதாய் அமைந்திருப்பதே அரண்.

எல்லாப் பொருளும் உடைத்தாய் இடத்துஉதவும்
நல்ஆள் உடையது அரண். 746
உள்ளே இருப்பவர்களுக்கு வேண்டிய பொருள்களைத் தருவதாய், போர் வந்த காலத்தில் பகைவரை வெல்லக் கூடிய வீரர்களை உடையதாய் இருப்பதே அரண் ஆகும்.

முற்றியும் முற்றாது எறிந்தும் அறைப்படுத்தும்
பற்றற்கு அரியது அரண். 747
முற்றுகையிட்டாலும், முற்றுகையிடாமலேயே போர் செய்தாலும், உள்ளிருப்போரைக் கொண்டு வஞ்சனையாய் அணுக முயன்றாலும், பகைவரால் வெல்ல முடியாத தகுதி உடையதாக விளங்குவதே அரண் ஆகும்.

முற்றுஆற்றி முற்றி யவரையும் பற்றுஆற்றிப்
பற்றியார் வெல்வது அரண். 748
வெளியே இருந்து முற்றுகை இடும் பகைவரை, உள்ளே இருந்து போர் புரியும் வீரர்கள் வெற்றி கொள்வதற்கு வாய்ப்பாய் அமைந்திருப்பதே அரண் ஆகும்.

முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து
வீறுஎய்தி மாண்டது அரண். 749
போர்முனையில் பகைவர் அழியும் வண்ணம் உள்ளே இருக்கும் வீரர்கள் போர் செய்வதற்கு ஏற்றதாய் அமைந்திருக்கும் பெருமைக்குரியதே அரண் ஆகும்.

எனைமாட்சித்து ஆகியக் கண்ணும் வினைமாட்சி
இல்லார்கண் இல்லது அரண். 750
அரண் வலிவுடையதாயும் மிகப் பெருமை உடையதாயும் இருந்தபோதிலும் உள்ளே இருக்கும் வீரர்கள் செயல் திறமை மிக்கவர்களாய் இல்லை என்றால், அரணால் மட்டும் பயன் இல்லை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் அல் லவரைப் பொருள் ஆகச் செய்யும்
பொருள்அல்லது இல்லை பொருள்.
ஒரு பொருளாய் மதிக்கத் தகாதவரையும் மதிப்பு மிக்கவராய்ச் செய்யும் செல்வத்தைத் தவிர வேறு சிறந்த பொருள் எதுவும் இல்லை. 751

இல்லாரை எல்லாரும் எள்ளுவர்; செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு.
எல்லா நன்மையும் உடையவர்களாய் இருந்தாலும் பொருள் இல்லாதவரை எல்லாரும் இகழ்வார்கள். எந்த நன்மையுமற்றவர்களாய் இருந்தாலும் பொருள் உடையவர்களை எல்லாரும் புகழ்வார்கள். 752

பொருள்என்னும் பொய்யா விளக்கம் இருள்அறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று.
பொருள் என்று சொல்லப்படுகின்ற அணையா விளக்கு, எண்ணிய இடத்திற்குச் சென்று எண்ணியவண்ணம் குறைகளை நீக்கும். 753

அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறன்அறிந்து
தீதின்றி வந்த பொருள்.
சேர்க்கும் வழி அறிந்து அறவழியில் தேடிய செல்வம் அறத்தை வளர்க்கும்; இன்பத்தைக் கொடுக்கும். 754

அருளொடும் அன்பொடும் வாராப் பொருள்ஆக்கம்
புல்லார் புரள விடல்.
அருள், அன்பு என்ற நல்வழிகளில் வாராத செல்வத்தைப் பயன்படுத்தாது, தீமையானது என்று நீக்கி விட வேண்டும். 755

உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்.
இறையாகத் தானே வந்த பொருளும், வரியாக வந்த பொருளும், பகைவரை வென்றதனால் வந்த பொருளும் அரசருக்குரிய பொருள்கள் ஆகும். 756

அருள்என்னும் அன்புஈன் குழவி, பொருள்என்னும்
செல்வச் செவிலியால் உண்டு.
அன்பு என்ற தாய் பெற்ற அருள் என்னும் அற்புதக் குழந்தை, செல்வம் என்னும் செவிலித் தாயால் வளரும். 757

குன்றுஏறி யானைப்போர் கண்டுஅற்றால் தன்கைத்து ஒன்று
உண்டாகச் செய்வான் வினை.
ஒருவன் தனக்குச் சொந்தமான செல்வத்தை வைத்துக் கொண்டு செயலாற்றுவதென்பது மலையின் மேலே ஏறி நின்று கொண்டு கீழே நடக்கும் யானைப் போரைப் பார்ப்பது போன்றது. 758

செய்க பொருளைச் செறுநர் செருக்குஅறுக்கும்
எஃகுஅதனிற் கூரியது இல்.
ஒருவன் பொருளைத் தேட வேண்டும். அவனுடைய பகைவர்களுடைய செருக்கை அடக்க அதை விடக் கூர்மையான ஆயுதம் வேறு எதுவும் இல்லை. 759

ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு.
அரிதான செல்வத்தை மிகுதியாய்த் தேடியவருக்கு மற்றதாகிய அறமும் இன்பமும் ஆகிய இரண்டும் மிக எளிதாய்க் கை கூடும் பொருள்கள் ஆகும். 760





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுப்புஅமைந்து ஊறுஅஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையுள் எல்லாம் தலை. 761

உறுப்புகள் அனைத்தும் அமைந்ததாய், எதிர்வரும் பகையான துன்பத்திற்கு அஞ்சாமல் வெற்றி தரும் படைகளே அரசருடைய செல்வங்கள் எல்லாவற்றிலும் சிறந்தவையாகும்.

உலைவிடத்து ஊறுஅஞ்சா வன்கண் தொலைவிடத்துத்
தொல்படைக்கு அல்லால் அரிது. 762

போரில் எதிர்பாராத அழிவால் வல்லமை குன்றினாலும் துன்பத்திற்கு அஞ்சாத நெஞ்சுறுதி ஒரு நாட்டின் மூலப் படைக்கே உரியதாகும்.

ஒலித்தக்கால் என்ஆம் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும். 763

எலிகள் பெரும் அளவில் கூடிக் கடல் போல் ஒலித்தாலும் பாம்புக்கு ஒன்றும் ஆகாது. ஆனால், பாம்பு மூச்சு விட்ட அளவில் எலிகள் கெட்டழியும்.

அழிவுஇன்று அறைபோகாது ஆகி வழிவந்த
வன்கண் அதுவே படை. 764

போரில் பகைவரால் அழிக்க முடியாததாய், பகைவரின் சூழ்ச்சிகளுக்குப் பலி ஆகாததாய், தொடர்ந்து பெருமை உடையதாய் விளங்குவதே படையாகும்.

கூற்றுஉடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்
ஆற்றல் அதுவே படை. 765

எமனே சினம் கொண்டு எதிர் வந்தாலும் ஒன்று கூடி எதிர் நிற்கும் ஆற்றல் மிகுந்ததே சிறந்த படை ஆகும்.

மறம்மானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்
எனநான்கே ஏமம் படைக்கு. 766

வீரம், மானம், பெருமைக்குரிய வழியில் செல்லுதல், அரசருடைய நம்பிக்கைக்கு உரியவர்களாய் இருத்தல் ஆகிய நான்கு பண்புகளும் படைக்குச் சிறந்தவை ஆகும்.

தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
போர்தாங்கும் தன்மை அறிந்து. 767

எதிர்நோக்கி வரும் பகையைத் தடுத்து நிறுத்தும் வகையில், பகைவரின் முன்னணிப் படையாகிய தூசிப் படையைத் தாக்கி முன்னேறிச் செல்லும் வலிமை உடையதே சிறந்த படையாகும்.

அடல்தகையும் ஆற்றலும் இல்எனினும் தானை
படைத்தகையால் பாடு பெறும். 768

போர்செய்யும் வீரமும் பகைவரைத் தடுக்கும் ஆற்றலும் இல்லை என்றாலும், படையானது தன்னுடைய அணிவகுப்பு அழகால் பெருமை பெறும்.

சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும்
இல்ஆயின் வெல்லும் படை. 769

போர் செய்து அழிவதால் தேய்ந்து குறைவதும், அரசனிடம் நீங்காத வெறுப்பும், உடை, உணவு, போர்க்கருவிகள் ஆகியவற்றில் பற்றாக்குறையும் இல்லாதிருக்குமானால் படை வெற்றி பெறும்.

நிலைமக்கள் சால உடைத்துஎனினும் தானை
தலைமக்கள் இல்வழி இல். 770

நிலையான வீரர்கள் பலரைப் பெற்றிருந்தாலும், போர்முறை அறிந்து நடத்திச் செல்லும் படைத் தலைவன் இல்லை என்றால் எந்தப் படையும் பகைவரை எதிர்க்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ஐமுன் நில்லன்மின் தெவ்விர்; பலர்என்ஐ
முன்நின்று கல்நின்ற வர். 771

பகைவரே! என் தலைவனை எதிர்த்து நிற்காதீர்கள். என் தலைவனை எதிர்த்துப் போரில் மடிந்து நடுகல்லாகி விட்டவர் பலர் ஆவர்.

கான முயல்எய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது. 772

காட்டில் ஓடும் முயலை நோக்கிக் குறி தவறாமல் அம்பை எய்வதைவிட, வெட்ட வெளியில் நின்ற யானை மீது எறிந்து, குறி தவறிப் போன வேலினை ஏந்துதலே சிறந்தது.

பேராண்மை என்ப தறுகண்ஒன்று உற்றக்கால்
ஊர்ஆண்மை மற்றுஅதன் எஃகு. 773

பகைவரை எதிர்த்து நிற்கும் வீரத்தைப் பேராண்மை என்று சொல்லுவார்கள். ஒரு துன்பம் வந்தபோது பகைவருக்கும் உதவி செய்தலை அந்த ஆண்மைக்குக் கூர்மை என்று சொல்லுவார்கள்.

கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும். 774

கையிலிருந்த வேலை ஒரு யானையின் மேல் எறிந்து துரத்திவிட்டு, வருகின்ற வேறு யானையைத் தாக்கத் தன் மார்பில் தைத்திருந்த எதிரியின் வேலைக் கண்டு பறித்துச் சிரித்து எய்பவன் வீரன்.

விழித்தகண் வேல்கொண்டு எறிய அழித்துஇமைப்பின்
ஒட்டுஅன்றோ வன்க ணவர்க்கு. 775

பகைவரைச் சினத்தோடு பார்க்கும் கண் அவர்கள் வேலை வீசுகின்றபோது இமைக்குமானால் அது வீரனுக்குத் தோல்வியே ஆகும்.

விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்
வைக்கும்தன் நாளை எடுத்து. 776

சுத்த வீரன் தன் வாழ்நாள்களை எடுத்து எண்ணி, அவற்றுள் தான் போரிலே பகைவரை எதிர்த்துக் காயம்படாத நாள்களை எல்லாம் பயனற்ற நாள்களாகவே கருதுவான்.

சுழலும் இசைவேண்டி வேண்டா உயிரார்
கழல்யாப்புக் காரிகை நீர்த்து. 777

நிலைத்து நிற்கும் புகழை விரும்பித் தன் உயிரை அதற்காக இழக்க விரும்பும் வீரன், அதன் பொருட்டுத் தன் காலில் வீரக் கழலை அணிவது சிறந்த அழகாகும்.

உறின்உயிர் அஞ்சா மறவர் இறைவன்
செறினும்சீர் குன்றல் இலர். 778

போர் வந்தால் தன் உயிரைப் பொருட்படுத்தாது போர் செய்யத் துணியும் வீரன், ஒருவேளை அரசர் சினத்திற்கு ஆளானாலும், ஒருபோதும் தன் சிறப்பில் குறைந்தவன் ஆகமாட்டான்.

இழைத்தது இகவாமைச் சாவாரை யாரே
பிழைத்தது ஒறுக்கிற் பவர் 779

தான் செய்த சபதப்படி சிறப்பாகப் போர் செய்து சாகின்ற வீரனைப் போரில் முன்னதாகவே இறந்துவிட்டானே என்று யாரும் பழிக்க மாட்டார்கள்.

புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்துகோள் தக்கது உடைத்து. 780

தன்னைக் காத்த அரசன் கண்ணீர் பெருக்குமாறு சாக நேர்ந்தால், அந்தச் சாவு என்பது, பிச்சையாகக் கேட்டாவது பெற்றுக் கொள்ளத் தக்க பெருமை உடையதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்குஅரிய யாவுள நட்பின் அதுபோல்
வினைக்குஅரிய யாவுள காப்பு. 781
நட்பைப் போல் தொடர்பு கொள்வதற்குப் பெருமையானது வேறெதுவும் இல்லை.
தொழிலுக்குச் சிறந்த பாதுகாப்பாய் நட்பைப் போல் வேறெதையும் கூறமுடியாது.

நிறைநீர நீரவர் கேண்மை; பிறைமதிப்
பின்நீர பேதையார் நட்பு. 782
அறிவுடையவர் நட்பு வளர்பிறை போல நாளும் வளரும். அறிவற்றவர்
நட்பு தேய்பிறை போல எந்நாளும் தேயும்.

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு. 783
நல்ல நூலின் நற்பொருள் கற்கக் கற்க மேலும் மேலும் இன்பம் தருவது
போல, நற்பண்பு உடையவரின் நட்பு பழகப் பழக இன்பம் தரும்.

நகுதல் பொருட்டுஅன்று நட்டல்; மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தல் பொருட்டு. 784
நட்பு என்பது ஒருவருக்கொருவர் சிரித்து மகிழ்வதற்காக ஏற்பட்டதன்று. நண்பர் நிலை
தவறிச் செல்லும் போது கண்டித்து நல்லுரை கூறித் திருத்துவதற்காக அமைந்ததேயாகும்.

புணர்ச்சி பழகுதல் வேண்டா; உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும். 785
நட்புக் கொள்வதற்கு நேரில் சந்திக்கவும் பழகவும் வேண்டும் என்பதில்லை, ஒரே
தன்மையான உணர்ச்சியே நட்பு ஏற்படுவதற்கு வேண்டிய உரிமையை உண்டாக்கும்.

முகநக நட்பது நட்பன்று; நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு. 786
முகம் மட்டும் மலரும்படியாகப் பழகுவது நட்பாகாது. மனமும் மலரும்படியாய்
உள்ளன்பு கொண்டு உண்மையுடன் பழகுவதே உயர்ந்த நட்பு ஆகும்.

அழிவின் அவைநீக்கி, ஆறுஉய்த்து அழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு. 787
அழிவு நல்கும் தீமையிலிருந்து தடுத்து, நல்ல வழியில் நடக்கும்படி செய்து, அழிவு
நேரும் என்றாலுங்கூட, உடனிருந்து துன்பப்படுவதே தூய நட்பு ஆகும்.

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு. 787
உடை அவிழும்போது உடனே அதைத் தடுத்துப் பிடிக்க விரைந்து செல்லும் கையைப்
போல், துன்பம் வரும் போது அதை உடன் போக்க முயல்வதுதான் நட்பு.

நட்பிற்கு வீற்றுஇருக்கை யாதுஎனின் கொட்புஇன்றி
ஒல்லும்வாய் ஊன்றும் நிலை. 789
நட்பிற்குச் சிறந்த நிலை எது என்றால், எப்போதும் மனம் மாறுபடாமல், முடியும்
போதெல்லாம் நண்பனுக்கு உதவி செய்து தாங்கும் நிலையேயாகும்.

'இனையர் இவர்எமக்கு இன்னம்யாம்' என்று
புனையினும் புல்என்னும் நட்பு. 790
இவர் எனக்கு இத்தன்மையானவர், நான் இவருக்கு இன்ன தன்மையானவன் என்று
ஒருவரை ஒருவர் மிகுதியாகப் பாராட்டிக் கொள்வதனால், நட்பு தன் சிறப்பை இழந்துவிடும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடாது நட்டலிற் கேடில்லை; நட்டபின்
வீடில்லை நட்புஆள் பவர்க்கு. 791

நட்பில் கூடியவருக்கு ஒருபோதும் பிரிவு என்பதில்லை. எனவே, ஆராய்ந்து பாராமல் நட்புக் கொள்வதைப் போலக் கேடு தருவது வேறெதுவும் இல்லை.

ஆய்ந்துஆய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாம் துயரம் தரும். 792

ஒருவன் நுணுக்கமாய் ஆராய்ந்து பாராமல் கொள்ளும் நட்பு, இறுதியில் தான் சாவதற்கே காரணமான துயரத்தை உண்டாக்கிவிடும்.

குணனும் குடிமையும் குற்றமும் குன்றா
இனனும் அறிந்தியாக்க நட்பு. 793

ஒருவனுடைய குணத்தையும், குடிப் பிறப்பையும் அவனிடம் உள்ள குறையையும், அவனைச் சேர்ந்தவர்கள் இயல்பையும் அறிந்த பின் நட்புக் கொள்ள வேண்டும்.

குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்
கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு. 794

உயர்ந்த குடியில் பிறந்தவனை, தனக்கு வருகிற பழிக்கு அஞ்சுகிறவனைப் பொருள் கொடுத்தாவது நண்பனாகப் பெற வேண்டும்.

அழச்சொல்லி அல்லது இடித்து வழக்குஅறிய
வல்லார்நட்பு ஆய்ந்து கொளல். 795

நன்மைக்குப் புறம்பான செயல்களைச் செய்யும்போது கண்டிக்கின்ற தன்மை உள்ளவனாகவும், உலக நடைமுறையை அறிய வல்லவனாகவும் உள்ளவனின் நட்பினை ஆராய்ந்து கொள்ள வேண்டும்.

கேட்டினும் உண்டுஓர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதுஓர் கோல். 796

கேடு உண்டாவதிலும் ஒரு நன்மை இருக்கிறது. கேடுதான் நண்பனின் குணங்களை அளந்து பார்க்கக் கூடிய அளவுகோலாய் இருக்கிறது.

ஊதியம் என்பது ஒருவற்குப் பேதையார்
கேண்மை ஒரீஇ விடல். 797

ஒருவனுக்குச் சிறந்த செல்வம் என்று சொல்லக் கூடியது, அவன் அறிவற்றவர்களின் நட்பிலிருந்து விடுபடுவதே ஆகும்.

உள்ளற்க உள்ளம் சிறுகுவ; கொள்ளற்க
அல்லல்கண் ஆற்றுஅறுப்பார் நட்பு. 798

ஊக்கம் குறைவதற்குக் காரணமான செயல்களை எண்ணக் கூடாது. அது போலத் துன்பம் வந்தபோது கை விடுபவரின் நட்பைத் தொடரக் கூடாது.

கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை; அடுங்காலை
உள்ளினும் உள்ளம் சுடும். 799

துன்பம் நேரும்போது விட்டுப் பிரிகின்றவர்களின் நட்பை இறக்கும் நேரத்தில் நினைத்தாலுங்கூட அது அதிகத் துன்பத்தைத் தரும்.

மருவுக மாசுஅற்றார் கேண்மை; ஒன்று ஈத்தும்
ஒருவுக ஒப்புஇலார் நட்பு. 800

குற்றமில்லாதவர் நட்பை விரும்பி ஏற்றுக் கொள்ள வேண்டும். ஒரு தன்மையான பண்பு இல்லாதவருடைய நட்பை அவர் விரும்பியதைக் கொடுத்தாவது விட்டுவிடவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைமை எனப்படுவது யாதுஎனின் யாதும்
கிழமையாக் கீழ்ந்திடா நட்பு. 801
பழகிய நண்பர் உரிமையோடு செய்யும் செயலை இழிவானது என்று எண்ணாமல் ஏற்றுக் கொள்வதே பழைமை என்பதாகும்.

நட்பிற்கு உறுப்புக் கெழுதகைமை; மற்றுஅதற்கு
உப்புஆதல் சான்றோர் கடன். 802
நட்பிற்கு உறுப்பாவது நண்பர் உரிமையோடு செய்கின்ற செயல். அதற்கு மனங்கோணாமல் உடன்படுவது சான்றோரது கடமையாகும்.

பழகிய நட்புஎவன் செய்யும் கெழுதகைமை
செய்தாங்கு அமையாக் கடை. 803
உரிமை காரணமாய் நண்பர் செய்யும் செயலைத் தாம் செய்ததாகவே கருதி ஏற்றுக் கொள்ளா விட்டால் அவரோடு பழகிய நட்பு பயனற்றதாகும்.

விழைதகையான் வேண்டி இருப்பர் கெழுதகையான்
கேளாது நட்டார் செயின். 804
தம்மைக் கேட்காமலே உரிமையோடு நண்பர் ஒரு செயலைச் செய்தால், அந்த உரிமையைப் போற்றி, அச் செயலைத் தாமே செய்தது போல ஏற்றுக் கொள்வதே அறிஞர்தம் செயலாகும்.

பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுஉணர்க
நோதக்க நட்டார் செயின். 805
வருந்தக்கூடிய செயல்களை நண்பர் செய்தால் அதற்கு அறியாமை மட்டுமன்று, தம்மிடம் அவருக்குள்ள உரிமையும் காரணமாகும் என்று எண்ண வேண்டும்.

எல்லைக்கண் நின்றார் துறவார் தொலைவிடத்தும்
தொல்லைக்கண் நின்றார் தொடர்பு. 806
நட்பின் உரிமையினை அறிந்தவர் தமக்கு அழிவே நேர்ந்தாலும் பழைமையான நண்பரின் தொடர்பினை ஒருபோதும் அறுத்துக் கொள்ள மாட்டார்கள்.

அழிவந்த செய்யினும் அன்புஅறார்; அன்பின்
வழிவந்த கேண்மை யவர். 807
அன்பின் அடிப்படையில் நீண்ட நாள் நட்புக் கொண்டவர், அந்த நண்பர் தமக்குக் கேடு செய்த போதிலும் அவரிடம் அன்பு நீங்காமல் இருப்பார்.

கேள்இழுக்கம் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு
நாள்இழுக்கம் நட்டார் செயின். 808
பழகிய நண்பர் செய்த தவறுபற்றிப் பிறர் சொன்னாலும் கேளாத உரிமை உணர்வு உடையவருக்கு, அவர் நண்பர் தவறு செய்வாரானால் அது பயனுடைய நாளாகும்.

கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையும் உலகு. 809
உரிமை விட்டுப் போகாமல் தொடர்ந்து நண்பர்களாய் இருப்பவர்களுள் ஒருவர் தவறு செய்தாலுங்கூட, மற்றவர் நட்பை விட்டுவிடாமல் வாழ்ந்தால் அவர்களை உலகம் போற்றும்.

விழையார் விழையப் படுப; பழையார்கண்
பண்பின் தலைப்பிரியா தார். 810
மிகவும் பழகிய நண்பர் தவறு செய்த போதிலும் தம் நட்புரிமையை விடாதவரைப் பகைவர்களுங்கூட விரும்புவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருகுவார் போலினும் பண்புஇலார் கேண்மை
பெருகலிற் குன்றல் இனிது. 811
அன்பின் மிகுதியால் நலம் செய்வார் போலத் தோன்றினாலும் நல்ல
பண்பு இல்லாதவரின் நட்பு வளர்வதை விடத் தேய்வதே மேலானது.

உறின்நட்டு அறின்ஒரூஉம் ஒப்புஇலார் கேண்மை
பெறினும் இழப்பினும் என்? 812
தமக்குப் பயன் உள்ளபோது நட்பாய் இருப்பதும், பயன் இல்லாதபோது நட்பிலிருந்து
நீங்கிவிடுவதுமான தகுதியற்றவரின் நட்பு, இருப்பதை விட இல்லாமல் இருப்பதே நல்லது.

உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது
கொள்வாரும் கள்வரும் நேர். 813
நட்பின் உயர்வைக் கருதாமல், அதனால் என்ன கிடைக்கும் என்று பயனை எடை போட்டுப்
பார்ப்பவரும், அன்பினை நினையாமல் பொருளை நினைக்கும் விலைமாதரும், திருடரும் சமமாவார்கள்.

அமரகத்து ஆற்றுஅறுக்கும் கல்லாமா அன்னார்
தமரின் தனிமை தலை. 814
போர் நடக்கும் காலத்தில் களத்தில் கீழே தள்ளிவிட்டு ஓடும் அறிவற்ற குதிரையைப்
போன்றவரின் நட்பை விட, நட்பு என்பதே இல்லாமல் தனித்து இருப்பதே சிறந்தது.

செய்துஏமம் சாராச் சிறியவர் புன்கேண்மை
எய்தலின் எய்தாமை நன்று. 815
காத்து வைத்தாலும் பாதுகாக்க முடியாத இழிந்தவர் நட்பை விட,
அந்த நட்பை அடையாமல் இருப்பதே நன்மையாகும்.

பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுடையார்
ஏதின்மை கோடி யுறும். 816
அறிவில்லாதவரிடம் கொள்ளுகின்ற மிகப் பெரிய நட்பைவிட,
அறிவுடையவர்களின் பகைமை கோடிப் பங்கு நன்மை தரும்.

நகைவகையர் ஆகிய நட்பின் பகைவரால்
பத்துஅடுத்த கோடி யுறும். 817
உள்ளத்தில் அன்பில்லாமல் வெளியே சிரித்துப் பேசும் போலியானவர்களின்
நட்பை விடப் பகைவரால் உண்டாகும் நன்மை பத்துக் கோடி மடங்கு நன்மையாய் இருக்கும்.

ஒல்லும் கருமம் உடற்று பவர்கேண்மை
சொல்லாடார் சோர விடல். 818
முடியக் கூடிய செயலைக்கூட முடியாதபடி செய்து கெடுத்து விடுகின்றவரின்
நட்பைச் சொல்லாமலே கை விட்டுவிட வேண்டும்.

கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு. 819
செய்யும் செயல் வேறாகவும் சொல்லுகின்ற சொல்வேறாகவும் ஒன்றிற்கு
ஒன்று தொடர்பின்றி நடந்து கொள்பவரின் நட்பு கனவிலும் துன்பம் தரும்.

எனைத்தும் குறுகுதல் ஓம்பல் மனைக்கெழீஇ
மன்றில் பழிப்பார் தொடர்பு. 820
தனியே வீட்டில் உள்ளபோது உறவு கொண்டாடி, பலர் கூடியுள்ள மன்றத்தில் இருக்கும்
போது பழித்துப் பேசுபவரின் நட்பு நம்மைச் சற்றும் நெருங்காதபடி பார்த்துக் கொள்ளவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்இடம் காணின் எறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு. 821
மனம் ஒன்றாமல் நண்பர்கள் போல வெளித் தோற்றத்திற்குப் பழகியிருந்தவர் நட்பு, தக்க இடம் கண்டபோது தூக்கி எறிவதற்குரிய உலைக்களத்துக் கருவி போன்றது.

இனம்போன்று இனம்அல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும். 822
நமக்கு நல்ல நண்பர் போலவே இருந்து நடிக்கும் பொய்யானவரின் நட்பு, விலைமகளின் மனம் போல உள்ளொன்றும் புறமொன்றும் வேறுபட்டு நிற்கும்.

பலநல்ல கற்றக் கடைத்தும் மனம்நல்லர்
ஆகுதல் மாணார்க்கு அரிது. 823
நல்ல பல நூல்களைக் கற்றுத் தேர்ந்தாலும், பெருமையை அறியாதவர்கள் நல்ல மனம் உடையவர்களாகப் பழகமாட்டார்கள்.

முகத்தின் இனிய நகாஅ அகத்துஇன்னா
வஞ்சரை அஞ்சப் படும். 824
முகம் மலரச் சிரித்துப் பேசி, அதே பொழுது மனத்தில் வஞ்சனை கொண்டுள்ளவரின் நட்பை ஏற்க அஞ்சவேண்டும்.

மனத்தின் அமையா தவரை எனைத்துஒன்றும்
சொல்லினால் தேறற்பாற்று அன்று. 825
மனம் ஒன்றிப் பழகாதவரை அவர் கூறுகின்ற சொல்லைக் கொண்டு அவர் கூறும் எந்தச் செயலிலும் நம்பி ஈடுபடக்கூடாது.

நட்டார்போல் நல்லவை சொல்லினும் ஒட்டார்சொல்
ஒல்லை உணரப் படும். 826
உண்மையான நண்பர்களைப் போல நல்லவற்றைச் சொன்ன போதிலும் பகைவர் கூறும் சொற்களின் உண்மைத் தன்மை விரைவிலேயே வெளியாகிவிடும்.

சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க வில்வணக்கம்
தீங்கு குறித்தமை யான். 827
வில்லின் வணக்கம் வணக்கமாயினும் தீங்கு செய்வதேயாகும். அது போலப் பகைவரின் பணிவான சொல்லும் உறுதியாய்த் தீமையே செய்யும். எனவே, பகைவரின் வணக்கமான சொற்களை நம்பக் கூடாது.

தொழுதகை உள்ளும் படைஒடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து. 828
பகைவரானவர் வணங்கித் தொழும் கைக்குள்ளும் கொலைக்கருவி மறைந்திருக்கும். பகைவர் அழுத கண்ணீரும் அத்தன்மையானதே.

மிகச்செய்து தம்எள்ளு வாரை நகச்செய்து
நட்பினுள் சாப்புல்லல் பாற்று. 829
வெளியே சிறந்த நண்பர் போல் நடந்து கொண்டு, உள்ளத்தில் இகழ்வாரை, நாமும் அது போலவே வெளியே சிரித்துப் பேசி அவர்கள் தொடர்பு அழியும் வகையில் நடந்து கொள்ள வேண்டும்.

பகைநட்பாம் காலம் வருங்கால் முகம்நட்டு
அகநட்பு ஒரீஇ விடல். 830
பகைவர் ஒருவேளை நண்பராகும் காலம் வரும்போது முகத்தளவில் நட்புக் கொண்டு மனத்தளவில் நட்பு நீங்கி வாய்ப்பு நேரும்போது அதையும் விட்டுவிடவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேதைமை என்பதுஒன்று யாதுஎனின் ஏதம்கொண்டு
ஊதியம் போக விடல். 831
பேதைமை என்று சொல்லப்படுவது என்னவென்றால், கெட்டதைப்
பிடித்து வைத்துக் கொண்டு நல்லதை விட்டு விடுவதேயாகும்.

பேதைமை யுள்எல்லாம் பேதைமை; காதன்மை
கையல்ல தன்கண் செயல். 832
ஒழுக்கம் இல்லாத செயல்களில் விருப்பம் கொள்வது அறியாமையுள்
எல்லாம் பெரும் அறியாமை ஆகும்.

நாணாமை நாடாமை நார்இன்மை யாதுஒன்றும்
பேணாமை பேதை தொழில். 833
தகாதசெயலைச்செய்வதில்வெட்கப்படாமல்இருப்பது,தக்கதுஎதுஎன்றுஆராயாமல்இருப்பது,அன்புஇல்லாமல்
இருப்பது,காக்கவேண்டியதைக்காக்காமல்விடுவதுஆகியவையெல்லாம்அறிவற்றவர்களின்செயல்களாகும்.

ஓதி உணர்ந்தும் பிறர்க்குஉரைத்தும் தான்அடங்காப்
பேதையின் பேதையார் இல். 834
உயர்ந்த நூல்களைக் கற்று அவற்றின் பொருளை அறிந்தும், பிறருக்கு அவற்றை
எடுத்து விளக்கம் சொல்லியும் வாழ்கின்றவன், அந்த உயர்ந்த கருத்துக்களைத் தன் வாழ்வில்
கடைப்பிடிக்கவில்லை என்றால் அவனை விட அறிவில்லாதவன் உலகில் இல்லை.

ஒருமைச் செயல் ஆற்றும் பேதை எழுமையும்
தான்புக்கு அழுந்தும் அளறு. 835
ஏழு பிறவியிலும் தான் அடைகின்ற நரக வேதனையின் துன்பத்தைப் பேதை
தன் இழிசெயல்கள் மூலம் ஒரு பிறவியிலேயே தேடிக் கொள்வான்.

பொய்படும் ஒன்றோ புனைபூணும் கைஅறியாப்
பேதை வினைமேற் கொளின் 836
ஒழுக்க நெறியினை அறியாத பேதை ஒரு செயலை மேற்கொண்டாலும்
அது நிறைவு பெறாது, அத்துடன் குற்றவாளியாகி அடிமைப்படுவான்.

ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வம் உற்றக் கடை. 837
பேதையிடம் பெரும் செல்வம் சேர்ந்தால், அவனுக்குத் தொடர்பில்லாத அயலார்
நன்மை அடைவார்கள், உறவினர்கள் பசியால் வாடுவார்கள்.

மையல் ஒருவன் களித்து அற்றால் பேதைதன்
கைஒன்று உடைமை பெறின். 838
அறிவற்றவன் கையில் செல்வம் கிடைப்பது, உள்ளபடியே பித்தம் பிடித்தவன்
மேலும் கள் குடித்துத் தடுமாறுவது போன்றதாகும்.

பெரிதுஇனிது பேதையார் கேண்மை; பிரிவின்கண்
பீழை தருவது ஒன்று இல். 839
பேதையிடம் கொள்ளும் நட்பு ஒரு வகையில் இனிமையானதுதான், ஏனென்றால்,
அவனை விட்டுப் பிரியும் போது துளி அளவுகூட வருத்தம் ஏற்படாது.

கழாஅக்கால் பள்ளியுள் வைத்துஅற்றால் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல். 840
அறிஞர்கள் கூடியுள்ள அவையில் அறிவற்றவன் நுழைவது, அசுத்தத்தை
மிதித்த காலைப் பள்ளி அறையில் வைப்பதைப் போன்றதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவின்மை இன்மையுள் இன்மை பிறிதின்மை
இன்மையா வையாது உலகு. 841
இல்லாமைக் கொடுமைகள் பலவற்றுள்ளும் அறிவு இல்லை என்னும்
கொடுமையையே மிகப் பெருங் கொடுமையாய் உலகம் கருதுகிறது.

அறிவிலான் நெஞ்சுஉவந்து ஈதல் பிறிதுயாதும்
இல்லை பெறுவான் தவம். 842
அறிவற்றவன் மனம் மகிழ்ந்து ஒரு பொருளைப் பிறருக்குக் கொடுக்கிறான் என்றால்,
அது பெறுகின்றவனுடைய நல்வினையே தவிர வேறு காரணம் அன்று.

அறிவிலார் தாம்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்கும் செய்தல் அரிது. 843
அறிவில்லாதவர் தமக்குத் தாமே செய்து கொள்ளும் துன்பம்
அவர்கள் பகைவருக்குக்கூடச் செய்யமுடியாததாகும்.

வெண்மை எனப்படுவது யாதுஎனின் ஒண்மை
உடையம்யாம் என்னும் செருக்கு. 844
புல்லறிவு என்று கூறுவது எதனை என்றால், நான் அறிவுடையேன்
என்று ஒருவன் தன்னைத் தானே மதித்துக் கொள்ளும் செருக்காகும்.

கல்லாத மேற்கொண்டு ஒழுகல் கசடுஅற
வல்லாதூஉம் ஐயம் தரும். 845
அறிவற்றவர்கள் தாம் படிக்காத நூல்களைக்கூடப் படித்தவர் போல நடிப்பது,
அவர்கள் குற்றமில்லாமல் கற்றறிந்த அறிவையும் சந்தேகப்பட வைக்கும்.

அற்றம் மறைத்தலோ புல்லறிவு தம்வயின்
குற்றம் மறையா வழி. 846
தம்மிடத்தில் உள்ள குற்றத்தை அறிந்து மறைக்காதவர், உடம்பில் மறைப்பதற்குரிய
பகுதிகளை மட்டும் ஆடையால் மறைப்பது அறிவற்ற தன்மையாகும்.

அருமறை சோரும் அறிவுஇலான் செய்யும்
பெரும்இறை தானே தனக்கு. 847
அரிதான மறைபொருளை மனத்தில் வைத்துக் காக்காத அறிவிலி,
தனக்குத் தானே பெரும் துன்பம் தேடிக் கொள்கிறான்.

ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்உயிர்
போஒம் அளவும்ஓர் நோய். 848
ஒருவனுக்கு நன்மையானவற்றைப் பிறர் எடுத்துக் கூறினாலும் செய்ய மாட்டான், தானாகவும்
எண்ணிச் செய்ய மாட்டான். அத்தன்மை அவனுக்கு உயிர் போகும் அளவும் தீராத நோயாய் அமையும்.

காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டானாம் தான்கண்ட வாறு. 849
எல்லாம் அறிந்தவனாய்த் தன்னை எண்ணிக் கொண்டிருப்பவனுக்கு அறிவிக்க முயல்பவன்
அறிவில்லாதவன். அறிகிற தன்மை இல்லாத அவனோ அவன் அளவில் அறிவுள்ளவன்.

உலகத்தார் உண்டுஎன்பது இல்என்பான், வையத்து
அலகையா வைக்கப் படும். 850
உலகில் எல்லோரும் உண்டு என்று சொல்லுகின்றதை இல்லை
என்று சொல்லுகின்றவன், உலகில் காணப்படும் ஒரு பேய் என்று கருதப்படுவான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இகல்என்ப எல்லா உயிர்க்கும் பகல்என்னும்**
**பண்புஇன்மை பாரிக்கும் நோய்.** 851
எல்லா உயிர்களுக்கும் மற்ற உயிர்களோடு கூடி வாழாமை என்னும் தீய குணத்தை இகல் (மாறுபாடு) என்று அறிஞர்கள் கூறுவார்கள்.

**பகல்கருதிப் பற்றா செயினும் இகல்கருதி**
**இன்னாசெய் யாமை தலை.** 852
ஒருவன் கூடி வாழாத தன்மை என்னும் குணத்தைக் கொண்டிருப்பதைக் கண்டு அவனோடு மாறுபட்டுத் துன்பம் செய்யாமல் இருப்பது நல்லது.

**இகல்என்னும் எவ்வநோய் நீக்கின் தவல்இல்லாத்**
**தாஇல் விளக்கம் தரும்.** 853
ஒருவன் மாறுபட்டு இருப்பது என்னும் கொடிய நோயை நீக்கிவிட்டால் அவனுக்கு அழியாப் புகழ் உண்டாகும்.

**இன்பத்துள் இன்பம் பயக்கும் இகல்என்னும்**
**துன்பத்துள் துன்பம் கெடின்.** 854
துன்பங்களுக்கெல்லாம் மிகக் கொடிய துன்பமான மாறுபாடு நீங்கிவிட்டால் இன்பங்களுக்குள் பெரிய இன்பம் உண்டாகும்.

**இகல்எதிர் சாய்ந்துஒழுக வல்லாரை யாரே**
**மிகல்ஊக்கும் தன்மை யவர்** 855
மாறுபாட்டை எதிர்த்து ஒற்றுமை உயர்வை அறிந்து நடக்கின்றவரை யாராலும் வெல்ல முடியாது.

**'இகலின் மிகல்இனிது' என்பவன் வாழ்க்கை**
**தவலும் கெடலும் நணித்து.** 856
மாறுபாடு கொள்வதால் வெற்றி பெறுவது இனியது, எளியது என்று எண்ணுபவன் தன் வாழ்க்கை நிலையிலிருந்து தவறி விடுவதும் அழிவதும் விரைவில் நடைபெறும்.

**மிகல்மேவல் மெய்ப்பொருள் காணார் இகல்மேவல்**
**இன்னா அறிவி னவர்.** 857
மாறுபாட்டை விரும்புகின்ற தீய அறிவினை உடையவன், வெற்றிக்குக் காரணமான உண்மைப் பொருளை அறிய மாட்டான்.

**இகலிற்கு எதிர்சாய்தல் ஆக்கம்; அதனை**
**மிகல்ஊக்கின் ஊக்குமாம் கேடு.** 858
வேற்றுமைக்கு எதிராய் ஒற்றுமையை விரும்பி நடப்பதே ஒருவனுக்குச் சிறப்பைத் தரும். அதற்கு மாறாய் வேற்றுமையை மேற்கொண்டால் கேடு அவனைத் தேடி வரும்.

**இகல்காணான் ஆக்கம் வருங்கால் அதனை**
**மிகல்காணும் கேடு தரற்கு.** 859
ஒருவன் தனக்கு உயர்வு வரும்போது மாறுபாடு பற்றி எண்ணிப் பார்க்க மாட்டான். தனக்குக் கேடு வரும் போதுதான் மாறுபாட்டின் தன்மையை உணர்ந்து அதனை எதிர்த்து வெற்றி பெற நினைப்பான்.

**இகலான்ஆம் இன்னாத எல்லாம்; நகலான்ஆம்**
**நன்னயம் என்னும் செருக்கு.** 860
ஒருவனுக்கு மாறுபாட்டால் எல்லாத் துன்பங்களும் உண்டாகும். மாறுபாட்டிற்கு எதிரான நட்பால் நல்ல நீதி உடையவன் என்னும் பெருமித நிலை உண்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வலியார்க்கு மாறுஏற்றல் ஓம்புக; ஓம்பா**
**மெலியார்மேல் மேக பகை.** 861

தம்மை விட வலியவரோடு விரோதம் கொண்டு எதிர்ப்பதை விட்டு விட வேண்டும். மெலியவரிடம் பகைகொள்வதை விடாமல் மேற்கொள்ள வேண்டும்.

**அன்புஇலன் ஆன்ற துணைஇலன் தான்துவ்வான்**
**என்பரியும் ஏதிலான் துப்பு.** 862

தன்னைச் சேர்ந்தவரிடம் அன்பு இல்லாதவனாய் தனக்குத் தக்க துணை இல்லாதவனாய்த் தானும் வலிமை இல்லாதவனாய் இருப்பவன் ஒருபோதும் பகையை ஒழிக்க முடியாது.

**அஞ்சும் அறியான் அமைவிலன் ஈகலான்**
**தஞ்சம் எளியன் பகைக்கு.** 863

ஒருவன் அச்சம் உள்ளவனாயும் நெஞ்சுறுதி இல்லாதவனாயும் பிறரோடு பொருந்தாதவனாயும் யாருக்கும் ஈயாதவனாயும் இருந்தால் அவனைப் பகைவர் எளிதாய் வென்று விடுவார்கள்.

**நீங்கான் வெகுளி நிறைஇலன் எஞ்ஞான்றும்**
**யாங்கணும் யார்க்கும் எளிது.** 864

ஒருவன் கோபத்தை நீக்காதவனாயும் நெஞ்சத்தில் உறுதி இல்லாதவனாயும் இருந்தால் அவனை யாரும் எப்போதும் எங்கேயும் எளிதாய் வென்றுவிட முடியும்.

**வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்**
**பண்பிலன் பற்றார்க்கு இனிது.** 865

ஒருவன் நல்வழியில் செல்லாதவனாயும் யாருக்கும் நன்மை செய்யாதவனாயும், பழிக்கு அஞ்சாதவனாயும் நற்பண்பு இல்லாதவனாயும் இருந்தால் அவனைப் பகைவர் எளிதாய்த் தோல்வி அடையச் செய்வார்கள்.

**காணாச் சினத்தான் கழிபெருங் காமத்தான்**
**பேணாமை பேணப் படும்.** 866

ஒருவன் பொருளற்ற கோபக்காரனாயும், மிகவும் அதிகமான ஆசை உள்ளவனாயும் இருந்தால், அவனை வெல்வது எளிது. ஆதலால் அவன் பகையை எதிரிகள் மிகவும் விரும்புவார்கள்.

**கொடுத்தும் கொளல்வேண்டும் மன்ற அடுத்துஇருந்து**
**மாணாத செய்வான் பகை.** 867

தன் அருகில் இருந்து கொண்டே தனக்குத் தானே தீங்கு செய்கின்றவனுடைய பகையைப் பொருள் கொடுத்தாவது அடைய வேண்டும்.

**குணன்இலனாய்க் குற்றம் பலவாயின் மாற்றார்க்கு**
**இனன்இலனாம் ஏமாப்பு உடைத்து.** 868

ஒருவன் நல்ல குணமில்லாதவனாய்ப் பல குற்றங்களையும் செய்பவனானால் அவன் துணை இல்லாதவன் ஆவான். அந்த நிலைமையே அவனை வெல்லுவதற்கு அவன் பகைவருக்கு நல்ல வாய்ப்பாய் அமையும்.

**செறுவார்க்குச் சேண்இகவா இன்பம் அறிவிலா**
**அஞ்சும் பகைவர்ப் பெறின்.** 869

ஒருவன் அறிவற்றவனாயும் அஞ்சுகின்றவனாயும் இருந்தால், அவனை எதிர்ப்பவருக்கு இன்பம்(வெற்றி) நெருங்கி வந்துவிடும்.

**கல்லான் வெகுளும் சிறுபொருள் எஞ்ஞான்றும்**
**ஒல்லானை ஒல்லாது ஒளி.** 870

கல்வி கற்காதவனை வெற்றி கொள்வது என்பது மிகவும் எளிய செயல். அதைக்கூடச் செய்ய முடியாதவனிடம் எக்காலத்திலும் புகழ் வந்து சேராது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகைஎன்னும் பண்பி லதனை ஒருவன்
நகையேயும் வேண்டற்பாற்று அன்று. 871
பகை என்று சொல்லப்படுகின்ற பண்பற்ற தீய செயலை, ஒருவன் சிரித்துப்
பொழுது போக்கும் விளையாட்டாய்க் கூட விரும்பக் கூடாது.

வில்ஏர் உழவர் பகைகொளினும், கொள்ளற்க
சொல்ஏர் உழவர் பகை. 872
வில்லை ஏராய்க் கொண்ட உழவராகிய வீரருடன் பகை கொண்டாலும்,
சொல்லை ஏராய்க் கொண்ட அறிஞரோடு ஒருபோதும் பகை கொள்ளக் கூடாது.

ஏமுற்றவரினும் ஏழை தமியனாய்ப்
பல்லார் பகைகொள் பவன். 873
தான் தனியாய் இருந்து கொண்டு பலரையும் பகைத்துக் கொள்பவன்
பித்துப் பிடித்தவனைவிடக் கீழானவன் ஆவான்.

பகைநட்பாக் கொண்டுஒழுகும் பண்புடை யாளன்
தகைமைக்கண் தங்கிற்று உலகு. 874
பகைவனை நண்பனாய்க் கொண்டு நடக்கும் பண்புடையவனது
பெருந்தன்மையில் உலகம் நிலைகொள்கிறது.

தன்துணை இன்றால் பகையிரண்டால் தான்ஒருவன்
இன்துணையாக் கொள்கஅவற்றின் ஒன்று. 875
தனக்குத் துணை என்று ஒருவரும் இலர், பகைவரோ இருவர் ஆவர். இந்த நிலையில் அந்தப்
பகைவருள் ஒருவரைத் தன் இனிய துணை ஆக்கிக் கொள்வதே மிகச் சிறந்தது.

தேறினும் தேறா விடினும் அழிவின்கண்
தேறான் பகாஅன் விடல். 876
முன்னர் ஒருவனைப் பற்றி ஆராய்ந்து தெளிந்தாலும் தெளியா விட்டாலும், அழிவு
ஏற்படும்போது அவனோடு சேராமலும் நீங்காமலும் நடுவாய் இருப்பதே நன்மையாகும்.

நோவற்க நொந்தது அறியார்க்கு மேவற்க
மென்மை பகைவர் அகத்து. 877
நமக்கு வரும் துன்பத்தைத் தாமாகவே அறிந்து கொள்ளாத நண்பருக்கு நாமாகச்
சொல்லக் கூடாது. பகைவரிடத்தில் ஒருபோதும் நம் மென்மையைக் காட்டக் கூடாது.

வகைஅறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
பகைவர்கண் பட்ட செருக்கு. 878
ஒருவன் செய்வனவற்றைச் சரியாய்த் தெரிந்து கொண்டு, தன்னை வலிமைப் படுத்திக்
கொண்டு, தக்க பாதுகாப்பையும் தேடிக் கொண்டால், அவன் பகைவனுக்கு ஏற்பட்ட கர்வம் அழியும்.

இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து. 879
முட்செடி மரமாய் வளர்வதற்கு முன் இளையதாய் இருக்கும் போதே வெட்டிவிட
வேண்டும். முதிர்ந்த பிறகு வெட்டினால் அதன் முள்கள் கையைப் புண்படுத்தும்.

உயிர்ப்ப உளர்அல்லர் மன்ற செயிர்ப்பவர்
செம்மல் சிதைக்கலா தார். 880
பகைவருடைய தலைமையை அழிக்கக் கூடிய திறமை இருந்தும், அவ்வாறு செய்யாமல்
இருப்பவன், உயிரோடு இருந்தாலும் இறந்தவனே ஆவான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிழல்நீரும் இன்னாத இன்னா தமர்நீரும்
இன்னாவாம் இன்னா செயின். 881

இனிமை தரும் நிழலும் நீரும் நோய் தருமானால், அவை தீயவையே ஆகும். சுற்றத்தாரின் தன்மைகளும் துன்பம் தருமானால் தீயவையேயாகும்.

வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு. 882

வாளைப் போலக் கண்ணுக்குத் தெரிந்த பகைவருக்கு அஞ்ச வேண்டியதில்லை. ஆனால், உறவினர் போல உடனிருந்து வெளிப்படையாய்த் தெரியாமல் நடிக்கும் பகைவருக்கு அஞ்சியே தீர வேண்டும்.

உட்பகை அஞ்சித்தற் காக்க உலைவிடத்து
மட்பகையின் மாணத் தெறும். 883

உட்பகைக்கு அஞ்சி ஒருவன் தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும். இல்லை என்றால், தளர்ச்சி நேரும் போது மண் பாத்திரத்தை அறுக்கும் கருவியைப் போல அந்த உட்பகை அவனை அழித்துவிடும்.

மனம்மாணா உட்பகை தோன்றின் இனம்மாணா
ஏதம் பலவும் தரும். 884

மனம் திருந்தாத உட்பகை ஒருவனுக்கு இருக்குமானால் அது, அவனைச் சேர்ந்தவர்கள் அவனுக்குத் துணையாகாமல் போவதற்குக் காரணமான பல குற்றங்களை உண்டாக்கும்.

உறல்முறையான் உட்பகை தோன்றின் இறல்முறையான்
ஏதம் பலவும் தரும். 885

ஒருவனுக்கு உறவு முறையினரிடம் உட்பகை ஏதம் உண்டாகுமானால், அது அவன் உயிரை அழிக்கத்தக்க குற்றங்கள் பலவற்றையும் செய்யும்.

ஒன்றாமை ஒன்றியார் கண்படின் எஞ்ஞான்றும்
பொன்றாமை ஒன்றல் அரிது. 886

ஒருவனுக்கு அவன் உற்றாரிடத்தில் பகை ஏற்படுமானால், அவன் ஒரு போதும் அழியாமல் இருக்க முடியாது.

செப்பின் புணர்ச்சிபோல் கூடினும் கூடாதே
உட்பகை உற்ற குடி. 887

செப்பும் அதன் மூடியும் வெளியே பார்ப்பதற்கு வேற்றுமை தெரியாமல் சேர்ந்திருப்பது போல, உட்பகை நிலவும் குடியில் இருப்பவர்கள் ஒன்றுபட்டவர் போலத் தோன்றினாலும் உள்ளத்தால் ஒன்றி இருக்கமாட்டார்கள்.

அரம்பொருத பொன்போலத் தேயும் உரம்பொருது
உட்பகை உற்ற குடி. 888

அரத்தினால் தேய்க்கப்பட்ட இரும்பைப் போல் உட்பகைக்கு ஆளான குடி வலிமை குறைந்து தேய்ந்து வலுவிழந்துவிடும்.

எட்பகவு அன்ன சிறுமைத்தே ஆயினும்
உட்பகை உள்ளதாம் கேடு. 889

எள்ளின் பிளவைப் போல மிகச் சிறிய அளவே உட்பகை இருந்தாலும், அது ஒரு குடியையே அழிக்கவல்ல கேட்டை உண்டாக்கும்.

உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடன்உறைந் தற்று. 890

மனப் பொருத்தம் இல்லாதவருடன் சேர்ந்து வாழ்வது என்பது ஒரு குடிசையில் பாம்புடன் சேர்ந்து வாழ்வதைப் போன்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 90. பெரியாரைப் பிழையாமை

ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்
போற்றலுள் எல்லாம் தலை. 891
மேற்கொண்ட செயலில் வெற்றி பெறுபவனுடைய திறமையை இகழ்ந்துவிடாமல் இருப்பது ஒருவனுக்குச் சிறந்த பாதுகாப்பாகும்.

பெரியாரைப் பேணாது ஒழுகின் பெரியாரால்
பேரா இடும்பை தரும். 892
ஆற்றல் மிக்க பெரியவரைப் போற்றி மதிக்காமல் நடந்தால், அவன் அப்பெரியவர்களால் நீங்காத துன்பத்திற்கு ஆளாவான்.

கெடல் வேண்டின் கேளாது செய்க அடல்வேண்டின்
ஆற்று பவர்கண் இழுக்கு. 893
எண்ணினால் எண்ணியவுடனே பகைவரை வெல்லக் கூடிய ஆற்றல் உள்ளவருக்குக் கெட்டுப் போக விரும்புவனே தவறான வழியில் தீங்கு செய்வான்.

கூற்றத்தைக் கையால் விளித்தற்றால் ஆற்றுவார்க்கு
ஆற்றாதார் இன்னா செயல். 894
ஆற்றல் உள்ளவருக்கு ஆற்றல் இல்லாதவர் தீங்கு செய்வது, எமனைக் கைதட்டி அழைப்பது போன்றது ஆகும்.

யாண்டுச்சென்று யாண்டும் உளர்ஆகார் வெந்துப்பின்
வேந்து செறப்பட் டவர். 895
கொடிய ஆட்சியாளரின் சினத்துக்கு ஆளானவர் எங்கே சென்றாலும் ஒரு போதும் உயிரோடு வாழ முடியாது.

எரியால் சுடப்படினும் உய்வுஉண்டாம் உய்யார்
பெரியார்ப் பிழைத்துஒழுகு வார். 896
தீயால் சுடப்பட்டாலும் ஒருவேளை உயிர் பிழைத்து வாழலாம். ஆனால், ஆற்றல் மிகுந்த பெரியவரிடம் தவறு செய்பவர் ஒருபோதும் தப்பிப் பிழைக்க முடியாது.

வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளும் என்ஆம்
தகைமாண்ட தக்கார் செறின் 897
தகுதியால் உயர்ந்த ஆற்றல் மிக்கவரின் கோபத்திற்கு ஆளானவர், பல பெருமைகட்குரியவராயும் திரண்ட செல்வம் உடையவராயும் வாழ்ந்தாலுங்கூட என்ன பயன்? அவர்கள் அழிவது என்பது உறுதியாகும்.

குன்றுஅன்னார் குன்ற மதிப்பின் குடியொடு
நின்றுஅன்னார் மாய்வர் நிலத்து. 898
மலை போன்ற மிக உயர்வான நிலையில் இருப்போரைக் குறைவாய் மதிப்பவர் எப்படிப்பட்டவராய் இருந்தாலும் அவர்கள் தம் குடும்பத்தோடு அழிவது உறுதி.

ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும். 899
உயர்ந்த கொள்கை உடைய சிறந்தவர்கள் சீற்றம் கொண்டால், ஆட்சி புரிபவன் இடையிலேயே தன் ஆட்சி அழிந்து கெடுவான்.

இறந்துஅமைந்த சார்புடையர் ஆயினும் உய்யார்
சிறந்துஅமைந்த சீரார் செறின். 900
அளவு கடந்த பக்க பலமாய்த் துணை வலிமை மிகவும் கொண்டவராயினும், உயர்ந்த பண்புகளில் சிறந்தவரின் சினத்திற்கு ஆளானால் ஒருபோதும் தப்பிப் பிழைக்க முடியாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவிழைவார் மாண்பயன் எய்தார்; வினைவிழைவார்
வேண்டாப் பொருளும் அது. 901
மனைவியைப் பெரிதும் விரும்பி அவளுக்கு அடங்கி நடப்பவர் சிறந்த பயனை அடைய மாட்டார். கடமையைச் செய்யவும் முடியாதவர் ஆவார்.

பேணாது பெண்விழைவான் ஆக்கம் பெரியதுஓர்
நாணாக நாணுத் தரும். 902
தனது கடமையைப் பெரிதென்று எண்ணாமல் தன் மனைவியின் விருப்பத்தையே பெரிதாய் மதிப்பவனுடைய செல்வம் வெட்கத்துக்குரியதாகிப் பெரும் வேதனையைத் தரும்.

இல்லாள்கண் தாழ்ந்த இயல்பின்மை எஞ்ஞான்றும்
நல்லாருள் நாணுத் தரும். 903
மனைவியிடத்தில் அவசியமின்றி ஆண்மையின்றித் தாழ்ந்து நடக்கும் இழிவான தன்மை உடையவனுக்கு நல்லவர்களிடையே செல்ல நாணுகின்ற நிலையே ஏற்படும்.

மனையாளை அஞ்சும் மறுமைஇ லாளன்
வினையாண்மை வீறுஎய்தல் இன்று. 904
எப்போதும் மனைவிக்கு அஞ்சும் மறுமைப் பயன் இல்லாதவன், செயலாற்றும் ஆண்மை உள்ளவனாய் இருந்தாலும், ஒருபோதும் பெருமை அடையமுடியாது.

இல்லாளை அஞ்சுவான் அஞ்சும்மற்று எஞ்ஞான்றும்
நல்லார்க்கு நல்ல செயல். 905
மனைவிக்குப் பயந்து நடப்பவன் எப்போதும் மதிப்புமிக்கவர்களுக்கு நன்மை செய்யவும் பயப்படவே செய்வான்.

இமையாரின் வாழினும் பாடுஇலரே, இல்லாள்
அமையார்தோள் அஞ்சு பவர். 906
தேவரைப் போல இவ்வுலகில் பெருமை உடையவர் என்றாலும், மனைவியின் தோள் தரும் இன்பத்திற்கு அஞ்சி வாழ்கின்றவருக்குச் சிறப்பு ஒன்றும் இல்லை.

பெண்ஏவல் செய்தொழுகும் ஆண்மையின் நாணுடைப்
பெண்ணே பெருமை உடைத்து. 907
மனைவிக்கு அடிமையாகி அவளுக்கு ஏவலாளாய் வாழ்கின்றவனுடைய ஆண்மையைவிட, இயல்பாய் நாணத்தை உடைய பெண்மையே பெருமைக்குரியதாகும்.

நட்டார் குறைமுடியார் நன்றுஆற்றார் நன்னுதலாள்
பெட்டாங்கு ஒழுகு பவர். 908
மனைவி கூறுவனவற்றை எல்லாம் மறுப்பின்றி அவ்வாறே ஏற்று நடப்பவர் தம் நண்பரின் குறையையும் நீக்க மாட்டார், பிறருக்கு நன்மையையும் செய்ய மாட்டார்.

அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்
பெண்ஏவல் செய்வார்கண் இல். 909
பெண் ஏவுகின்றபடி நடந்து கொண்டிருப்பவன் அறச் செயல்களையும் அவற்றைச் செய்வதற்கு வேண்டிய பொருள் தேடும் முயற்சியையும் மற்றக் கடமைகளையும் ஒரு போதும் செய்ய மாட்டான்.

எண்சேர்ந்த நெஞ்சத்து இடன்உடையார்க்கு எஞ்ஞான்றும்
பெண்சேர்ந்து ஆம் பேதைமை இல். 910
எதையும் நன்றாய் எண்ணி முடிவு காணும் உள்ள உறுதியுடையவருக்கு மனைவியின் ஏவலுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் பேதைமை ஒருபோதும் இராது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார்
இன்சொல் இழுக்குத் தரும். 911
அன்பு காரணமாய் விரும்பாமல் பொருள் காரணமாய் விரும்பும் விலைமகளின்
இனிய சொல் தீமையையே தரும்.

பயன்தூக்கிப் பண்புஉரைக்கும் பண்பில் மகளிர்
நயன்தூக்கி நள்ளா விடல். 912
கிடைக்கக் கூடிய பொருளின் அளவுக்கேற்ப இனிய சொற்களைப் பேசுகின்ற நற்குணமில்லாத
விலைமகளின் நடத்தையை எண்ணிப் பார்த்து அவளை மனத்தாலும் பொருந்தக் கூடாது.

பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்
ஏதில் பிணம்தழீஇ யற்று. 913
பொருளையே பெரியதென்றெண்ணும் பொதுமகளின் பொய்யான தழுவல் இருட்டறையில்
தொடர்பு இல்லாத ஒரு பிணத்தைத் தழுவுவது போன்றதாகும்.

பொருட்பொருளார் புன்னலம் தோயார் அருட்பொருள்
ஆயும் அறிவி னவர். 914
அருளாகிய சிறந்த பொருளை ஆராய்ந்து சொல்லும் அறிவுடையவர்கள், பொருள் ஒன்றையே
பொருள் என்றெண்ணும் பொதுமகளிர் தரும் அற்பமான இன்பத்தை விரும்பமாட்டார்கள்.

பொதுநலத்தார் புன்நலம் தோயார் மதிநலத்தின்
மாண்ட அறிவி னவர். 915
அறிவு என்னும் பெருநலத்தால் பெருமை உடையவர்கள், பொருள் தருகின்ற எல்லோருக்கும்
பொதுவாய் இன்பம் தருகின்ற விலைமாதரின் இழிந்த தொடர்பை ஒருபோதும் விரும்பமாட்டார்கள்.

தம்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்
புன்நலம் பாரிப்பார் தோள். 916
நல்லொழுக்கத்தால் ஏற்படும் நன்மையை விளக்க விரும்பும் அறிவுடையோர், தம் அழகால்
கர்வம் கொண்டு இழிந்த சுகத்தை அளிக்கும் விலைமகளின் தோளைத் தழுவ மாட்டார்கள்.

நிறைநெஞ்சம் இல்லவர் தோய்வர் பிறநெஞ்சில்
பேணிப் புணர்பவர் தோள். 917
உள்ளத்தை ஒழுக்க நெறியில் நிலை நிறுத்த முடியாதவரே தம் உள்ளத்தில் வேறு
பொருள்களை விரும்பிக் கூடும் தன்மை உடைய விலைமகளின் தோளைத் தழுவுவர்.

ஆயும் அறிவினர் அல்லார்க்கு அணங்குஎன்ப
மாய மகளிர் முயக்கு. 918
வஞ்சனை நிறைந்த பொதுமகளிரின் தன்மையை அறியாதவருக்கே வேசியர் தழுவித்
தரும் இன்பத்தை மோகினி மயக்கு என்று எண்ணத் தோன்றும் என்று சொல்வார்கள்.

வரைவுஇலா மாண்இழையார் மென்தோள் புரைஇலாப்
பூரியர்கள் ஆழும் அளறு. 919
ஒழுக்க நெறிகளை மேற்கொள்ளாத விலைமகளின் மென்மையான தோள்
அறிவற்ற இழிந்தவர்கள் ஆழ்ந்து கிடக்கும் நரகமாகும்.

இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு. 920
இரு மனம் கொண்ட விலைமாதர்கள், கள், சூது ஆகிய இம்மூன்றும்,
திருமகளால் நீக்கப்பட்டவர்கள் மட்டுமே உறவு கொள்வதற்கு உரியவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்கப் படாஅர் ஒளிஇழப்பர் எஞ்ஞான்றும்
கள்காதல் கொண்டுஒழுகு வார். 921
கள் மயக்கத்திற்கு ஆட்பட்டவரைக் கண்டு பகைவர்கள் அஞ்ச மாட்டார்கள்.
அத்தீய பழக்கத்தால் தமக்குள்ள மதிப்பையும் இழப்பார்கள்.

உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரால்
எண்ணப் படவேண்டா தார். 922
கள்ளைக் குடிக்கக் கூடாது. அறிவுடையவர்களின் நன்மதிப்பைப் பெற விரும்பாதவர்
வேண்டுமானால் குடிக்கலாம்.

ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி. 923
கள் உண்பவனைக் கண்டால் பெற்ற தாயின் முகமே வெறுப்படையும். அவ்வாறு இருக்க,
குற்றத்தைக் கண்டிக்கும் சான்றோர் முகம் மகிழ்ச்சியா கொள்ளும்?

நாண்என்னும் நல்லாள் புறங்கொடுக்கும் கள்என்னும்
பேணாப் பெருங்குற்றத் தார்க்கு. 924
நாணம் என்று சொல்லப்படும் நல்லாள் கள் குடித்தல் என்னும் தீமையைச்
செய்பவருக்குத் தன் முகத்தைக் காட்டாமலே சென்று விடுவாள்.

கைஅறி யாமை உடைத்தே பொருள்கொடுத்து
மெய்அறி யாமை கொளல். 925
ஒருவன் பொருளைக் கொடுத்துக் கள்ளைக் குடித்துத் தன்னிலை மறப்பதற்குக் காரணம்,
என்ன செய்கிறோம் என்று புரிந்து கொள்ள முடியாத அறியாமையேயாகும்.

துஞ்சினார் செத்தாரின் வேறல்லர்; எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்உண் பவர். 926
உறங்கியவர் செத்தவரை விட வேறுபட்டவரல்லர். அவ்வாறே கள் குடிப்பவரும் அறிவு
மயங்குகின்ற காரணத்தால் விஷம் குடிப்பவரிலிருந்து வேறுபட்டவரல்லர்.

உள்ஒற்றி உள்ளூர் நகப்படுவர்; எஞ்ஞான்றும்
கள்ஒற்றிக் கண்சாய் பவர். 927
மறைவாய் இருந்து கள்ளைக் குடித்தாலும், அவர்கள் மயங்குவது இயற்கை
ஆதலால், அதை அறிந்து ஊர் மக்கள் எந்நாளும் இழிவாய்ச் சிரிப்பார்கள்.

'களித்துஅறியேன்' என்பது கைவிடுக நெஞ்சத்து
ஒளித்ததூஉம் ஆங்கே மிகும். 928
கள் குடிப்பவன் 'நான் கள் குடிப்பவன் அல்லன்!' என்று பொய் சொல்வதை விட்டு விட வேண்டும்.
ஏனென்றால், அவன் உள்ளத்தில் ஒளிந்திருக்கும் குற்றம் கள்ளுண்ட போது தானே வெளிப்பட்டுவிடும்!

களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று. 929
கள்ளுண்டு மயங்கி இருப்பவனை அது தவறானது என்று கூறி அவனைத் திருத்த
மேற்கொள்ளும் முயற்சி நீருக்குள் மூழ்கியவனைத் தீ விளக்குக் கொண்டு தேடுவது போன்றது.

கள்உண்ணாப் போழ்தில் களித்தானைக் காணுங்கால்
உள்ளான்கொல் உண்டதன் சோர்வு 930
குடியன் ஒருவன் கள் குடிக்காதபோது, குடித்தவன் ஒருவன் மயங்கிச் சோர்ந்து கிடப்பதைக் கண்டு,
தான் கள் உண்டாலும் இந்த நிலைதானே வரும் என்பதை எண்ணிப் பார்க்க மாட்டானோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி அற்று. 931

வெற்றியே கிடைத்தாலும் ஒரு போதும் சூதாட்டத்தை விரும்பக் கூடாது. அந்த வெற்றி எப்படிப்பட்டதென்றால், தூண்டிலில் முள்ளை உணவுப் பொருள் என்று மீன் விழுங்குவதற்குச் சமமாகும்.

ஒன்றுஎய்தி நூறுஇழக்கும் சூதர்க்கும் உண்டாம்கொல்
நன்றுஎய்தி வாழ்வதோர் ஆறு. 932

ஒரு பொருளைப் பெற்று, அதே சமயம் நூறு பொருளை இழக்கும் சூதாடிகளுக்கு நன்மை பெற்று வாழும் சிறந்த வாழ்க்கை உண்டாகாது.

உருள்ஆயம் ஓவாது கூறின் பொருள்ஆயம்
போஒய்ப் புறமே படும். 933

ஒருவன் உருளுகின்ற கருவியை உருட்டி ஓயாமல் சூதாடிக் கொண்டிருப்பானேயானால், அவனுடைய பொருள் யாவும் உருண்டோடிப் பகைவரை அடையும்.

சிறுமை பலசெய்து சீர்அழிக்கும் சூதின்
வறுமை தருவது ஒன்று இல். 934

ஒருவனுக்கு இழிவுகள் பலவற்றையும் உண்டாக்கிச் சிறப்பையும் அழிக்கும் சூதாட்டத்தை விடக் கொடிய வறுமையை உண்டாக்குவது வேறெதுவும் இல்லை.

கவறும் கழகமும் கையும் தருக்கி
இவறியார் இல்லாகி யார். 935

சூதாட்டக் கருவியையும் சூதாடும் இடத்தையும் சூதாடும் செயலையும் கைவிடாதவர் எல்லாப் பொருள்களையும் உடையவராய் இருந்தாலும் ஒன்றுமில்லாதவராய்க் கெட்டு அழிவார்.

அகடு ஆரார் அல்லல் உழப்பர்சூது என்னும்
முகடியான் மூடப்பட் டார். 936

சூது என்று சொல்லப்படும் மூதேவியால் விழுங்கப்பட்டவர், வயிறு நிறைய உண்ணக்கூட வழியற்றவராகிப் பல துன்பங்களுக்கு ஆளாகி வேதனைப்படுவார்.

பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின். 937

சூதாடும் இடத்தில் ஒருவன் காலம் கழிப்பானானால் அவனுடைய பரம்பரைச் சொத்தையும் இழப்பான். நல்ல குணங்களையும் இழப்பான்.

பொருள்கெடுத்துப் பொய்மேல் கொளீஇ அருள்கெடுத்து
அல்லல் உழப்பிக்கும் சூது. 938

சூது உள்ள பொருளையும் அழித்துப் பொய் சொல்லும் நிலைக்கு ஆளாக்கி, அருள் உள்ளத்தையும் கெடுத்துப் பல துன்பங்களுக்கும் ஆளாக்கும்.

உடைசெல்வம் ஊண்ஒளி கல்விஎன்று ஐந்தும்
அடையாவாம் ஆயம் கொளின். 939

சூதாடுவதை ஒருவன் மேற்கொண்டால் புகழ், கல்வி, செல்வம், உணவு, உடை ஆகிய ஐந்தனையும் அவன் அடைய முடியாத நிலை ஏற்படும்.

இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் துன்பம்
உழத்தொறூஉம் காதற்று உயிர். 940

பொருளை இழக்க இழக்கச் சூதாட்டம் மேலும் மேலும் ஆடும் ஆசையையே உண்டாக்கும். அது போலத் துன்பம் வருத்திக் கொண்டே இருந்தாலும் உயிர் வாழ்வதில் ஆசை மிகுந்து கொண்டே இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று. 941
மருத்துவ நூலோர் வாதம், பித்தம், சிலேத்துமம் என்று கூறியுள்ள மூன்றும்
அளவுக்கு அதிகமானாலும் குறைந்தாலும் நோய்களை உண்டாக்கும்.

மருந்துஎன வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின். 942
முன்னர் உண்ட உணவு செரிமானம் ஆகிவிட்டது என்பதை அறிந்து பின், அடுத்த வேளை
உணவை அளவோடு உண்டு வந்தால் உடம்பிற்கு மருந்து என்ற ஒன்று அவசியமே இல்லை.

அற்றால் அளவறிந்து உண்க அஃதுஉடம்பு
பெற்றான் நெடிதுஉய்க்கும் ஆறு. 943
முன்னர் உண்ட உணவு செரித்த பிறகு, அளவோடு நல்ல உணவாய்
அறிந்து உண்பதே உடம்பினை நீண்ட காலத்திற்கு வாழ வைக்கும் வழியாகும்.

அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறுஅல்ல
துய்க்க துவரப் பசித்து. 944
முன்னர் உண்ட உணவு செரிமானம் ஆனதை அறிந்து, தன் உடம்புக்கு ஏற்ற உணவு
வகைகளை நன்றாய் அறிந்து, பசி ஏற்பட்ட பின்னரே உண்ணுதல் வேண்டும்.

மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துஉண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு. 945
ஒவ்வாத உணவை ஒதுக்கி, அளவுக்கு அதிகமாய் உணவை விரும்பாமல்
வாழ்கின்றவனுடைய உடம்பில் வாழ்வதற்கு இடையூறான நோய்கள் உண்டாகாது.

இழிவுஅறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபே ரிரையான்கண் நோய். 946
குறைந்த அளவு இன்னதென்றறிந்து உண்பவனிடம் இன்பம் நிலைத்திருக்கும்.
அளவுக்கதிகமாய் உண்பவனிடத்தில் என்றும் துன்பமே நிலைத்திருக்கும்.

தீஅளவு அன்றித் தெரியான் பெரிதுஉண்ணின்
நோய்அளவு இன்றிப் படும். 947
பசித்தீயின் அளவை அறியாமல் அளவுக்கதிகமாய் உண்பவன்
அளவில்லாத நோய்களுக்குள்ளாகி அவதிப்படுவான்.

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல். 948
நோய் என்ன என்பதனை ஆராய்ந்து, அந்த நோய் ஏற்படக் காரணத்தை ஆராய்ந்து, அதைத் தீர்க்கும்
வழியையும் ஆராய்ந்து, உடல் நிலைக்கேற்றவாறு செய்வதே சிறந்த மருத்துவம் ஆகும்.

உற்றான் அளவும் பிணிஅளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல். 949
மருத்துவன் நோயாளியின் வயது, உடலின் தன்மை, நோயின் தன்மை, எவ்வளவு காலமாய் உள்ளது
என்பனவற்றை ஆராய்ந்து நன்கு அறிந்து தகுந்த முறையில் மருந்து கொடுக்க வேண்டும்.

உற்றவன் தீர்ப்பான் மருந்துஉழைச் செல்வான்என்று
அப்பால்நாற் கூற்றே மருந்து. 950
நோயுற்றவன், நோய் நீக்கும் மருத்துவன், மருந்து அருகிலிருந்து மருந்தினைக்
காலத்தில் கொடுப்பவன் என மருத்துவ முறை நான்கு பகுதிகளைக் கொண்டதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இற்பிறந்தார் கண்அல்லது இல்லை இயல்பாகச்
செப்பமும் நாணும் ஒருங்கு. 951
நடுவு நிலைமையும், நாணமும் உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவரிடத்தில்
அல்லாமல் மற்றவரிடத்தில் இயல்பாய் ஒரு சேர அமைவதில்லை.

ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார். 952
உயர்ந்த குடியில் பிறந்தவர்கள் ஒழுக்கம், உண்மை, நாணம் என்ற மூன்றிலிருந்தும்
தவறாமல் இயல்பாகவே நல்ல வழியில் வாழ்வார்கள்.

நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்
வகைஎன்ப வாய்மைக் குடிக்கு. 953
முக மலர்ச்சி, கொடுத்து உதவும் தன்மை, இனிய சொல், பிறரை இழிவாய் எண்ணாமல் இருப்பது
என்னும் நான்கு நற்பண்புகளும் உண்மையான உயர்குடியில் பிறந்தவருக்கு உரியனவாகும்.

அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர். 954
கோடி கோடியாய்ப் பொருளைக் கொட்டிக் கொடுத்தாலும், உயர்குடியில் பிறந்தவர்கள்
ஒழுக்கக் கேடான செயலைச் செய்ய மாட்டார்கள்.

வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பில் தலைப்பிரிதல் இன்று. 955
தாம் பிறருக்குக் கொடுத்து உதவும் வண்மையால் வறுமை ஏற்பட்ட போதிலும், உயர்ந்த
குடியில் பிறந்தவர்கள் தம் உயர்ந்த குணத்தை ஒருபோதும் கைவிட்டுவிட மாட்டார்கள்.

சலம்பற்றிச் சால்பில செய்யார்மா சற்ற
குலம்பற்றி வாழ்தும்என் பார். 956
குற்றமற்ற குடிப்பண்புடன் வாழ்வது என்று உறுதி கொண்டு வாழ்பவர். வஞ்சனை
கொண்டு பெருமை தராத செயல்களை ஒருபோதும் செய்யமாட்டார்கள்.

குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம், விசும்பின்
மதிக்கண் மறுப்போல் உயர்ந்து. 957
உயர்ந்த குடியில் பிறந்தவரிடத்தில் உண்டாகும் குற்றம், வானத்து நிலவில்
காணப்படும் களங்கம் போல, எல்லோருக்கும் நன்கு தெரியும்.

நலத்தின்கண் நார்இன்மை தோன்றின், அவனைக்
குலத்தின்கண் ஐயப் படும். 958
ஒருவனுடைய அன்புடைய செயல்களுக்கிடையே பண்பற்ற செயல்கள் காணப்பட்டால்,
அவன் உயர்ந்த குடியில் பிறந்தவன்தானா என்ற சந்தேகம் ஏற்பட்டு விடும்.

நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல். 959
நிலம் எத்தகையது என்பதை அதில் முளைப்பது காட்டிவிடும். அது போல, ஒருவனுடைய
வாய்ச்சொல், அவன் எத்தகைய குலத்தில் பிறந்தவன் என்பதைக் காட்டிவிடும்.

நலம்வேண்டின் நாண்உடைமை வேண்டும்; குலம்வேண்டின்
வேண்டுக யார்க்கும் பணிவு. 960
ஒருவனுக்கு நன்மை வேண்டுமானால் நாணம் உடையவனாய் இருக்க வேண்டும்.
பிறந்த குடிக்கு உயர்வு வேண்டுமானால் அனைவரிடமும் பணிவுடன் நடந்து கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றி அமையாச் சிறப்பின ஆயினும்
குன்ற வருப விடல். 961
இன்றியமையாத பெரும் சிறப்புகள் வருவனவாய் இருந்தாலும், குடிப் பெருமையைக் கெடுக்கக் கூடிய செயலை ஒருபோதும் செய்யக் கூடாது.

சீரினும் சீர்அல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டு பவர். 962
பெரும் சிறப்பினையும் பேராண்மையையும் விரும்புபவர்கள் புகழ் தேடும் செயலில்கூடத் தம் குடிப்பெருமைக்கு இழுக்கு வரும் செயல்களைச் செய்யமாட்டார்கள்.

பெருக்கத்து வேண்டும் பணிதல்; சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு. 963
செல்வம் பெருகி வரும் போது பணிவு வேண்டும். செல்வம் சுருங்கிப் போகும் போது தலை நிமிர்ந்து நடக்கும் தன்மானம் மிக்க உயர்வு வேண்டும்.

தலையின் இழிந்த மயிர்அனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை. 964
உயர்ந்த ஒழுக்க நிலைமையிலிருந்து தாழ்ந்தவர்கள் தலையிலிருந்து விழுந்த மயிருக்குச் சமமாய் மிகுந்த தாழ்வை அடைவார்கள்.

குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ
குன்றி அனைய செயின். 965
மலை போல் உயர்ந்த நிலையில் பெருமை உடையவரும் இழிவான செயலைச் சிறிதான குன்றிமணி அளவு செய்தாலும் மிகத் தாழ்ந்த நிலையை அடைவர்.

புகழ்இன்றால் புத்தேள்நாட்டு உய்யாதால் என்மற்று
இகழ்வார்பின் சென்று நிலை. 966
மதியாது தம்மை இகழ்பவரின் பின் சென்று வாழுகின்றவருக்குப் புகழும் கிடைக்காது. வானுலக வாழ்வான சிறப்பும் வாய்க்காது.

ஒட்டார்பின் சென்றுஒருவன் வாழ்தலின் அந்நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று. 967
மதியாத பகைவர் பின்னே சென்று மானம் கெட்டு வாழ்வதை விட, அவன் அழிந்தான் என்று சொல்லப்படுவதே நல்லது.

மருந்தோமற்று ஊன்ஓம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த இடத்து. 968
உயிருக்கு நிகரான பெருமை கெட உடம்பைப் பெரிதாய் எண்ணி வாழுகின்ற வாழ்க்கை, உயிரைக் காக்கும் மருந்து ஆகுமா? ஒருபோதும் ஆகாது என்பதாம்.

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின். 969
தன் உடலிலிருந்து மயிர் நீங்கினால் உயிர் வாழாத கவரிமானைப் போன்றவர்கள், மானத்திற்கு ஓர் அழிவு என்றால் ஒருபோதும் உயிர் வாழ மாட்டார்கள்.

இளிவரின் வாழாத மானம் உடையார்
ஒளிதொழுது ஏத்தும் உலகு. 970
தமக்கு ஏதேனும் இழிவு நேர்ந்தால் உயிர் வாழாதமானம் உடையவரின் புகழை உலகத்தார் ஏத்திப் போற்றி வணங்குவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளிஒருவற்கு உள்ள வெறுக்கை; இளிஒருவற்கு
அஃதுஇறந்து வாழ்தும் எனல். 971
ஒருவனுடைய ஒளிமயமான வாழ்க்கைக்குக் காரணம் அவனுடைய ஊக்க மிகுதியே ஆகும்.
அவனுடைய இழிவுக்குக் காரணம் ஊக்கமில்லாமல் வாழலாம் என்று அவன் எண்ணுவதேயாகும்.

பிறப்புஒக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்புஒவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். 972
எல்லா உயிருக்கும் பிறப்பு என்பது ஒரே தன்மை உடையதேயாகும். ஆனால், வாழ்வில் உயர்வு, தாழ்வு
என்பது அவர்கள் செய்கின்ற தொழில்களில் உள்ள வேறுபாடுகளைப் பொறுத்தே அமைவதாகும்.

மேல்இருந்தும் மேல்அல்லார் மேல்அல்லர்; கீழ்இருந்தும்
கீழ்அல்லார் கீழல் லவர். 973
மேல் நிலையில் வாழ்ந்தாலும் மேன்மைப் பண்பு இல்லாதவர்கள் மேலானவர்கள் ஆகமாட்டார்கள்.
கீழ் நிலையில் இருந்தாலும் இழிகுணம் இல்லாதவர்கள் கீழ் மக்கள் ஆகமாட்டார்கள்.

ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டுஒழுகின் உண்டு. 974
கற்பு நெறி தவறாத மகளிரைப் போல் ஒழுக்க நெறியில் நிற்பவன் எப்போதும்
சிறந்த பெருமை அடைவான்.

பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல். 975
செய்வதற்கு முடியாத அரிய செயல்களையும் முறை அறிந்து
திறம்படச் செய்து முடிக்கின்ற ஆற்றல் உள்ளவரே பெருமைக்குரியவர்.

சிறியார் உணர்ச்சியுள் இல்லை 'பெரியாரைப்
பேணிக்கொள் வேம்'என்னும் நோக்கு. 976
பெரியவர்களை விரும்பிப் போற்ற வேண்டும் என்கின்ற உயர்ந்த நோக்கம்,
அவர்களின் பெருமைகளை அறியாத இழிந்தவர்களுக்கு இருப்பதில்லை.

இறப்பே புரிந்த தொழிற்றாம் சிறப்புந்தான்
சீர்அல் லவர்கண் படின். 977
இழிதன்மை உடையவர்களிடம் செல்வமும் சிறப்புகளும் சேர்ந்து விட்டால்,
அவர்கள் எல்லை மீறிச் செயல் படுவார்கள்.

பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து. 978
பெருமைப் பண்பு உடையவர்கள் எக்காலத்திலும் அடக்கமாய் இருப்பார்கள்.
அற்பர்களோ தம்மைப் பற்றித் தாமே வியந்து பெரிதாய் மதித்துப் பேசித் திரிவார்கள்.

பெருமை பெருமிதம் இன்மை சிறுமை
பெருமிதம் ஊர்ந்து விடல். 979
பெருமைப் பண்பாவது கர்வம் இல்லாமல் வாழ்வது, சிறுமைத் தன்மை,
கர்வம் கொண்டு அழிவது.

அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும். 980
பிறர் குற்றங்களைப் பெரிது படுத்தாது மறைப்பது பெருமைப் பண்பு
ஆகும். பிறர் குற்றங்களையே கூறி வாழ்வது சிறுமைத்தனம் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு. 981
கடமையை உணர்ந்து போற்றும் நல்ல குணம் உடையவர்கள் நல்லவை
அனைத்தையுமே தங்களுக்குக் கடமை என்று கொள்வார்கள்.

குணநலம் சான்றோர் நலனே பிறநலம்
எந்நலத்து உள்ளதூஉம் அன்று. 982
சான்றோர்களின் சிறப்பு என்று கூறப்படுவது அவர்களின் குணங்களின்
சிறப்பே ஆகும். அது வேறு எதிலும் இல்லை.

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண். 983
அன்பு, நாணம், உதவும் பண்பு, இரக்கத் தன்மை, உண்மை ஆகிய ஐந்தும்,
சால்பு என்னும் மண்டபத்தைத் தாங்கும் தூண்கள் ஆகும்.

கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு. 984
தவம் என்பது ஓர் உயிரையும் அழிக்காத அறத்தை அடிப்படையாய்க் கொண்டது. சால்பு
என்பது பிறர் தீமையை எடுத்துச் சொல்லாத நல்ல பண்பினை அடிப்படையாய்க் கொண்டது.

ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை. 985
ஆற்றல் உடையவர்களின் பெரிய ஆற்றல் அடக்கமே ஆகும்.
அது பகைவரையும் தங்களுக்கு நண்பராய் மாற்றும் ஆயுதமாகும்.

சால்பிற்குக் கட்டளை யாதுஎனின் தோல்வி
துலைஅல்லார் கண்ணும் கொளல். 986
தம்மை விடத் தாழ்ந்தவரிடத்திலுங்கூட ஒருவர் தம் தோல்வியை உண்மையாய் ஒப்புக்
கொள்ளும் தன்மைதான் அவருடைய சால்பினை உரைத்துப் பார்க்கும் உரைகல் ஆகும்.

இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு? 987
தமக்குத் துன்பம் செய்தவருக்கும் தாம் நன்மை செய்யவில்லை என்றால்,
தம்முடைய பெருந்தன்மை வேறு எதைத்தான் சாதிக்கப் போகிறது?

இன்மை ஒருவற்கு இளிவன்று சால்புஎன்னும்
திண்மைஉண் டாகப் பெறின். 988
சால்பு என்னும் மன உறுதி உண்டானால், ஒருவருக்குப் பொருள்
இல்லாததால் ஏற்படும் வறுமை ஒரு குறையாகாது.

ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார். 989
சால்பு என்னும் தன்மைக்கு ஒரு கடல் என மதிக்கப்படுகிறவர், உலகமே
அழியும் ஊழிக்காலம் வந்தாலும், தம் நிலையில் வேறுபடாமல் இருப்பர்.

சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை. 990
சான்றோரின் சான்றாண்மை நிறைந்த நல்ல பண்புகள் குறைந்துவிட்ட நிலை
நேருமானால், இந்தப் பெரிய பூமிகூடப் பாரத்தைத் தாங்க முடியாத நிலையை எய்திவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்பதத்தால் எய்தல் எளிதுஎன்ப, யார்மாட்டும்
பண்புடைமை என்னும் வழக்கு. 991
எல்லாரிடத்திலும் எளிமையுடன் பழகினால் பண்புடைமை என்னும் உயர்ந்த சிறப்பினை மிக எளிதாய்ப் பெறலாம்.

அன்புஉடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புஉடைமை என்னும் வழக்கு. 992
அன்புடையவராய் இருத்தல், நல்ல குடிப் பிறத்தல் ஆகிய இரண்டும் பண்புடையவராய் வாழ்வதற்குச் சிறந்த வழிகள் ஆகும்.

உறுப்புஒத்தல் மக்கள்ஒப்பு அன்றால்; வெறுத்தக்க
பண்புஒத்தல் ஒப்பதாம் ஒப்பு. 993
உடம்பால் ஒத்திருப்பதால் எல்லாரும் மக்கள் என்ற மதிப்பைப் பெற மாட்டார்கள், நிறைவான பண்புகளால் ஒத்திருப்போரே மக்கள் ஆவர்.

நயனொடு நன்றி புரிந்த பயன்உடையார்
பண்புபா ராட்டும் உலகு. 994
அறத்தையும் நலத்தையும் பெரிதும் விரும்பிப் பலருக்கும் பயன்படும்படி வாழும் பெரியோரின் பண்பை உலகம் போற்றும்.

நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி, பகையுள்ளும்
பண்புஉள பாடுஅறிவார் மாட்டு. 995
விளையாட்டாகக்கூட ஒருவனை இகழ்ந்து பேசினால் அது அவனுக்குத் துன்பத்தைத் தரும். பிறர் இயல்பை அறிந்து நடக்கும் பண்புள்ளவர்கள் பகைவரிடத்திலும் கூடப் பண்பு தவறாமல் பேசுவார்கள்.

பண்புஉடையார்ப் பட்டுஉண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன். 996
பண்பு மிகுந்தவர்களிடத்தில் பொருந்தி இருப்பதாலேயே உலகம் அழியாமல் இயங்கிக் கொண்டிருக்கிறது. அது இல்லை என்றால் மண்ணோடு மண்ணாகி அழிந்திருக்கும்.

அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர். 997
ஒருவர் அரத்தைப் போன்ற கூர்மையான அறிவுடையவராய் இருந்தாலும், அவரிடம் மனிதப் பண்பு இல்லை என்றால், அவர் மரத்திற்குச் சமமானவரே ஆவார்.

நண்புஆற்றார் ஆகி நயம்இல செய்வார்க்கும்
பண்புஆற்றார் ஆதல் கடை. 998
நட்புக் கொள்ள முடியாமல் தீமையையே செய்பவருக்கும் நாம் பண்போடு நன்மை செய்பவராய் வாழாவிட்டால் மிகவும் இழிந்தவர் ஆகிவிடுவோம்.

நகல்வல்லர் அல்லார்க்கு மாஇரு ஞாலம்
பகலும்பாற் பட்டன்று இருள். 999
பிறருடன் நன்கு கலந்து பழகி மகிழும் தன்மை இல்லாதவருக்கு ஒளி உள்ள பகல் நேரத்தில்கூட இருளில் இருப்பதாகவே தோன்றும்.

பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலம்தீமை யால்திரிந்து அற்று. 1000
உயர்ந்த பண்பு இல்லாதவன் பெற்ற செல்வம், நல்ல பால் அது வைக்கப்பட்ட பாத்திரத்தின் தன்மையால் கெட்டுப் போவது போன்றதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வைத்தான்வாய் சான்ற பெரும்பொருள் அஃது உண்ணான்**
**செத்தான் செயக்கிடந்தது இல்.** 1001
மிகப் பெருமளவு பொருளைச் சேர்த்து வைத்து உலோப குணத்தால் அனுபவிக்காதவன், உயிரோடு இருப்பினும் செத்தவனே. அவனால் செய்ய முடிந்தது ஒன்றுமில்லை.

**பொருளான்ஆம் எல்லாம்என்று ஈயாது இவறும்**
**மருளான்ஆம் மாணாப் பிறப்பு.** 1002
பொருளால் எதுவும் நடக்கும் என்று கருதி, யாருக்கும் எதுவும் உதவாமல் சேர்த்து வைத்திருக்கும் மயக்க அறிவுடையவன் தன் பிறவியின் பயனையே பெறாமல் பெருமையிழந்துவிடுவான்.

**ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்**
**தோற்றம் நிலக்குப் பொறை.** 1003
பொருள் சேர்ப்பதிலேயே மிகுந்த பற்றுக் கொண்டு, புகழை விரும்பாமல் வாழுகின்றவர்கள் பூமிக்குப் பாரமே ஆவார்கள்.

**எச்சம்என்று என்எண்ணுங் கொல்லோ ஒருவரால்**
**நச்சப் படாஅ தவன்.** 1004
பிறருக்கு உதவாமல் வாழ்பவன் அக்காரணத்தால் அனைவர் வெறுப்புக்கும் ஆளாவான். அப்படிப்பட்டவன் தான் இறந்த பிறகு எஞ்சியிருப்பது என்று எதனை எண்ணுவானோ?

**கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய**
**கோடிஉண் டாயினும் இல்.** 1005
மற்றவருக்கு மனம் உவந்து கொடுக்காமலும், தான் அனுபவிக்காமலும் இருப்பவனுக்குச் செல்வம் கோடி கோடியாய் இருந்தாலும் ஒரு பயனும் உண்டாகப் போவதில்லை.

**ஏதம் பெருஞ்செல்வம் தான்துவ்வான் தக்கார்க்குஒன்று**
**ஈதல் இயல்புஇலா தான்.** 1006
தானும் நன்கு அனுபவிக்காமல், மற்றவர்க்கும் மகிழும்படி கொடுத்து உதவாமல் வாழ்கிறவன், தான் வைத்திருக்கும் பெரும் பொருளுக்கே நோய் போன்றவன் ஆவான்.

**அற்றார்க்குஒன்று ஆற்றாதான் செல்வம் மிகநலம்**
**பெற்றாள் தமியள்மூத் தற்று.** 1007
பொருள் இல்லாத வறுமை மிக்கவர்களுக்குக் கொடுத்து உதவாதவனுடைய செல்வம், மிகவும் அழகான பெண் மணமாகாமல் தனியாகவே வாழ்ந்து கிழவியானதைப் போன்றதாகும்.

**நச்சுப் படாதவன் செல்வம் நடுஊருள்**
**நச்சு மரம்பழுத்து அற்று.** 1008
மற்றவர்களுக்குக் கொடுத்து உதவாத காரணத்தால் மற்றவர்களால் விரும்பப்படாத ஒருவனது செல்வம் ஊரின் நடுவே நச்சு மரம் பழுத்திருப்பதைப் போன்றதாகும்.

**அன்புஒரீஇத் தற்செற்று அறம்நோக்காது ஈட்டிய**
**ஒண்பொருள் கொள்வார் பிறர்.** 1009
பிறரிடம் அன்பு செலுத்தாமல், தன்னையும் துன்பப்படுத்திக் கொண்டு, அறத்தையும் போற்றாமல், சேர்த்து வைக்கும் செல்வத்தை மற்றவர்களே அனுபவிப்பார்கள்.

**சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி**
**வறம்கூர்ந்து அனையது உடைத்து.** 1010
தம் செல்வத்தை மற்றவர்களுக்குக் கொடுத்துதவும் புகழ் பெற்ற செல்வர் சிறிது வறுமை அடைந்தால், அது உலகிற்கே பெய்யும் மழை, பெய்யாது வறண்டது போன்ற துன்பத்தைத் தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருமத்தால் நாணுதல் நாணுத் திருநுதல்
நல்லவர் நாணுப் பிற. 1011
நன்மக்கள் தகாத செயல்களைச் செய்வதற்கு வெட்கம் அடைவதே உண்மையில்
நாணமாகும். பெண்களுக்கு இயல்பாய் ஏற்படுகின்ற நாணங்கள் வேறானவையாகும்.

ஊண்உடை எச்சம் உயிர்க்குஎல்லாம் வேறுஅல்ல
நாண்உடைமை மாந்தர் சிறப்பு. 1012
உணவும் உடையும் பிற யாவும் உயிர்கள் அனைத்திற்கும் பொதுவானவை.
மக்களுக்குச் சிறப்பியல்பாய் விளங்குவது நாணம் மட்டுமே ஆகும்.

ஊனைக் குறித்த உயிர்எல்லாம்; நாண்என்னும்
நன்மை குறித்தது சால்பு. 1013
உயிர்கள் அனைத்தும் உடம்பையே இருக்கும் இடமாய்க் கொண்டுள்ளன. சால்பு
என்று சொல்லப்படுவது நாணம் என்னும் நல்ல பண்பை இருப்பிடமாய்க் கொண்டது.

அணிஅன்றோ நாண்உடைமை சான்றோர்க்குஅஃது இன்றேல்
பிணிஅன்றோ பீடு நடை. 1014
அறிவுடையோருக்கு நாணம் அழகு தரும் சிறந்த ஆபரணமாகும். அந்த ஆபரணம்
இல்லையெனில் அவர்கள் பெருமிதமான நடை பிறருக்கு நோய் ஆகும்.

பிறர்பழியும், தம்பழியும் நாணுவார் 'நாணுக்கு
உறைபதி' என்னும் உலகு. 1015
பிறருக்கு வரும் பழிக்காகவும் தமக்கு வரும் பழிக்காகவும் நாணமடைவோரை
நாணத்திற்கு உறைவிடமானவர் என்று உலகம் சொல்லும்.

நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்
பேணலர் மேலா யவர். 1016
பரந்துபட்ட உலகமே தமக்குக் கிடைப்பதாய் இருந்தாலும், உயர்ந்தவர்கள் நாணமாகிய
வேலியைத் தமக்குப் பாதுகாப்பாய்க் கொள்வதை ஒரு போதும் விடமாட்டார்கள்.

நாணால் உயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால்
நாண்துறவார் நாண்ஆள் பவர். 1017
நாணத்தைத் தமக்குரிய சிறந்த பண்பாய்க் கொண்டவர்கள் நாணத்தைக் காக்க உயிரை
விடுவார்களே தவிர, உயிரைக் காக்க ஒருபோதும் நாணத்தை விடமாட்டார்கள்.

பிறர்நாணத் தக்கது தான்நாணான் ஆயின்
அறம்நாணத் தக்கது உடைத்து. 1018
பிறர் வெட்கப்படும்படியான இழிவான செயலை ஒருவன் சிறிதுகூட நாணமில்லாமல்
செய்வானானால், அறம் நாணமடைந்து அவனைக் கைவிடும்.

குலம்சுடும் கொள்கை பிழைப்பின்; நலம்சுடும்
நாண்இன்மை நின்றக் கடை. 1019
ஒருவன் கொள்கை தவறினால் அவன் குலப் பெருமை கெடும். ஆனால், நாணம்
தவறினால் அது நன்மைகள் அனைத்தையும் அழிக்கும்.

நாண்அகத்து இல்லார் இயக்கம், மரப்பாவை
நாணால் உயிர்மருட்டி யற்று. 1020
மனத்தில் நாணமில்லாதவன் உலகத்தில் நடமாடுவது, மரத்தால் செய்த பொம்மையைக்
கயிறு கட்டி ஆட்டி உயிருள்ளது போல மயக்குவது ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையின் பீடுஉடையது இல். 1021
தன் குடும்பப் பெருமைக்கு உரிய கடமைகளைச் செய்ய ஒருபோதும் தவற மாட்டேன் என்று ஒருவன் முயல்கின்ற பெருமையை விடச் சிறந்த பெருமை வேறு எதுவும் இல்லை.

ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையால் நீளும் குடி. 1022
சிறந்த முயற்சி, நிறைந்த அறிவு என்ற இரண்டையும் கொண்டு இடைவிடாது செய்கின்ற செயலால் ஒருவனுடைய குடிப்பெருமை உறுதியாய் உயர்வடையும்.

'குடிசெய்வல்' என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும். 1023
எனது குடியை உயர்த்துவேன் என்னும் உறுதியோடு முயற்சி செய்யும் ஒருவனுக்குத் தெய்வம் வரிந்து கட்டிக் கொண்டு வந்து உதவி செய்யும்.

சூழாமல் தானே முடிவெய்தும் தம்குடியைத்
தாழாது உஞற்று பவர்க்கு. 1024
தம் குடி உயர்வதற்கான செயலை விரைந்து முயன்று செய்வோருக்கு, அவர் ஆராய வேண்டிய நிலை இல்லாமலே அவர் நினைத்தது தானே நிறைவேறும்.

குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு. 1025
குற்றம் இல்லாதவனாய்த் தன் குடி உயர்வதற்காக உழைத்து வாழ்பவனை உலகத்தார் சொந்தமாய் எண்ணிச் சூழ்ந்து கொள்வார்கள்.

நல்லாண்மை என்பது ஒருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை ஆக்கிக் கொளல். 1026
தான் பிறந்த குடியை ஆளும் சிறப்பினைத் தான் பெற்றிருப்பதே ஒருவனுக்கு நல்ல ஆண்மை ஆகும்.

அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை. 1027
போர்க்களத்தில் அஞ்சாமல் பொறுப்பினை ஏற்றுக் கொள்ளும் வீரனைப் போல், தன் குடும்பத்தின் சுற்றத்தாரைக் காப்பாற்றும் பொறுப்பினைத் தக்க வல்லமை உள்ளவனே ஏற்றுக் கொள்வான்.

குடிசெய்வார்க்கு இல்லை பருவம், மடிசெய்து
மானங் கருதக் கெடும். 1028
தம் குடி உயர்வடைய உழைப்பவருக்கு இன்ன காலம் என்று தனியாய் இல்லை. எனவே, சோம்பல் கொண்டு அதன் காரணமாய்த் தம் மானத்தைப் பெரிதாய்க் கருதினால் குடிப்பெருமை அழியும்.

இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக்
குற்றம் மறைப்பான் உடம்பு? 1029
தன் குடும்பத்திற்கு எந்தக் குற்றமும் வாராமல் நீக்க முயற்சி செய்கின்றவர் உடம்பு துன்பத்திற்கு இலக்காகுமோ?

இடுக்கண்கால் கொன்றிட வீழும்; அடுத்தூன்றும்
நல்லாள் இலாத குடி. 1030
துன்பம் வரும்போது அருகிருந்து தாங்க வல்ல ஆள் இல்லாத குடி, துன்பம் என்னும் கோடரியால் வெட்டப்பட்ட மரம் போல விழுந்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம்; அதனால்
உழந்தும் உழவே தலை. 1031

உலகம் சுழன்று சுழன்று பல தொழில்களைச் செய்து திரிந்தாலும் ஏர்த் தொழிலை நம்பியே அதன் பின் நிற்கிறது. அதனால், எவ்வளவு துன்பங்கள் நேர்ந்தாலும் ஏர்த் தொழிலே தலையாயதாகும்.

உழுவார் உலகத்தார்க்கு ஆணி, அஃது ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து. 1032

உழவுத் தொழிலைச் செய்யாமல் உயிர் வாழுகின்ற மற்றையோர் அனைவரையும் தாங்குகின்ற உழவரே, உலகம் என்னும் தேருக்கு அச்சாணி போன்றவர் ஆவர்.

உழுதுஉண்டு வாழ்வாரே வாழ்வார்; மற்று எல்லாம்
தொழுதுஉண்டு பின்செல் பவர். 1033

உழவு செய்து அதன் பயனால் கிடைப்பதை உண்டு வாழ்கின்றவரே உரிமையோடு வாழ்கின்றவர் ஆவர். மற்றத் தொழில்கள் செய்பவர்கள் அனைவரும் பிறரைத் தொழுது உண்டு அவர் பின் செல்பவர்களே ஆவர்.

பலகுடை நீழலும் தம்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர். 1034

உழவுத் தொழிலால் வரும் நெல்லினை உடையவராகி உயர்ந்து வாழும் உழவர், பல அரசர்களின் குடை நிழலில் உள்ள நிலம் முழுவதையும் தம் அரசரின் குடைக் கீழ் கொண்டுவந்து விடுகின்ற வன்மை உடையவராவர்.

இரவார் இரப்பார்க்குஒன்று ஈவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர். 1035

கையால் உழைத்து உணவு உற்பத்தி செய்து வாழுகின்ற உழவர், யாரிடமும் சென்று யாசகம் கேட்கமாட்டார், தம்மிடம் கேட்பவருக்குத் தவறாது உதவியும் செய்வார்.

உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேம்என் பார்க்கும் நிலை. 1036

உழவருடைய கைகள் உழவுத் தொழிலைச் செய்யாமல் மடங்கி இருக்குமானால், எல்லாப் பற்றையும் துறந்து விட்டோம் என்று கூறும் துறவிகளும் வாழ முடியாது.

தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும். 1037

ஒரு பலம் புழுதி கால் பலம் ஆகும்படி நன்றாய் உழுது காயவிட்டால், ஒரு பிடி எருவும் தேவைப்படாமலே அந்த நிலத்தில் வளரும் பயிர் சிறந்து விளையும்.

ஏரினும் நன்றால் எருஇடுதல், கட்டபின்
நீரினும் நன்றுஅதன் காப்பு. 1038

ஏர் உழுவதை விட, எரு இடுதல் மிகவும் முக்கியம். களை பறித்த பின் நீர்ப் பாய்ச்சுதலை விட முக்கியம் பயிரை நன்றாய்ப் பாதுகாத்தலாகும்.

செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும். 1039

நிலத்திற்குரியவன் நாள்தோறும் நிலத்திற்குச் சென்று நோக்கி வேண்டுவன செய்யாது சோம்பி வீட்டிலே இருப்பானாயின், அவன் மனைவியைப் போலவே, அந்நிலமும் அவனை வெறுத்துப் பிணங்கிவிடும்.

இலம்என்று அசைஇ இருப்பாரைக் காணில்
நிலம்என்னும் நல்லாள் நகும். 1040

தம்மிடம் ஒரு பொருளுமில்லை என்று சொல்லிச் சோம்பி இருப்பவரைக் கண்டால், உழைத்தால் வளம் தரக் காத்திருக்கும் நிலம் என்னும் நல்லவள் தன்னுள்ளே சிரிப்பாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்மையின் இன்னாதது யாதுஎனின் இன்மையின்
இன்மையே இன்னா தது. 1041
வறுமையைப் போல் துன்பமானது வேறு எது என்று கேட்டால், வறுமை மட்டுமே வறுமையைப் போலத் துன்பமானதாகும்.

இன்மை எனஒரு பாவி மறுமையும்
இம்மையும் இன்றி வரும். 1042
வறுமை என்று சொல்லப்படும் பெரும் பாவி ஒருவனை நெருங்கினால், அவன் மறு பிறப்பு இன்பத்தையும், இப்பிறப்பு இன்பத்தையும் அடைய முடியாத நிலை ஏற்படும்.

தொல்வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக
நல்குரவு என்னும் நசை. 1043
வறுமை என்று சொல்லப்படும் அழிவு நிலை அவனது பழைமையான குடிப் பிறப்பையும் புகழையும் ஒரு சேரக் கெடுக்கும்.

இல்பிறந்தார் கண்ணேயும் இன்மை இளிவந்த
சொல்பிறக்கும் சோர்வு தரும். 1044
வறுமை, நல்ல குடும்பத்தில் பிறந்தவரிடமும், இழிவான சொல் பிறப்பதற்குக் காரணமான சோர்வை உண்டாக்கி விடும்.

நல்குரவு என்னும் இடும்பையுள் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும். 1045
வறுமை என்று சொல்லப்படும் ஒரு துன்பம் நேர்ந்தால், அதனால் பல்வேறு பட்ட துன்பங்களும் விளையும்.

நற்பொருள் நன்குஉணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும். 1046
வறுமைக்கு ஆளானவன் நல்ல நூல்களின் உயர் பொருள்களை நன்றாய் எடுத்துச் சொன்னாலும், அவை கேட்பாரில்லாமல் பயனற்றுப்போகும்.

அறம்சாரா நல்குரவு ஈன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும். 1047
அறத்தோடு சேராத வறுமை ஒருவனை அடைந்தால், பெற்ற தாயுங்கூட அவனை அயலானைப் பார்ப்பது போலப் பார்ப்பாள்.

இன்றும் வருவது கொல்லோ, நெருநலும்
கொன்றது போலும் நிரப்பு? 1048
'நேற்றுக் கொலை செய்தது போலத் துன்புறுத்திய வறுமை இன்றும் வந்து வாட்டுமோ?' என்று வறுமை அடைந்தவன் நாள்தோறும் கலங்கித் துன்புறுவான்.

நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாதொன்றும் கண்பாடு அரிது. 1049
ஒருவேளை ஒருவன் நெருப்பினில் கிடந்து தூங்க முடிந்தாலும் முடியும். ஆனால், வறுமை வந்துவிட்டால் எப்படியும் அவனால் ஒருபோதும் தூங்கமுடியாது.

துப்புரவு இல்லார் துவரத் துறவாமை
உப்பிற்கும் காடிக்கும் கூற்று. 1050
உண்ண ஏதும் இல்லாத வறுமை உடையவர் முற்றும் துறக்க முடியாமல் இருப்பதன் காரணம், மற்றவருடைய உப்புக்கும் கஞ்சிக்கும் எமனாய் இருப்பதே ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இரக்க இரத்தக்கார்க் காணின், கரப்பின்**
**அவர்பழி தம்பழி அன்று.** 1051
கேட்கத் தக்கவர்கள் யார் என அறிந்தே வறியவர்கள் பிச்சை கேட்க வேண்டும்.
இல்லாதவர்களுக்குப் பிச்சை கொடுப்பதற்குச் செல்வம் உள்ளவர்கள்
மறைப்பார்களேயானால் அது அவர்களுக்குப் பழியேயன்றிக் கேட்பவர்களுக்கு இல்லை.

**இன்பம் ஒருவற்கு இரத்தல் இரந்தவை**
**துன்பம் உறாஅ வரின்.** 1052
தான் கேட்ட பிச்சை தனக்குத் துன்பம் நேராமல் கிடைக்குமானால்,
பிச்சை எடுப்பதுகூட இன்பமே!

**கரப்பிலா நெஞ்சின் கடன்அறிவார் முன்நின்று**
**இரப்பும்ஓர் ஏஎர் உடைத்து.** 1053
மறைக்காமல் கொடுக்கும் உள்ளமும் கடமை உணர்ச்சியும் உள்ளவரின்
முன் பிச்சை கேட்பதுகூட ஓர் அழகேயாகும்.

**இரத்தலும் ஈதலே போலும் கரத்தல்**
**கனவிலும் தேற்றாதார் மாட்டு.** 1054
உள்ளதை மறைத்துக் கூறும் தன்மையைக் கனவிலும் அறியாதவரிடத்தில் பிச்சை
கேட்பது என்பது பிறருக்குக் கொடுப்பது போலச் சிறப்புடையதே.

**கரப்புஇலார் வையகத்து உண்மையான் கண்ணின்று**
**இரப்பவர் மேற்கொள் வது.** 1055
உள்ளதை இல்லை என்று மறைக்காமல் கொடுப்பவர்கள் உலகத்தில் இருப்பதால்தான்,
ஒருவர் முன் நின்று யாசிப்பவனும் அச்செயலைத் தொடர்ந்து செய்கிறான்.

**கரப்புஇடும்பை இல்லாரைக் காணின் நிரப்புஇடும்பை**
**எல்லாம் ஒருங்கு கெடும்.** 1056
உள்ளதை மறைக்கின்ற துன்பச் செயலைச் செய்யாதவர்களைக் கண்டால்,
பிச்சை கேட்பவரின் வறுமைத் துன்பம் முற்றிலும் ஒழியும்.

**இகழ்ந்துஎள்ளாது ஈவாரைக் காணின் மகிழ்ந்துஉள்ளம்**
**உள்ளுள் உவப்பது உடைத்து.** 1057
குறைத்தும் இழித்தும் பேசாமல் கொடுப்பவரைக் கண்டால், இரப்பவரின்
உள்ளம் பெருமகிழ்ச்சி அடையும்.

**இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்**
**மரப்பாவை சென்றுவந் தற்று.** 1058
பொருளைப் பிச்சையாகக் கேட்டுப் பெற்றுக் கொள்பவர் இல்லை என்றால், இவ்வுலகில் மக்களின்
நடைமுறை, மரத்தினால் செய்த பொம்மையைக் கயிற்றினால் இயக்குவது போல ஆகும்.

**ஈவார்கண் என்உண்டாம், தோற்றம் இரந்துகோள்**
**மேவார் இலாஅக் கடை?** 1059
பொருளைப் பிச்சையாகக் கேட்டுப் பெற்றுக் கொள்ளும் வறியவர்கள் இல்லை என்றால்,
கொடுக்கின்றவர்களுக்கு அதனால் ஏற்படும் புகழ் கிடைக்காமல் போகும்.

**இரப்பான் வெகுளாமை வேண்டும் நிரப்புஇடும்பை**
**தானேயும் சாலும் கரி.** 1060
பிச்சை எடுப்பவன் யாரிடத்திலுமே கோபம் கொள்ளாமல் இருக்க வேண்டும். ஏனென்றால்,
அவன் அடைந்துள்ள வறுமைத் துன்பமே அவனுக்கு அதை உணர்த்தும் சான்றாய் விளங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரவாது உவந்துஈயும் கண்அன்னார் கண்ணும்
இரவாமை கோடி உறும். 1061
பிச்சை எடுப்பவருக்கு இருப்பதை ஒளிக்காமல் கொடுக்கும் கண்ணுக்கொப்பானவரிடத்தில் கூடப் பிச்சை கேட்காமல் இருப்பது கோடி மடங்கு நல்லதாகும்.

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகுஇயற்றி யான். 1062
பிச்சை எடுத்துத்தான் உயிர் வாழ வேண்டும் என்ற நிலையில் சில உயிர்களைப் படைத்திருந்தால், அப்படிப் படைத்தவன் பிச்சை எடுப்பவரைப் போல அலைந்து திரிந்து கெட்டுப் போகட்டும்.

இன்மை இடும்பை இரந்துதீர் வாம்என்னும்
வன்மையின் வன்பாட்டது இல். 1063
வறுமைத் துன்பத்தைப் போக்கிக் கொள்வதற்குப் பிச்சை எடுப்பதுதான் ஒரே வழி என்றெண்ணி உழைப்பை மதிக்காமல் இருப்பதைப் போலக் கொடுமை வேறு இல்லை.

இடம்எல்லாம் கொள்ளாத் தகைத்தே இடம்இல்லாக்
காலும் இரவுஒல்லாச் சால்பு. 1064
வாழ வழி இல்லாதபோதுங்கூடப் பிச்சை எடுக்க உடன்படாத உயர்தன்மை, இந்த உலகத்தில் உள்ள இடம் முழுவதுமே சேர்ந்தாலும் கொள்ளாத பெருமையுடையதாகும்.

தெண்ணீர் அடுபுற்கை ஆயினும் தாள்தந்தது
உண்ணலின் ஊங்குஇனியது இல். 1065
தன் சொந்த உழைப்பால் கிடைத்தது தெளிந்த நீர் போன்ற கூழே ஆயினும், அதை உண்பதை விட இனிமையானது இந்த உலகத்தில் வேறொன்றும் இல்லை.

ஆவிற்கு நீர்என்று இரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்தது இல். 1066
பசுவிற்கு நீர் வேண்டும் என்று பிச்சை கேட்டாலும், ஒருவனது நாவிற்கு அவ்வாறு கேட்பதை விட இழிவானது வேறெதுவும் இல்லை.

இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின்
கரப்பார் இரவன்மின் என்று. 1067
இருப்பதை மறைத்து வைத்துக் கொண்டு இரந்து கேட்பவருக்கு இல்லை என்று கூறுகிறவர்களிடம் பிச்சை கேட்காதீர்கள் என்று பிச்சை கேட்பவர்களிடம் நான் இரந்து வேண்டிக் கேட்கிறேன்.

இரவுஎன்னும் ஏமாப்புஇல் தோணி கரவுஎன்னும்
பார்தாக்கப் பக்கு விடும். 1068
யாசிப்பது என்ற பாதுகாப்பு இல்லாத மரக்கலம், வைத்துக் கொண்டு இல்லை என்று இரக்கமின்றிக் கூறுவதாகிய பாறை தாக்கினால் உடைந்துவிடும்.

இரவுஉள்ள உள்ளம் உருகும் கரவுஉள்ள
உள்ளதூஉம் இன்றிக் கெடும். 1069
யாசிக்கும் கொடுமையை எண்ணிப் பார்த்தால் மனம் கரைந்து உருகும். அதே பொழுது, வைத்திருப்பவர்கள் ஒளித்து வாழும் கொடுமையை எண்ணினால், அது உருகுவதை நிறுத்திவிடும்.

கரப்பவர்க்கு யாங்குஒளிக்கும் கொல்லோ இரப்பவர்
சொல்லாடப் போஓம் உயிர். 1070
பிச்சை கேப்பவரிடம் இல்லை என்று சொன்ன அளவிலேயே அவர் உயிர் போய்விடுகிறதே. வைத்துக் கொண்டு இல்லை என்று பொய் சொன்ன கருமியின் உயிர் எங்கே போய் ஒளிந்திருக்கும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மக்களே போல்வர் கயவர்; அவர்அன்ன**
**ஒப்பாரி யாம்கண்டது இல்.** 1071

தோற்றத்தில் பார்ப்பதற்கு நல்லவர்களும் கயவர்களும் ஒரே மாதிரித்தான் காணப்படுகிறார்கள். அவர்களைப் போல ஒத்திருப்பவர்களை வேறெந்த இருவகைப் பொருள்களிடத்திலும் காண முடியாது.

**நன்றுஅறி வாரின் கயவர் திருஉடையர்**
**நெஞ்சத்து அவலம் இலர்.** 1072

நன்மை தீமை அறிந்தவர்களைவிட, அவற்றைப்பற்றிய ஒரு வகையான கவலையும் அறியாதவர்களாய் உள்ள கயவர்கள் ஒரு வகையில் மேலானவர்கள்.

**தேவர் அனையர் கயவர்; அவருந்தாம்**
**மேவன செய்துஒழுக லான்.** 1073

கயவரும் தேவரைப் போலத் தாம் விரும்புகின்றவற்றையெல்லாம் செய்து மனம் போன போக்கில் நடப்பதால் கயவரும் தேவரைப் போன்றவரே ஆவர்.

**அகப்பட்டி ஆவாரைக் காணின் அவரின்**
**மிகப்பட்டுச் செம்மாக்கும் கீழ்.** 1074

இழிந்த மனம் படைத்தவர்கள் தங்களை விட இழிவாய் நடப்பவர்களைக் கண்டால் தாம் அவரை விட உயர்ந்தவர்கள் என்று எண்ணிப் பெருமைப்பட்டுக் கொள்வார்கள்.

**அச்சமே கீழ்களது ஆசாரம்; எச்சம்**
**அவாஉண்டேல் உண்டாம் சிறிது.** 1075

கீழ்மக்கள் சற்று ஒழுங்காய் இருக்கிறார்கள் என்றால், அதற்குக் காரணம் அச்சமே ஆகும். உண்மையிலேயே ஒழுக்கமாய் இருக்கிறார்கள் என்றால், அவர்கள் விரும்பும் பொருள் கிடைப்பதே காரணமாய் இருக்கும்.

**அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட**
**மறைபிறர்க்கு உய்த்துரைக்க லான்.** 1076

கயவர்கள் தாம் கேட்ட இரகசியங்களை வலியப்போய்ப் பிறருக்குச் சொல்லி வெளிப் படுத்துகின்ற காரணத்தால், அவர்கள் அடித்து ஒலி எழுப்பப்படும் பறை போன்றவர்கள்.

**ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுஉடைக்கும்**
**கூன்கையர் அல்லா தவர்க்கு.** 1077

கயவர்கள் தம் கன்னத்தைக் குத்தி உடைக்கின்ற முரடர்களுக்கு ஏதாவது உதவுவார்களே தவிர, மற்றவர்களுக்குத் தாம் உண்ட எச்சிற் கையைக்கூட உதற மாட்டார்கள்.

**சொல்லப் பயன்படுவர் சான்றோர்; கரும்புபோல்**
**கொல்லப் பயன்படும் கீழ்.** 1078

மேன்மக்கள், தேவை என வேண்டுகின்ற போது, உடன் பயன் படுவார்கள். கீழ் மக்களோ கரும்பிலிருந்து சாற்றை எடுக்கப் பிழிந்து வருத்துவதைப் போலத் துன்பப் படுத்தினால்தான் பயன் படுவார்கள்.

**உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்**
**வடுக்காண வற்றாகும் கீழ்.** 1079

கீழ்மக்கள் பிறர் உடுப்பதையும் உண்பதையும் கண்டால், அவர் மேல் பொறாமை கொண்டு வேண்டும் என்றே குற்றம் சொல்வார்கள்.

**எற்றிற்கு உரியர் கயவர்ஒன்று உற்றக்கால்**
**விற்றற்கு உரியர் விரைந்து.** 1080

கீழ் மக்கள் எதற்கு உரியவர் என்றால், தமக்குத் துன்பம் நேர்கிறபோது தம்மைப் பிறருக்கு விற்றுவிடுகின்ற நிலைக்குரியவர் ஆவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணங்குகொல்? ஆய்மயில் கொல்லோ? கனம்குழை
மாதர்கொல்? மாலும்என் நெஞ்சு! 1081
தெய்வப் பெண்ணோ, அழகிய மயிலோ ஆபரணமணிந்த மனிதப் பெண்ணோ என்று அறியாது என் நெஞ்சம் மயங்குகிறது.

நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்குஅணங்கு
தானைக் கொண் டன்னது உடைத்து. 1082
அந்த அழகியை நான் பார்க்க, என் பார்வைக்கு எதிராய் அவள் பார்ப்பது, தானே தாக்கி வருத்தக் கூடிய தெய்வம் ஒரு பெரும் படையையும் கொண்டு வந்தது போல இருக்கிறது.

பண்டுஅறியேன் கூற்றுஎன் பதனை; இனிஅறிந்தேன்
பெண்தகையால் பேரமர்க் கட்டு. 1083
எமன் என்று கூறப்படுவதை நான் முன்பு அறிந்ததில்லை. இப்போது பார்த்து அறிந்தேன். அது பெண்தன்மையுடன் போர் செய்யும் பெரிய கண்களைக் கொண்டதாய் உள்ளது.

கண்டார் உயிர்உண்ணும் தோற்றத்தால் பெண்தகைப்
பேதைக்கு அமர்த்தன கண். 1084
பெண்தன்மையினை உடைய இப்பேதைக்கு இருக்கும் கண்கள், பார்த்தவர் உயிரைக் குடிக்கும் தோற்றம் கொண்டு மாறுபட்டிருக்கின்றன.

கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கம்இம் மூன்றும் உடைத்து. 1085
எமனோ, கண்ணோ, பெண் மானோ தெரியவில்லை. ஆனால், இந்தப் பெண்ணின் கண்கள் இந்த மூன்றன் தன்மைகளையும் உடையனவாய் இருக்கின்றன.

கொடும்புருவம் கோடா மறைப்பின் நடுங்குஅஞர்
செய்யல மன்இவள் கண். 1086
வளைந்துள்ள புருவங்கள் கோணாமல் நேராய் இருந்திருக்குமானால் இவள் கண்கள் என்னை நடுங்கும்படியான துன்பத்திற்கு ஆளாக்க மாட்டாது.

கடாஅக் களிற்றின்மேல் கட்படாம் மாதர்
படாஅ முலைமேல் துகில். 1087
பெண்களுடைய சாயாத கொங்கைகளின் மேல் அணிந்துள்ள ஆடை, மதங்கொண்ட ஆண் யானையின் மேலிட்ட முகபடாம் போன்றது.

ஒள்நுதற் கோஒ உடைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரும் உட்கும்என் பீடு. 1088
போர்க்களத்தில் பகைவரை அஞ்சி நடுங்கச் செய்யும் என் வலிமை இவளுடைய ஒளி பொருந்திய நெற்றிக்கே தோற்று விட்டதே!

பிணைஏர் மடநோக்கும் நாணும் உடையாட்கு
அணிஎவனோ ஏதில தந்து? 1089
பெண்மானைப் போன்ற அழகிய பார்வையும் நாணமும் கொண்ட இவளுக்கு மற்ற அணிகலன்கள் எதற்கு? அவசியமே இல்லையே.

உண்டார்கண் அல்லது அடுநறாக் காமம்போல்
கண்டார் மகிழ்செய்தல் இன்று. 1090
மது, தன்னைக் குடித்தவருக்கு மயக்கத்தை உண்டாக்குமே தவிரக் காமம் போலப் பார்த்தவருக்கு மயக்கத்தை உண்டாக்குவதில்லையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இருநோக்கு இவள்உண்கண் உள்ளது ஒருநோக்கு**
**நோய்நோக்குஒன்று அந்நோய் மருந்து.** 1091

மை தீட்டிய அழகிய இவள் கண்களில் இரு பார்வைகள் உள்ளன.
ஒன்று நோயை உண்டாக்குவது, மற்றொன்று நோயைப் போக்குவது.

**கண்களவு கொள்ளும் சிறுநோக்கம் காமத்தில்**
**செம்பாகம் அன்று பெரிது.** 1092

நான் காணாதபோது அவள் என்னை நோக்குகின்ற சிறிய பார்வை காமத்தில்
சரி பாதியன்று, அதை விடவும் மிகுதியானதாகும்.

**நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள் அஃதுஅவள்**
**யாப்பினுள் அட்டிய நீர்.** 1093

நான் பார்க்கும்போது அவள் என்னை நோக்கினாள். நான் அவளை நோக்கியதும்
தலை குனிந்தாள். அது எங்களிடையே தோன்றிய காதல் பயிர் வளர ஊற்றிய நீராகும்.

**யான்நோக்குங் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்**
**தான்நோக்கி மெல்ல நகும்.** 1094

நான் அவளைப் பார்க்கும்போது நிலத்தைப் பார்ப்பாள். நான் பார்க்காத போது
அவள் என்னைப் பார்த்து மெல்லச் சிரிப்பாள்.

**குறிக்கொண்டு நோக்காமை அல்லால் ஒருகண்**
**சிறக்கணித்தாள் போல நகும்.** 1095

என்னை நேராய்க் குறிப்பிட்டுப் பார்க்கவில்லையேயன்றி, ஒரு கண்ணைச் சுருக்கிக்
கொள்பவள் போல் என்னைப் பார்த்துத் தனக்குள் நகைத்து மகிழ்வாள்.

**உறாஅ தவர்போல் சொலினும் செறாஅர்சொல்**
**ஒல்லை உணரப் படும்.** 1096

வெளியே அன்பில்லாத அயலார் போல் அவள் கடுஞ்சொற்களைக் கூறினாலும், அவை
உள்ளத்தில் பகையில்லாதவரின் சொற்கள் என்பதை உடன் அறிந்து கொள்ள முடியும்.

**செறாஅச் சிறுசொல்லும் செற்றார்போல் நோக்கும்**
**உறாஅர்போன்று உற்றார் குறிப்பு.** 1097

உள்ளத்தில் பகையில்லாத கடுஞ்சொல்லும், பகைவரைப் போலப் பார்க்கும் பார்வையும் வெளித்
தோற்றத்திற்கு அயலார் போல் இருந்து கொண்டு, உள்ளத்தே அன்பு கொண்டவளின் குறிப்பாகும்.

**அசையியற்கு உண்டுஆண்டு ஓர் ஏஎர்யான் நோக்கப்**
**பசையினள் பைய நகும்.** 1098

நான் அவளைத் தாழ்ந்து பார்க்கும்போது அதை அறிந்து அன்பு கொண்டவளாய்
மெல்லச் சிரிப்பாள். அந்தச் சமயம் அவளிடத்தில் மேலும் ஓர் அழகு தோன்றும்.

**ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்**
**காதலார் கண்ணே உள.** 1099

பிறர் இருக்கும்போது, முன்பு அறியாதவர் போல இருவரும் ஒருவரை ஒருவர்
பொது நோக்கினால் பார்த்துக் கொள்வது, காதலரிடம் உள்ள இயல்பாகும்.

**கண்ணொடு கண்இணை நோக்குஒக்கின் வாய்ச்சொற்கள்**
**என்ன பயனும் இல.** 1100

காதலர் இருவர் கண்களும் ஒத்த பார்வையில் அன்பால் ஒன்றுபடும்போது
வாய்ச் சொற்கள் ஒரு பயனும் இல்லாமல் போகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டுகேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புலனும்
ஒண்தொடி கண்ணே உள. 1101
கண்டும், கேட்டும், உண்டும், முகர்ந்தும், தொட்டும் ஐம்புலனால் பெறுகின்ற இன்பங்கள் அனைத்தும் ஒளி பொருந்திய ஒரு பெண்ணிடத்திலே உள்ளன.

பிணிக்கு மருந்து பிறமன்; அணிஇழை
தன்நோய்க்குத் தானே மருந்து. 1102
நோயை நீக்கப் பயன்படுவது வேறு ஒரு பொருளாகும். ஆனால், இவளால் ஏற்பட்ட நோய்க்கு இவளே மருந்தாய் இருக்கிறாள்.

தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு. 1103
தாம் காதலிக்கும் அழகிய பெண்ணின் மென்மை மிகுந்த தோளில் சாய்ந்து தூங்குவதை விடத் தேவர்கள் விரும்பும் திருமால் வாழும் உலகம் அதிக இன்பம் தருமா?

நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்என்னும்
தீயாண்டுப் பெற்றாள் இவள்? 1104
தலைவியை விட்டு நீங்கினால் சுடுகிறது, அருகில் சென்றால் குளிர்கிறது. இப்படிப்பட்ட புதுமையான தீயை இந்தப் பெண் எங்கிருந்து பெற்றாள்?

வேட்ட பொழுதின் அவைஅவை போலுமே
தோட்டார் கதுப்பினாள் தோள். 1105
மலர் அணிந்த கூந்தலை உடைய இவள் தோள்கள் ஒருவன் நினைக்கிற பொருள், நினைக்கிற போதே வந்து இன்பம் தருவது போல, இன்பம் தருகின்றன.

உறுதோறு உயிர்தளிர்ப்பத் தீண்டலால் பேதைக்கு
அமிழ்தின் இயன்றன தோள். 1106
வாடிய என் உயிர் இவள் மென்மையான தோளைத் தழுவும்போது துளிர்த்து விடுகிறது. எனவே, இவள் தோள்கள் சாவா மருந்தான அமுதத்தால் உருவானவையாய் இருக்க வேண்டும்.

தம்இல் இருந்து தமதுபாத்து உண்டு அற்றால்
அம்மா அரிவை முயக்கு. 1107
தமது சொந்த இல்லத்தில் இருந்து தமது உழைப்பால் வந்த பொருளைப் பிறருடன் பகிர்ந்து உண்ணும்போது ஏற்படுகின்ற இன்பம், இந்தப் பெண்ணைச் சேருகின்ற போது எனக்கு ஏற்படுகின்றது.

வீழும் இருவர்க்கு இனிதே வளிஇடை
போழப் படாஅ முயக்கு. 1108
காற்றுக்கூட இடையே புகுந்து செல்ல முடியாதபடி நெருக்கி அணைத்து மகிழ்வது காதலர் இருவருக்கும் இனிமை உடைய செயலாகும்.

ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்
கூடியார் பெற்ற பயன். 1109
பொய்க் கோபம் கொள்ளுதல் (ஊடல்) பின் அதனை அளவோடு விட்டு விடுதல், பின்பு சேர்ந்து மகிழ்தல் ஆகியவை தலைவனுக்கும் தலைவிக்கும் இன்பம் தரும் செயல்களாகும்.

அறிதோறும் அறியாமை கண்டற்றால் காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு. 1110
நல்ல நூல்களைக் கற்கின்ற ஒவ்வொரு முறையும் அறியாமையை அறிவது போல, அணிகலன்களை அணிந்து அழகாய் விளங்கும் இவளைக் கூடும் போதெல்லாம், புதுமையான இன்பம் ஏற்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்னீரை வாழி, அனிச்சமே! நின்னினும்
மென்னீரள் யாம்வீழ் பவள். 1111
அனிச்ச மலரே, நீ வாழ்க! நீ மிகவும் மென்மைத் தன்மை உடையதாய் இருக்கிறாய். என் காதலியோ உன்னை விட மென்மையானவளாக இருக்கிறாள்.

மலர்காணின் மையாத்தி நெஞ்சே! இவள்கண்
பலர்காணும் பூஒக்கும் என்று. 1112
நெஞ்சமே! இவள் கண்கள் பலராலும் காணப்படும் மலர்களை ஒத்திருக்கின்றன என்று கருதி, இவள் கண்களுக்கு ஒப்பான மலர்களைக் கண்டால் நீ மயங்குகிறாய்.

முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேல்உண்கண் வேய்த்தோள் அவட்கு. 1113
மூங்கில் போன்ற மெல்லிய தோளை உடைய இவள் மேனி தளிரையும், பல் முத்தையும், உடம்பு மலர் போன்ற மணத்தையும், கண்கள் வேலையும் ஒத்திருக்கின்றன.

காணின் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்
'மாண்இழை கண்ஒவ்வேம்' என்று. 1114
இவளது கண்களைப் போல் தாம் இல்லையே என வெட்கப்பட்ட குவளை மலர்கள் இவளைக் கண்டபோது தலை கவிழ்ந்து நிற்கும்.

அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள்; நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை. 1115
இவள் தன் இடையின் மென்மையை உணராமல், காம்பு கிள்ளாத அனிச்ச மலரைத் தன் தலையில் சூடினாள். எனவே, இவள் இடைக்கு மங்கல ஒலிகள் இனி முழங்கா.

மதியும் மடந்தை முகனும் அறியா
பதியிற் கலங்கிய மீன். 1116
நிலவிற்கும் இவள் முகத்திற்கும் வேறுபாடு கண்டறிய முடியாமல் விண்மீன்கள் தம் நிலையில் நிற்காமல் குழப்பம் கொண்டு அலைகின்றன.

அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல
மறுஉண்டோ மாதர் முகத்து? 1117
குறைந்தும் வளர்ந்தும் விளங்கும் சந்திரனுக்கு உள்ள களங்கம் இந்தப் பெண்ணின் முகத்தில் உண்டோ? இல்லையே!

மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி! 1118
நிலவே! நான் விரும்பும் இந்தப் பெண்ணின் முகத்தைப் போல ஒளி வீச உன்னால் முடியுமானால் நீயும் இவள்போல என் காதலுக்கு உரிமை உடையவளாவாய்.

மலர்அன்ன கண்ணாள் முகம் ஒத்தி யாயின்
பலர்காணத் தோன்றல் மதி. 1119
மதியே! மலர் போன்ற கண்களை உடைய இவள் முகத்தைப் போலவே இருக்க விரும்பினால், பலரும் பார்க்கும் வண்ணம் நீ தோன்றாதே.

அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம். 1120
மிகவும் மெல்லியதான அனிச்ச மலரும் அன்னப் பறவையின் இறகுங்கூடப் பெண்ணின் மென்மையான அடிகளைக் குத்தி வருத்தும் நெருஞ்சி முள் போன்றவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வால்எயிறு ஊறிய நீர். 1121
மென்மையான மொழிகளைப் பேசுகின்ற இவளுடைய தூய்மையான பற்களில் ஊறிய நீர், பாலொடு தேன் கலந்தது போல் மிகவும் இனிய சுவையை உடையது.

உடம்பொடு உயிரிடை என்ன?மற்று அன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு. 1122
உடம்போடு உயிருக்கு உள்ள தொடர்பானது எப்படிப்பட்டதோ அது போன்றதே இவளுக்கும் எனக்கும் உள்ள உறவாகும்.

கருமணியில் பாவாய்! நீ போதாய்! யாம் வீழும்
திருநுதற்கு இல்லை இடம். 1123
எனது கண்ணின் கருமணியில் உள்ள பாவையே, நீ அந்த இடத்தை விட்டு அகன்றுவிடு. அப்படிச் செய்யாவிட்டால் நான் விரும்பும் இவளுக்கு என் கண்ணில் இருக்க இடமில்லாமல் அல்லவா போய்விடும்?

வாழ்தல் உயிர்க்குஅன்னள் ஆயிழை; சாதல்
அதற்குஅன்னள் நீங்கும் இடத்து. 1124
மிக நேர்த்தியான அணிகலன்களை அணிந்த இவள் என்னோடு சேர்ந்திருக்கும்போது என் உயிருக்கு வாழ்வு தருபவள் போல இருக்கிறாள், பிரியும் போது உயிருக்குச் சாவு தருபவள் போல இருக்கிறாள்.

உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்புஅறியேன்
ஒள்அமர்க் கண்ணாள் குணம். 1125
துன்பம் தரும் கண்களை உடைய இவள் குணங்களை நான் மறந்தால்தானே மீண்டும் நினைக்க முடியும்? நான்தான் ஒருபோதும் மறப்பதில்லையே.

கண்உள்ளிற் போகார்; இமைப்பின் பருவரார்
நுண்ணியர்எம் காத லவர். 1126
என் காதலர் என் கண்களிலிருந்து போக மாட்டார். அறியாமல் இமைத்தாலும் அதற்காக வருத்தமடைய மாட்டார், அவ்வளவு நுட்பமானவர்.

கண்உள்ளார் காத லவராகக் கண்ணும்
எழுதேம் கரப்பாக்கு அறிந்து. 1127
என் அன்புக் காதலர் கண்ணுக்குள் இருக்கிறார். மை எழுதக் கண்ணை மூட வேண்டும். எனவே, அப்போது அவர் மறைவார். ஆதலால், நான் கண்ணுக்கு மை தீட்டிக் கொள்வதே இல்லை.

நெஞ்சத்தார் காத லவராக வெய்துஉண்டல்
அஞ்சுதும், வேபாக்கு அறிந்து. 1128
என் காதலர் என் நெஞ்சிலேயே இருக்கிறார். எனவே, சூடான பொருள்களை உண்டால் அவர் வெந்து போவாரோ என்று பயந்து நான் சூடாய் எதையும் உண்ண அஞ்சுகிறேன்.

இமைப்பின் கரப்பாக்கு அறிவல்; அனைத்திற்கே
ஏதிலர் என்னும்இவ் வூர். 1129
கண் இமைத்தால் கண்ணுக்குள் இருக்கும் காதலர் மறைந்து விடுவார். அதனால் நான் கண் இமைப்பதில்லை. இதைக் கொண்டு அவர் இரக்கம் இல்லாதவர் என்று ஊர் தூற்றுகிறது.

உவந்துஉறைவர் உள்ளத்துள் என்றும் இகந்துஉறைவர்
ஏதிலர் என்னும்இவ் ஊர். 1130
காதலர் எப்போதும் மகிழ்ச்சியுடன் என் உள்ளத்தில் வாழுகின்றார். ஆனால், இந்த உண்மை தெரியாத ஊரார் அவர் பிரிந்து வாழுகின்றவர் என்றும், என்னிடம் அன்பில்லாதவர் என்றும் பழித்துப் பேசுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமம் உழந்து வருந்தினார்க்கு ஏமம்
மடல்அல்லது இல்லை வலி. 1131
காதலியின் அன்பினைப் பெறாமல் காமத்தால் வருந்துகிறவனுக்கு மடல் ஊர்வதைத் தவிர வேறு ஒன்றும் துணை இல்லை.

நோனா உடம்பும் உயிரும் மடல்ஏறும்
நாணினை நீக்கி நிறுத்து. 1132
காதலியின் பிரிவால் ஏற்பட்ட துன்பத்தைப் பொறுக்க முடியாத என் உடம்பும் உயிரும் நாணத்தை நீக்கி விட்டு மடல் ஏறத் துணிந்தன.

நாணொடு நல்லாண்மை பண்டுஉடையேன்; இன்றுஉடையேன்
காமுற்றார் ஏறும் மடல். 1133
நாணத்தையும் நல்ல ஆண்மையையும் முன்னர்ப் பெற்றிருந்தேன். ஆனால் இப்போது, காதலியைப் பிரிந்து வருந்துவதால் காமம் மிகுந்தவர் ஏறக்கூடிய மடலைப் பெற்றிருக்கிறேன்.

காமக் கடும்புனல் உய்க்குமே நாணொடு
நல்லாண்மை என்னும் புணை. 1134
நாணத்தோடு நல்ல ஆண்மை என்னும் தோணிகளைக் காமம் என்னும் கடுமையான வெள்ளம் அடித்துக் கொண்டு போய்விடுகிறது.

தொடலைக் குறுந்தொடி தந்தாள் மடலொடு
மாலை உழக்கும் துயர். 1135
மடல் ஏறுவதோடு மாலைக் காலத்தில் வருத்தும் பெருந்துன்பத்தையும் மாலை போல் தொடர்ந்த வளையல்களை அணிந்த என் காதலி தந்து விட்டாள்.

மடல்ஊர்தல் யாமத்தும் உள்ளுவேன் மன்ற
படல்ஒல்லா பேதைக்குஎன் கண். 1136
காதலியின் பிரிவால் என் கண்கள் தூங்க மறுக்கின்றன. எனவே, நடு இரவிலுங் கூட மடலூர்வதைப் பற்றியே நினைக்கிறேன்.

கடல்அன்ன காமம் உழந்தும் மடல்ஏறாப்
பெண்ணிற் பெருந்தக்கது இல். 1137
கடல் போன்ற நிறைந்த காமம் துன்புறுத்தியுங்கூட மடல் ஏறாமல் பொறுத்துக் கொண்டிருக்கும் பெண் பிறப்பைப் போலப் பெருமை உடைய பிறப்பு இல்லை.

'நிறைஅரியர்; மன்அளியர்' என்னாது காமம்
மறைஇறந்து மன்று படும். 1138
இவர் மனத்தைக் கட்டுப்படுத்தும் வலிமை இல்லாதவர், இவர் மிகுந்த இரக்கத்துக்கு உரியவர் என்று எண்ணாமல், காமமானது இப்படி என்னைப் பற்றி எல்லோருக்கும் தெரியும்படி செய்கிறதே.

'அறிகிலார் எல்லாரும்' என்றேஎன் காமம்
மறுகின் மறுகும் மருண்டு. 1139
அமைதியாய் இருக்கின்ற காரணத்தால் எல்லோரும் அறியவில்லை என்று என்னுடைய காமம் இந்த ஊர்த் தெருக்களில் மயங்கிச் சுழல்கிறது.

யாம்கண்ணிற் காண நகுப, அறிவில்லார்
யாம்பட்ட தாம்படா வாறு. 1140
நான் அனுபவிக்கும் துன்பத்தை அவர்கள் அனுபவிக்காத காரணத்தால், என் எதிரிலேயே, நான் காணும் வண்ணமே, என்னைப் பார்த்துச் சிரிக்கிறார்கள் அறிவில்லாதவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலர்எழ ஆருயிர் நிற்கும்; அதனைப்
பலர்அறியார் பாக்கியத் தால். 1141
ஊரார் அலர் தூற்றுவதனாலேயே என் உயிர் போகாமல் இருக்கின்றது.
என் பாக்கியத்தால் இதை யாரும் அறியாமல் இருக்கின்றார்கள்.

மலர்அன்ன கண்ணாள் அருமை அறியாது
அலர்எமக்கு ஈந்ததுஇவ் ஊர். 1142
மலர் போன்ற கண்களை உடைய அவளது அருமை தெரியாததால், இந்த
ஊரார் அவளை எளியவளாய் எண்ணி அலர் கூறி எங்களுக்கு உதவி செய்கிறார்கள்.

உறாஅதோ ஊர்அறிந்த கௌவை! அதனைப்
பெறாஅது பெற்றன்ன நீர்த்து. 1143
ஊரார் அறியும்படி அலர் எழ வேண்டும். அப்போது தான் அவளை அடையாத
நிலையிலும் அடைந்தாற் போன்று இன்பம் உண்டாகிறது.

கவ்வையால் கவ்விது காமம்; அதுஇன்றேல்
தவ்வென்னும் தன்மை இழந்து. 1144
அலர் ஏற்படுவதாலேயே எங்கள் காதல் வளர்கிறது. இல்லை என்றால்
எங்கள் காதல் தன் இயல்பு அழிந்து சுருங்கிப் போகும்.

களித்தொறும் கள்உண்டல் வேட்டற்றால் காமம்
வெளிப்படுந் தோறும் இனிது. 1145
குடியன் கள்ளைக் குடித்து மயங்க மயங்க, மேலும் கள்ளுண்டல் இனிமையாவது
போலக் காதல், அலரால் வெளிப்பட வெளிப்பட, இனிமை உடையதாகிறது.

கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்
திங்களைப் பாம்புகொண் டற்று. 1146
நான் காதலரைக் கண்டதென்னவோ ஒரு நாள்தான். அதனால் ஏற்பட்ட அலரோ,
நிலவைப் பாம்பு விழுங்கிய செய்தி போல் ஊர் எங்கும் பரவிவிட்டது.

ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்
நீராக நீளும்இந் நோய். 1147
காமநோயான இந்தப் பயிர் ஊரார் தூற்றுகின்ற அலரை எருவாகவும்,
தாயின் கடுமையான சொல்லை நீராகவும் கொண்டு செழித்து வளர்கிறது.

நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றால் கௌவையால்
'காமம் நுதுப்பேம்' எனல். 1148
ஊரார், அலரால் நம் காமத்தை அழித்து விடுவோம் என்பது, நெய்யால் தீயை
அழிப்போம் என்று எண்ணுவது போன்றதாய் உள்ளது.

அலர்நாண ஒல்வதோ? 'அஞ்சல்ஓம்பு' என்றார்
பலர்நாண நீத்தக் கடை. 1149
உன்னை ஒரு நாளும் பிரியேன் அஞ்சாதே என்று அன்று உறுதி கூறியவர், இன்று பலரும்
நாணும்படி என்னை விட்டுப் பிரிந்த பின், அலருக்கு நாணி இருக்க முடியுமா?

தாம்வேண்டின் நல்குவர் காதலர்; யாம்வேண்டும்
கௌவை எடுக்கும்இவ் ஊர். 1150
நான் விரும்புகின்ற செய்தியை அடித்தளமாய்க் கொண்டு இவ்வூரார் பெரிதாய்த்
தூற்றுகின்றனர். அதனால் என் காதலர் நான் விரும்புகின்றபடி உறுதியாய் உதவுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லாமை உண்டேல் எனக்குஉரை; மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க்கு உரை. 1151
பிரியாமை உண்டாயின் அது பற்றி என்னிடம் சொல். பிரிந்து சென்று வருகின்ற செய்தியாய் இருந்தால் அப்போது யார் உயிரோடு இருப்பார்களோ அவர்களிடம் சொல்.

இன்கண் உடைத்துஅவர் பார்வல்; பிரிவுஅஞ்சும்
புன்கண் உடைத்தால் புணர்வு. 1152
அவர் பார்வை மட்டுங்கூட முன்னர் இன்பத்தைத் தந்தது. இப்போது அவரோடு கூட இருந்தால்கூட அவர் பிரிவை எண்ணித் துன்பம் ஏற்படுகிறது.

அரிதரோ தேற்றம் அறிவுடையார் கண்ணும்
பிரிவுஓர் இடத்துஉண்மை யான். 1153
பிரிவுத் துயரம் கொடியது என்பதை அறிந்தவர்தாம் காதலர். என்றாலும், எப்படியும் பிரியும் நிலை நேர்வதால் "பிரியேன்!" என்று அவர் உறுதிபடச் சொன்னாலும் நம்ப முடியவில்லை.

அளித்து "அஞ்சல்" என்றவர் நீப்பின் தெளித்தசொல்
தேறியார்க்கு உண்டோ தவறு? 1154
அருள் மிகுதியோடு "அஞ்சாதே!" என்று முன் தேற்றியவர், பின் பிரிந்து சென்றால், அவர் உறுதி மொழியை நம்பியவர் மீது குற்றம் உண்டா என்ன?

ஓம்பின் அமைந்தார் பிரிவோம்பல்; மற்றுஅவர்
நீங்கின் அரிதால் புணர்வு. 1155
என்னை நான் காத்துக் கொள்ள வேண்டுமானால், காதலர் என்னை விட்டுப் பிரியாமல் காத்துக் கொள்ள வேண்டும். பிரிந்தால் மீண்டும் அவரைக் கூடுவது மிகவும் அரிதாகும்.

பிரிவுஉரைக்கும் வன்கண்ணர் ஆயின் அரிதுஅவர்
நல்குவர் என்னும் நசை. 1156
பிரிவைப்பற்றி எடுத்துச் சொல்லும் அளவிற்குக் காதலர் கல் நெஞ்சம் உடையவர் என்றால், அவர் திரும்ப வந்து அன்பு செலுத்துவார் என்னும் ஆசை பயனற்றதாகும்.

துறைவன் துறந்தமை தூற்றாகொல், முன்கை
இறைஇறவா நின்ற வளை? 1157
என் உடல் மெலிவால் முன் கை மணிக்கட்டை விட்டுக் கழன்று விழும் வளையல்கள், தலைவர் என்னை விட்டுப் பிரிந்த செய்தியைப் பலரும் தூற்றும்படி வெளிப்படுத்தாமல் இருக்குமா?

இன்னாது இனன்இல்ஊர் வாழ்தல்; அதனினும்
இன்னாது இனியார்ப் பிரிவு. 1158
நம் மேல் அன்புடையார் இல்லாத இனத்தவர் வாழும் ஊரில் வாழ்வது துன்பம். இனிய காதலரின் பிரிவு அதை விடத் துன்பமானது.

தொடில்சுடின் அல்லது காமநோய் போல
விடில்சுடல் ஆற்றுமோ தீ? 1159
நெருப்பானது தன்னைத் தொட்டால் சுடுமே அல்லாது. காம நோய் போலத் தன்னை விட்டு நீங்கிய போதும் சுடுமோ?

அரிதுஆற்றி அல்லல்நோய் நீக்கிப் பிரிவுஆற்றிப்
பின்இருந்து வாழ்வார் பலர். 1160
பிரிய முடியாத பிரிவுக்கு உடன்பட்டுத் தலைவன் பிரிந்தபோது, துன்பத்தால் கலங்குவதை விட்டு, பிரிந்த பின்னரும் பொறுத்துக் கொண்டு உயிர் வாழ்பவர் உலகில் பலராவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைப்பேன்மன் யான்இஃதோ நோயை இறைப்பவர்க்கு
ஊற்றுநீர் போல மிகும். 1161
இக்காம நோயைப் பிறர் அறியாமல் நான் மறைப்பேன். ஆனாலும் இறைக்கச் சுரக்கும் ஊற்று நீர்போல் இது மேலும் மேலும் பெருகிக் கொண்டே இருக்கிறது.

கரத்தலும் ஆற்றேன்இந் நோயைநோய் செய்தார்க்கு
உரைத்தலும் நாணுத் தரும். 1162
இக்காம நோயைப் பிறர் அறியாமல் முற்றிலும் மறைக்கவும் முடியவில்லை. இந்த நோய்க்குக் காரணமான காதலரிடம் சொல்லவும் நாணமாய் இருக்கிறது.

காமமும் நாணும் உயிர்காவாத் தூங்கும்என்
நோனா உடம்பின் அகத்து. 1163
காம நோயால் வாடி மெலிந்த என் உடம்பில் என் உயிரைக் காவடித் தண்டாய்க் கொண்டு காதல் நோய் ஒரு பக்கமாகவும் நாணம் மற்றொரு பக்கமாகவும் தொங்குகின்றன.

காமக் கடல்மன்னும் உண்டே; அதுநீந்தும்
ஏமப் புணைமன்னும் இல். 1164
காதல் நோயாகிய பெருங்கடல் இருக்கிறது. ஆனால் அதை நீந்திக் கடப்பதற்கு வேண்டிய தோணி இல்லை.

துப்பின் எவன்ஆவர் மன்கொல் துயர்வரவு
நட்பினுள் ஆற்று பவர்? 1165
இன்பமயமான நட்பின்போதே பிரிவால் இவ்வளவு துன்பத்தை உண்டாக்கும் காதலர், துன்பம் தரும் பகையின் போது என்ன செய்வாரோ?

இன்பம் கடல்மற்றுக் காமம் அஃதுஅடுங்கால்
துன்பம் அதனிற் பெரிது. 1166
காதல், இன்பம் தரும் போது, கடல் போன்றது, ஆனால், பிரிவின் போதோ அதன் துன்பம் கடலைவிட மிகப் பெரியது.

காமக் கடும்புனல் நீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே உளேன். 1167
காமம் என்னும் பெருவெள்ளத்தை நீந்திக் கரை காண முடியவில்லை. நள்ளிரவிலும் நான் மட்டும் உறங்காமல் தனியாய்த் தவிக்கிறேன்.

மன்உயிர் எல்லாம் துயிற்றி அளித்துஇரா
என்அல்லது இல்லை துணை. 1168
எல்லாரையும் உறங்கச் செய்கிற இரவு, இரங்கத்தக்கது. பாவம், அதற்கு என்னை விட்டால் உறங்காமல் இருக்கும் துணை வேறில்லை.

கொடியார் கொடுமையின் தாம்கொடிய, இந்நாள்
நெடிய கழியும் இரா. 1169
காதலர் பிரிவைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் துன்புற்று வருந்தும் எனக்கு, விழித்துக் கொண்டிருக்கும் நீண்ட இரவு நேரங்கள், பிரிந்தவர் தரும் கொடுமையை விட அதிகக் கொடுமையாய் இருக்கின்றன.

உள்ளம்போன்று உள்வழிச் செல்கிற்பின் வெள்ளநீர்
நீந்தல மன்னோஎன் கண். 1170
காதலர் சென்ற இடத்திற்கு என் மனம் போய்விடுகிறது. அது போல, என்னால் போக முடியவில்லையே! முடிந்தால், கண்ணீர் வெள்ளத்தில் என் கண்கள் நீந்த வேண்டியதில்லையே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 118. கண் விதுப்பு அழிதல்

**கண்தாம் கலுழ்வது எவன்கொலோ? தண்டாநோய்**
**தாம்காட்ட யாம்கண் டது?** 1171

என் கண்கள் எனக்கு அவரைக் காட்டியதால்தானே தீராத இந்தக் காம நோயைப் பெற்றேன்? காட்டிய கண்களே இப்பொழுது அழுவது ஏனோ?

**தெரிந்துஉணரா நோக்கிய உண்கண் பரிந்துஉணராப்**
**பைதல் உழப்பது எவன்?** 1172

ஆராய்ந்து பின்விளைவைப் பாராமல் அன்று அவரைப் பார்த்துக் காதல் கொண்ட கண்கள், இந்த நிலைக்குத் தாம்தாமே காரணம் என்று உணராமல் துன்பப்பட்டுக் கலங்குவது ஏன்?

**கதும்எனத் தாம்நோக்கித் தாமே கலுழும்**
**இதுநகத் தக்கது உடைத்து.** 1173

இந்தக் கண்கள்தாமே அவரை விரைந்து சென்று அன்று பார்த்தன? இன்று இப்படி அழுகின்றன! இது நகைப்பிற்குரியதாய் அல்லவா இருக்கிறது?

**பெயல்ஆற்றா நீர்உலர்ந்த உண்கண் உயல்ஆற்றா**
**உய்வில்நோய் என்கண் நிறுத்து.** 1174

என் கண்கள் தப்பிப் பிழைக்க முடியாத தீராத நோயை எனக்கு உண்டாக்கி விட்டு, இப்போது தாமும் அழ முடியாமல் நீர் வற்றிப் போய்விட்டன.

**படல்ஆற்றா பைதல் உழக்கும் கடல்ஆற்றாக்**
**காமநோய் செய்தஎன் கண்.** 1175

அன்று கடலைவிடப் பெரிதான காமநோயை எனக்கு உண்டாக்கிய கண்கள், இன்று உறங்க முடியாமல் துன்பத்தால் வருந்துகின்றன.

**ஓஒ இனிதே எமக்குஇந்நோய் செய்தகண்**
**தாஅம் இதன்பட் டது.** 1176

எனக்குக் காதல் நோயை ஏற்படுத்தித் துன்பத்தைத் தந்த இந்தக் கண்கள் இப்போது தாமும் துன்பத்திற்கு உள்ளாகி வருந்துகின்றன.

**உழந்துஉழந்து உள்நீர் அறுக! விழைந்துஇழைந்து**
**வேண்டி அவர்க்கண்ட கண்.** 1177

அன்று விரும்பி நெகிழ்ந்து காதலரைக் கண்ட கண்கள், இன்று உறங்க முடியாத துன்பத்தால் வருந்தி வருந்திக் கண்ணீரும் வற்றிப் போகட்டும்.

**பேணாது பெட்டார் உளர்மன்னோ மற்றுஅவர்க்**
**காணாது அமைவில கண்.** 1178

உள்ளத்தால் விரும்பாது சொல்லளவிலேயே விரும்பிப் பழகியவர் இருக்கிறார். அப்படிப்பட்டவராய் இருந்தும் என் கண்களால் அவரைக் காணாமல் இருக்க முடிவதில்லை.

**வாராக்கால் துஞ்சா; வரின்துஞ்சா; ஆயிடை**
**ஆரஞர் உற்றன கண்.** 1179

காதலர் வரவில்லை என்றாலும் அவரை எதிர்பார்த்துத் தூங்குவதில்லை. ஒருவேளை, வந்தாலும் பிரிந்து விடுவாரோ என்று அஞ்சித் தூங்குவதில்லை. இவ்வாறு இருவகையிலும் என் கண்கள் துன்பம் அடைகின்றன.

**மறைபெறல் ஊரார்க்கு அரிதுஅன்றால் எம்போல்**
**அறைபறை கண்ணார் அகத்து.** 1180

அடிக்கப்படும் மேளத்தைப் போல துன்பத்தை வெளிப்படுத்தும் கண்களைக் கொண்ட என்னைப் போல உள்ளவரிடமிருந்து இரகசியங்களை அறிந்து கொள்வது இந்த ஊராருக்கு மிகவும் எளிதானதுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன்; பசந்தஎன்
பண்புயார்க்கு உரைக்கோ பிற? 1181

காதலர் பிரிவை விரும்பிய போது, அதற்கு உடன்பட்டேன். அவர் பிரிந்த பின்னர் பசலை யுற்றேன். என் இந்த நிலையை நான் யாரிடம் போய்ச் சொல்லுவேன்?

அவர்தந்தார் என்னும் தகையால் இவர்தந்துஎன்
மேனிமேல் ஊரும் பசப்பு. 1182

அந்தக் காதலர் உண்டாக்கினார் என்ற பெருமையோடு இந்தப் பசலை என் உடம்பின் மேல் ஏறி ஊர்ந்து பரவி வருகிறது.

சாயலும் நாணும் அவர்கொண்டார் கைம்மாறா
நோயும் பசலையும் தந்து. 1183

காதல் நோயையும் பசலை நிறத்தையும் எனக்குக் கைம்மாறாய்த் தந்துவிட்டு அவர் என் அழகையும் நாணத்தையும் எடுத்துக் கொண்டார்.

உள்ளுவன் மன்யான் உரைப்பது அவர்திறமால்
கள்ளம் பிறவோ பசப்பு. 1184

நான் காதலரைப் பற்றியே நினைக்கிறேன், அவர் புகழையே எடுத்துப் பேசுகிறேன். அப்படி இருக்கும் போது இந்தப் பசலை என் உடலைப் பற்றிப் படர்கிற வஞ்சகம் என்னவோ?

உவக்காண்எம் காதலர் செல்வார்; இவக்காண்என்
மேனி பசப்புஊர் வது? 1185

அதோ பார்! இப்போதுதான் என் காதலர் என்னைப் பிரிந்து செல்கிறார். அட, இதோ பார்! என் உடம்பில் உடனே பசலை நிறம் வந்து படர்கிறது.

விளக்குஅற்றம் பார்க்கும் இருளேபோல் கொண்கன்
முயக்குஅற்றம் பார்க்கும் பசப்பு. 1186

விளக்கின் வெளிச்சம் எப்போது நீங்கும் எனக் காத்திருக்கும் இருளைப் போல, என் காதலரின் அணைப்பு எப்போது நீங்கும் என்று காத்திருந்து வந்து படர்கிறது இந்தப் பசலை.

புல்லிக் கிடந்தேன்; புடைபெயர்ந்தேன் அவ்வளவில்
அள்ளிக்கொள் வற்றே பசப்பு. 1187

தலைவனைத் தழுவிக் கிடந்தேன். கொஞ்ச நேரம் சற்றுத் தள்ளிப் போய்விட்டேன். அவ்வளவுதான், என்னை அள்ளிக் கொள்வதைப் போலப் பசலை வந்து என்மீது படர்ந்து விட்டது.

'பசந்தாள் இவள்'என்பது அல்லால், 'இவளைத்
துறந்தார் அவர்' என்பார் இல். 1188

இவள், தலைவன் பிரிவால் பசலை நோய் அடைந்தாள் என்று சொல்கிறார்களே அல்லாமல், அவர் இவளை விட்டுப் பிரிந்தார் என்று யாராவது சொல்கிறார்களா? இல்லையே!

பசக்கமன் பட்டாங்குஎன் மேனி, நயப்பித்தார்
நல்நிலையர் ஆவர் எனின். 1189

பிரிவுக்கு என்னை ஆளாக்கி விட்டுச் சென்ற என் காதலர், உள்ளபடியே நலம் பெறுவாரென்றால், என் உடலில் உள்ளபடி பசலை நிறம் பற்றிப் பரவட்டும்.

பசப்புஎனப் பேர்பெறுதல் நன்றே நயப்பித்தார்
நல்காமை தூற்றார் எனின். 1190

அவர் என்னை விட்டுப் பிரிந்து சென்றதை ஊரார் தூற்றாமல் இருப்பார்கள் என்றால், நான் பசலையுற்றதாகப் பெயரைப் பெறுவதும் நல்லதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தாழ்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே**
**காமத்துக் காழ்இல் கனி.** 1191

தாம் விரும்புகிற காதலரே தம்மை விரும்புகிற பேறுபெற்ற பெண்கள், காம நுகர்ச்சி எனப்படும் விதையில்லாத பழத்தைப் பெற்றவர் ஆவர்.

**வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு**
**வீழ்வார் அளிக்கும் அளி.** 1192

தம்மை விரும்பும் காதலிக்கு அவளை விரும்பும் காதலர் பொழியும் அன்பானது, உலக உயிர்களைக் காக்க மேகம் பொழியும் மழையைப் போன்றது.

**வீழுநர் வீழப் படுவார்க்கு அமையுமே**
**வாழுநம் என்னும் செருக்கு.** 1193

தம்மை விரும்பும் காதலரைக் கொண்ட பெண்களுக்குப் பிரிவுத் துன்பம் இருந்தாலும், அவர் விரைவில் வருவார், இன்பம் தருவார் என்ற செருக்கு இருப்பது பொருந்தும்.

**வீழப் படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார்**
**வீழப் படாஅர் எனின்.** 1194

மற்றவர்கள் எல்லாராலும் மதிக்கப்படும் பெண் என்றாலும், அவள் தன் தலைவனால் விரும்பப்படாதவள் என்றால் ,தீவினை உடையவளே.

**நாம்காதல் கொண்டார் நமக்குஎவன் செய்பவோ**
**தாம்காதல் கொள்ளாக் கடை.** 1195

நம் விருப்பத்திற்குரிய காதலர், நம்மைக் காதலிக்கவில்லையானால், நமக்கு அவர் வேறு என்ன நன்மைதான் செய்வார்?

**ஒருதலையான் இன்னாது காமம்காப் போல**
**இருதலை யானும் இனிது.** 1196

தலைவன் தலைவி இருவரிடமும் காதல் இருக்க வேண்டும். ஒருவரிடம் மட்டுமிருந்தால் அது துன்பமானது. காவடியின் பாரம் போல, இரு பக்கமும் ஒத்திருப்பதே இன்பமாகும்.

**பருவரலும் பைதலும் காணான்கொல் காமன்**
**ஒருவர்கண் நின்றுஒழுகு வான்.** 1197

காதலர் இருவர் பக்கத்திலும் ஒப்ப இராமல், காமன் ஒருவர் பக்கமே நின்று இயங்குவதால், என் துன்பத்தையும் வருத்தத்தையும் தலைவன் அறிய மாட்டானோ?

**வீழ்வாரின் இன்சொல் பெறாஅது உலகத்து**
**வாழ்வாரின் வன்கணார் இல்.** 1198

தாம் விரும்பும் காதலரிடமிருந்து ஓர் இனிய சொல்லைக்கூடப் பெறாமல் பிரிவுத் துயரைத் தாங்கிக் கொண்டு உலகத்தில் உயிர் வாழும் பெண்களைப் போலக் கொடுமைக்குரியவர்கள் யாரும் இல்லை.

**நசைஇயார் நல்கார் எனினும் அவர்மாட்டு**
**இசையும் இனிய செவிக்கு.** 1199

நான் விரும்பும் காதலர் திரும்ப வந்து அன்பு செய்யமாட்டார் என்றாலும், அவரைப் பற்றிப் புகழ்ச்சியாய் ஒரு சொல் கேட்டாலும் என் காதுகளுக்கு மகிழ்ச்சி உண்டாகிறது.

**உறாஅர்க்கு உறுநோய் உரைப்பாய் கடலைச்**
**செறாஅஅய் வாழிய நெஞ்சு.** 1200

நெஞ்சமே, நீ வாழ்வாயாக! அன்பே இல்லாத தலைவரிடம் உன் மிகுந்த துன்பத்தைச் சொல்கிறாய். அதைவிட எளிதாய்க் கடலை நீ தூர்ப்பாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்
கள்ளினும் காமம் இனிது. 1201
உண்ணுகின்ற பொழுது மட்டும் மகிழ்ச்சியைத் தரும் கள்ளை விட, எண்ணும்போதே பெரும் மகிழ்ச்சியைத் தரும் காதல் இனிமையானதாகும்.

எனைத்துஒன்று இனிதேகாண் காமம்தாம் வீழ்வார்
நினைப்ப வருவதுஒன்று இல். 1202
காதலர் பிரிவதால் துன்பம் நேர்ந்தாலும், அவரை நினைக்கும் போது அத்துன்பம் இல்லாமல் போய் விடுவதால், காதல் எப்படியும் இன்பம் தரக்கூடியதாகவே இருக்கிறது.

நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்
சினைப்பது போன்று கெடும். 1203
எனக்குத் தும்மல் வருவது போல் தோன்றி அடங்கி விடுகிறது. இதற்குக் காரணம், என் காதலர் என்னை நினைப்பவர் போல இருந்து நினைக்காமல் இருக்கிறாரோ?

யாமும் உளேம்கொல் அவர்நெஞ்சத்து; எம்நெஞ்சத்து
ஓஒ உளரே அவர். 1204
என்னுடைய நெஞ்சத்தில் காதலர் நிறைந்திருக்கிறார். இது போலவே அவருடைய நெஞ்சில் நானும் நிறைந்திருப்பேனோ?

தம்நெஞ்சத்து எம்மைக் கடிகொண்டார் நாணார்கொல்
எம்நெஞ்சத்து ஓவா வரல். 1205
தம்முடைய நெஞ்சில் என்னை வர விடாமல் பார்த்துக் கொள்ளும் காதலர், என்னுடைய நெஞ்சின் உள்ளே நுழைவதற்கு வெட்கப்பட மாட்டாரோ?

மற்றுயான் என்உளேன் மன்னோ? அவரொடுயான்
உற்றநாள் உள்ள உளேன். 1206
காதலரோடு சேர்ந்திருந்த நாள்களை நினைத்துக் கொள்வதனால்தான் இன்னும் உயிரோடு இருக்கிறேன். இல்லையென்றால் வேறெதனால் உயிர் வாழ்வேன்?

மறப்பின் எவன் ஆவன் மன்கொல்? மறப்பறியேன்
உள்ளினும் உள்ளம் சுடும். 1207
காதலரை மறவாமல் நினைத்துக் கொண்டிருக்கும் போதே பிரிவுத் துன்பம் சுடுகிறதே! நினைக்காமல் ஒருவேளை மறந்துவிட்டால் நான் என்ன ஆவேனோ?

எனைத்து நினைப்பினும் காயார் அனைத்து அன்றோ
காதலர் செய்யும் சிறப்பு? 1208
நான் காதலரை எவ்வளவு மிகுதியாய் எவ்வாறு நினைத்தாலும் என்மீது கோபம் கொள்ளமாட்டார். இது அவர் எனக்குச் செய்யும் உதவிதானே?

விளியும்என் இன்உயிர் வேறுஅல்லம் என்பார்
அளியின்மை ஆற்ற நினைந்து. 1209
"நாம் இருவரும் வேறல்லர்" என்று அடிக்கடி முன் சொன்னவர், இப்போது என்னிடம் அன்பில்லாமல் இருப்பதை எண்ணி என் உயிர் அழிகின்றது.

விடாஅது சென்றாரைக் கண்ணினால் காணப்
படாஅதி வாழி மதி. 1210
என் உள்ளத்தை விட்டுப் பிரியாமல் என்னை விட்டுப் பிரிந்து சென்ற காதலரை நான் என் கண்களால் தேடிக் காண வேண்டும். எனவே, நிலவே! மறைந்துவிடாமல் நீ ஒளிவீசிக் கொண்டிருப்பாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலர் தூதொடு வந்த கனவினுக்கு
யாதுசெய் வேன்கொல் விருந்து? 1211
காதலர் பிரிந்து விட்டாரே என்றெண்ணியபடியே உறங்கியபோது, அவருடைய
தூதாய் வந்த கனவிற்கு நான் என்ன விருந்து வைப்பேன்?

கயல்உண்கண் யான்இரப்பத் துஞ்சின் கலந்தார்க்கு
உயல்உண்மை சாற்றுவேன் மன். 1212
நான் மிகவும் கெஞ்சியது கேட்டு என் கண்கள் தூங்கினால் அது சமயம் கனவில்
வரும் காதலருக்கு என் உயிர் போகாமல் இருக்கும் நிலையை விளக்குவேன்.

நனவினால் நல்கா தவரைக் கனவினால்
காண்டலின் உண்டுஎன் உயிர். 1213
காதலரோ நனவில் வந்து அன்பு காட்டவில்லை, அதே சமயம் அவரைக் கனவில்
காண்பதால்தான் என் உயிர் இன்னும் நீங்காமல் இருக்கிறது.

கனவினால் உண்டாகும் காமம் நனவினால்
நல்காரை நாடித் தரற்கு. 1214
நனவில் வந்து அன்பு காட்டாத காதலரைக் கனவு கொண்டு வந்து எனக்குக்
காட்டுவதால், அந்தக் கனவில் இன்பம் அடைகிறேன்.

நனவினால் கண்டதூஉம் ஆங்கே கனவும்தான்
கண்ட பொழுதே இனிது. 1215
காதலரை நனவில் கண்டது அப்போது மட்டும் இன்பமாய் இருந்தது.
கனவில் காண்பது இப்போது மட்டும் இன்பமாய் இருக்கிறது.

நனவுஎன ஒன்றுஇல்லை யாயின் கனவினால்
காதலர் நீங்கலர் மன். 1216
நனவு என்று ஒன்று மட்டும் இல்லை என்றால், கனவில் வந்து என்னைச்
சேர்ந்த காதலர் பிரியாமலே இருந்திருப்பார்.

நனவினால் நல்காக் கொடியார் கனவினால்
என்எம்மைப் பீழிப் பது? 1217
நனவில் நேராய் வந்து எனக்கு அன்பு செய்யாத காதலர் மிகக் கொடியவர்.
கனவில் மட்டும் வந்து என்னை வாட்டுவதேன்?

துஞ்சுங்கால் தோள்மேலர் ஆகி விழிக்குங்கால்
நெஞ்சத்தர் ஆவர் விரைந்து. 1218
தூங்கும்போது என் கனவில் வந்து என் தோள் மேல் உள்ளவராய் இருப்பவர்,
விழிக்கும்போது உடனே நெஞ்சுக்குள் புகுந்து விடுகிறார்.

நனவினால் நல்காரை நோவர் கனவினால்
காதலர்க் காணா தவர். 1219
என் காதலர் கனவில் வந்து எனக்கு இன்பம் தருவதை அறியாதவர்கள்,
அவர் நனவில் வந்து இன்பம் நல்கவில்லை என்று பழிக்கிறார்கள்.

நனவினால் நம்நீத்தார் என்பர் கனவினால்
காணார்கொல் இவ்வூ ரவர். 1220
நனவில் காதலர் என்னை விட்டுப் பிரிந்து விட்டார் என்று பேசும் இந்த ஊர் மக்கள்,
அவர் என் கனவில் வந்து என்னை மகிழ்விப்பதை அறிய மாட்டார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாலையோ அல்லை; மணந்தார் உயிர்உண்ணும்**
**வேலைநீ வாழி பொழுது.** 1221

பொழுதே! நீ மாலைக் காலம் இல்லை. காதலரோடு கலந்து மகிழ்ந்து பின்னர் பிரிந்து வாடும் பெண்களுக்கு நீ முடிவு காலமாய் அல்லவா இருக்கிறாய்?

**புன்கண்ணை வாழி மருள்மாலை எம்கேள்போல்**
**வன்கண்ண தோநின் துணை?** 1222

மயங்கிய மாலைப் பொழுதே! நீயும் என்னைப் போல் ஒளி இழந்து காணப்படுகிறாயே! உன் துணையும் என் துணையைப் போல் இரக்கம் இல்லாதது தானோ?

**பனிஅரும்பிப் பைதல்கொள் மாலை துனிஅரும்பித்**
**துன்பம் வளர வரும்.** 1223

பனி படர்ந்து பசந்த நிறம் கொண்ட மாலைப்பொழுது எனக்கு மேலும் மேலும் துன்பம் பெருகும்படியாய் வருகிறது.

**காதலர் இல்வழி மாலை கொலைக்களத்து**
**ஏதிலர் போல வரும்.** 1224

காதலர் பிரிந்திருக்கும்போது வரும் மாலைப் பொழுது, கொலைக் களத்தில் பகைவர் வருவது போலல்லவா வருகிறது?

**காலைக்குச் செய்தநன்று என்கொல்? எவன்கொல்யான்**
**மாலைக்குச் செய்த பகை?** 1225

நான் காலைப் பொழுதிற்குச் செய்த நன்மை என்ன? என்னை வாட்டி வதைக்கும் மாலைப் பொழுதிற்குச் செய்த தீமை என்ன?

**மாலைநோய் செய்தல் மணந்தார் அகலாத**
**காலை அறிந்தது இலேன்.** 1226

மாலைப் பொழுது இவ்வளவு துன்பம் தர வல்லது என்பதைக் காதலர் என்னை விட்டு நீங்காமல் உடன் இருந்த காலத்தில் நான் அறியவில்லை.

**காலை அரும்பிப் பகல்எல்லாம் போதாகி**
**மாலை மலரும்இந் நோய்.** 1227

காதல் என்னும் துன்பமாகிய மலர், காலையில் அரும்பிப் பகல் எல்லாம் பேரரும்பாய் மொட்டாகி முதிர்ந்து, மாலையில் மலர்கிறது.

**அழல்போலும் மாலைக்குத் தூதுஆகி ஆயன்**
**குழல்போலும் கொல்லும் படை.** 1228

முன்னர் இனிய இசையாகி எனக்கு இன்பமூட்டி வந்த புல்லாங்குழல், இப்பொழுது நெருப்புப் போலச் சுடுகிற மாலைப் பொழுதுக்குத் தூதுவனாகி என்னைக் கொல்லும் படையாய் இருக்கிறது.

**பதிமருண்டு பைதல் உழக்கும் மதிமருண்டு**
**மாலை படர்தரும் போழ்து.** 1229

என் அறிவு மயங்கும்படியாய் மாலைப் பொழுது வரும்போது இந்த ஊரும் மயங்கி என்னைப் போல வருத்தம் அடைகிறது.

**பொருள்மாலை யாளரை உள்ளி மருள்மாலை**
**மாயும்என் மாயா உயிர்.** 1230

பிரிவுத் துன்பத்தால் போகாமல் இருந்த என் உயிர், பொருள் தேடும் காரணமாய்ப் பிரிந்து சென்ற காதலரை எண்ணி மயக்கம் தரும் இந்த மாலை நேரத்தில் அழிகின்றதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறுமை நமக்கொழியச் சேண்சென்றார் உள்ளி**
**நறுமலர் நாணின கண்.** 1231

பிரிவுத் துன்பத்தை எனக்கு உண்டாக்கி விட்டுத் தொலை தூரத்தில் உள்ள ஊருக்குச் சென்ற காதலரை எண்ணி அழுது அழுது ஒளி இழந்ததால் என் கண்கள் நறுமலருக்கு நாணும்படியாகி விட்டன.

**நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்**
**பசந்து பனிவாரும் கண்.** 1232

பசலை நிறம் அடைந்து நீர் சொரியும் கண்கள், விரும்பிய காதலர் என்னிடம் அன்பு செலுத்தாத தன்மையைப் பிறருக்குச் சொல்வன போல உள்ளன.

**தணந்தமை சால அறிவிப்ப போலும்**
**மணந்தநாள் வீங்கிய தோள்.** 1233

காதலரோடு கூடி இருந்த காலத்தில் பூரித்திருந்த தோள்கள் இப்போது மெலிந்து, காதலர் பிரிந்துள்ளார் என்பதை நன்றாய் அறிவிப்பன போல உள்ளன.

**பணைநீங்கிப் பைந்தொடி சோரும் துணைநீங்கித்**
**தொல்கவின் வாடிய தோள்.** 1234

காதலர் பிரிந்ததால் அழகு கெட்டு வாடிப்போன தோள்கள், இளைத்துப் போய்ப் பெருமை இழந்து, வளையல்களும் கழலும்படி ஆகிவிட்டன.

**கொடியார் கொடுமை உரைக்கும் தொடியொடு**
**தொல்கவின் வாடிய தோள்.** 1235

வளையல்கள் கழன்று விழுமாறு தம் பழைய அழகை இழந்து விட்ட தோள்கள் என் துன்பத்தை உணராத கொடியவரின் கொடுமையைப் பிறர் அறியச் செய்கின்றன.

**தொடியொடு தோள்நெகிழ நோவல் அவரைக்**
**கொடியார் எனக்கூறல் நொந்து.** 1236

என் உள்ளம் நலிந்து போனதால் வளையல்கள் கழன்று தோள்கள் மெலிந்திருப்பதைப் பார்த்து என் காதலரை அன்பற்றவர் என்று ஊரார் கூறுவதைக் கேட்டு நான் மிகவும் வருந்துகிறேன்.

**பாடு பெறுதியோ நெஞ்சே! கொடியார்க்குஎன்**
**வாடுதோள் பூசல் உரைத்து.** 1237

நெஞ்சமே! என்னை விட்டுப் பிரிந்து போன அன்பில்லாத காதலருக்கு என் அழகிய தோள்கள் மெலிந்து போனதால் ஏற்பட்ட பழியை எடுத்துச் சொல்லி, அதனால் நீ பெருமை அடைவாயோ?

**முயங்கிய கைகளை ஊக்கப் பசந்தது**
**பைந்தொடிப் பேதை நுதல்.** 1238

காதலர் தழுவி இருந்தபோது அவர் கைகள் சிறிது தளர்ந்த உடனே அந்தச் சிறிய பிரிவைக்கூடத் தாங்க இயலாமல் என் நெற்றியில் உடனே பசலை படர்ந்து விட்டதே.

**முயக்குஇடைத் தண்வளி போழப் பசப்புற்ற**
**பேதை பெருமழைக் கண்.** 1239

இறுக்கமாய்த் தழுவி இருந்தபோது இருவருக்கும் இடையே எப்படியோ குளிர்ச்சியான காற்றுப் புகுந்து விட்டது. அந்தக் கணமே காதலியின் பெரிய விழிகள் பசலை படர்ந்து நிறம் மாறிவிட்டன.

**கண்ணின் பசப்போ பருவரல் எய்தின்றே**
**ஒண்ணுதல் செய்தது கண்டு.** 1240

ஒளி பொருந்திய நெற்றியில் பசலை நிறம் படர்ந்து விட்டதைக் கண்டு அவள் கண்களில் முன்னரே படர்ந்திருந்த பசலை நிறம், "பாவம், அவள்!" என்று வருந்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்துஒன்று சொல்லாயோ நெஞ்சே! எனைத்துஒன்றும்
எவ்வநோய் தீர்க்கும் மருந்து. 1241

நெஞ்சமே! காதலர் வளர்த்த இந்தத் துன்ப நோயைப் போக்க ஏற்ற மருந்து
ஒன்றை எண்ணிப் பார்த்து நீ எனக்குச் சொல்ல மாட்டாயோ?

காதல் அவர்இலர் ஆகநீ நோவது
பேதைமை வாழிஎன் நெஞ்சு. 1242

நெஞ்சே, நீ வாழ்க! காதலர் என்னிடம் அன்பில்லாதவராய் இருக்கும்போது நீ
மட்டும் எப்போதும் அவரை எண்ணி வருந்துகிறாயே, என்னே உன் அறியாமை?

இருந்துஉள்ளி என்பரிதல் நெஞ்சே! பரிந்துஉள்ளல்
பைதல்நோய் செய்தார்கண் இல். 1243

நெஞ்சமே! என்னுடன் முன் இருந்த அவரை எண்ணி ஏன் வருந்துகிறாய்? இத்துன்ப நோயை
எனக்கு உண்டாக்கிய அவரிடம் உன்னைப்போல நினைத்துப் பார்க்கும் அன்பு இல்லையே?

கண்ணும் கொளச்சேறி நெஞ்சே! இவைஎன்னைத்
தின்னும் அவர்க்காணல் உற்று. 1244

நெஞ்சமே! இனி நீ அவரிடம் செல்லும்போது இந்தக் கண்களையும் அழைத்துச்
செல். அவரைக் காணவேண்டும் என்று இவை என்னைப் பிடுங்கித் தின்கின்றன.

செற்றார் எனக்கை விடல்உண்டோ நெஞ்சே! யாம்
உற்றால் உறாஅ தவர். 1245

நெஞ்சமே! நான் விரும்பினாலும் என்னை விரும்பாத என் காதலரை, அவர்
என்னை வெறுத்தார் என்பதற்காக நான் கைவிட்டுவிட முடியுமா?

கலந்துஉணர்த்தும் காதலர்க் கண்டால் புலந்துஉணராய்
பொய்க்காய்வு காய்திஎன் நெஞ்சு. 1246

நெஞ்சமே! சேர்ந்து ஊடலைத் தீர்க்கும் காதலரைக் காணும்போது முதலில் ஊடல்
கொண்டு பிறகு தெளிவடைந்து சேர மாட்டாய். இப்போது பொய்க் கோபம் காட்டுகிறாயே?

காமம் விடுஒன்றோ; நாண்விடு நல்நெஞ்சே!
யானோ பொறேன்இவ் விரண்டு. 1247

நல்ல நெஞ்சமே! ஒன்று, காமத்தை விட்டு விடு. அல்லது வெட்கத்தை விட்டு
விடு. இரண்டையும் பொறுத்துக் கொள்ள என்னால் இயலாது.

பரிந்தவர் நல்கார்என்று ஏங்கிப் பிரிந்தவர்
பின்செல்வாய் பேதைஎன் நெஞ்சு. 1248

என் நெஞ்சமே! பிரிவுத் துன்பத்தால் வருந்திக் காதலர் வந்து அன்பு செலுத்தவில்லையே?
என ஏங்கிப் பிரிந்தவர் பின் செல்கிறாயே! உனக்கு அறிவு இருக்கிறதா?

உள்ளத்தார் காத லவராக உள்ளிநீ
யார்உழைச் சேறிஎன் நெஞ்சு. 1249

என் நெஞ்சமே! காதலர் உன் உள்ளத்திலேயே இருக்கும்போது நீ அவரை
நினைத்துக் கொண்டு யாரிடம் செல்கிறாய்?

துன்னாத் துறந்தாரை நெஞ்சத்து உடையேமா
இன்னும் இழத்தும் கவின். 1250

என்னோடு சேர்ந்திருக்காமல் கைவிட்டு விட்டுச் சென்ற காதலரை நான் நெஞ்சத்தில்
வைத்திருக்கும்போது, ஏன் நான் இன்னும் மெலிந்து அழகை இழந்து வருகிறேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமக் கணிச்சி உடைக்கும் நிறைஎன்னும்
நாணுத்தாழ் வீழ்த்த கதவு. 1251
நாணம் என்னும் தாழ்ப்பாள் இட்ட நிறை என்னும் மன வலிமையாகிய கதவைக் காமம் என்னும் கோடரி உடைத்து விடுகிறது.

காமம் எனஒன்றோ கண்இன்று;என் நெஞ்சத்தை
யாமத்தும் ஆளும் தொழில். 1252
காமத்திற்கு இரக்கம் என்பதே இல்லை. அது ஊரார் அனைவரும் உறங்கும் நள்ளிரவில் என் உள்ளத்தை ஏவல் கொண்டு துன்பம் தருகிறது.

மறைப்பேன்மன் காமத்தை யானோ குறிப்புஇன்றித்
தும்மல்போல் தோன்றி விடும். 1253
நான் காதல் பற்றிய நினைவை அறவே மறக்கத்தான் முயலுகின்றேன். ஆனாலும் அது தும்மலைப் போல என்னை மீறி வெளிப்பட்டு விடுகிறது.

நிறைஉடையேன் என்பேன்மன் யானோஎன் காமம்
மறைஇறந்து மன்று படும். 1254
நான் இன்றுவரை காமத்தை வெளிப்படுத்தாமல் என் நெஞ்சிலேயே நிறுத்தி வைத்திருப்பதாகத்தான் நினைத்திருந்தேன். ஆனாலும் என் காமம் வெளிப்பட்டு விட்டதே!

செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோய்
உற்றார் அறிவதுஒன்று அன்று. 1255
தம் மேல் விருப்பம் என்பது இன்றிச் சென்றவர் பின் செல்லாமல் இருக்கும் பெருந்தன்மை, காம நோய்க்கு ஆளானவர்களிடம் இராது.

செற்றவர் பின்சேறல் வேண்டி அளித்தரோ
எற்றுஎன்னை உற்ற துயர். 1256
என்னை விட்டு வெறுத்து நீங்கிய காதலரின் பின்னே செல்ல விரும்பும் நிலையை எனக்கு உண்டாக்கும் இக்காம நோய், ஐயோ! எவ்வளவு கொடுமையானது?

நாண்என ஒன்றோ அறியலம் காமத்தால்
பேணியார் பெட்ப செயின். 1257
நான் விரும்பும் காதலர் காமத்தால் நான் விரும்பும் இன்பங்களைத் தருவாரானால் நாணம் என்ற ஒன்று இருப்பதை அறியாமல் இருந்திருப்பேன்.

பன்மாயக் கள்வன் பணிமொழி அன்றோநம்
பெண்மை உடைக்கும் படை? 1258
பல மாயங்களில் மிகத் தேர்ந்த கள்வராகிய என் காதலரின் பணிவான சொற்கள் அல்லவா, என் பெண்மை எனும் கோட்டையை அழிக்கும் ஆயுதங்களாய் உள்ளன!

'புலப்பல்' எனச்சென்றேன்; புல்லினேன் நெஞ்சம்
கலத்தல் உறுவது கண்டு. 1259
கூடாமல் ஊடல் கொள்ள வேண்டும் என்றுதான் எண்ணிக் கொண்டு சென்றேன். ஆனால், என் நெஞ்சம் அவரோடு சேர்ந்து விட்டது. வேறு வழியின்றி அப்படியே அவரைத் தழுவிக் கொண்டேன்.

நிணம்தீயில் இட்டன்ன நெஞ்சினார்க்கு உண்டோ
புணர்ந்துஊடி நிற்பேம் எனல். 1260
கொழுப்பைத் தீயிலிட்டால் உருகும். அது போன்ற மனம் கொண்ட என்னைப் போன்றவருக்குக் காதலர் விருப்பத்துக்கு இணங்காமல் ஊடல் கொண்டு இருக்க முடியுமா என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாள்அற்றுப் புற்கென்ற கண்ணும் அவர்சென்ற**
**நாள்ஒற்றித் தேய்த்த விரல்.** 1261

காதலர் வருவார் வருவார் என்று வழியைப் பார்த்துப் பார்த்துக் கண்கள் ஒளி இழந்து அழகு கெட்டன. அவர் சென்ற நாள் முதல் சுவரில் கோடு இட்டுக் கோடு இட்டு விரலும் தேய்ந்தது.

**இலங்கிழாய்! இன்று மறப்பின்என் தோள்மேல்**
**கலங்கழியும் காரிகை நீத்து.** 1262

தோழி! காதலரைப் பிரிந்து வருந்துகின்ற நான் அவரை இன்று மறந்து விட்டால் மேலும் அழகு என்னை விட்டு நீங்க, என் தோளில் அணிந்துள்ள அணிகலன்கள் கழன்று விழும்.

**உரன்நசைஇ உள்ளம் துணையாய்ச் சென்றார்**
**வரல்நசைஇ இன்னும் உளேன்.** 1263

வெற்றியை விரும்பி ஊக்கமே துணையாய்க் கொண்டு என்னைப் பிரிந்து வெளியூருக்குச் சென்ற காதலர் வருவதைக் காண விரும்பியே இன்னும் நான் உயிரோடு இருக்கிறேன்.

**கூடிய காமம் பிரிந்தார் வரவுஉள்ளிக்**
**கோடுகொடு ஏறும்என் நெஞ்சு.** 1264

முன் சேர்ந்திருந்து பின் பிரிந்த காதலரின் வருகையை எண்ணி என் மனம் மரக் கிளையின் மீது ஏறிப் பார்க்கிறது.

**காண்கமன் கொண்கனைக் கண்ணாரக் கண்டபின்**
**நீங்கும்என் மென்தோள் பசப்பு.** 1265

என் காதலரைக் கண்ணாரக் கண்டு விட்டால் என் மெல்லிய அழகிய தோளில் படர்ந்த பசலை நிறம் விரைவாய் மறைந்துவிடும்.

**வருகமன் கொண்கன் ஒருநாள் பருகுவன்**
**பைதல்நோய் எல்லாம் கெட.** 1266

என் காதலர் ஒரு நாள் என்னிடம் வருவார். வந்ததும் என் துன்ப நோய்கள் யாவும் தீரும்வண்ணம் அவரோடு காதலின்பம் எனும் அமிழ்தத்தை அருந்துவேன்.

**புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன்கொல்**
**கண்அன்ன கேளிர் வரின்?** 1267

என் கண் போன்ற காதலர் வந்து விட்டால் நான் அவரோடு ஊடுதல் கொள்வேனோ, தழுவுவேனோ, கூடுவேனோ?

**வினைகலந்து வென்றீக வேந்தன்; மனைகலந்து**
**மாலை அயர்கம் விருந்து.** 1268

அரசன் போரில் வெற்றி பெறுவானாக. நானும் போர்க்களத்திலிருந்து இல்லத்திற்குச் சென்று என் காதலியுடன் சேர்ந்து அன்றைய மாலை நேரத்திற்கு விருந்து படைப்போம்.

**ஒருநாள் எழுநாள்போல் செல்லும்சேண் சென்றார்**
**வருநாள் வைத்து ஏங்கு பவர்க்கு.** 1269

தொலை தூரம் சென்றிருக்கும் காதலரை எதிர்பார்த்து ஏங்கித் தவிக்கும் காதலிக்கு ஒரு நாள் ஏழு நாள்களைப் போல - காலம் மிக அதிகமாகி விட்டது போல - தோன்றும்.

**பெறின்என்ஆம் பெற்றக்கால் என்ஆம் உறின்என்ஆம்**
**உள்ளம் உடைந்துக்கக் கால்.** 1270

காதலி பிரிவுத் துன்பத்தைத் தாங்காமல் உள்ளம் உடைந்து அழிந்துவிட்டால், பின் அவள் நம்மைப் பெறுவதால் என்ன பயன்? அன்றி, முன்பு நாம் அவளைப் பெற்றிருந்தால் என்ன பயன்? அன்றி, அவளைத் தழுவுவதால் என்ன பயன்? ஒரு பயனும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரப்பினும் கைஇகந்து ஒல்லாநின் உண்கண்
உரைக்கல் உறுவதுஒன்று உண்டு. 1271
நீ சொல்லாமல் மறைத்தாலும் என்னையும் கடந்து உன் கண்கள் எனக்குச் சொல்லக் கூடிய செய்தி ஒன்று இருக்கிறது.

கண்நிறைந்த காரிகைக் காம்புஏர்தோள் பேதைக்குப்
பெண்நிறைந்த நீர்மை பெரிது. 1272
கண் நிறைந்த அழகும், மூங்கில் போன்ற தோளும் உடைய என் காதலிக்குப் பெண்மைத் தன்மை நிறைந்து விளங்கும் இயல்பு மிகுதியாய் உள்ளது.

மணியில் திகழ்தரு நூல்போல் மடந்தை
அணியில் திகழ்வதுஒன்று உண்டு. 1273
கோத்துக் கட்டிய பளிங்கு மணியினுள்ளே இருந்து வெளியே தெளிவாய்த் தெரியும் நூலைப் போல என் அழகு மிகுந்த காதலியிடம் விளங்கும் குறிப்பு ஒன்று இருக்கிறது.

முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல் பேதை
நகைமொக்குள் உள்ளதுஒன்று உண்டு. 1274
அரும்பினுள்ளே மணம் மறைந்திருப்பதைப் போல என் அழகான காதலியின் புன்முறுவலில் குறிப்பு ஒன்று உள்ளது.

செறிதொடி செய்துஇறந்த கள்ளம் உறுதுயர்
தீர்க்கும் மருந்துஒன்று உடைத்து. 1275
என் காதலி என்னைப் பார்த்துச் செய்துவிட்டுச் சென்ற கள்ளக் குறிப்பில், என் மிகுந்த துயரத்தைத் தீர்க்கும் மருந்து ஒன்று இருக்கிறது.

பெரிதுஆற்றிப் பெட்பக் கலத்தல் அரிதுஆற்றி
அன்புஇன்மை சூழ்வது உடைத்து. 1276
என் காதலர் என்னை நெருங்கி வந்து, பிரிவுத் துன்பத்தைப் போக்கி நான் ஆசை கொள்வது போலக் கூடுவது, பிறகு அன்பில்லாமல் பிரிந்து தாங்க முடியாத துன்பத்தைத் தரப்போகிற குறிப்பை உடையதாய்த் தெரிகிறது.

தண்ணம் துறைவன் தணந்தமை நம்மினும்
முன்னம் உணர்ந்த வளை. 1277
குளிர்ந்த துறையை உடைய என் காதலன் என்னை விட்டுப் பிரிய எண்ணியதை, என்னை விட என் கை வளையல்கள் முன்னமேயே அறிந்து கழன்று விட்டனவே!

நெருநற்றுச் சென்றார்எம் காதலர்; யாமும்
எழுநாளேம் மேனி பசந்து. 1278
என் காதலர் நேற்றுத்தான் பிரிந்து சென்றார். ஆனால் என் அழகு மேனி பசலை அடைந்து ஏழு நாள்கள் ஆகிவிட்டன போலக் கண்ணுக்குத் தெரிகிறதே!

தொடிநோக்கி மென்தோளும் நோக்கி அடிநோக்கி
அஃதுஆண்டு அவள்செய் தது. 1279
என் காதலி தன் வளையல்களை நோக்கி, மெலிந்த தன் தோள்களையும் நோக்கி, தன் கால்களையும் நோக்கிச் செய்த குறிப்புகள் உடன்போக்கை உணர்த்துவனவாய் இருந்தன.

பெண்ணினால் பெண்மை உடைத்துஎன்ப; கண்ணினால்
காமநோய் சொல்லி இரவு. 1280
காதலி தன் கண்களால் காமநோயைக் குறிப்பாய் உணர்த்திப் பிரியாமல் இருக்குமாறு வேண்டுதல் பெண்மைக்கு மேலும் ஒரு பெருமையை உடையது என்று தெரிந்தவர்கள் கூறுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்குஇல் காமத்திற்கு உண்டு. 1281
நினைத்த அளவிலேயே களிப்படைதலும், பார்த்த அளவிலேயே மகிழ்ச்சி அடைதலும் ஆகிய இரு தன்மைகளும் கள்ளுக்கில்லை, காமத்திற்கே உண்டு.

தினைத்துணையும் ஊடாமை வேண்டும், பனைத்துணையும்
காமம் நிறைய வரின். 1282
பனை அளவு போல மிகுதியாய்க் காமம் வரும்போது பெண்கள் தினை அளவும்கூடப் பிணங்கக் கூடாது.

பேணாது பெட்பவே செய்யினும் கொண்கனைக்
காணாது அமையல கண். 1283
என்னிடம் விருப்பம் இல்லாமல் தான் விரும்புகின்றவற்றையே செய்தாலும் என் கண்களால் காதலரைப் பார்க்காமல் இருக்க இயலவில்லை.

ஊடற்கண் சென்றேன்மன் தோழி! அதுமறந்து
கூடற்கண் சென்றதுஎன் நெஞ்சு. 1284
தோழி! நான் காதலரோடு ஊடல் கொள்வதற்காகச் சென்றேன். ஆனால் என் நெஞ்சம், சென்ற நோக்கத்தை மறந்து, கூடுவதற்காகச் சென்றது.

எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட இடத்து. 1285
மை தீட்டும்போது தீட்டும் கோலைப் பார்க்காத கண்ணைப் போல், காதலரைக் கண்டபோது மட்டும் அவர் குற்றத்தை நினைக்காமல் மறந்து விடுகிறேன்.

காணுங்கால் காணேன் தவறாய காணாக்கால்
காணேன் தவறல் லவை. 1286
நேரில் காதலரைப் பார்க்கிறபோது அவர் செய்த தவறுகளை என்னால் பார்க்க முடியவில்லை. அவரை நேரில் பார்க்காதபோது அவர் செய்த தவறுகளைத் தவிர வேறெதையும் பார்க்க முடியவில்லை.

உய்த்தல் அறிந்து புனல்பாய் பவரேபோல்
பொய்த்தல் அறிந்துஎன் புலந்து? 1287
வெள்ளம் அடித்துச் செல்லும் என்று அறிந்தும், ஓடும் நீரில் பாய்கின்றவனைப் போலப் பயன் இல்லை என்று தெரிந்தும் ஊடல் கொள்வது வீணானதுதானே?

இளித்தக்க இன்னா செயினும் களித்தார்க்குக்
கள்அற்றே கள்வநின் மார்பு. 1288
கள்ளத்தனம் உள்ள தலைவனே! இழிவு தரும் துன்பங்களைத் தந்தாலும் குடிகாரர்களுக்கு மேலும் மேலும் ஆசையை உண்டாக்குகிற கள்ளைப் போன்றது உன் மார்பு.

மலரினும் மெல்லிது காமம்; சிலர்அதன்
செவ்வி தலைப்படு வார். 1289
காமமானது மலரை விட மிக மென்மையானது. அதன் உண்மையை அறிந்து காமத்தின் நல்ல பயனைப் பெறக் கூடியவர் மிகச் சிலரே!

கண்ணின் துனித்தே கலங்கினாள் புல்லுதல்
என்னினும் தான்விதுப்பு உற்று. 1290
கண் பார்வையின் அளவில் பிணக்கம் கொண்டாள். ஆனாலும் என்னை விட விரைவாய்த் தழுவுதலை விரும்பித் தன் பொய்க் கோபத்தை மறந்து தழுவிக் கொண்டு கலங்கினாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்நெஞ்சு அவர்க்குஆதல் கண்டும் எவன்நெஞ்சே
நீஎமக்கு ஆகா தது? 1291
நெஞ்சமே, காதலர் நெஞ்சம் நம்மை நினையாமல் நம்மிடம் வாராமல் அவருக்கே துணையாய் இருப்பதைக் கண்டும் நீ எனக்குத் துணை ஆகாதது ஏன்?

உறாஅ தவர்க்கண்ட கண்ணும் அவரைச்
செறாஅர்எனச் சேறிஎன் நெஞ்சு. 1292
என் நெஞ்சமே! நம் மேல் துளியும் அன்பு செலுத்தாத காதலரைக் கண்டுங்கூட அவர் வெறுக்க மாட்டார் என்று எண்ணி அவரிடந்தானே செல்கிறாய்?

கெட்டார்க்கு நட்டார்இல் என்பதோ நெஞ்சேநீ
பெட்டாங்கு அவர்பின் செலல். 1293
நெஞ்சமே! நீ உன் விருப்பப்படியே அவர் பின் செல்வதற்கே காரணம், துன்பத்தால் கெட்டவருக்கு நண்பர் இல்லை என்ற எண்ணந்தானோ?

இனிஅன்ன நின்னொடு சூழ்வார்யார் நெஞ்சே
துனிசெய்து துவ்வாய்காண் மற்று? 1294
நெஞ்சமே! நீ காதலரைக் கண்டதும் ஊடல் கொண்டு உரிய பயனையும் அனுபவிக்க மாட்டாய். இனிமேல் அதைப் பற்றி உன்னோடு எண்ணிப் பார்க்கப் போகிறவர் யார்?

பெறாஅமை அஞ்சும்; பெறின்,பிரிவு அஞ்சும்
அறாஅ இடும்பைத்துஎன் நெஞ்சு. 1295
காதலர் இல்லாதபோது அவரை அடைய முடியவில்லையே என்ற வருத்தம், அவர் உடன் இருந்தால் பிரிந்து விடுவாரோ என்ற வருத்தம். இப்படித் தீராத துன்பத்தை அடைவதற்காகவே என் நெஞ்சம் இருக்கிறது.

தனியே இருந்து நினைத்தக்கால் என்னைத்
தினிய இருந்ததுஎன் நெஞ்சு. 1296
காதலரைப் பிரிந்து தனியாய் இருந்து அவரை நினைத்தபோது என் நெஞ்சமே என்னைத் தின்பது போல வருத்தியது.

நாணும் மறந்தேன், அவர்மறக் கல்லாஎன்
மாணா மடநெஞ்சிற் பட்டு. 1297
காதலரை மறக்க முடியாத என் மட நெஞ்சோடு சேர்ந்து, மறக்கக் கூடாத நாணத்தையும் மறந்து விட்டேன்.

எள்ளின் இளிவாம் என்று எண்ணி அவர்திறம்
உள்ளும் உயிர்க்காதல் நெஞ்சு. 1298
பிரிந்து சென்ற காதலரை இகழ்ந்தால் இழிவு வருமே என்று கருதி அவருடைய உயர்ந்த குணங்களை மட்டுமே நினைக்கிறதே என் நெஞ்சு.

துன்பத்திற்கு யாரே துணைஆவார் தாம்உடைய
நெஞ்சம் துணைஅல் வழி. 1299
துன்பத்தில் ஒருவருக்கு, உரிமை உடையதான நெஞ்சே உடனிருந்து துணை செய்யா விட்டால் வேறு யார் துணை செய்வார்?

தஞ்சம் தமர்அல்லர் ஏதிலார் தாம்உடைய
நெஞ்சம் தமர்அல் வழி. 1300
ஒருவருக்கு உரிமையும் உறவும் உடையவருடைய நெஞ்சமே துணை ஆகாதபோது, உறவே இல்லாத அயலார் துணை வராமல் இருப்பது இயல்புதானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லாது இராஅப் புலத்தை அவர்உறும்
அல்லல்நோய் காண்கம் சிறிது. 1301
ஊடலின்போது காதலர் அடைகின்ற துன்பத்தைச் சிறிது பார்ப்போமென்றால்
அவரைத் தழுவாமல் சற்று விலகி இருக்க வேண்டும்.

உப்புஅமைந்து அற்றால் புலவி அதுசிறிது
மிக்கற்றால் நீள விடல். 1302
உணவில் உப்பு அளவோடு அமைந்திருப்பதைப் போல ஊடலும் அளவாய் இருக்க வேண்டும்.
ஊடலில் அளவு மிகுதியாகுமானால் உணவில் உப்பு மிகுதிஆவதுபோல் பயனற்றுப் போய்விடும்.

அலந்தாரை அல்லல்நோய் செய்தற்றால் தம்மைப்
புலந்தாரைப் புல்லா விடல். 1303
பிணக்கம் கொண்ட மனைவியின் ஊடலை நீக்காமல் அவளைக் கூடுவது, துன்பம்
அடைந்துள்ளவரை மேலும் துன்புறச் செய்வதாகும்.

ஊடி யவரை உணராமை, வாடிய
வள்ளி முதல்அரிந்து அற்று. 1304
பிணங்கியவரை நன்கு புரிந்து கொண்டு அன்பு செய்யாமல் விட்டால், அது
வாடிய கொடியை அறுப்பது போன்றதாகும்.

நலத்தகை நல்லவர்க்கு ஏஎர் புலத்தகை
பூஅன்ன கண்ணார் அகத்து. 1305
மலர் போன்ற கண்களை உடைய காதலியின் உள்ளத்தில் உண்டாகும் புலவிச்
சிறப்பே பண்புள்ள காதலனுக்கு அழகு ஆகும்.

துனியும் புலவியும் இல்லாயின் காமம்
கனியும் கருக்காயும் அற்று. 1306
பெரும் பிணக்கு, மிகவும் பழுத்து விட்ட பழம் போன்றதாகும். மிகச் சிறிதளவே கொள்ளும் பிணக்கு
முற்றாத சிறுகாய் போன்றது. இரண்டுமே பயன்படா. ஊடல் அளவோடு பக்குவமாய் இருக்க வேண்டும்.

ஊடலின் உண்டுஆங்கு துன்பம் புணர்வது
நீடுவது அன்றுகொல் என்று. 1307
கூடி இருக்கும் போது அது நீடிக்குமோ, நீட்டிக்காதோ என்று ஐயப்படுவதால்
ஊடுதலிலும் காதலருக்குத் துன்பம் உண்டாகிறது.

நோதல் எவன்மற்று நொந்தார்என்று அஃதுஅறியும்
காதலர் இல்லா வழி. 1308
தம்மால்தானே தலைவி துன்பப்படுகிறாள் என்று அறிந்து கொள்கின்ற குணம்
இல்லாதவராய்க் காதலர் இருக்கும் போது அது தொடர்பாய் வருந்துவதால் பயன் இல்லை.

நீரும் நிழலது இனிதே; புலவியும்
வீழுநர் கண்ணே இனிது. 1309
உயிர் வாழ உதவும் நீரும் நிழலின் அருகில் இருப்பது இனிமையானது. அதுபோலக்
கூடலுக்குத் தேவையான ஊடலும் அன்பு உள்ளவரிடம் இருப்பதே இனிமையானது.

ஊடல் உணங்க விடுவாரோடு என்நெஞ்சம்
கூடுவேம் என்பது அவா. 1310
ஊடல் கொண்டபோது உறவு கொண்டு மகிழ்விக்காமல் வாடும்படி விடுகின்றவரோடு
என் நெஞ்சமானது கூடி இருக்க வேண்டும் என்று எண்ணுவதற்குக் காரணம் ஆசையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்இயலார் எல்லாரும் கண்ணின் பொதுஉண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு. 1311

பார்த்தவுடன் பெண்கள் ஆசை கொள்வதற்குக் காரணமானவனே! பெண்கள் பலரும் உன் மார்பினைத் தம் கண்களால் பொதுவானதாய் எண்ணி அனுபவிக்கிறார்கள். எனவே, நான் உன் மார்பைத் தழுவமாட்டேன்.

ஊடி இருந்தேமாத் தும்மினார், யாம்தம்மை
நீடுவாழ்க என்பாக்கு அறிந்து. 1312

நான் அவரோடு ஊடல் கொண்டிருந்தேன். நெடுங்காலம் வாழ்க என்று நான் வாய் திறந்து சொல்லுவேன் என்று எதிர்பார்த்து அவர் தும்மினார்.

கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக்
காட்டிய சூடினீர் என்று. 1313

கிளையில் பூத்த மலர்களைச் சூடிக் கொண்டாலும் அந்த அழகை வேறு எவளுக்கோ காட்டச் சூடியிருக்கிறீர்கள் என்று அவள் அவன் மீது கோபம் கொண்டாள்.

'யாரினும் காதலம்' என்றேனா, ஊடினாள்
யாரினும் யாரினும் என்று. 1314

வேறு யாரையும் விட உன்னை அதிகமாய் நேசிக்கிறேன் என்று சொன்னேன். உடனே அதைத் தவறாகக் கருதி, வேறு யாரை விட, வேறு யாரை விட என்று கேட்டுக் கேட்டு ஊடல் கொண்டாள்.

'இம்மைப் பிறப்பில் பிரியலம்' என்றேனாக்
கண்நிறை நீர்கொண்ட னள். 1315

இந்தப் பிறவியில் உன்னைப் பிரிய மாட்டேன் என்று சொன்னதுதான் தாமதம், இனி வரும் பிறவியில் பிரிவாரோ என்று வருந்திக் கண்ணீர் பெருக்கினாள்.

'உள்ளினேன் என்றேன்மற்று' என்மறந்தீர்? என்றுஎன்னைப்
புல்லாள் புலத்தக் கனள். 1316

நினைத்தேன் என்று அன்போடு சொன்னேன். உடனே, "மறந்து போனால்தானே நினைக்க முடியும்? அப்படி என்றால் ஏன் மறந்தீர்?" என்று சொல்லி என்னைத் தழுவிய கைகள் தளரச் சினத்தோடு விலகிக் கொண்டாள்.

வழுத்தினாள் தும்மினேன் ஆக, அழித்துஅழுதாள்
'யார்உள்ளித் தும்மினீர்?' என்று. 1317

நான் தும்மினேன், உடனே "நூறாண்டு வாழ்க!" என வாழ்த்தினாள். அதோடு விட்டாளா? அடுத்த கணமே, "யார் உம்மை நினைத்தார்கள், தும்மினீர்?" என்று அழுதாள்.

தும்முச் செறுப்ப அழுதாள், நுமர்உள்ளல்
எம்மை மறைத்திரோ என்று. 1318

தலைவி ஊடல் கொள்வாளே என்று நான், வந்த தும்மலை அடக்கிக் கொண்டேன். "உம்மை வேறு எவளோ ஒருத்தி நினைக்கிறாள். அது எனக்குத் தெரியக் கூடாது என்று மறைக்கிறீர், அல்லவா?" என்று சொல்லி அவள் அழுதாள்.

தன்னை உணர்த்தினும் காயும் பிறர்க்குநீர்
இந்நீரர் ஆகுதிர் என்று. 1319

அவள் ஊடலைத் தணிவிக்க அவளை மகிழ்வித்தாலும், "இப்படித்தானே இன்னொருத்தி ஊடினாலும் அன்பு பாராட்டி மகிழ வைப்பீர்?" என்று கூறிச் சினம் கொண்டாள்.

நினைத்திருந்து நோக்கினும் காயும் அனைத்துநீர்
'யார்உள்ளி நோக்கினீர்?' என்று. 1320

அவள் அழகை அமைதியாய் நினைத்து நினைத்துப் பார்த்து மகிழ்ந்தாலும்? "யாருடைய அழகோடு என் அழகினை ஒப்பிட்டுப் பார்த்து மகிழ்கின்றீர்?" என்று பெருங்கோபம் கொள்வாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை தவறுஅவர்க்கு ஆயினும் ஊடுதல்
வல்லது அவர்அளிக்கு மாறு. 1321
அவர்மீது தவறு ஒன்றும் இல்லை என்றாலும், அவரோடு ஊடல் கொள்வது, அவர் மேல் அதிகமாய் அன்பு ஏற்படும் என்பதற்காகவே ஆகும்.

ஊடலின் தோன்றும் சிறுதுனி நல்அளி
வாடினும் பாடு பெறும். 1322
ஊடல் காரணமாய் அவருக்கு என் மேல் உண்டாகும் சிறுகோபம் அன்பு குறைவதற்குக் காரணம் போலத் தோன்றினாலும், உண்மையில் பின்னர் அன்பு அதிகமாகும்.

புலத்தலின் புத்தேள்நாடு உண்டோ நிலத்தொடு
நீர்இயைந்து அன்னார் அகத்து? 1323
நிலத்தோடு நீர் கலப்பதைப் போல, என்றும் பிரிக்க முடியாத காதலரிடம் ஊடுதல் கொள்வதை விட அதிக இன்பத்தை உண்டாக்கக் கூடியது தேவலோகத்திலும் இருக்கிறதா?

புல்லி விடாஅப் புலவியுள் தோன்றும்என்
உள்ளம் உடைக்கும் படை. 1324
காதலரைத் தழுவிக் கொண்டு விடாமல் இருப்பதற்குக் காரணமான ஊடலில் என் உள்ளத்தை உடைக்கும் படை இருக்கிறது.

தவறுஇலர் ஆயினும் தாம்வீழ்வார் மென்தோள்
அகறலின் ஆங்குஒன்று உடைத்து. 1325
தம்மிடம் தவறில்லாதபோது ஊடலுக்காளாகித் தாம் விரும்பியவளின் மென்மையான தோளைத் தழுவாமல் இருப்பதிலுங்கூட இன்பம் இருக்கிறது.

உணலினும் உண்டது அறல்இனிது; காமம்
புணர்தலின் ஊடல் இனிது. 1326
மேலும் மேலும் மிகுதியாய் உண்பதை விட, முதலில் உண்டது செரிப்பது இன்பம் தரக்கூடியது. அதுபோல, மேலும் மேலும் சேர்ந்து மகிழ்வதை விட, ஊடலே இன்பம் தருவதாம்.

ஊடலில் தோற்றவர் வென்றார்; அதுமன்னும்
கூடலில் காணப் படும். 1327
ஊடலில் தோற்றவரே வெற்றி பெற்றவர் ஆவார். அந்த உண்மையானது ஊடல் முடிந்து கூடி மகிழும்போது அறியப்படும்.

ஊடிப் பெறுகுவம் கொல்லோ நுதல்வெயர்ப்பக்
கூடலில் தோன்றிய உப்பு. 1328
நெற்றி வியர்க்கும்படியாகக் கூடி அடையும் இன்பத்தை ஊடி இருந்து உணர்ந்து அனுபவிக்க இயலுமோ?

ஊடுக மன்னோ ஒளியிழை யாம்இரப்ப
நீடுக மன்னோ இரா. 1329
என் காதலி இன்னும் ஊடிக் கொண்டே இருக்கட்டும். அந்த ஊடலைத் தணிக்கும் பொருட்டு நான் கெஞ்சிக் கொண்டிருக்க, இரவு நேரமோ வளர்ந்து கொண்டே இருக்கட்டும்.

ஊடுதல் காமத்திற்கு இன்பம்; அதற்குஇன்பம்
கூடி முயங்கப் பெறின். 1330
காமத்திற்கு இன்பம் தருவது ஊடுதலாகும். ஊடல் முடிந்த பின் கூடி இணைந்து மகிழ்ந்தால் அது ஊடலுக்கு இன்பமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறள் முதற் குறிப்பு அகராதி

(எண்கள், "குறள்" வரிசை எண்ணிக்கையைக் குறிக்கும்)


| | |
|---|---|
| அஃகாமை | 178 |
| அஃகி அகன்ற | 175 |
| அகடாரார் | 936 |
| அகப்பட்டி ஆவாரை | 1074 |
| அகரமுதல | 1 |
| அகலாது அணுகாது | 691 |
| அகழ்வாரைத் | 151 |
| அகனமர்ந்து ஈதலின் | 92 |
| அகனமர்ந்து செய்யாள் | 84 |
| அங்கணத்துள் | 720 |
| அசையியற்கு | 1098 |
| அச்சமுடையார்க்கு | 534 |
| அச்சமே கீழ் | 1075 |
| அஞ்சாமை அல்லால் | 497 |
| அஞ்சாமை ஈகை | 382 |
| அஞ்சும் அறியான் | 863 |
| அஞ்சுவ தஞ்சாமை | 428 |
| அஞ்சுவதோரும் | 366 |
| அடக்கம் அமரருள் | 121 |
| அடல் வேண்டும் | 343 |
| அடற்றகையும் | 768 |
| அடுக்கிய கோடி | 954 |
| அடுக்கிவரினும் | 625 |
| அடுத்ததுகாட்டும் | 706 |
| அணங்குகொல் | 1081 |
| அணி அன்றோ | 1014 |
| அந்தணர் என்போர் | 30 |
| அந்தணர் நூற்கும் | 543 |
| அமரகத்து ஆற்ற | 814 |
| அமரகத்து வன் | 1027 |
| அமிழ்தினும் | 64 |
| அமைந்தாங் | 474 |
| அரங்கின்றி | 401 |
| அரம்பொருத | 888 |
| அரம்போலும் | 997 |
| அரிதரோ | 1153 |
| அரிதாற்றி | 1160 |
| அரியஎன்று | 537 |
| அரியகற்று | 503 |
| அரியவற்றுள் | 443 |
| அருங்கேடன் | 210 |
| அருஞ்செவ்வி | 565 |
| அருட்செல்வம் | 241 |
| அருமறைசோரும் | 847 |
| அருமை உடைத் | 611 |
| அரும்பயன் | 198 |
| அருவினை | 483 |
| அருளல்லது | 254 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| அருளில்லார்க்கு | 247 |
| அருளென்னும் | 757 |
| அருளொடும் | 755 |
| அருள்கருதி | 285 |
| அருள்சேர்ந்த | 243 |
| அருள்வெஃகி | 176 |
| அலந்தாரை | 1303 |
| அலரெழ ஆருயிர் | 1141 |
| அலர்நாண | 1149 |
| அல்லல் அருள் | 245 |
| அல்லவைதேய | 96 |
| அல்லற்பட்டு | 555 |
| அவர் தந்தார் | 1182 |
| அவர் நெஞ்சு | 1291 |
| அவா இல்லார்க்கு | 368 |
| அவா என்ப | 361 |
| அவாவினை ஆற்ற | 367 |
| அவி சொரிந்து | 259 |
| அவையறிந்து | 711 |
| அவையறியார் | 713 |
| அவ்வித்து அழுக் | 167 |
| அவ்விய நெஞ்சத் | 169 |
| அழக்கொண்ட | 659 |
| அழச்சொல்லி | 795 |
| அழல்போலும் | 1228 |
| அழிவதூஉம் | 461 |
| அழிவந்த செய்யினும் | 807 |
| அழிவினவை | 787 |
| அழிவின் றறை | 764 |
| அழுக்கற்று | 170 |
| அழுக்காறு அவா | 35 |
| அழுக்காறு உடையார் | 165 |
| அழுக்காறு உடையான் | 135 |
| அழுக்காறு என | 168 |
| அழுக்காற்றின் | 164 |
| அளவல்ல | 289 |
| அளவளாவில்லா | 523 |
| அளவறிந்தார் | 288 |
| அளவறிந்து | 479 |
| அளவின்கண் | 286 |
| அளித்தஞ்சல் | 1154 |
| அறங்கூறான் | 181 |
| அறஞ்சாரா | 1047 |
| அறஞ்சொல்லும் | 185 |
| அறத்தாறு இது | 37 |
| அறத்தாற்றின் | 46 |
| அறத்தான் | 39 |
| அறத்திற்கே | 76 |
| அறத்தினூஉங்கு | 32 |
| அறம்பொருள் | 501 |
| அறவாழி | 8 |
| அறவினையாதெனில் | 321 |
| அறவினையும் | 909 |
| அறனழீஇ | 182 |
| அறனறிந்து ஆன்ற | 635 |
| அறனறிந்து மூத்த | 441 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| அறனறிந்து வெஃகா | 179 |
| அறனியலான் | 147 |
| அறனிழுக்கா | 384 |
| அறனெனப் | 49 |
| அறன் ஆக்கம் | 163 |
| அறன் ஈனும் | 754 |
| அறன்கடை | 142 |
| அறன்நோக்கி | 189 |
| அறன் வரையான் | 150 |
| அறிகிலார் | 1139 |
| அறிகொன்று | 638 |
| அறிதோறு அறி | 1110 |
| அறிந்தாற்றிச் | 515 |
| அறிவற்றங் | 421 |
| அறிவிலார் | 843 |
| அறிவுஇலான் | 842 |
| அறிவினான் | 315 |
| அறிவினுள் எல்லாந் | 203 |
| அறிவின்மை | 841 |
| அறிவுடையார் ஆவ | 427 |
| அறிவுடையார் எல்லாந் | 430 |
| அறிவுரு ஆராய்ந்த | 684 |
| அறுவாய் | 1117 |
| அறைபறை | 1076 |
| அற்காஇயல்பிற்றுச் | 333 |
| அற்றதறிந்து | 944 |
| அற்றம் மறைக்கும் | 980 |
| அற்றம் மறைத்தலோ | 846 |
| அற்றவர் என்பார் | 365 |
| அற்றாரைத் | 506 |
| அற்றார் அழிபசி | 226 |
| அற்றார்க்கொன்று | 1007 |
| அற்றால் அளவறிந்து | 943 |
| அற்றேமென்று | 626 |
| அனிச்சப்பூக் | 1115 |
| அனிச்சமும் | 1120 |
| அன்பகத்தில்லா | 78 |
| அன்பறி வாராய்ந்த | 682 |
| அன்பறிவு தேற்றம் | 513 |
| அன்பிலன் | 862 |
| அன்பிலார் | 72 |
| அன்பிற்கும் | 71 |
| அன்பின் வழியது | 80 |
| அன்பின் விழையார் | 911 |
| அன்பீனும் | 74 |
| அன்புடைமை-இவ் | 992 |
| அன்புடைமை-வேந் | 681 |
| அன்புநாண் | 983 |
| அன்பும் அறனும் | 45 |
| அன்புற் றமர்ந்த | 75 |
| அன்பொரீஇத் | 1009 |
| அன்போ டியைந்த | 73 |
| அன்றறிவாம் | 36 |
| ஆகா றளவிட்டி | 478 |
| ஆகூழால் | 371 |
| ஆக்கமுங் கேடும் | 642 |
| ஆக்கம் அதர்வினாய் | 594 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| ஆக்கம் இழந்தே | 593 | இடமெல்லாம் | 1064 |
| ஆக்கம் கருதி | 463 | இடனில் பருவத்தும் | 218 |
| ஆங்கமை | 740 | இடிக்குந்துணை | 447 |
| ஆபயன்குன்றும் | 560 | இடிபுரிந்தெள்ளுஞ் | 607 |
| ஆயம் அறிவினர் | 918 | இடிப்பாரை | 448 |
| ஆய்ந்தாய்ந்து | 792 | இடுக்கட் படினும் | 654 |
| ஆரா இயற்கை | 370 | இடுக்கண்கால் | 1030 |
| ஆவிற்கு நீரென்று | 1066 | இடுக்கண் வருங்கால் | 621 |
| ஆள்வினையும் | 1022 | இடும்பைக்கு | 623 |
| ஆற்றாரும் ஆற்றி | 493 | இடும்பைக்கே | 1029 |
| ஆற்றின் அளவறிந்தீக | 477 | இடைதெரிந்து | 712 |
| ஆற்றின் அளவறிந்து | 725 | இணரூழ்த்தும் | 650 |
| ஆற்றின் ஒழுக்கி | 48 | இணர்எரிதோய் | 308 |
| ஆற்றின் நிலைதளர்ந் | 716 | இதனை இதனால் | 517 |
| ஆற்றின் வருந்தா | 468 | இமைப்பின் | 1129 |
| ஆற்றுபவர்க்கும் | 741 | இமையாரின் | 906 |
| ஆற்றுவார் - இக | 891 | இம்மைப் பிறப்பில் | 1315 |
| ஆற்றுவார் - பசி | 225 | இயல்பாகும் | 344 |
| ஆற்றுவார் - பணி | 985 | இயல்பினான் | 47 |
| இகலானாம் | 860 | இயல்புளிக் | 545 |
| இகலிற் கெதிர் | 858 | இயற்றலும் | 385 |
| இகலின் மிகலினிது | 856 | இரக்க | 1051 |
| இகலெதிர் | 855 | இரத்தலின் | 229 |
| இகலென்ப | 851 | இரத்தலும் | 1054 |
| இகலென்னும் | 853 | இரந்தும் | 1062 |
| இகல்காணான் | 859 | இரப்பன் இரப்பாரை | 1067 |
| இகழ்ச்சியிற் | 539 | இரப்பாரை | 1058 |
| இகழ்ந்தெள்ளாது | 1057 | இரப்பான் | 1060 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவார் இரப் 1035
இரவுள்ள 1069
இரவென்னும் 1068
இருநோக்கு 1091
இருந்துள்ளி 1243
இருந்தோம்பி 81
இருபுனலும் 737
இருமனப்பெண்டிரும் 920
இருமை வகை 23
இருவேறுலகத்து 374
இருள்சேர் 5
இருள்நீங்கி 352
இலக்கம் 627
இலங்கிழாய் 1262
இலமென்று அசைஇ 1040
இலமென்று வெஃகு 174
இலர்பலராகிய 270
இலனென்று 205
இலனென்னும் 223
இல்லதென் 53
இல்லாரை 752
இல்லாளை 905
இல்லாள்கண் 903
இல்லைதவறவர்க்கு 1321
இல்வாழ்வான் 41
இவறலும் 432
இழத்தொறூஉம் 940
இழிவறிந்து 946
இழுக்கல் 415
இழுக்காமை 536
இழைத்தது 779
இளித்தக்க 1288
இளிவரின் 970
இளைதாக 879
இளையர் இன 698
இறந்தமைந்த 900
இறந்த வெகுளியின் 531
இறந்தார் 310
இறப்பே புரிந்த 977
இறல் ஈனும் 180
இறுதி பயப்பினும் 690
இறைகடியன் 564
இறைகாக்கும் 547
இற்பிறந்தார் கண்ண 951
இற்பிறந்தார் கண்ணே 1044
இனத்தாற்றி 568
இனம் போன்று 822
இனி அன்ன 1294
இனிய உளவாக 100
இனைத்துணைத் 87
இனையர் இவர் 790
இன்கண் உடைத்தவர் 1152
இன்சொலால் ஈத்து 387
இன்சொலால் ஈரம் 91
இன்சொல் இனி 99
இன்பத்துள்-பயக் 854




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| இன்பத்துள் - விழை | 629 | உடம்பாடு இலாதவர் | 890 |
| இன்பம் இடையறா | 369 | உடம்பொடு | 1122 |
| இன்பம் ஒருவற்கு | 1052 | உடுக்கை | 788 |
| இன்பம் கடல் | 1166 | உடுப்பதூஉம் | 1079 |
| இன்பம் - இடும்பை | 628 | உடை செல்வம் | 939 |
| இன்பம் - வினை | 615 | உடைத்தம் | 473 |
| இன்மை இடும்பை | 1063 | உடைமையுள் | 89 |
| இன்மை எனஒரு | 1042 | உடையரெனப்படுவது | 591 |
| இன்மை ஒருவற்கு | 988 | உடையார்முன் | 395 |
| இன்மையின் இன்னா | 1041 | உட்கப்படாஅர் | 921 |
| இன்மையின் இன்னாது | 558 | உட்பகை | 883 |
| இன்மையுள் இன்மை | 153 | உணர்வதுடையார் | 718 |
| இன்றியமையாச் | 961 | உணலினும் | 1326 |
| இன்றும் வருவது | 1048 | உண்டார்கண் | 1090 |
| இன்னா எனத்தான் | 316 | உண்ணற்க | 922 |
| இன்னா செய்தாரை | 314 | உண்ணாது | 160 |
| இன்னா செய்தார்க்கும் | 987 | உண்ணாமை உள்ளது | 255 |
| இன்னாது இரக்கப் | 224 | உண்ணாமை வேண் | 257 |
| இன்னாது இனனில் | 1158 | உதவி வரைத்தன்று | 105 |
| இன்னாமை இன்பம் | 630 | உப்பமைந் | 1302 |
| ஈட்டம் இவறி | 1003 | உயர்வகலம் | 743 |
| ஈதல் இசைபட | 231 | உயிர் உடம்பின் | 330 |
| ஈத்துவக்கும் | 228 | உயிர்ப்ப உளரல்லர் | 880 |
| ஈர்ங்கை விதிரார் | 1077 | உய்த்தல் | 1287 |
| ஈவார்கண் | 1059 | உரமொருவற்கு | 600 |
| ஈன்றபொழுதிற் | 69 | உரனென்னும் | 24 |
| ஈன்றாள் பசி | 656 | உரன்நசைஇ | 1263 |
| ஈன்றாள் முகத்தேயும் | 923 | உருவுகண்டு | 667 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருளாயம் 933
உரைப்பார் 232
உலகத்தார் 850
உலகத்தோடு 140
உலகம்தழீஇய 425
உலைவிடத்து 762
உவக்காண் 1185
உவந்துறைவர் 1130
உவப்பத் தலைக்கூடி 394
உழந்துழந்து 1177
உழவினார் 1036
உழுதுண்டு 1033
உழுவார் 1032
உழைப்பிரிந்து 530
உளபோல் 574
உளரெனினும் 730
உளரென்னும் 406
உளவரை தூக்காத 480
உள்ளக் களித்தலும் 1281
உள்ளத்தார் 1249
உள்ளத்தால் உள்ள 282
உள்ளத்தால் பொய் 294
உள்ளம் இலாதவர் 598
உள்ளம் உடைமை 592
உள்ளம் போன்று 1170
உள்ளற்க 798
உள்ளியது எய்தல் 540
உள்ளியதெல்லாம் 309
உள்ளினும் 1201
உள்ளினேன் 1316
உள்ளுவதெல்லாம் 596
உள்ளுவன் - உரை 1184
உள்ளுவன் - மறப் 1125
உள்ளொற்றி 927
உறங்குவது 339
உறல்முறையான் 885
உறா அதவர்க்கண்ட 1292
உறா அதவர்போல 1096
உறாஅதோ 1143
உறாஅர்க்கு 1200
உறின்உயிர் 778
உறின்நட்டு 812
உறுதோறு 1106
உறுபசியும் 734
உறுபொருளும் 756
உறுப்பமைந்து 761
உறுப்பொத்தல் 993
உறுவது சீர் 813
உறைசிறியார் 680
உற்றநோய் நீக்கி 442
உற்றநோய் நோன்றல் 261
உற்றவன் 950
உற்றான் அளவும் 949
ஊக்கமுடையான் 486
ஊடலில்தோற்றவர் 1327
ஊடலில் தோன்றும் 1322



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ஊடலில் உண்டாங் | 1307 |
| ஊடல் உணங்க | 1310 |
| ஊடல் உணர்தல் | 1109 |
| ஊடற்கண் | 1284 |
| ஊடிப்பெறுகுவங் | 1328 |
| ஊடியவரை | 1304 |
| ஊடியிருந்தே | 1312 |
| ஊடுகமன்னோ | 1329 |
| ஊடுதல் | 1330 |
| ஊனுடை | 1012 |
| ஊதியம் என்பது | 797 |
| ஊரவர் கொவை | 1147 |
| ஊருணிநீர் | 215 |
| ஊழிபெயரினும் | 989 |
| ஊழிற்பெருவலி | 380 |
| ஊழையும் | 620 |
| ஊறொரால் | 662 |
| ஊனைக்குறித்த | 1013 |
| எச்சமென்று | 1004 |
| எட்பகவன்ன | 889 |
| எண்சேர்ந்த | 910 |
| எண்ணித்துணிக | 467 |
| எண்ணிய எண்ணி | 666 |
| எண்ணியார் | 494 |
| எண்ணென்ப | 392 |
| எண்பதத்தால் | 991 |
| எண்பதத்தான் | 548 |
| எண்பொருளவாகச் | 424 |
| எதிரதாக் காக்கும் | 429 |
| எந்நன்றி | 110 |
| எப்பொருளும் ஓரார் | 695 |
| எப்பொருள் எத் | 355 |
| எப்பொருள் யார் | 423 |
| எய்தற்கரியது | 489 |
| எரியால் சுடப் | 896 |
| எல்லாப் பொருளும் | 746 |
| எல்லார்க்கும் எல்லாம் | 582 |
| எல்லார்க்கும் நன்றாம் | 125 |
| எல்லா விளக்கும் | 299 |
| எல்லைக்கண் | 806 |
| எவ்வதுறைவது | 426 |
| எழுதுங்கால் | 1285 |
| எழு பிறப்பும் | 62 |
| எழுமை எழுபிறப்பும் | 107 |
| எளிதென | 145 |
| எள்பகவு அன்ன | 889 |
| எள்ளாத எண்ணி | 470 |
| எள்ளாமை | 281 |
| எள்ளின் இளிவாம் | 1298 |
| எற்றிற்குரியர் | 1080 |
| எற்றென்று | 655 |
| எனைத்தானும் எஞ் | 317 |
| எனைத்தானும் நல் | 416 |
| எனைத் திட்பம் | 670 |
| எனைத் துணையர் | 144 |
| எனைத்து நினைப் | 1208 |
| எனைத்தும் குறுகுதல் | 820 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனைத்தொன்று 1202
எனைப்பகை 207
எனைமாட்சி 750
எனைவகையான் 514
என்பிலதனை 77
என்றும் ஒருவுதல் 652
என்னைமுன் 771
ஏதும்பெருஞ் 1006
ஏதிலார் ஆரத் 837
ஏதிலார் குற்றம் 190
ஏதிலார் போலப் 1099
ஏந்திய கொள்கை 899
ஏமுற்றவரினும் 873
ஏரினும் நன்றால் 1038
ஏரின் உழாஅர் 14
ஏவவும் செய்கலான் 848
ஐந்தவித்தான் 25
ஐயத்தின் நீங்கி 353
ஐயப்படா அது 702
ஐயுணர்வு 354
ஒட்டார்பின் 967
ஒண்ணுதற்கோ 1088
ஒண்பொருள் 760
ஒத்த தறிவான் 214
ஒப்புரவினால் 220
ஒருதலையான் 1196
ஒருநாள் எழுநாள் 1269
ஒருபொழுதும் 337
ஒருமைக்கண் தான் 398
ஒருமைச் செயலாற் 835
ஒருமை மகளிரே 974
ஒருமையுள் ஆமை 126
ஒலித்தக்கால் 763
ஒல்லும் கருமம் 818
ஒல்லும் வகையான் 33
ஒல்லும் வாயெல்லாம் 673
ஒல்வதறிவது 472
ஒழுக்கத்தின் எய்துவர் 137
ஒழுக்கத்தின் ஒல்கார் 136
ஒழுக்கத்து நீத்தார் 21
ஒழுக்கமுடையவர்க் 139
ஒழுக்கமும் 952
ஒழுக்கம் உடைமை 133
ஒழுக்கம் விழுப்பம் 131
ஒழுக்காறாக் 161
ஒளியார் முன் 714
ஒளியொருவற்கு 971
ஒறுத்தாரை 155
ஒறுத்தார்க்கு 156
ஒறுத்தாற்றும் 579
ஒற்றினான் ஒற்றி 583
ஒற்றும் உரைசான்ற 581
ஒற்றொற்றி 588
ஒற்றொற்று 589
ஒன்றா உலகத்து 233
ஒன்றாக நல்லது 323



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| ஒன்றாமை | 886 | கண்ணின் பசப்போ | 1240 |
| ஒன்றானும் | 128 | கண்ணுடையார் | 393 |
| ஒன்றெய்தி | 932 | கண்ணும் கொளச் | 1244 |
| ஒன்னார்த் | 264 | கண்ணுள்ளார் | 1127 |
| ஓஓ இனிதே | 1176 | கண்ணுள்ளின் | 1126 |
| ஓதல் வேண்டும் | 653 | கண்ணொடு கண் | 1100 |
| ஓதி உணர்ந்தும் | 834 | கண்ணோட்டத் | 572 |
| ஓம்பின் அமைந்தார் | 1155 | கண்ணோட்டம் இல் | 577 |
| ஓர்ந்துள்ளம் | 357 | கண்ணோட்டம் என் | 571 |
| ஓர்ந்துகண் | 541 | கண்தாம் | 1171 |
| கடலன்ன | 1137 | கண் நிறைந்த | 1272 |
| கடலோடா | 496 | கண்நின்று | 184 |
| கடனறிந்து | 687 | கதங்காத்து | 130 |
| கடன் என்ப | 981 | கதுமெனத்தாம் | 1173 |
| கடாஅஉரு | 585 | கயலுண்கண் | 1212 |
| கடா அக்களிற்றின் | 1087 | கரத்தலும் | 1162 |
| கடிதோச்சி | 562 | கரப்பவர்க்கு | 1070 |
| கடிந்தகடிந் | 658 | கரப்பிடும்பை | 1056 |
| கடுஞ்சொல்லன் | 566 | கரப்பிலா நெஞ் | 1053 |
| கடுமொழியும் | 567 | கரப்பிலார் வையக | 1055 |
| கடைக் கொட்கச் | 663 | கரப்பினுங் | 1271 |
| கணை கொடிது | 279 | கரவாது உவந்து | 1061 |
| கண்களவு | 1092 | கருமஞ் சிதையாமல் | 578 |
| கண்டது மன்னும் | 1146 | கருமணியிற் | 1123 |
| கண்டார் உயிர் | 1084 | கருமத்தால் | 1011 |
| கண்டுகேட்டு | 1101 | கருமம் செய | 1021 |
| கண்ணிற்கு அணி | 575 | கருவியும் காலமும் | 631 |
| கண்ணின் துனி | 1290 | கலங்காது கண்ட | 668 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| கலந்துணர்த்தும் | 1246 |
| கல்லா ஒருவன் | 405 |
| கல்லாத மேற் | 845 |
| கல்லாதவரின் | 729 |
| கல்லாதவரும் | 403 |
| கல்லாதான் ஒட்பம் | 404 |
| கல்லாதான் சொற் | 402 |
| கல்லார்ப் பிணிக் | 570 |
| கல்லான் வெகுளும் | 870 |
| கவறும் கழகமும் | 935 |
| கவ்வையால் | 1144 |
| கழா அக்கால் | 840 |
| களவினால் ஆகிய | 283 |
| களவின்கண் | 284 |
| களவென்னும் | 287 |
| களித்தறியேன் | 928 |
| களித்தானை | 929 |
| களித்தொறும் | 1145 |
| கள்வார்க்கு | 290 |
| கள்ளுண்ணா | 930 |
| கறுத்தின்னா | 312 |
| கற்க கசடற | 391 |
| கற்றதனலாய | 2 |
| கற்றறிந்தார் | 717 |
| கற்றாருள் கற்றார் | 722 |
| கற்றார் முன் | 724 |
| கற்றிலனாயினும் | 414 |
| கற்றீண்டு | 356 |
| கற்றுக்கண் | 686 |
| கனவினான் | 1214 |
| கனவினும் | 819 |
| காக்க பொருளா | 122 |
| காக்கை கரவா | 527 |
| காட்சிக் கெளியன் | 386 |
| காணாச் சினத்தான் | 866 |
| காணாதான் | 849 |
| காணிற்குவளை | 1114 |
| காணுங்கால் | 1286 |
| காண்கமன் | 1265 |
| காதல காதல் | 440 |
| காதலர் இல்வழி | 1224 |
| காதலர் தூதொடு | 1211 |
| காதல் அவரிலராக | 1242 |
| காதன்மை | 507 |
| காமக் கடல் | 1164 |
| காமக் கடும்புனல்உய் | 1134 |
| காமக் கடும்புனல்நீந் | 1167 |
| காமக் கணிச்சி | 1251 |
| காமமும் நாணும் | 1163 |
| காமமென | 1252 |
| காமம் உழந்து | 1131 |
| காமம் விடு | 1247 |
| காமம் வெகுளி | 360 |
| காலத்தினாற் | 102 |
| காலம் கருதி | 485 |
| காலாழ் களரில் | 500 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலை அரும்பி 1227
காலைக்குச் செய்த 1225
கானமுயலெய்த 772
குடம்பை 338
குடிசெய்வல் 1023
குடிசெய்வார்க்கு 1028
குடிதழீஇக் 544
குடிபுறங் 549
குடிப்பிறந்தார் 957
குடிப்பிறந்து குற்றத் 502
குடிப்பிறந்து தன்கண் 794
குடிமடிந்து 604
குடியாண்மை 609
குடியென்னும் 601
குணநலம் 982
குணமென்னும் 29
குணம்நாடிக் 504
குணனிலனாய் 868
குணனும் குடிமை 793
குலஞ்சுடும் 1019
குழல்இனிது 66
குறிக்கொண்டு 1095
குறித்தது கூறாமை 704
குறிப்பறிந்து 696
குறிப்பிற்-உணரா 705
குறிப்பிற்-உணர்வார் 703
குற்றமே காக்க 434
குற்றம் இலனாய் 1025
குன்றனனார் 898
குன்றின் அனையாரும் 965
குன்றேறி 758
கூடிய காமம் 1264
கூத்தாட்டு 332
கூழும் குடியும் 554
கூறாமை நோக்கி 701
கூற்றத்தை 894
கூற்றமோ 1085
கூற்றம் குதித்தலும் 269
கூற்றுடன்று 765
கெடல்வேண்டின் 893
கெடாஅ வழிவந்த 809
கெடுங்காலை 799
கெடுப்பதூஉங் 15
கெடுவல்யான் 116
கெடுவாக 117
கெட்டார்க்கு 1293
கேடறியா 736
கேடில்விழுச் 400
கேடும் பெருக்கமும் 115
கேட்டார்ப்பிணிக்கும் 643
கேட்டினும் உண்டு 796
கேட்பினுங் 418
கேளிழுக்கம் 808
கைம்மாறு வேண்டா 211
கையறியாமை 925
கைவேல் 774



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| கொக்கொக்க | 490 |
| கொடியார்-உரை | 1235 |
| கொடியார்-யின் | 1169 |
| கொடுத்தலும் | 525 |
| கொடுத்தும் | 867 |
| கொடுப்பது அழுக் | 166 |
| கொடுப்பதூஉம் | 1005 |
| கொடும் புருவம் | 1086 |
| கொடையளி | 390 |
| கொலைமேற் | 551 |
| கொலையிற் | 550 |
| கொலை வினையர் | 329 |
| கொல்லா நலத் | 984 |
| கொல்லாமை | 326 |
| கொல்லான் | 260 |
| கொளப்பட்டேம் | 699 |
| கொளற்கரிதாய் | 745 |
| கொன்றன்ன | 109 |
| கோட்டுப்பூ | 1313 |
| கோளில் பொறி | 9 |
| சமன் செய்து | 118 |
| சலத்தால் | 660 |
| சலம்பற்றிச் | 956 |
| சாதலின் இன்னாத | 230 |
| சாயலும் நாணும் | 1183 |
| சார்புணர்ந்து | 359 |
| சால்பிற்கு | 986 |
| சான்றவர் | 990 |

| | |
|---|---|
| சிதைவிடத்து | 597 |
| சிறப்பறிய | 590 |
| சிறப்பீனும் செல்வமும் | 31 |
| சிறப்பீனும் செல்வம் | 311 |
| சிறப்பொடு | 18 |
| சிறியார் உணர்ச்சி | 976 |
| சிறுகாப்பிற் | 744 |
| சிறுபடையான் | 498 |
| சிறுமை நமக்கு | 1231 |
| சிறுமை பல | 934 |
| சிறுமையும் | 769 |
| சிறுமையுள் | 98 |
| சிறைகாக்குங் | 57 |
| சிறைநலனும் | 499 |
| சிற்றினம் | 451 |
| சிற்றின்பம் | 173 |
| சினத்தைப் | 307 |
| சினமென்னும் | 306 |
| சீரிடம் காணின் | 821 |
| சீரினும் சீரல்ல | 962 |
| சீருடைச் செல்வர் | 1010 |
| சீர்மை சிறப் | 195 |
| சுடச்சுடரும் | 267 |
| சுவைஒளி | 27 |
| சுழலும் இசை | 777 |
| சுழன்றும் ஏர்ப் | 1031 |
| சுற்றத்தால் | 524 |
| சூழாமல் | 1024 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| சூழ்ச்சி முடிவு | 671 | செவியிற் சுவை | 420 |
| சூழ்வார்கண் | 445 | செவியுணவிற் | 413 |
| செப்பம் உடை | 112 | செறாஅச் சிறு | 1097 |
| செப்பின் | 887 | செறிதொடி | 1275 |
| செயற்கரிய செய் | 26 | செறிவறிந்து | 123 |
| செயற்கரிய யாவுள | 781 | செறுநரைக் | 488 |
| செயற்கை அறிந் | 637 | செறுவார்க்கு | 869 |
| செயற்பால செய்யா | 437 | செற்றவர்பின் | 1256 |
| செயற்பால தோரும் | 40 | செற்றாரெனக்கை | 1245 |
| செயிரின் தலை | 258 | செற்றார்பின் | 1255 |
| செய்க பொருளை | 759 | சென்ற இடத்தால் | 422 |
| செய்தக்க | 466 | சொலல் வல்லன் | 647 |
| செய்தேமஞ் | 815 | சொல்லப் பயன் | 1078 |
| செய்யாமற் செய்த | 101 | சொல்லுக சொல்லிற் | 200 |
| செய்யாமல் செற் | 313 | சொல்லுக சொல்லை | 645 |
| செய்வானை நாடி | 516 | சொல்லுதல் | 664 |
| செய்வினை | 677 | சொல் வணக்கம் | 827 |
| செருக்குஞ் சினமும் | 431 | சொற்கோட்டம் | 119 |
| செருவந்த | 569 | ஞாலங் கருதினும் | 484 |
| செல்லா இடத்துச் | 302 | தகுதி என | 111 |
| செல்லாமை | 1151 | தக்காங்கு | 561 |
| செல்லான் கிழவன் | 1039 | தக்காரினத்த | 446 |
| செல்லிடத்துக் | 301 | தக்கார் தகவிலர் | 114 |
| செல்வத்துள் | 411 | தஞ்சம் தமரல்லர் | 1300 |
| செல்விருந்து | 86 | தணந்தமை | 1233 |
| செவிகைப்பச் | 389 | தண்ணந் துறைவன் | 1277 |
| செவிக்குணவு | 412 | தந்தை மகற்கு | 67 |
| செவிச்சொல்லும் | 694 | தந்நலம் | 916 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்நெஞ்சத்து 1205
தமராகித் தற் 529
தம்பொருள் 63
தம்மில் இருந்து 1107
தம்மிற் பெரியார் 444
தம்மின் தம் 68
தலைப்பட்டார் 348
தலையின் இழிந்த 964
தவஞ்செய்வார் 266
தவமறைந்து 274
தவமும் தவமுடை 262
தவறிலராயினும் 1325
தள்ளா விளையுளும் 731
தற்காத்துத் 56
தனக்குஉவமை 7
தனியே இருந்து 1296
தன்குற்றம் நீக்கி 436
தன்துணை இன்றால் 875
தன்னுயிர்க்கு 318
தன்னுயிர்தான் 268
தன்னுயிர் நீப்பினும் 327
தன்னூன் பெருக்கற்கு 251
தன்னெஞ்சறிவது 293
தன்னை உணர்த்தி 1319
தன்னைத்தான் காக் 305
தன்னைத்தான் காத் 209
தாமின்புறுவது 399
தாம்வீழ்வார் தம் 1191
தாம்வீழ்வார் மென் 1103
தாம் வேண்டின் 1150
தார்தாங்கிச் 767
தாளாண்மை இல் 614
தாளாண்மை என் 613
தாளாற்றித் 212
தானம் தவம் 19
திறனல்ல 157
திறனறிந்து 644
தினற்பொருட்டால் 256
தினைத்துணை நன்றி 104
தினைத்துணையாங் 433
தினைத்துணையும் 1282
தீப்பாலதான் 206
தீயவை செய்தார் 208
தீயவை தீய 202
தீயளவன்றி 947
தீயினாற் சுட்ட 129
தீவினையார் 201
துஞ்சினார் 926
'துஞ்சுங்கால் 1218
துணைநலம் 651
துப்பார்க்கு 12
துப்பின் எவனாவர் 1165
துப்புரவு 1050
தும்முச் செறுப்ப 1318
துளியின்மை 557
துறந்தாரின் 159



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| துறந்தார்க்குத் துப் | 263 | தேறற்க | 509 |
| துறந்தார்க்கும் துவ் | 42 | தேறினும் | 876 |
| துறந்தார் படிவ | 586 | தொகச் சொல்லி | 685 |
| துறந்தார் பெருமை | 22 | தொடங்கற்க | 491 |
| துறப்பார்மன் | 378 | தொடலைக் | 1135 |
| துறைவன் | 1157 | தொடி நோக்கி | 1279 |
| துனியும் | 1306 | தொடிப்புழுதி | 1037 |
| துன்பத்திற்கு | 1299 | தொடியொடு | 1236 |
| துன்பம் உற | 669 | தொடிற்சுடின் | 1159 |
| துன்புறூஉந் | 94 | தொட்டனைத் | 396 |
| துன்னாத் துறந் | 1250 | தொல்வரவும் | 1043 |
| துன்னியார் | 188 | தொழுத கை | 828 |
| தூஉய்மை என் | 364 | தோன்றின் | 236 |
| தூங்காமை | 383 | நகல்வல்லர் | 999 |
| தூங்குக தூங்கி | 672 | நகுதற் பொருட் | 784 |
| தூய்மை துணை | 688 | நகை ஈகை | 953 |
| தெண்ணீர் அடு | 1065 | நகையும் | 304 |
| தெய்வத்தான் | 619 | நகையுள்ளும் | 995 |
| தெய்வந் தொழா | 55 | நகைவகைய | 817 |
| தெரிதலும் | 634 | நசைஇயார் | 1199 |
| தெரிந்த இனத் | 462 | நச்சப்படாதவன் | 1008 |
| தெரிந்துணரா | 1172 | நடுவின்றி | 171 |
| தெருளாதான் | 249 | நட்டார்குறை | 908 |
| தெளிவிலதனை | 646 | நட்டார்க்கு | 679 |
| தென்புலத்தார் | 43 | நட்டார் போல் | 826 |
| தேரான் தெளிவும் | 510 | நட்பிற்கு வீற் | 789 |
| தேரான் பிறனை | 508 | நட்பிற்குறுப்பு | 802 |
| தேவர் அனையர் | 1073 | நண்பாற்றாராகி | 998 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| நத்தம் போல் | 235 |
| நயந்தவர்க்கு | 1181 |
| நயந்தவர்நல் | 1232 |
| நயனில சொல்லி | 197 |
| நயனிலன் | 193 |
| நயனுடையான் | 219 |
| நயனொடு நன்றி | 994 |
| நயன் ஈன்று | 97 |
| நயன்சாரா | 194 |
| நலக்குரியார் | 149 |
| நலத்தகை | 1305 |
| நலத்தின் கண் | 958 |
| நலம் வேண்டின் | 960 |
| நல்குரவு | 1045 |
| நல்லவை | 375 |
| நல்லாண்மை | 1026 |
| நல்லார்கண் | 408 |
| நல்லாறு எனப் | 324 |
| நல்லாறு எனினும் | 222 |
| நல்லாற்றான் | 242 |
| நல்லினத்தி | 460 |
| நவில்தொறும் | 783 |
| நற்பொருள் | 1046 |
| நனவினால் கண்ட | 1215 |
| நனவினால் நம் | 1220 |
| நனவினால் நல்காக் | 1217 |
| நனவினால் நல்காத | 1213 |
| நனவினால் நல்காரை | 1219 |
| நனவென | 1216 |
| நன்மையும் | 511 |
| நன்றறிவாரின் | 1072 |
| நன்றாகும் ஆக்கம் | 328 |
| நன்றாங்கால் | 379 |
| நன்றாற்றலுள்ளுந் | 469 |
| நன்றிக்கு வித்து | 138 |
| நன்றி மறப்பது | 108 |
| நன்றென்ற | 715 |
| நன்றேதரினும் | 113 |
| நன்னீரை | 1111 |
| நாச்செற்று | 335 |
| நாடாது நட்டலிற் | 791 |
| நாடென்ப | 739 |
| நாடொறும் நாடி | 553 |
| நாடொறும் நாடுக | 520 |
| நாணாமை | 833 |
| நாணால் உயிரை | 1017 |
| நாணும் மறந்தேன் | 1297 |
| நாணென ஒன்றோ | 1257 |
| நாணொடு நல் | 1133 |
| நாண் அகத்தில்லார் | 1020 |
| நாண் என்னும் | 924 |
| நாண் வேலி | 1016 |
| நாநலம் என்னும் | 641 |
| நாம் காதல் | 1195 |
| நாளென | 334 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிணந்தீயில் 1260
நிலத்தியல்பால் 452
நிலத்தில் 959
நிலவரை நீள் 234
நிலை அஞ்சி 325
நிலை மக்கள் 770
நிலையில் திரியாது 124
நில்லாதவற்றை 331
நிழல் நீரும் 881
நிறைநீர 782
நிறை நெஞ்சம் 917
நிறைமொழி 28
நிறையரியர் 1138
நிறையுடைமை 154
நிறையுடையேன் 1254
நினைத்திருந்து 1320
நினைத்தொன்று 1241
நினைப்பவர் 1203
நீங்கான் வெகுளி 864
நீங்கின் தெறூஉம் 1104
நீரும் நிழலது 1309
நீரின்று அமை 20
நுணங்கிய 419
நுண்ணிய நூல் 373
நுண்ணியம் 710
நுண்மாண் 407
நுனிக்கொம்பர் 476
நூலாருள் நூல் 683
நெஞ்சத்தார் 1128
நெஞ்சில் துறவார் 276
நெடுங்கடலும் 17
நெடுநீர்மறவி 605
நெடும்புனலுள் 495
நெய்யால் 1148
நெருநல் உளன் 336
நெறுநற்று 1278
நெருப்பினுள் 1049
நோக்கினாள் நோக்கி 1093
நோக்கினாள் நோக்கு 1082
நோதல் எவன் 1308
நோய் எல்லாம் 320
நோய் நாடி 948
நோவற்க 877
நோனா உடம்பும் 1132
பகச்சொல்லி 187
பகல் கருதி 852
பகல்வெல்லும் 481
பகுத்துண்டு 322
பகை என்னும் 871
பகைநட்பாக் 874
பகை நட்பாம் 830
பகை பாவம் 146
பகைமையும் 709
பகையகத்துச் 723
பகையகத்துப் 727
பசக்கமன் 1189



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| பசந்தாள் | 1188 |
| பசப்பென | 1190 |
| படலாற்றா | 1175 |
| படியுடையார் | 606 |
| படுபயன் | 172 |
| படைகுடி | 381 |
| படை கொண்டார் | 253 |
| பணியுமாம் | 978 |
| பணிவுடையன் | 95 |
| பணை நீங்கிப் | 1234 |
| பண் என்னாம் | 573 |
| பண்டறியேன் | 1083 |
| பண்பிலான் | 1000 |
| பண்புடையாய் | 996 |
| பதிமருண்டு | 1229 |
| பயனில பல்லார் | 192 |
| பயனில் சொல் | 196 |
| பயன்தூக்கா | 103 |
| பயன் தூக்கிப் | 912 |
| பயன் மரம் | 216 |
| பரிந்தவர் நல்கா | 1248 |
| பரிந்தோம்பிக் காக்க | 132 |
| பரிந்தோம்பிப்பற் | 88 |
| பரியதுகூர்ங் | 599 |
| பரியினும் | 376 |
| பருகுவார் | 811 |
| பருவத்தோடு | 482 |
| பருவரலும் | 1197 |
| பலகுடை | 1034 |
| பல சொல்லக் | 649 |
| பல நல்ல கற்ற | 823 |
| பல்குழுவும் | 735 |
| பல்லவை கற்றும் | 728 |
| பல்லார்பகை | 450 |
| பல்லார்முனிய | 191 |
| பழகிய செல்வமும் | 937 |
| பழகிய நட்பெவன் | 803 |
| பழிமலைந்து | 657 |
| பழியஞ்சி | 44 |
| பழுதெண்ணும் | 639 |
| பழைமை எனப் | 801 |
| பழையம் எனக் | 700 |
| பற்றற்ற கண்ணும் | 521 |
| பற்றற்ற கண்ணே | 349 |
| பற்றற்றேம் | 275 |
| பற்றிவிடாஅ | 347 |
| பற்றுகபற்ற | 350 |
| பற்றுள்ளம் | 438 |
| பனிஅரும்பி | 1223 |
| பன்மாயக் | 1258 |
| பாடுபெறுதியோ | 1237 |
| பாத்தூண் | 227 |
| பாலொடு தேன் | 1121 |
| பிணிக்கு மருந்து | 1102 |
| பிணியின்மை | 738 |
| பிணையேர் | 1089 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| பிரித்தலும் | 633 |
| பிரிவுரைக்கும் | 1156 |
| பிழைத்துணர்ந்தும் | 417 |
| பிறப்பென்னும் | 358 |
| பிறப்பொக்கும் | 972 |
| பிறர்க்கு இன்னா | 319 |
| பிறர்நாணத் | 1018 |
| பிறர்பழியும் | 1015 |
| பிறவிப் | 10 |
| பிறன்பழி | 186 |
| பிறன்பொருளாள் | 141 |
| பிறன்மனை | 148 |
| பீலிபெய் | 475 |
| புகழ்இன்றால் | 966 |
| புகழ்ந்தவை | 538 |
| புகழ்பட வாழா | 237 |
| புகழ் புரிந்த | 59 |
| புக்கில் | 340 |
| புணர்ச்சி | 785 |
| புத்தேளுலகத் | 213 |
| புரந்தார்கண் | 780 |
| புலத்தலின் | 1323 |
| புலப்பலெனச் | 1259 |
| புலப்பேன்கொல் | 1267 |
| புல்லவையுள் | 719 |
| புல்லாதிராஅப் | 1301 |
| புல்லிக்கிடந்தேன் | 1187 |
| புல்லிவிடா அப் | 1324 |
| புறங்குன்றி | 277 |
| புறங்கூறி | 183 |
| புறத்துறுப்பு | 79 |
| புறந்தூய்மை | 298 |
| புன்கண்ணை | 1222 |
| பெண்ணியலார் | 1311 |
| பெண்ணிற் | 54 |
| பெண்ணினால் | 1280 |
| பெண்ணேவல் | 907 |
| பெயக்கண்டும் | 580 |
| பெயலாற்றா | 1174 |
| பெரிதாற்றிப் | 1276 |
| பெரிதினிது | 839 |
| பெரியாரைப் | 892 |
| பெருக்கத்து | 963 |
| பெருங்கொடையான் | 526 |
| பெருமை உடை | 975 |
| பெருமைக்கும் | 505 |
| பெருமைபெரு | 979 |
| பெரும்பொருளால் | 732 |
| பெறாஅமை | 1295 |
| பெறின்என்னாம் | 1270 |
| பெறுமவற்றுள் | 61 |
| பெற்றற்பெறின் | 58 |
| பேணாதுபெட்டார் | 1178 |
| பேணாது பெட்பவே | 1283 |
| பேணாது பெண் | 902 |
| பேதைபெருங் | 816 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| பேதைப்படுக்கும் | 372 | பொறிவாயில் | 6 |
| பேதைமை என்ப | 831 | பொறுத்தல் | 152 |
| பேதைமை ஒன்றோ | 805 | பொறையொருங்கு | 733 |
| பேதைமையுள் | 832 | போற்றின் | 693 |
| பேராண்மை | 773 | மகன் தந்தைக்கு | 70 |
| பொச்சாப்பார்க்கு | 533 | மக்களே போல்வர் | 1071 |
| பொச்சாப்புக் | 532 | மக்கள் மெய் | 65 |
| பொதுநலத்தார் | 915 | மங்கலம் என்ப | 60 |
| பொதுநோக்கான் | 528 | மடலூர்தல் | 1136 |
| பொய்படும் | 836 | மடிமடிக் | 603 |
| பொய்ம்மையும் | 292 | மடிமை குடிமை | 608 |
| பொய்யாமை அன்ன | 296 | மடியிலா | 610 |
| பொய்யாமை பொய் | 297 | மடியுளாள் | 617 |
| பொருட் பெண்டிர் | 913 | மடியை மடியா | 602 |
| பொருட் பொருளார் | 914 | மடுத்த வாய் | 624 |
| பொருளல்லவரை | 751 | மணிநீரும் | 742 |
| பொருளல்லவற்றை | 351 | மணியில் திகழ்தரு | 1273 |
| பொருளற்றார் | 248 | மண்ணொடு | 576 |
| பொருளாட்சி | 252 | மதிநுட்பம் | 636 |
| பொருளானாம் | 1002 | மதியும் மடந்தை | 1116 |
| பொருளென்னும் | 753 | மயிர்நீப்பின் | 969 |
| பொருள் கருவி | 675 | மருந்தாகி | 217 |
| பொருள் கெடுத்து | 938 | மருந்தென | 942 |
| பொருள் தீர்ந்த | 199 | மருந்தோமற்று | 968 |
| பொருள் நீங்கிப் | 246 | மருவுக மாசற்றார் | 800 |
| பொருள் மாலை | 1230 | மலரன்ன அருமை | 1142 |
| பொள்ளென | 487 | மலரன்ன-முகம் | 1119 |
| பொறியின்மை | 618 | மலரினும் | 1289 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| மலர்காணின் | 1112 | மனையாளை | 904 |
| மலர்மிசை | 3 | மனை விழைவார் | 901 |
| மழித்தலும் நீட்ட | 280 | மன்னர்க்கு | 556 |
| மறத்தல் | 303 | மன்னர் விழைய | 692 |
| மறந்தும் | 204 | மன்னுயிரெல் | 1168 |
| மறப்பினும் | 134 | மன்னுயிர் ஓம்பி | 244 |
| மறப்பின் | 1207 | மாதர் முகம்போல் | 1118 |
| மறமானம் | 766 | மாலை நோய் | 1226 |
| மறவற்க | 106 | மாலையோ | 1221 |
| மறைந்தவை | 587 | மாறுபாடு | 945 |
| மறை பெறல் | 1180 | மிகச் செய்து | 829 |
| மறைப்பேன்மன் கா | 1253 | மிகல் மேவல் | 857 |
| மறைப்பேன்மன் யா | 1161 | மிகினும் | 941 |
| மற்றியான் | 1206 | மிகுதியான் | 158 |
| மற்றும் தொடர்ப் | 345 | முகத்தான் அமர்ந் | 93 |
| மனத்தது மாசாக | 278 | முகத்தின் இனிய | 824 |
| மனத்தானாம் | 453 | முகத்தின் முதுக் | 707 |
| மனத்தின் அமையா | 825 | முகநக நட்பது | 786 |
| மனத்துக்கண் | 34 | முகம்நோக்கி | 708 |
| மனத்துளது | 454 | முகை மொக்குள் | 1274 |
| மனத்தொடு | 295 | முடிவும் இடை | 676 |
| மனநலத்தின் | 459 | முதலிலார்க்கு | 449 |
| மன நலம் நன்கு | 458 | முயக்கிடைத் | 1239 |
| மனநலம் மன் | 457 | முயங்கிய | 1238 |
| மனந்தூயார்க் | 456 | முயற்சி திருவினை | 616 |
| மனந்தூய்மை | 455 | முரண் சேர்ந்த | 492 |
| மனம்மாணா | 884 | முறிமேனி | 1113 |
| மனைத்தக்க | 51 | முறைகோடி | 559 |
| மனைமாட்சி | 52 | முறைசெய்து | 388 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| முறைப்படச் | 640 | வரு முன்னர் | 435 |
| முற்றாற்றி | 748 | வருவிருந்து | 83 |
| முற்றியும் | 747 | வரைவிலா | 919 |
| முனைமுகத்து | 749 | வலியார்க்கு | 861 |
| முன்னுறக் | 535 | வலியார் முன் | 250 |
| மேலிருந்தும் | 973 | வலியில் நிலைமை | 273 |
| மேற்பிறந்தா | 409 | வழங்குவ | 955 |
| மையல் ஒருவன் | 838 | வழிநோக்கான் | 865 |
| மோப்பக் குழையும் | 90 | வழுத்தினாள் | 1317 |
| யாகாவா ராயினும் | 127 | வறியார்க்கொன்று | 221 |
| யாங்கண்ணின் | 1140 | வன்கண் குடி | 632 |
| யாண்டுச் சென்று | 895 | வாணிகஞ் செய் | 120 |
| யாதனின் | 341 | வாய்மை எனப் | 291 |
| யாதானும் | 397 | வாராக்கால் | 1179 |
| யாமும் உளேங் | 1204 | வாரிபெருக்கி | 512 |
| யாமெய்யாக் | 300 | வாழ்தல் உயிர் | 1124 |
| யாரினும் காதலம் | 1314 | வாழ்வார்க்கு | 1192 |
| யான் எனது | 346 | வாளற்று | 1261 |
| யான் நோக்குங் | 1094 | வாளொடென் | 726 |
| வகுத்தான் | 377 | வாள்போல் | 882 |
| வகைமாண்ட | 897 | வானுயர் | 272 |
| வகையறச் | 465 | வானோக்கி | 542 |
| வகையறிந்து தற் | 878 | வானின்றுலகம் | 11 |
| வகையறிந்து வல் | 721 | விசும்பின் | 16 |
| வசை ஒழிய | 240 | விடாஅது | 1210 |
| வசையிலா | 239 | விடுமாற்றம் | 689 |
| வசையென்ப | 238 | விண்ணின்று | 13 |
| வஞ்ச மனத்தான் | 271 | வித்தும் இடல் | 85 |
| வருகமன் | 1266 | வியவற்க | 439 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| விருந்துபுறத் | 82 |
| விருப்பறாச் | 522 |
| விரைந்து | 648 |
| விலங்கொடு | 410 |
| வில்லேருழவர் | 872 |
| விழித்தகண் | 775 |
| விழுப்புண் | 776 |
| விழுப்பேற்றின் | 162 |
| விழைதகையான் | 804 |
| விழையார் | 810 |
| விளக்கற்றம் | 1186 |
| விளிந்தாரின் | 143 |
| விளியுமென் | 1209 |
| வினைகலந்து | 1268 |
| வினைக்கண் வினைகெட | 612 |
| வினைக்கண் வினையுடை | 519 |
| வினைக்குரிமை | 518 |
| வினைசெய்வார் | 584 |
| வினைத் திட்பம் | 661 |
| வினைபகை | 674 |
| வினையால் | 678 |
| வினைவலியும் | 471 |
| வீழப்படுவார் | 1194 |
| வீழுநர் வீழ | 1193 |
| வீழும் இருவர்க்கு | 1108 |
| வீழ்நாள்படா அமை | 38 |
| வீழ்வாரின் | 1198 |
| வீறெய்தி | 665 |
| வெண்மை எனப் | 844 |
| வெருவந்த | 563 |
| வெள்ளத்தனைய இடும்பை | 622 |
| வெள்ளத்தனைய மலர் | 595 |
| வேட்ட பொழு | 1105 |
| வேட்பத்தாஞ் | 646 |
| வேட்பன | 697 |
| வேண்டற்க வெஃகி | 177 |
| வேண்டற்க வென்றி | 931 |
| வேண்டாமை | 363 |
| வேண்டிய வேண்டி | 265 |
| வேண்டின் உண் | 342 |
| வேண்டுங்கால் | 362 |
| வேண்டுதல் | 4 |
| வேலன்று | 546 |
| வேலொடு நின் | 552 |
| வைத்தான் வாய் | 1001 |
| வையத்துள் | 50 |






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்புகள் :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்

❖ கதிரவேலு + ❖ செல்லமுத்து

- → ❖ செல்லத்துரை + ❖ செல்லம்மா
- → பொன்னுச்சாமி
- → ❖ இராசம்மா + ❖ சுப்பிரமணியம்
- → இரத்தினம் + சிவஞானம்
- → பரஞ்சோதி + ❖ மார்க்கண்டு
- → ❖ பாலச்சந்திரன் + சகுந்தலாதேவி

❖ பொன்னுச்சாமி + இர

- சுகந்தி + பாலேந்திரா
- வசந்தி + நாகராஜா
  - → சிவாரகா + கிரிதரன்
    - → அகரன்
  - → துவாரகா + அனுதரன்
  - → லதுசன்
- ஸ்ரீதர் + கிருபா
  - → அனோஜன்
  - → அஜித்தா
- ஜெயந்தி + தனபாலசிங்கம்
  - புருசோத்
- மனோகர் + பாலசதாமணி
  - → அனுஜா
  - → நிதுர்ஷன்
- ❖ சா + கதிரவே
  - → விஸ்
  - → ஹே
  - → விம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ...சம்

❖ மாணிக்கம் + ❖ வள்ளிப்பிள்ளை
↓
- → ❖ சுப்பிரமணியம் + ❖ புஸ்பராணி
- → ❖ சரஸ்வதி + சங்கரப்பிள்ளை
- → இராசம்மா

...ி + இராசம்மா
↓

- ❖ சாந்தி + ...ந்திரவேற்பிள்ளை
  - → விஸ்ணுகாந்
  - → ஹேமகாந்
  - → விமலகாந்
- முருகதாஸ் + கல்ப்பனா
  - → அட்ஷயா
  - → அஷ்விதா
  - → ஆர்தியா
- சிவானந்தி + பரதன்
  - → கிதுசன்
  - → டிந்துசன்
  - → திகழ்
- ஆனந்தி + விஜயராஜா
  - → அபிநயா
  - → ஜெய்சால்
- ஸ்ரீசங்கர் + அனுசா
  - → அருணோதன்
  - → சோபிறா
- தமயந்தி + சந்திரகுமார்
  - → அகல் (டிதுர்ஜன்)
  - → பகல் (குஜிதன்)

❖ அமரர்களைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org